கேரள வர்மா

பி.கே. நாராயண பிள்ளை



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

கேரள வர்மா

உள் அட்டையில் காணும் சிற்பக்காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

[நாகார்ஜுன மலைச் சிற்பம் – கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
படம் உதவி நேஷனல் மியூஸியம், புது தில்லி.]

இந்திய இலக்கியச் சிற்பிகள்

கேரள வர்மா

ஆங்கில மூலம் :

பி.கே. நாராயண பிள்ளை

தமிழில் :

பழனி. அரங்கசாமி

சாகித்திய அக்காதெமி

Kerala Varma - Tamil Translation by Palani Arangasamy of P.K. Narayana Pillai's original English monograph, *Sahitya Akademi*, Rupees fifteen.

First Published : 1994
ISBN 81-7201-740-5

சாகித்திய அக்காதெமி

இரவீந்திர பவன், 35, பெரோஸ் ஷா சாலை, புதுதில்லி – 110 001

'சுவாதி' மந்திர் மார்க், புது தில்லி – 110 001

குணா பில்டிங்ஸ், 304–305, அண்ணாசாலை
தேனாம்பேட்டை, சென்னை – 600 018.

ஏ.டி.ஏ. ரங்கமந்திரா, 109 ஜெ.ஸி. ரோடு,
பெங்களூர் – 560 002.

ஜீவன்தாரா பில்டிங்ஸ், 4–வது மாடி, டைமண்ட் ஹார்பர் சாலை,
கல்கத்தா – 700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலயா சாலை, தாதர்,
பம்பாய் – 400 014.

விலை : ரூ.15.00

அச்சுக்கோர்வை :
எமரெல்ட் கம்ப்யூட்டர் ஹவுஸ்,சென்னை 600 029.

அச்சிட்டோர் : ஜி . பி . கிராபிக்ஸ், சென்னை - 21.

நன்றியுரை

எனது நண்பர் திரு.கே. மாதவமேனன் மற்றும் எனது ஒன்றுவிட்ட சகோதரன் திரு.இ.ஜி. திரிவிக்ரமன் பிள்ளை ஆகியோர் எனது கையெழுத்துப் பிரதியினைப் படித்து பயனுள்ள பல ஆலோசனைகளைக் கூறினர். அவர்கள் இருவருக்கும் எனது உளமார்ந்த நன்றி உரியதாகும். இந்நூலை எழுதும்போது துணை நூற்களையும், குறிப்புகளையும் பெறுதற்கு உதவி செய்தவர் அமரர் என்.என். நாயர். நிகழ்ச்சிகளின் அட்டவணை, கேரள வர்மாவின் பிற நூல்கள், கட்டுரைகள் மற்றும் சில சொற்களின் உச்சரிப்பு வழிமுறைகள் ஆகியனவற்றைச் செப்பம் செய்தவர் திருமதி. என். பிரபாவதி. இவர்கள் செய்த உதவிக்கும் யான் கடமைப்பட்டவன்.

உள்ளே......

1.

இளமைக் காலமும் கல்வியும்

கேரள வர்மாவை வலிய கோயில் தம்புரான் என்றால் தான் கேரளத்தில் அனைவருக்கும் தெரியும். இந்தச் சிறப்புப் பெயருக்கென்று சமூக, வரலாற்றுக்காரணங்கள் உண்டு. திருவாங்கூர் அரச குடும்பத்தைச் சார்ந்த மூத்த இளவரசியின் கணவர் என்பதே இந்தச் சொற்றொடரின் நேர்ப் பொருளாகும். 'வலிய' எனும் சொல்லிற்கு மூத்த என்பது பொருள். கோயில் தம்புரான் என்பது திருவாங்கூர் அரச குடும்பம் திருமணத் தொடர்பு கொள்ளும் ஒரு ஷத்திரிய குடும்பத்தைச் சார்ந்த ஆடவரைக் குறிக்கும். அரச கும்பத்தின் சொத்துரிமையில் மருமக்கள் தாய முறையே பின்பற்றப் பட்டதால் எவர் அரசராக வந்தாலும், அக்குடும்பத்தின் மூத்த இளவரசிக்குப் பிறந்தவர் என்னும் உரிமையில் தான் அவர் அரியணை ஏறுகிறார். அவரது தந்தையாரும் அரசரது அன்னையின் கணவர் என்னும் அளவில்தான் கருதப்படுவார். ஆயினும் சட்டரீதியான அரச அந்தஸ்து அவருக்குக் கிடையாது.

கிளிமானூர் மற்றும் லட்சுமிபுரம் அரண்மனையின் இரண்டு அரச மரபினரும் குறிப்பிடத்தக்க கோயில் தம்புரான் குடும்பங்களாகும். திருவாங்கூர் இளவரசியரைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு இக்குடும்பங்களிலிருந்து தான் ஆடவரைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். தெற்கு மலபாரின் புகழ்பெற்ற பரப்பூர் ராஜவம்சத்தின் இரு பிரிவுகளான பெய்ப்பூர், பரப்பநாடு அரச குடும்பங்களோடு பாரம்பரியான உறவு கொண்டவையே இந்த இரண்டு அரச குடும்பங்களாகும். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஹைதர் அலி மலபாரின் மீது படையெடுக்கும்போது அளியகோடு என்று அழைக்கப்படும் பரப்பநாட்டு ராஜ குடும்பத்தைத் தாக்கினான். அக்குடும்பத்தின் தலைவியாக இருந்த குஞ்சிக்குட்டி தம்புராட்டி தனது ஐந்து பெண்மக்களோடு மலபாரிலிருந்து தப்பித்து கார்த்திகைத்திருநாள் மகாராசாவிடம் திருவனந்தபுரத்தில் வந்து அடைக்கலம் புகுந்தாள்.

கார்த்திகைத் திருநாள் மன்னரும் மிக்க பெருந்தன்மையோடு தம்புராட்டியையும், அவரது குடும்பத்தினரையும் வலிய கோயிக்கால் எனும் அரண்மனையில் தங்கியிருக்கச் செய்தார். பின்னர் நிரந்தரமாக அவர் களுக்கென்றே சங்கணாச்சேரியில் இருந்த நீராழிக்கேட்டு அரண்மனை ஒதுக்கித்தரப்பட்டது. திருவனந்தபுரத்திலிருந்து வடக்கில் 140 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த அவ்வூரின் அரண்மனை ஒரு காலத்தில் தேக்கங்கூர் அரச குடும்பத்தின் சொத்தாக இருந்தது. காலப்போக்கில் தம்பு ராட்டியின் மக்களுள் முதல் நான்கு சகோதரியரும் கிராமம், திருவள்ளா, பள்ளம் ஆகிய மூன்றிடங்களிலும் அவர்களுக்கென்று கட்டப்பட்ட புதிய அரண்மனைகளில் குடியேறினர். எனவே சங்கணாச்சேரி அரண்மனை ஐந்து சகோதரியருள் கடைக்குட்டியான இஞ்சாஞ்சி அம்மாவுக்கே உரியதாயிற்று. இவளது பேரனாகிய ராஜராஜ வர்மா தான் திருவாங்கூர் அரச குடும்பத்தின் இளவரசி லட்சுமிபாய் என்பாரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்குப் பிறந்த ராமவர்மா சுவாதித் திருநாள் 1828 முதல் 1846 ஆம் ஆண்டு வரை திருவாங்கூரை ஆட்சி புரிந்தார். இவரே தென் இந்தியாவின் மிகச்சிறந்த இசைவல்லுநராகவும், இசைப்பாடல் ஆசிரியராகவும் திகழ்ந்தவர். இளவரசி லட்சுமிபாய் விரும்பியவண்ணமே 1811–ஆம் ஆண்டு அவரது கணவரைச் சார்ந்தோருக்குக் கட்டப்பட்ட புதிய இருக்கையே லஷ்மிபுரம் அரண்மனையாகும். இங்கு தான் 1845–ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்கள் 19–ஆம் நாளில் தேவியம்மா தம்புராட்டி, முள்ளப்பள்ளி நம்பூதிரி எனும் தம்பதியருக்குக் கேரள வர்மா இரண்டாவது மகனாகப் பிறந்தார்.

கேரள வர்மாவின் அன்னையும் தந்தையும் உயர்ந்த பண்பாடும், கல்வியறிவும் மிகுந்தோர். தந்தையார் வடக்கு மலபாரில் தலிப்பரம்பா எனும் ஊரில் வேதங்களைக் கற்றுணர்ந்த ஒரு சிறந்த குடும்பத்தில் தோன்றியவர். இக்குடும்பத்தினர் பாரம்பரியமாகவே நான்மறைகளைக் கற்றுணர்ந்தோர். கள்ளிக்கோட்டையை ஆண்டு வந்த ஜாமொரின்களின் ஆதரவில் நடைபெற்று வந்த 'தளியில் தானம்' எனும் அறிஞர் அவையில் பற்பல பரிசுகளையும், பாராட்டுகளையும் பெற்றவர்கள். அத்தகைய குடும்பத்தின் மரபு வழியாக ஆற்றலையும் அறிவையும் கேரள வர்மாவின் தந்தையும் பெற்றிருந்தார். மேலும் இலக்கணம், சோதிடம், மதம், மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளிலும் சிறந்த அறிவும், திறமையும் பெற்று விளங்கினார். அவரது செல்வனாகிய கேரள வர்மா எதிர் காலத்தில் எந்த அளவு பேரும் புகழும் பெற்று விளங்குவார் என்பதைத் தமது ஆழ்ந்த சோதிட அறிவினாலே கணிக்கும் ஆற்றல் அவருக்கிருந்தது. அவரது மிகச்சிறந்த இலக்கண வன்மைதான் கேரள வர்மாவின் பெரும்புலமைக்கும் காரணம் எனலாம். வடமொழி இலக்கணப் புலமையே அந்நாட்களில் ஆழ்ந்த அறிவின் அடையாளமாகக் கருதப்பட்டது.

கேரள வர்மாவின் சிறப்புக்கு அவரது தந்தையாரின் புலமையும், ஆன்மீக உணர்வும் பெரிதும் காரணம் என்றாலும், அவரது அன்னையாரின் செல்வாக்கே மிகவும் அதிகம் என்று கூறவேண்டும். இலக்கியத்திறமையும், புராணங்களில் ஆழ்ந்த புலமையும் பெற்றிருந்த அவரது அன்னையாரிடமே கேரள வர்மா தனது இளமைக்கல்வியினைக் கற்றார். புராணங்களையும், இதிகாசக் கதைகளையும் குறைவறக் கற்றிருந்த அவரது அன்னையார் அவற்றைத் தனது செல்வனுக்குச் சுவையுடன் பாடமாகச் சொல்வதுண்டு. கதை கூறும் நீதிகளைப் பின்பற்றுவதோடன்றி, கதைகளின் உணர்ச்சியோடு ஒன்றிப்போய் கேரள வர்மா மனம் நெகிழ்ந்து விடுவார். இந்தக் கருத்தை விளக்குதற்கு ஈங்கு ஒரு நிகழ்ச்சியினைக் கூறலாம். ஒருமுறை அவரது அன்னையார் மகனை மடிமீது அமர்த்திக் கொண்டு, கதாயுதம் ஏந்திய பீமசேனன் மலைகள், காடுகள், மேடு பள்ளங்களைக் கடந்து சவ்வந்திக மலரைப் பெற்று வருதற்கு வீராவேசமாகச் சென்றதனை விளக்கிக் கூறத் தொடங்கினார். குழந்தையாக இருந்த கேரள வர்மா பீமனைப்பற்றிய மனோநிலையில் ஆழ்ந்து போய் பரபரப்படைந்து அவனைப் போன்றே விரைந்தும் நகர்ந்தும் அன்னையின் மடியிலிருந்து குதித்து விட்டார் என்று கூறப்படுகிறது. சிறந்த முறையில் உளங்கொள்ளு மாறு குழந்தைப் பருவத்திலேயே சொல்லப்பட்ட புராணக் கதைகள் அவரது இயல்பினை உருவாக்கின என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய கல்வியே பின்னாட்களில் கேரள வர்மா ஏராளமான புதினங்களைச் சுவையுடன் படிப்பதற்குக் காரணமாக இருந்தது. தனது குழந்தையிடம் சுவைமிகுந்த கதைகளை மட்டும் போதித்த தோடன்றி, தாமும், ஏனைய புகழ்பெற்ற கவிஞர்களும் இயற்றிய பாடல்களில் உள்ள அறநெறிகளையும், நீதியினையும் அவர் புகட்டினார். தாம் ஒரு கற்றறிந்தவர் என்பதோடன்றி குழந்தைகளின் மனோநிலையினையும் உணர்ந்த ஒரு திறமைசாலியாக அவரது அன்னையார் விளங்கினார்.

பெற்றோரிடமே குடும்பப்பாங்கில் இளமைக்கல்வியினைக் கற்ற பின்னர் கேரள வர்மா அவரது ஐந்தாவது வயதில் மரபுவழிக்கல்வி பயிலுதற்கென்று அனுபவமுதிர்ச்சியும் அறிவுத்திறனும் சார்ந்த திருவார்ப்பில் ராமவாரியரிடம் சேர்க்கப்பெற்றார். அக்காலத்தே தொடக்கக் கல்வியில் பொதுவாகப் பின்பற்றப்பட்ட நூல்கள் சித்தரூபா, அமரகோசம், ஸ்ரீராமோதந்தம், ஸ்ரீகிருஷ்ண விலாசம், ரகுவம்சம் ஆகியனவாகும். இத்தகு அடிப்படை நூல்களை ஐந்து ஆண்டுகாலத்திற்குள் ராமவாரியரிடம் தெளிவாகக்கற்று அணிநலம் மிக்க வடமொழி நூல்களில் கேரள வர்மா மிகுந்த பாண்டித்தியம் அடைந்தார். நூல்களைத் தெளிவுபடக் கற்கும் திறம் மாணவப் பருவத்திலேயே இவரிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. எனவே ஆசிரியர்களும் மிகுந்த உற்சாகத்துடன் இவருக்குப் பாடம் புகட்டினர். பத்து வயது நிரம்புதற்கு முன்னமேயே

காளிதாசரின் ரகுவம்சம் முழுவதையும் இவர் மனப்பாடம் செய்திருந்தார் என்று கூறப்படுகிறது.

இளமைக்காலக் கல்வியினை முடித்ததும், திருவாங்கூர் அரசர் உத்தரம் திருநாள் மார்த்தாண்டவர்மாவின் தங்கையாகிய லஷ்மிபாய் அவர்களின் கணவரும் இவரது மாமனும் ஆகிய ராஜராஜ வர்மா இவரது மேற்படிப்புக்கும் பயிற்சிக்கும் இவரை 1855–ஆம் ஆண்டில் திருவனந்தபுரத்துக்கு அழைத்துச் சென்றார். கேரள வர்மாவுக்கு அப்போது வயது பத்து. அவரது கல்விப் பயிற்சியிலும், சொந்த வாழ்க்கையிலும் அது ஒரு திருப்புமையமாக அமைந்தது. மாமனின் மேற்பார்வை கேரள வர்மாவுக்கு உகந்ததாக இருந்தது. ராஜராஜ வர்மாவும் தனது மருமானிடம் திறமையினையும், புகழையும் எதிர்நோக்கினார். அதற்கேற்ப கேரள வர்மாவை பண்டைக்கால குருகுலப் பயிற்சியினை ஒட்டி அறிவும் ஒழுக்கமும் சார்ந்த நெறியில் தீவிர மாகப் பயிலச் செய்தார். எதிர்பார்த்தது போலவே, கேரள வர்மாவும் தனது மாமனின் கடுமையான கட்டுப்பாட்டுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டு சிறந்த கல்விப் பயிற்சி பெற்றார். முக்கியமான சில நேரங்களைத் தவிர்த்து கேரள வர்மாவின் படிப்புக்காக அன்றாடம் காலை 4 மணியிலிருந்து இரவு 10 மணி வரை ஒதுக்கப்பட்டது. இப்படித் தொடர்ந்து ஐந்தாண்டு காலம் ஆழ்ந்து பயின்றமையால், சாதாரணமாக ஒரு மாணவன் பத்தாண்டு காலம் படிக்க வேண்டிய பாடப்பகுதிகளை கேரள வர்மா ஐந்தாண்டிலேயே நிறைவு செய்துவிட்டார். இந்தக் காலக்கட்டத்தில் காவிய நூல்களான பாரவியின் கிராதார்ச்சுனீயம் மாக கவி எழுதிய சிசுபாலவதம், ஸ்ரீஹர்ஷாவின் நைஷாதியா மற்றும் ராமாயணச்சம்பு காவியம் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமை பெற்றுவிட்டார். அணிநடை சார்ந்த தொன்னூல்களாகிய குவலயாநந்தம், சித்ரமீமாம்சை, காவிய பிரகாசம் போன்றவற்றையும் கற்றுணர்ந்தார். சித்தாந்த கௌமுதி, பிரபுத்த மனோரமா என்னும் கடினமான வடமொழி இலக்கணங்களையும் நன்கு பயின்றார். மாமனும், ஆசானும் ஆகிய ராஜராஜ வர்மா மனமகிழ்ச்சிடையும் வண்ணம் இவர் தனது பரந்த கல்வியறிவில் சிறந்து முன்னேறினார். ஆயினும் தனது மகிழ்ச்சியை ராஜராஜ வர்மா வெளிப்படையாகக் காட்டவில்லை. ஏனெனில் பாராட்டுதலுக்கு மயங்கி மருமான் தனது கல்வி அறிவில் மந்தகதிக்கு ஆட்பட்டு விடக்கூடாது என்றெண்ணியதே அதற்குக்காரணம். சிறந்த அறிவுக் கூர்மையும், ராம வாரியர் மாமன் ராஜராஜ வர்மா ஆகியோரிடம் பெற்ற நுண்ணிய கல்வித் திறமையும், பயிற்சியினைச் சிறப்புடன் பெறுதற்கு உதவின. வடமொழி யோடன்றி, ஆங்கிலப் பாடமும் கற்றுணர்ந்து அம்மொழியிலும் அடிப்படை யான அறிவு கைவரப்பெற்றார். இவ்வாறாக அவரது எதிர்காலத்திய நுண்ணிய அறிவிற்கும், நுழைபுலத்திற்கும் அவர் பதினான்கு வயது நிரம்புதற்குள்ளேயே அவரது மாமன் ராஜராஜ வர்மாவினால் சிறந்த அடித்தளம் அமைக்கப்பட்டது.

அவரது மேம்பட்ட கல்வி வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த மாமன் ராஜராஜ வர்மா 1859–இல் காலமானார். கேரள வர்மாவுக்கு இந்நிகழ்ச்சி ஆழ்ந்த வருத்தத்தையும், பெருத்த ஏமாற்றத்தையும் உண்டாக்கியது. இருப்பினும் நன்றியோடும், மதிப்போடும் தனது மாமனை நினைவு கூர்வ தோடன்றி, தான் இயற்றிய பாடல்களிலும் அவரைப் பற்றிக் கேரள வர்மா கவிதையில் தனது மாமனின் பரிவு எனும் மழைத்துளியால், பாடலும் பண்ணும் தன்னுள் முகிழ்த்து எழுந்தன என்கிறார். சிருங்கார மஞ்சரிபானா எனும் கவிதையிலும் ஏறத்தாழ இந்தக்கருத்தே வெளிப்படுகிறது. அனுமா துத்பவ எனும் கதகளி நூலிலும் தனது குருவிற்கு அஞ்சலி செலுத்துகிறார்.

கேரள வர்மாவைத் திருவனந்தபுர அரண்மனையில் தன்னோடு தங்கியிருக்குமாறு செய்ததில், மருமானுக்கு மிகச்சிறந்த கல்வி புகட்ட வேண்டும் என்னும் நோக்கம் மட்டுமன்றி அதைவிட முக்கியமாக அவரது குடும்பத்துக்கே ஒரு சிறந்த நன்மை செய்ய ராஜராஜ வர்மா எண்ணியிருந்தார் என்பதற்கும் போதிய சான்றுகள் உள்ளன. தனது மருமான் அழகு அறிவு, சுறுசுறுப்பு ஆகிய அனைத்தும் பெற்றிருந்தமையால், அரச குடும்பத்தினரின் நல்லெண்ணத்தையும் பெறுதற்கு வாய்ப்புண்டு என்று அவர் உறுதியாக நம்பினார்.

அரண்மனையில் கேரள வர்மா அரசரை அடிக்கடி நேரில் காணும் வாய்ப்புகளைப் பெற்றதோடன்றி, ஆயில்யம் திருநாள், விசாகம் திருநாள் ஆகிய இளவரசர்களோடும் பழகினார்.

ராஜராஜ வர்மாவின் துணைவியரான லட்சுமிபாய், மூலம் திருநாளைப் பெற்றெடுத்த பின்னர் 1857–இல் மறைந்தார். இதன் விளைவாக அரச குடும்பத்தில் வாரிசு உரிமைக்கென்று பெண்டிர் யாரும் இல்லை. இக் குறையினை நிவர்த்தி செய்தற்பொருட்டு மாவலிக்கரை அரண்மனையிலிருந்து இரண்டு இளவரசியரை அரசர் தத்து எடுத்தார். அவருள் லஷ்மி எனும் மூத்த பெண்ணிற்கு ஏறத்தாழ பத்து வயதே ஆகியிருந்தது. அவள் மிகச்சிறந்த அழகும் இசைஞானமும் கைவரப்பெற்றிருந்தாள். இந்த மூத்த இளவரசியைத் தனது மருமான் திருமணம் செய்யும் வாய்ப்பு ஏற்படவேண்டும் என்று ராஜராஜ வர்மா விரும்பினார். மருமான் சிறந்த முறையில் தம்மால் கற்பிக்கப்படவேண்டும் என்பதோடு இளவரசிக்கு ஏற்ற மணவாளனாகவும் அவன் உருவாக்கப்பட வேண்டும் என்று மாமன் எண்ணி இருந்தார் என்பது இதனால் தெளிவாகிறது.

கேரள வர்மா இளவரசி லஷ்மியினைத் திருமணம் செய்து கொள்ளுதற்கு சூழ்நிலைகளும் சாதகமாக இருந்தன. இருவரும் மிகச்சிறந்த திறமையும் இயல்புகளும் குணங்களும் பெற்றிருந்தா ராகலின், அனைவரும் இக்கருத்தினை வரவேற்றனர். இதற்கிடையில் ராஜராஜவர்மாவின் உடல்நிலை நலி

வுற்று அவர் படுக்கை யிலேயே இருக்க வேண்டியவரானார். அரசர் மார்த்தாண்ட வர்மா தனது மைத்துனரைக் காண வந்தபோது, இத்திருமணத்தினைச் செய்துவைக்குமாறும், இதுவே தனது இறுதிவேண்டுகோள் என்றும் ராஜராஜவர்மா கேட்டுக் கொண்டார். சிறிது காலத்திற்குள் ராஜராஜ வர்மா காலமாகி விட்டார். மூத்த இளவரசிக்குரிய தகுதியான வரன் கேரள வர்மாவே என்பதில் மகிழ்ச்சியடைந்த அரசர், தனது மைத்துனரின் கடைசி வேண்டுகோளையும் மனதிற்கொண்டு இந்த அரச குடும்பத்துத் திருமணத்தினை மிகுந்த ஆடம்பரத்தோடு 1859–ஆம் ஆண்டு ஏப்ரல் 24–ஆம் நாள் நடத்தி வைத்தார். திருவாங்கூர் அரச குடும்பத்து மூத்த இளவரசியைத் திருமணம் செய்து கொண்டமையால், கேரள வர்மா வலிய கோவில் தம்புரான் என்று அழைக்கப்படும் நிலைக்கு உயர்ந்துவிட்டார். அன்று தொட்டு இச்சிறப்புப்பெயரே அவரது இயற்பெயரோடும் இணைந்துவிட்டது.

•2.

சிறந்த பல்கலை அறிஞர்

சாதாரண இளைஞர்களுக்கு அரச குடும்பத்துத் திருமணம் என்பது ஆடம்பர வாழ்க்கைக்கும் கேளிக்கைக்கும் ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்து விடும். ஆனால் கேரள வர்மா அப்படிப்பட்டவர் அல்ல, அரசபோகத்தின் இன்பங்கள் எதுவும் அவரது மாமன் ராஜராஜ வர்மாவினால் பயிற்றுவிக்கப்பட்ட கடின உழைப்பினின்றோ கட்டுப்பாட்டினின்றோ அவரை மாற்ற முடியவில்லை. மூத்த இளவரசியின் கணவர் என்ற முறையில் புதியதாகத் தனக்குக் கிடைத்த வாய்ப்புகளையும் வசதிகளையும் கொண்டு தனது அறிவின் ஆற்ற லையும் ஆளுமையின்னயும் பெருக்கிக் கொண்டார். இடையறாது கிடைத்து வந்த மகாராசாவின் அன்பும், ஆதரவும், தனது விருப்பம்போல் பயிலவும், சிந்திக்கவும் கேரள வர்மாவுக்குப் பேருதவியாக இருந்தன. அரசவையில் மன்னரின் ஆதரவில் இருந்த அறிஞரேயன்றி, மன்னரைக் கண்டு உதவி பெற வருகின்ற புலவர்களும் உண்டு. அவர்களுடன் தொடர்ந்து பழகவும், அவர்களது மேம்பட்ட அறிவின் பயனை நுகரவும், தேவையான நல்வாய்ப்பினை மன்னர் கேரள வர்மாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். உண்மையில், வேதாந்தம், தருக்கம், வியாகர்ணம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் கேரள வர்மாவுக்கிருந்த அறிவினை மென்மேலும் பெருக்கவும் விரிவுபடுத்தவும் அவரது அவையில் புகழ்வாய்ந்த பேரறிஞர்கள் இருந்தனர். கேரள வர்மாவும் தன்னுடைய கல்விப்பயிற்சிக்கென்றும், பிற கடமைகளுக்கென்றும் தனித் தனியே நேரம் ஒதுக்கிக் கொண்டார். இத்தகைய சலியாத உழைப்பும், இயல் பான அறிவும் இருந்ததையால் தான், கேரள வர்மா இளைஞனாக இருக்கும் போதே சிறந்த பல்கலை நிபுணராக முடிந்தது.

வடமொழிச் சாத்திரங்களில் அவருக்குத் தனிப்பட்ட பயிற்சியளித்த ஆசிரியர்களுள் இலத்தூர் ராமசாமி சாஸ்திரிகள் குறிப்பிடத் தகுந்தவர். கேரளாவில் ஆழ்ந்த கல்விஞானம் கைவரப்பெற்ற இந்த அறிஞர்

இந்தியாவின் பற்பல பகுதிகட்கும் சென்றவர். காசி, கும்பகோணம் போன்ற இடங்களில் ஆங்காங்கு உள்ள அறிஞர்களோடு சாத்திரத்தொடர்பான விவாதங்களை நடத்தியவர். ஆயில்யம் திருநாள், விசாகம் திருநாள் போன்ற இளவரசர்களாலும் ஏனைய அறிஞராலும் மதிக்கப்பட்ட இப்பேரறிஞர் உத்திரம் திருநாள் மகாராஜாவின் அறிஞர் குழுவிற்குப் பெருமை தந்தவர். சாஸ்திரிகள் பெருங்கவிஞராகவும் இருந்தவர். விசாக விஜயம் எனும் தமது நூலுள் தமது குருவாகிய ஒருவரைப்பற்றி பிரமவித்யோபதேஷ்டா எனவும், சாகித்யதேசிகா எனவும் குறிப்பிடுவதிலிருந்து கேரள வர்மாவுக்கு இவரே வேதாந்த தத்துவங்களையும் வடமொழி யாப்பினையும் பெரிதும் கற்றுக்கொடுத்தவர் என்று தெரிகிறது.

கேரள வர்மாவுக்கு மெய்யறிவு புகட்டிய ராமசாமி சாஸ்திரிகள் வெறும் ஆசிரியர் மட்டுமன்றி அவரது ஆன்மீகக்குரு என்றும் கூறலாம். சாஸ்திரிகள் தந்திர மார்க்கத்தைப் பின்பற்றியவர் என்பதோடு மந்திர சாத்திரங்களையும் கற்றுணர்ந்தவர். காலப்போக்கில் கேரள வர்மாவும் தந்திர மார்க்கத்தில் நம்பிக்கை கொண்டதோடு, தமது குருவைப்போன்று ஆன்மீகப் பயிற்சியிலும் ஈடுபட்டார். ஆன்மீகத்துறையில் இப்படி ஆழ்ந்த ஈடுபாடு இருந்தமையால், தமது சீடரின் வாழ்விலும் சாஸ்திரிகள் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார் எனலாம். தமது குரு மறைந்தபோது கேரள வர்மா ஆழ்ந்த துயரம் அடைந்தார். இதுபற்றித் தமது மூத்த சகோதரருக்கு எழுதிய ஒரு வடமொழிப்பாடலில், *ஸ்ரீமாதனானந்தநாதர்* ஆதிசங்கரரைப்போன்றே புகழ்வாய்ந்தவர் எனவும், அவர் *ஸ்ரீமோதினியோடு* இணைந்து *ஸ்ரீபுரம்* சேர்ந்தார் என்றும் குறிப்பிடுகிறார். தந்திரக்கலையில் தனிப்பொருளைக் கொண்டுள்ள சொற்களே சாய்ந்த எழுத்தில் மேற்காணுமாறு அச்சிடப்பட்டவையாகும். எனவே, சக்திமாதாவிடம் கொண்டிருந்த நம்பிக்கையும், அதனையொட்டிய மதச்சடங்குகளும் கேரள வர்மாவின் வாழ்க்கையில் முக்கிய அங்கங்களாக விளங்கின.

கேரள வர்மாவுக்குத் தொடர்ந்து முறையான மேனிலைக்கல்வி புகட்டியோருள் இலத்தூர் ராமசாமி சாஸ்திரியாருக்கு அடுத்த நிலையில், சுப்பாதீட்சிதர், சீனு அய்யங்கார், பண்டித ராமசாமி சாஸ்திரிகள் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவருள் முதல் இருவரும் வியாகர்ணத்தையும், மூன்றாமவர் தர்க்கத்தையும் பயிற்றுவித்தவர் ஆவர். இலத்தூர் சாஸ்திரிகளே கீர்த்திவிலாச சம்பு எனும் தமது நூலில், சாத்திரங்களில் இந்த அறிஞர்களுக்கிருந்த புலமையினையும் வாக்கு வன்மையினையும் மனமாரப் பாராட்டியிருக்கிறார். விவாத அரங்குகளில் எதிர்த்தரப்பினை எத்துணைத் திறமையுடன் வீழ்த்தும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பதையும் குறிப்பிடுகிறார். அரசவையிலும் தங்கள் நுண்மாண் நுழைபுலத்தையும், அறிவுத் திறனையும் இவர்கள் எப்படி வெளிப்படுத்தினர் என்பது பற்றியும் படிப்போர் மனம் கவரும் முறையில் சாஸ்திரிகள் தெளிவுபடுத்துகிறார். இதிலிருந்து

இத்தகு திறம் வாய்ந்த நிபுணர்களிடம் பல்வேறு வடநூல் துறைகளில் கேரள வர்மா பெற்ற அறிவின் ஆழம் எத்துணையதாக இருக்கும் என்பதையும் நாம் ஓரளவு ஊகித்துக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துச் சாத்திரங்களிலும் கேரள வர்மா ஒரு படித்தான ஆழ்ந்த அறிவு பெற்றார் என்பதன்றி சாத்திரங்கள் சிற்சில வற்றுள் மிகுந்தும் குறைந்தும் பயின்றார் என்று ஒப்பிட்டுக் காட்ட இயலாது. இருப்பினும் அவரது இலக்கிய இலக்கணப் படைப்புகளை ஒருசேர நோக்கும் போது, அவரது அறிவின் உச்சியில் வியாகர்ணமே தலைசிறந்து நிற்கின்றது. இவரது அசாதாரணமான வியாகர்ணப்புலமையினைப் பற்றிக் கூறவந்த மாகவிஞன் வள்ளத்தோள் ஒரு முறை "கேரள வர்மா பயன்படுத்தும் எந்தச் சொல்லிலும் இருக்கும் துல்லியமான இலக்கணப்பாங்கினை யாரும் குறை காண இயலாது" என்று கூறினார். ஒவ்வொரு வார்த்தையின் மிகச்சிறிய பகுதியினையும் நன்கு உணர்ந்து இலக்கியம் மற்றும் மொழிஇயல் ரீதியான முக்கியத்துவத்தையும் ஆழப்புரிந்து கொண்டுள்ள அவரது சொல்லாட்சி, அறிஞருக்கும் கூடத் திகைப்பினை உண்டு பண்ணும் தன்மையது. அரண் மனையில் உள்ள கையெழுத்துச்சுவடி நூலகம், இவரது பொறுப்பில் இருந்தது. இதனால் வடமொழியின் அனைத்துப் பிரிவுகளிலும் இவர் ஆழ்ந்த பாண்டித்தியம் பெறுதற்குப் பேருதவியாக இருந்தது. ஒரு வகையில் கேரளாவிலேயே வடமொழியில் பாரம்பரியக் கல்வி பயின்று சிறந்து விளங்கிய பெரும் பேரறிஞருள் கேரள வர்மாவை இறுதியாகக் குறிப்பிடலாம்.

கேரள வர்மாவின் கல்விக்குப் பேராதரவு அளித்துவந்த உத்தரம் திரு நாள் மகாராஜா 1861–ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். இவரது மறைவு கேரள வர்மாவுக்குப் பேரிழப்பு என்றாலும், அவரது உலகியல் வாழ்க்கையின் அடித்தளம் முன்னமேயே வலுவாக இருந்தமையால், மகராசாவின் மறைவினால் இவர் பெருந்துன்பம் அடைந்திலர். ஆயினும் அந்தக் காலகட்டத்தில், சங்கணாச்சேரியில் அவரது குடும்பத்தினரிடையில் சிற்சில வேறுபாடுகள் ஏற்பட்டு விட்டன. இதனால் அவரது அன்னை, மூத்த சகோதரர் மற்றும் சிலர் கார்த்திகைப்பள்ளி எனுமிடத்தில் வந்து குடியேற நேரிட்டது. வேறு பாடுகளும், வழக்குகளும் அங்கும் தொடர்ந்தன. மூத்த சகோதரர் ராஜராஜ வர்மாவின் தலைமையில் இவரது குடும்பத்தினர் மட்டும் பிரிந்து அரிப்பாடு எனுமிடத்துக்கு வந்து அங்கு மகாராஜாவின் உதவியினால் கட்டப்பட்ட அனந்தபுரம் என்னும் பெயரிய அரண்மனையில் குடியேறினர். அப்போதிருந்துதான், கேரள வர்மாவும் லட்சுமிபுரம் அரண்மனையைச் சார்ந்தவர் என்னும் நிலை மாறி அனந்தபுரம் அரண்மனையைச் சார்ந்தவராகக் கருதப் படத் தொடங்கினார். அவரது குடும்பத்தில் ஏற்பட்ட இச்சிறு மாறுதலோ குழப்பமோ எந்தவகையிலும் கேரள வர்மாவைப் பாதிக்கவில்லை. ஏனெனில் திருவனந்தபுரம்

அரண்மனையில் அவர் அரச குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதோடு மகாராஜா ஆயில்யம் திருநாள் மற்றும் அவரது இளவல் விசாகம் திருநாள் ஆகியோரது ஆதரவில் சிறப்புற வாழ்ந்து வந்தார்.

கேரள வர்மாவின் கவிதைத்திறமையும், யாப்பிலக்கணப்புலமையும் வியக்கத்தக்கன. மிகச்சிறந்த சொல்லாட்சியும், உயர்ந்த யாப்பமைதியும் மிளிர, வெவ்வேறு சீர்களில் மிக விரைவாகக் கவிஇயற்றும் திறமை பெற்றிருந்தார். ஒரு முறை தவத்திரு சிருங்கேரி சங்கராச்சாரியார் திருவனந்தபுரத்தில் வந்து சின்னாட்கள் தங்கியிருந்தபோது, அவர் நடத்திய சம்பிரதாயமான இறை வழிபாட்டில் கேரள வர்மாவும் கலந்து கொண்டார். அப்போது ஆச்சாரியார் வழிபாடு முடித்து புனித நீரைக் கேரளவர்மாவின் கைகளில் ஊற்றிய அத்தருணத்திலேயே, கேரள வர்மா ஒரு பாடலைப்பாடி அந்நீரைப் பெற்றுக்கொண்டார். அப்பாடலில் பொருள் வருமாறு :

வாசுதேவா இதி வாமதேவா இத்யாஸ்தி தெய்வதாயுகம் இட்சமதாலே
வசுதத்வவிசிட்டாவ் ஜகத்குரு; வத்சுதஸ்து சுமபேதாஇவா உறி :

வாசுதேவனும் வாமதேவனும் இவ்வுலகம் அறிந்த இரண்டு கடவுளர்கள். ஓ! உலக குருவே! அவர்களைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ளும்போது அங்குள்ள வேறுபாடு என்பது அவர்களின் பெயர்களிலே உள்ள 'சு' மற்றும் 'ம' எனும் பதங்களின் வேறுபாடு தான்;"

சு, ம ஆகிய பதங்களைக் குறிப்பதற்குக் கவிஞர் 'சும' எனும் சொல்லைப் பயன்படுத்துகிறார். இச்சொல் 'மலர்' என்னும் பொருளையும் தருவதனால், கடவுளுக்குப் படைக்கப்படும் தனித்தனி மலர்களில் தான் வேறுபாடு என்பதே தவிர, பொதுப்படையாக மலர்கள் அனைத்தும் ஒன்று தான் என்னும் கருத்தையும் கவிஞர் ஈண்டு குறிப்பிடுகிறார். ஆதி சங்கரரால் போதிக்கப்பட்ட அத்வைத தத்துவத்தின் தலைசிறந்த கொள்கையாகிய ஒருமைப்பாட்டினை இவ்வாறு கேரள வர்மா தாமியற்றிய பாடலில் மையக் கருத்தாக வெளிப்படுத்தினார். ஆதிசங்கரரைப் பின்பற்றும் சிருங்கேரி ஆச்சாரியர் தத்துவக்கருத்தும் சொல்லாட்சியும் அந்தப்பாடலில் சிறந்து விளங்கியதைக் கண்டு ஆழ்ந்த வியப்புற்று கவிஞரைப் பெரிதும் பாராட்டினார். இவ்வாறு அட்டாவதானம் செய்தற்குரிய திறமையினைக் கொண்ட கேரள வர்மா பல்வேறு சந்தர்ப்பங்களில் இலக்கிய அன்பர்களைத் திகைக்க வைத்துள்ளார். நினைத்தவுடனே கவிபாடும் ஆற்றல் அவருக்கு இருந்தமையால், பாடல்களை அவரிடமிருந்து பெற்றுப்போக பலர் வருவது உண்டு. அவருள் எண்மரை வரிசையாக அமரச் செய்து ஒவ்வொருவருக்கும் பிடித்தமான கருத்தினையும், பாடல் வகையினையும் கேரள வர்மா கேட்டு அறிந்து கொள்வார். பின் முதலாமவரை அணுகி அவருக்குரிய பாடலின் முதல் எழுத்தை அல்லது சொல்லை அவரது காதில் கூறுவார். இவ்வாறு ஒவ்வொருவருக்குரிய பாடலின் முதல் எழுத்தையும் அவர்களிடம் கூறிய

பின்னர் மறுபடியும் வரிசையாக பாடலின் இரண்டாம் எழுத்தையும் கூறுவார். இப்படி ஒவ்வொருக்கும் உரிய பாடலினை மிக விரைவாகக் கூறி முடிப்பார். இந்த அரிய சாதனையில், எட்டு விதமான யாப்பமைதியோடு எட்டு விதமான உட்கருத்துகளையும் இடையீடு இல்லாமல் சொல்லுதற்கேற்ற முறையில் அவரது மூளை வேலை செய்தது. பாடல்களை வரிசையாக முடித்தபிறகு, அனைவரும் பெருவியப்படைந்து வாயாரப்பாராட்டி அவரைப் புகழ்வது உண்டு.

திருவாங்கூர் அரச குடும்பத்தில் பாரம்பரியமான மொழியறிவு பெரிதும் வியக்கத்தக்க முறையில் அமைந்திருந்தது. புகழ்பெற்ற மன்னராகவும், இசையறிவு மிகுந்தவருமான சுவாதித்திருநாள் வடமொழி, தமிழ், தெலுங்கு, மலையாளம், மராத்தி, இந்துஸ்தானி, பார்சியன், ஆங்கிலம் ஆகிய மொழிகளை அறிந்திருந்தமையே இதற்குச் சான்று. கேரள வர்மாவின் ஆதரவாளராக விளங்கிய உத்திரம் திருநாள் மகாராஜாவும் வடமொழி, மலையாளம், தமிழ், இந்துஸ்தானி, மராத்தி, ஆங்கிலம் ஆகிய ஆறு மொழிகளுக்கு க் குறையாத பிறமொழி அறிவு பெற்றிருந்தார். இத்தகைய வளமான மொழி மரபும், தேவையான வசதிகளும் கேரள வர்மாவுக்குச் சாதகமாக இருந்து, அவரும் கடுமையான உழைப்பின் மூலம் ஐந்து மொழிகளுக்கு மேல் சிறப்புறக் கற்றிருந்தார். தான் இயற்றிய பத்மநாப பாத பத்ம சதகம் என்னும் தன்னுணர்ச்சிப் பாடலில் கேரள வர்மாவே 'கடுமையான உழைப்போடும் கவனத்தோடும் நான்கைந்து மொழிகளை நான் படித்துள்ளேன்' என்று குறிப்பிடுகிறார்.

இந்திய மொழிகளுள், வடமொழியே அன்றி, தமிழ், தெலுங்கு, மராத்தி, இந்துஸ்தானி ஆகியவற்றையும் இவர் கற்றுக்கொண்டார். முன்னமேயே குறிப்பிட்டபடி, இளமைக்காலத்திலேயே அடிப்படையான ஆங்கில அறிவைத் திறம்படப் பெற்றிருந்தார். தொடர்ந்து அரண்மனையிலேயே டாக்டர் வார்ரிங், அண்ணாஜிராவ் என்னும் ஆசிரியப் பெருமக்களிடம் பல்வேறு மொழிகளையும் பயின்றார். புகழ் வாய்ந்த ஆங்கில ஆசிரியரான ஸர்.டி. மாதவராவ், மொழியார்வம் மிகுந்த இளவரசர் விசாகம் திருநாள் ஆகியோருடன் ஏற்பட்ட நெருங்கிய தொடர்பு, தமது ஆங்கில அறிவைக் கணிசமாகப் பெருக்கிக் கொள்ளப்பெரிதும் துணையாக இருந்தது. ஆங்கிலத்தில் ஓரளவு தரமான அறிவு பெற்றுள்ளார் என்பதனைக் கண்டு, மகாராஜா ஆயில்யம் திருநாள் சிற்சில அலுவலகப் பணிகளை முன்னிட்டு அவரை ஆங்கிலப் பிரதிநிதியோடு அவ்வப்போது உரையாடச் சொல்வது வழக்கம். ஒரு முறை அந்த ஆங்கிலேயர் கேரள வர்மாவின் ஆங்கில அறிவு மேலும் வளர்க்கப் படவேண்டும் என்று வற்புறுத்தினார். உழைத்துப்பயிலும் பழக்கமுடைய கேரள வர்மா அதனைச் சவாலாக ஏற்றுக்கொண்டு தமது ஆற்றல், உறுதி ஆகியவற்றின் அடிப்படையில் அந்த ஆங்கிலேயனையும் வீழ்த்தும் வண்ணம் மேலும் சிறப்புடன் அம்மொழியினைப் பயின்றார். அதன் விளைவு பெரிதும்

வியக்கத்தக்கதாக இருந்தது. மிகவும் துல்லியமாகவும், சுலபமாகவும் பின்னர் ஆங்கிலத்தைப் பேசத் தொடங்கிவிட்டார். அதனைத் தொடர்ந்து ஆங்கில மேலதிகாரிகளுக்கும், ஆங்கிலப் பிரதிநிதிக்கும், திவான்களுக்கும் உயர்நீதிமன்ற நடுவர்களுக்கும் கேரள வர்மா ஆங்கிலத்திலேயே கடிதத் தொடர்பு கொண்டார் என்று கூறப்படுகிறது. மகாகவி வள்ளத்தோள் மொழி பெயர்த்த வால்மீகி ராமாயணத்திற்கு கேரள வர்மா எழுதிய முன்னுரையின் ஒருப்குதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவரது உரைநடைவளத்திற்கு அதனை ஒரு சான்றாகக் கூறலாம்.

"அநேகமாக இந்து சமயத்தினரை உளங்கொளச் செயும் தெய்விக அம்சத்தை விட்டு விட்டு, நீங்கள் கூர்ந்து நோக்கினால் சிறப்பும் எளிமையும் ஆன இராமாயணம் இற்றைக் காலத்தும் பாரகாவியமாகவும், ஒப்பற்ற தாகவும், உயர்ந்ததாகவும் இருப்பதைக் காணலாம். அந்நூல் மானுடத்துள் பொதிந்துள்ள நல்லனவற்றையும் சிறந்தனவற்றையும் காட்டும் உண்மை யான ஓவியம். மனித சிந்தனைக்கும் செயலுக்கும் அது வழிகாட்டியாக உள்ளது என்பதில் வியப்பில்லை. இந்தியரின் உயிருக்கு உயிராய் இருந்து கொண்டு அவர்களுக்குரிய நியதியில் அவரை வழி நடத்திச் செல்கிறது. இந்நூலைத் தேர்ந்தெடுத்தமைக்குக் காரணம் இந்நூலின் கருப்பொருளே அன்றிக் கவிஞன் அல்ல என்று முராரியும் ஜெயதேவரும் கூறுவதை நாம் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. வால்மீகியைப் பற்றியும், அவரது இறவாத காப்பியத்தைப் பற்றியும் இந்தியா பெருமைப்படுவதில் நியாயம் இருக்கிறது. காலத்துக்குக்காலம் இந்திய நாட்டின் புகழை மேன்மேலும் உயர்த்துவதில் ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் இருக்குமெனின், ராமாயணம் போன்ற நூல்கள் இங்கு இருப்பதுவே ஆகும். இதனுடைய ஒவ்வொரு சொல்லிலும் மிகவும் தூய்மையான உண்மையும், நல்லொழுக்கமும் பொதிந்து கிடக்கிறது."

கேரள வர்மாவின் ஆங்கிலக் கையெழுத்து அழகாக இருந்தாலும், அவருடைய மலையாளக் கையெழுத்தினைப் போன்று அத்துணைச் சிறப்பாக இல்லை. மலையாளக் கையெழுத்து கலையழகுடன் இருந்த மைக்கும் கூட, அவரது முறையான பயிற்சியே காரணமாக இருந்தது. அவரது மலையாளக் கையெழுத்து திருப்திகரமாக இல்லை என்று ஒரு முறை அவரது மாமன் கூறினார். அந்நாள் தொட்டு தமது கடைசிக்காலம் வரை அன்றாடம் எழுதிப்பழகுவதை ஒரு பயிற்சியாகவே கொண்டிருந்தார். இந்தப்பயிற்சியே அவரது எழுத்துக்களைக் கலையழகு மிக்கதாக மாற்றியது. கையெழுத்தின் சிற்சில மாதிரிப்பிரதிகளை இன்றும் கேரளப் பல்கலைக் கழகத்து நூலகத்தின் கையெழுத்துச்சுவடிப் பகுதியில் காணலாம். அவற்றுள் பிழையேதுமின்றி விண்மீனைப்போன்ற வட்டவடிவமான எழுத்து களைக் கொண்ட இரண்டு அழகிய கையெழுத்துப் பிரதிகளைக் குறிப் பிட்டுச் சொல்லலாம். மகாராசா மூலந்திருநாளுக்கு

அன்பளிப்பாகக் கொடுத்த மயூரசந்தேசம் எனும் அவரது கவிதை நூல் அவற்றுள் ஒன்று. தன்னுடைய இலக்கியப் படைப்புகளைத் தன் கையாலேயே அழகுற எழுதி அதன் பிரதிகளைத் தன்னுடைய நெருங்கிய நண்பர்களுக்குக் கொடுப்பது கேரள வர்மாவின் பழக்கம் – மேற்கூறப்பட்டவற்றுள் இரண்டாவதாக கூறத் தகும் கையெழுத்துப்பிரதி மேல்புத்தூர் நாராயண பட்டாத்ரியின் சிறந்த இலக்கண நூலாகிய பரிக்ரயசர்வஸ்வா என்பதாகும். அதனுள் அடிக் குறிப்பாகச் சிற்சில விளக்கங்களைக் கேரள வர்மா குறித்துள்ளார். இப்படிக் குறிப்பது அவரது பழக்கம். ஒரு நூலினைப் பெயர்த்து எழுதும்போதே, தேவையான இடங்களில் அவர் குறிப்புரையும் எழுதுவது உண்டு.

"இலக்கியத் திறமையினைக் கலைமகளிடமிருந்து முழு உரிமையோடு அவர் பெற்றார். ஒரு ஷத்திரியனுக்குரிய சக்தியைக் கொண்ட அவளி டமிருந்த இசைப்புலமையினையும் பறித்துக் கொண்டார்." கேரள வர்மாவுக்குச் சற்று வயதில் குறைந்தவரான ஒருவர் அவரைப்பற்றிக் கூறிய வார்த்தைகளே இவை. இக்கூற்றிலும் ஓரளவு உண்மை இருக்கிறது. உழைப்பினாலே ஒன்றைப்பெற முடியுமாயின், கேரள வர்மா அதனைப்பெற்று விடுவார். ஏனெனில் அவரே உழைப்பின் உருவமாக இருந்தவர். இலக் கியத்தில் அவருக்கு இருந்த இயல்பான திறமையைப்போன்று இசையிலும் இருந்திருக்கும் என்று சொல்ல இயலாது. ஆயினும் இசையில் ஒரு வல்லு நராகத் தன்னை அவர் வளர்த்துக் கொண்டதோடு இசைக்கலை பற்றிய அரிய பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இங்கும் கூட சூழ்நிலை அவருக்குச் சாதகமாகவே இருந்தது. இவரது மூத்த சகோதரர் வித்வான் கோயில் தம்புரான் இசைக்கலை நிபுணர். கேரள வர்மா அவரிடமிருந்து தனது குழந்தைப்பருவத்திலேயே இக்கலை பற்றிய தொடக்கநிலைப் பாடங்களைப் பயின்றார். இதற்கேற்றாற்போல் பிற்கால வாழ்க்கையில் இவரது துணைவியார் லஷ்மியும் சிறந்த பாடகியாக இருந்தார். இருப்பினும் பொதுமேடைகளில் வாய்ப்பாட்டு நிகழ்த்தினாரா என்று தெரியவில்லை. ஆயினும் இசைக்கருவிகளில் தான் அவரது திறமையினை வளர்த்துக் கொண்டுள்ளார். பிடில், சாரங்கி, வீணை ஆகிய இசைக் கருவிகளில் அவர் சாதகம் செய்வது வழக்கம். அக்காலத்திய புகழ்பெற்ற வீணை வித்துவான் களான கல்யாண கிருஷ்ண பாகவதர், வெங்கடாத்ரி பாகவதர் ஆகியோ ரிடம் முறையான தனிப்பயிற்சியினைப் பெற்றார். அந்நாட்களில் சிறந்த வைணிகாஸாக இருந்த கல்யாண கிருஷ்ண பாகவதர் கேரள வர்மாவின் வீணை வாசிக்கும் திறமையினை உணர்ந்திருந்தார் என்று புகழ்பெற்ற நாவலாசிரியர் சந்துமேனன் குறிப்பிடுகிறார். அத்தோடு இளவரசியோடு கேரள வர்மாவும் சேர்ந்து ஆயில்யம் திருநாள் முன்னிலையில் வீணை வாசித்தாகவும் கூறப்படுகிறது. பாடல்கள் இயற்றுவதிலும் அவர் புகழ்

வாய்ந்தவர். கதகளிப்பாடங்களுக்கேற்ற பாடல்கள் மட்டுமன்றி தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளிலும் அவ்வப்போது அவர் பாடல்கள் இயற்றுவது உண்டு.

ஆயில்யம் திருநாள், விசாகம் திருநாள் ஆகிய இரண்டு இளவரசர் களுக்கும் அரண்மனையிலேயே பாடம் பயிற்றுதற்குத் திருவனந்தபுரம் வந்திருந்த ஸர்.டி. மாதவராவ், பின்னாட்களில் திருவாங்கூரின் திவானா கவும் நியமிக்கப் பெற்றார். அந்தப் பணியில் அவர் இருக்கும்போதே கேரள வர்மா அவரை நன்றாக அறிந்திருந்தார். திருவனந்தபுரத்தை விட்டு அவர் சென்ற பிறகும்கூட அவருடன் நட்புரிமையோடு பழகிக் கொண்டிருந்தார். பரோடா மாநிலத்தில் அரசப் பிரதிநிதியாக அவர் இருக்கும்போது, கேரள வர்மா அவரை நன்றாக அறிந்திருந்தார். திருவனந்தபுரத்தை விட்டு அவர் சென்ற பிறகும்கூட அவருடன் நட்புரிமையோடு பழகிக் கொண்டிருந்தார். பரோடா மாநிலத்தில் அரசப்பிரதிநிதியாக அவர் இருக்கும்போது, இந்து புராணங்களில் காணப்படும் புவிஇயல் என்பது பற்றி ஒரு கட்டுரை அனுப்பு மாறு கேரள வர்மாவைக் கேட்டிருந்தார். நண்பருக்குக் காட்ட வேண்டிய மரியாதையினை எண்ணி கேரள வர்மாவும், தச்சர்களைக் கொண்டு மரத்தாலேயே ஒரு பெரிய கோள உருண்டையினைச் செய்து, அதனுள் நிலம் மற்றும் நீர் எல்லைகளைத் திறம்படவும் அழகாகவும் குறித்துக்காட்டியி ருந்தார். அதனுள் கலையழகும் வெளிப்படுமாறு பூகோளத் தொடர்புடைய வேறு பல செய்திகளும் குறிக்கப்பட்டிருந்தன. புராணங்களில் காணப்படும் புவியியலை அறிந்து கொள்ள விரும்புவோருக்கு அந்தப் பூகோள உருண்டை இவ்வாறு பெரும் பயனுடையதாக இருந்தது. இந்தப் பூகோள உருண்டை யினையும் புவியியல் பற்றிய தனது கட்டுரையினையும் மாதவராவுக்கு அனுப்பிவைத்தார். புவியியல் பற்றி ஆழ்ந்து படித்து மாதவராவ் போன்ற நண்பர்களுடன் வழக்கமாக விவாதிக்கும் பற்பல செய்திகளையும் வரன் முறைப்படுத்தி கேரள வர்மா அக்கட்டுரையினை எழுதியிருந்தார்.

தொழில் நுணுக்கப் பாடங்களிலும் கேரள வர்மாவுக்கு ஆர்வம் இருந்தது. வைரங்களின் தரத்தை ஆய்ந்து பார்க்கும் திறமையினை அவர் பெற் றிருந்தார் என்பதை ஈண்டு ஒரு சான்றாகக் குறிப்பிடலாம். விலையுயர்ந்த கற்களின் தரத்தை ஆராய்ந்து பார்க்கும் திறமையோடன்றி துல்லியமாக அவற்றின் மதிப்பையும் கணிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். அரண்மனையில் உள்ள இராஜகுடும்பத்தினருக்கு நவரத்தினக் கற்களை வாங்கும் போதெல்லாம், அவரையும் கலந்து ஆலோசிப்பது வழக்கம். ஒருசமயம் அவர் மனைவி அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வைரக்கல் பதித்த மோதிரத்தை அணிந்திருந்தார். அதனைக் கண்ணுற்ற கேரள வர்மா மோதிரம் விரலை அழகுபடுத்துகிறதா அல்லது விரல் மோதிரத்தை அழகு செய்கிறதா என்று வியப்படையும் குறிப்புப்படுமாறு உடனடியாக ஒரு பாடல் இயற்றினார்.

லஷ்மிபாய் மூத்த இளவரசியாக இருந்தமையால், அவரது நேரடி நிர்வாகத்தில் ஸ்ரீபாதம் என்னும் ஒரு பகுதியினை ஒதுக்கியிருந்தார்கள். அதனோடு வேறுபல பொறுப்புகளும் அவரிடம் இருந்தன. இக்கடமைகளை நிறைவேற்றுவதில் நம்பிக்கைக்குரிய ஒரு அமைச்சரைப் போல கேரள வர்மா செயற்பட்டு தனது மனைவிக்குப் பெரிதும் உதவியாக இருந்தார். அனைத்துக்கும் மேலாக ஸ்ரீபாதம் நிர்வாகத்தையே திருத்தி அமைத்து, சட்டமும் ஒழுங்கும் சிறப்புறும் வண்ணம் அதன் திறமையினை மேம்படச் செய்தார். மலையாளம் அப்போது ஆட்சிமொழியாக இருந்தது. தமது மொழியறிவு நுணுக்கத்தினால் அலுவலக வழக்குச் சொற்களைச் சரியாகவும், எளிமையாகப் புரியுமாறும் புழங்கச் செய்தார். அவரது நிர்வாகத் திறமையினைப் பாராட்டி அப்போதிருந்த மகாராஜா அவரை உத்தியோகத் தொடர்புடன் கூடிய மாநிலச் சட்டமன்ற உறுப்பினராக நியமித்தார். கேரள வர்மாவும் மூன்றாண்டுக் காலம் அப்பணியினைத் திறம்படச் செய்தார். இன்றியமையாத அலுவலகக் காரியங்களில் மகாராஜக்களும், திவான்களும் தன்னைக் கலந்து பேசுவது உண்டு என்று கேரள வர்மாவே குறித்து வைத்துள்ளார்.

கேரள வர்மா குதிரைசவாரி செய்யும் திறமை வாய்ந்தவர். குதிரை மீதமர்ந்து இயல்பாகச் சவாரி செய்யும்போதும் மிக வேகமாகச் செல்லும் போதும்கூடப் பாடல்களை இயற்றியுள்ளார். அன்றாடம் காலை நேரங்களில் நீண்டதூரம் குதிரையில் பயணம் செய்வது அவரது பழக்கம். அவர் அதனைப் பெரிதும் விரும்பினார். அரண்மனை லாயத்திற்கென்று புதிதாக வாங்கப்பட்ட குதிரைகளைச் சவாரி செய்தற்கு காலை நேரங்களைப் பயன் படுத்திக் கொண்டார். எந்த முரட்டுக் குதிரையிலும் ஏறி அதனைப்படு வேகத்தில் அசந்துபோகும் வரை ஓடவிட்டுப்பின் அதனைக் கட்டுப்படுத்திப் பழக்கி விடுவார். இத்தகைய காலை நேரப்பயிற்சியில் தனக்கு பெரு விருப்பமும் மகிழ்ச்சியும் உண்டு என்று தன்னுடைய நாட்குறிப்பில் எழுதியுள்ளார். மனோவலிமையோடும், துணிச்சலோடும் சவாரி செய்யக் கூடியவராதலின், ஆயில்யம் திருநாள் ஒரு முறை இரக்கமின்றி அவரை ஒரு கடுஞ் சோதனை செய்து விட்டார். கட்டுப்பாடற்ற புதிய குதிரை ஒன்று கடிவாளமும் சேணமும் இன்றி கேரள வர்மாவின் காலைச் சவாரிக்கு அனுப்பப்பட்டது. அதனைச் சவாலாக ஏற்று, வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு, சவாரி செய்தற்குரிய உடையைப்பற்றிக் கூடக் கவலைப்படாமல் குதிரைமீதேறி அதனுடைய பிடரியை மட்டும் பிடித்துக்கொண்டு அதனை விரட்டினார்.

சவாரியில் உயிருக்கே ஆபத்து நேரலாம் என்பதால் கேரள வர்மாவுக்கு அது ஒரு ஆபத்தான பரிசோதனையாக இருந்தது. சவாரிக்குப்பின்னர், இனிமேல் இத்தகைய ஆபத்தான கடுஞ்சோதனைக்குத் தன்னை உட்படுத்த வேண்டாம் என்று மகாராஜாவிடம் கேட்டுக் கொண்டார். இல்லையாயின் மகாராஜாவே வருத்தப்பட நேரிடலாம் என்றும் குறிப்பிட்டார். குதிரை சவாரி

யில் இருந்த, அளவு கடந்த ஆர்வத்தினால், பயிற்சிக்கென்று தன்னிடம் வருகின்ற இளைஞரையெல்லாம் உற்சாகப்படுத்தி அவர்களைச் சிறந்த குதிரை வீரர்களாக்கினார். இத்துறையில் அவருக்கிருந்த ஆர்வத்தை அவரது இலக்கியப்படைப்புகளே வெளிப்படுத்துகின்றன. அவரியற்றிய **மயூரசந்தேசம்** எனும் நூலில் வரும் குதிரைப்படை பற்றிய விளக்கம் கீழ் வருமாறு :

"பல்வண்ணச் சீருடையும் தலைக் கவசமும் அணிந்து கொண்டிருந்த குதிரைப் படையினர் பளிச்சிடுகின்ற உடைவாட்களை தமது கைகளில் ஏந்தி இடிமுழக்கம் போன்ற ஒலிகளுக்கிடையில் ஆரவாரமாக அந்நகரில் முன்னேறிச் செல்வதைப் பார்க்கும்போது, இனிய நண்பரே! நீங்கள் மிகவும் பெருமகிழ்ச்சி அடைவீர்கள்."

முரட்டுக்குதிரைகளை அடக்கியாளும் தனது சொந்த அனுபவத்தையே அவருடைய விசாகவிஜயம் (2.11) எனும் பெருங்காப்பியத்தில் அவர் ஒப்புமைக்காகப் பயன்படுத்தியிருப்பது சுவை மிகுந்ததாகும்.

வேட்டையாடுதலாகிய இன்னொரு பொழுதுபோக்கிலும் கேரள வர்மா சிறப்புற்று விளங்கினார். அவருடைய நினைவுக்குறிப்புகளில் கூறுவது போன்று, அவர் எட்டுவயதுச் சிறுவனாக இருந்தபோது வீட்டுக்கு அருகிலேயே ஒரு குளத்திலிருந்த முதலையை மூத்த மாமா சுட்டுக் கொன்றதைப் பார்த்தபோது முதன்முதலாக வேட்டையாடுதலில் அவருக்கு விருப்பம் ஏற்பட்டது. வேட்டையில் அவருக்கிருந்த உற்சாகத்தைக் கண்ட இளவரசர் ஆயில்யம் திருநாள், அவர் மகிழும் வண்ணம் ஒரு சிறிய கைத்துப்பாக்கியைப் பரிசளித்தார். இதனால் பிற்காலத்தே அவருக்குக்கிட்டிய துப்பாக்கியைக் கொண்டு உயரமான மரங்களின் உச்சாணிக்கிளையில் இருக்கும் மிகச்சிறிய பறவைகளைக் கூடச் சுட முடிந்தது என்று கேரள வர்மாவே கூறுகிறார். 1882–ஆம் ஆண்டு கொல்லத்தில் ஐரோப்பியரும் பங்கேற்ற துப்பாக்கி சுடும் போட்டி ஒன்றில், கேரள வர்மா இரண்டாம் பரிசு பெற்றார். விசாகம் திருநாள் அவருக்கு எழுதிய கடிதத்தில், 'இன்று மாலை கர்னல் ஸ்டீவர்ட் என்னைச் சந்தித்தபோது துப்பாக்கி சுடுவதில் நீங்கள் பெற்றுள்ள வியத்தகு திறமையினைப் பற்றிக் குறிப்பிட்டார்' என்று எழுதப்பட்டுள்ளது.

வேட்டைக்கலையில் திறமைசாலிகளான இருவரிடம் கேரள வர்மா பயிற்சி பெற்றது ஒரு நல்வாய்ப்பாக இருந்தது. கிளிமானூர் அரச குடும்பத்தைச் சார்ந்த அந்த இரண்டு நிபுணர்களும் ஒரு வகையில் இவருக்குத் தூரத்து உறவினர். ஒருவனுக்குத் தீங்கு புரியாமலேயே அவனது நெஞ்சில் சுடுகின்ற சாகசம் உள்ளிட்டுப் பற்பல திறமையான செயல்களை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டார். இதனைப் பற்றிக் கேரள வர்மா எனது வேட்டைக்கலை நினைவுகள்' எனும் நூலில் பின் வருமாறு கூறுகிறார்.

"துப்பாக்கி ரவையினை ஒரு மனிதனின் நெஞ்சில் சுட்டுப்பின்னர் அவனை அக்குண்டு காயப்படுத்தாமல் கீழே விழுந்து விடு கின்றவாறு பயிற்சி செய்யும் துணிச்சல் எனக்கு வரவில்லை. எனவே தொடக்கத்தில் சுவரிலிருந்து தொங்கிய, கெட்டியான துணிமடிப்பினையே சுட்டுப்பழகினேன். துணியினைக் கிழிக்காமல் துப்பாக்கி ரவை கீழே விழுந்தது."

இந்தத் துறையில் எந்தத் துப்பாக்கியினையும் தனது மந்திர சக்தியால் சுடமுடியாதவாறு செய்யும் மந்திரமும் கேரள வர்மாவுக்குக் கைவரப்பெற்ற பிறிதோர் கலையாகும். ஒருமுறை வழக்கமான அவரது மந்திர வழிபாடு, மிக அருகிலேயே தொடர்ந்து துப்பாக்கி சுட்டுப் பழகிக்கொண்டிருந்த இளைய இளவரசியின் கணவரால் சிறிது தடைப்பட்டது. இத்தொந்தரவு தாங்காமல் கேரள வர்மா உடனடியாகத் தனது மாய சக்தியினைப் பயன்படுத்தி அத் துப்பாக்கியின் இயக்கத்தை நிறுத்திவிட்டார். தனது துப்பாக்கி கட்டுப் படுத்தப்பட்ட உண்மையினை அறியாத அவரோ மீண்டும் மீண்டும் சுட்டுப் பார்த்து ஒன்றும் புரியாது குழப்பமடைந்தார். பின்னர் கேரள வர்மா விரும்பிய படி துப்பாக்கி அவரிடம் கொடுக்கப்பட்டு பின் எல்லோரும் வியக்கும் வண்ணம் துப்பாக்கி அவரால் இயங்குமாறு செய்யப்பட்டது.

வேட்டையாடுவதில் கேரள வர்மாவுக்கிருந்த மந்திரசக்தி அதிக வியப்பைத் தருவது. அதுபற்றி அவரே கீழ்க்காணுமாறு கூறுகிறார். சுட வேண்டிய எந்தப்பொருளையும் குறிப்பிட்ட தானத்துக்கு மந்திர சக்தியினால் கொணரும் திறமையும் பயிற்சியும் எனக்கு உண்டு என்று இளைய இளவர சியின் கணவரும் எனது நண்பர்களும் அறிவர். ஒரு நாள் மாலை பறவை களை வேட்டையாடிய பின்னர் ஒய்வாக இருக்கும்போது மந்திரக் கலை யினை வெளிப்படுத்துமாறு வற்புறுத்தினார்கள். என்னுடைய ஆசானி டமிருந்தும் கிளிமானூர் அரண்மனையைச் சார்ந்த மாமன் கோதவர்மா விடமிருந்தும் அறிந்திருந்த அத்திறமையினை செயற்படுத்தாமல் இருந்த போதிலும் இப்போது அதனைத் தவிர்க்க முடியாத நிலையில், எனக்கு அறிவுறுத்தியபடியே முயற்சி செய்வதென்று தீர்மானித்தேன். ஆசானின் திருவடிகளை பக்தியோடு மனதில் எண்ணி உச்சாடனம் செய்ய வேண்டிய வற்றையும் சரியாக நினைவுபடுத்திக்கொண்டு காரியத்தில் இறங்கினேன். இதற்கிடையில் நண்பர்கள் தங்களுக்குப் பிடித்தமான பொழுது போக்கில் ஈடுபட்டிருந்தனர். பத்து மணித்துளிகளுக்குள் ஒரு பெரிய மரநாய் தோட்டத் தின் மதிற்சுவரின்மேல் தோன்றியது. மதிலில் களைத்துப்போய் ஏறியிருந்த மரநாயினை முன்னமேயே ஆயத்தமாக இருந்த துப்பாக்கியினால் சுட்டு விட்டேன்.

அடர்ந்த காடுகளுக்கு அவர் சென்று முதன்முதலாக வேட்டையாடிய அனுபவங்களைப் பற்றி அவருடைய வாழ்க்கைக் குறிப்புகளில் நினைவு கூர்ந்துள்ளார். வேட்டையாடுவோரிடம் கலந்து, குறிப்பிட்ட ஒரு நாளில் திருவனந்தபுரத்திலிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் குளத்தூர் எனும் காட்டுப்பகுதிக்குச் சென்றார். பன்றிகளும், சிறுத்தைகளும் நிறைந்த பகுதி அது. இருபத்தைந்து பேர் கொண்ட வேட்டைக்குழு முன்னமேயே காத்திருந்து கேரளவர்மாவை வரவேற்றது. குழுவின் தலைவராகிய ஒருவர் வழக்கமாக அதிக அளவில் பன்றிகள் வருமிடத்திற்கு அவர்கள் அனைவரையும் நடத்திச் சென்றார். ஈரமான இடத்தில் மிருகங்கள் வைத்த காலடித் தடங்களைக் கொண்டு அந்த இடத்தினை முன்னமேயே அறிந்து கொண்டு தான் அனைவரும் அங்கு சென்றார்கள். வேட்டையாடுவோர் கூறியதைக் கேரள வர்மா கேள்விப்பட்டதும் காளிதாசரின் ரகுவம்சத்தில் வருகின்ற ஒரு காட்சி நினைவுக்கு வந்ததாகக் கூறுகிறார். அக்காப்பியத்தின் ஒன்பதாம் காண்டத்தில் வருவதாவது: ''சேறும் சக்தியுமான ஏரியிலிருந்து வெளிவந்து பரபரப்புடன் ஓடிய பன்றிகளின் தடத்தை அரசர் பின்பற்றிச் சென்றார். நீளமானதும் ஈரமாக இருந்ததுமான அவற்றின் காலடிகளினால் அவை சென்ற தடம் மிகவும் தெளிவாகத் தெரிந்தது''

குறிப்பிட்ட இடத்தில் அவர்கள் எதிர்பார்த்த இலக்காகிய பன்றி வருமென்று இரண்டு அல்லது மூன்று மணி நேரம் கேரள வர்மா காத்திருந்தார். தாமதத்தினால் பொறுமையிழந்து வேட்டைக்குழுவின் தலைவரைக் காணச் சென்றார். தலைவரோ கேரளவர்மாவைக் கடிந்துரைத்து மேலும் சற்றுப் பொறுமையுடன் எந்த அசைவும் ஓசையுமின்றி அதே இடத்தில் இருக்கச் சொன்னார். பத்துப் பதினைந்த மணித்துளிகளுக்குள் ஏதோ ஒரு மிருகம் நடமாடுகிற அறிகுறி தெரிந்தது. குழுத்தலைவர் அவ்வழியில் நிச்சயமாக பன்றி வரப்போகிறது என்பதைச் சைகையின் மூலமாகத் தெரிவித்தார். இதற்கிடையில் வேட்டைக்காரர்களின் கூச்சலும், மிருகம் விரைந்தோடி வருவதால் ஏற்பட்ட சலசலப்பும் கேட்டு, கேரள வர்மாவின் கால்கள் நடுங்கின. தீடீரென்று பன்றி தன்னைநோக்கி ஓடி வருவதைக் கண்டார். என்னவோ ஒரு துணிச்சலினால், விரைப்பாக நின்று அவ்விலங்கினை உற்றுப்பார்த்தார். அதனைக் கண்ட பன்றி வேறொரு திக்கில் ஓடியது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கேரள வர்மா பன்றியின் தோள்பட்டை எலும்பில் படுமாறு விரைந்து சுட்டார். சூடுபட்ட பன்றி திடீரென்று அவரை நோக்கிப் பாய்ந்து வந்தது. ஆயினும் கடுமையாக சுடப்பட்டு விட்டதால் பலமிழந்து கீழே வீழ்ந்து இறந்துவிட்டது. இந்த அனுபவம் பற்றிக் கேரள வர்மா கீழ்க்காணுமாறு கூறுகிறார்: ''அடர்ந்த காட்டில் எனது முதலாவது வேட்டை அனுபவமே மிகவும் வெற்றிகரமாக அமைந்தது பற்றி நான் பெரிதும் மகிழ்ந்தேன். முதல் முயற்சியிலேயே இத்தகைய வெற்றிகரமான அனு

பவத்தை யாரும் பெற்றதில்லை என்று வேட்டையாளர் அனைவரும் ஒரு மனதாகக் கூறினர் "

கேரள வர்மாவே கூறுவதுபோன்று மயிர்க்கூச்செறியும் பற்பல நிகழ்ச்சி களை அவர் அனுபவித்திருந்தார். அவற்றையெல்லாம் குறித்துவைப்பதாகச் சொல்லியும் எந்த ஏடுகளிலும் அவற்றைக் காணவில்லை. தனது வாழ்நாள் முழுதும் வேட்டையாடுவதில் அவர் மிகுந்த உற்சாகம் காட்டினார். மயூர சந்தேசம் எனும் நூலில் அதுபற்றி அவர் கூறுவது வருமாறு :

"மலையடிவாரத்தில் ஏராளமான விலங்குகள் நிறைந்த காட்டிற்குள் பிற வேட்டைக்காரர்களுடன் மிகுந்த உற்சாகத்துடன் நானும் சென்று, எண்ணற்ற பன்றிகளையும் சிறுத்தைகளையும் துரத்தியும் வெருட்டியும் கொன்றேன். இனிய நண்பரே! வேட்டையில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு"

ஐரோப்பிய வேட்டைக்காரர்களைப் பற்றி மயூர சந்தேசத்தில் வரும் ஒரு வருணனையை இந்த இடத்தில் கூறுவது பொருத்தமாகும்.

"சுவையான உணவு பெறுவதோடு, உற்சாகமாகப்பொழுது போக்குதற்கும் ஏற்றவாறு, அரசப்பிரதிநிதி தனது நண்பர்கள் சூழ அந்தப்பகுதியில் சுற்றி வந்தார். நண்பரே! நீவிர் அவர்களது பார்வையில் படாமல் விலகி இருக்கவேண்டும். இல்லையாயின் உன்னையே அவர்கள் சுட்டுவிடக் கூடும். நல்ல துப்பாக்கியினை அவர்கள் வைத்திருப்பதோடு, அவர்களும் குறி தவறாது சுடக்கூடியவர்கள் என்பதை நினைவிற்கொள்க" (1.39)

அரசப்பிரதிநிதியின் தலைமையில் அந்த ஐரோப்பியர் குழு கொல்லத் திலிருந்து மிருகங்கள் சரணாலயத்திற்குச் செல்வதாக இருந்தது. கேரள வர்மாவின் வாழ்வில் வேட்டைக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருந்தது என்பது இப்பாடலில் (2.68) ஒரு அழுத்தமான சொல்லாட்சியினாலே (முத்ராவாக்கியம்) தெளிவாகிறது.

"கரிய நிறக் கண்களை உடைய பேரழகியே! வேட்டையின் மீதிருந்த ஆர்வத்தினாலே ஒருமுறை நமது தோட்டத்தில் ஜோடியாக அமர்ந்திருந்த பறவைகளுள் ஆண்பறவையினைச் சுட்டு விட்டேன். மிக்க துயரத்துடனிருந்த பெண்பறவைக்கும் ஒரு முடிவுகட்டி விடுமாறு ஆழ்ந்த அனுதாபத்துடன் உடனேயே நீ என்னைக் கேட்கவில்லையா?"

நெஞ்சைத்தொடும் இச்சம்பவத்தை தனக்கும் தனது அன்பு மனைவிக்கும் உள்ள பிணைப்பினைக் குறிப்பாகக் காட்டும் ஒரு கனிவார்ந்த நிகழ்ச்சியாகக் கேரள வர்மா நினைவு கூர்வதனால், வாழ்க்கையில் வேட்டை யாடச்செல்லும் போதும் அவர் எத்தகைய உள்ளத்தோடிருந்தார் என்பதை நாம் அனுமானிக்க முடிகிறது.

உடற்பயிற்சியிலும் கேரள வர்மா மிகுந்த ஆர்வம் உடையவராக இருந்தார். நீந்துவதில் திறமைசாலியாக இருந்ததோடு, படகு சவாரியிலும் சிறந்து விளங்கினார். திருவனந்தபுரத்தில் இவ்விளையாட்டுகளுக்கு போதுமான வசதிகள் இல்லையெனவே, பிற இடங்களுக்கு இவர் செல்வதுண்டு. பம்மையாற்றின் கரையில் இருப்பதும், படகுப்போட்டிக்குப் புகழ் பெற்றதும் ஆகிய ஆரன்முலா இவருக்குப்பிடித்தமான இடம். அங்குள்ள ஏதாவது ஒரு அரண்மனையொன்றில் தங்கிக்கொண்டு சிற்சில சமயங்களில் குடும்ப நண்பர்களோடு இவ்விளையாட்டுகளில் ஈடுபடுவது இவரது வழக்கம்.

வரலாற்று நாயகரான கேரள வர்மா ஆண்டுதோறும் கேரளத்தின் தேசிய விழாவாக நிகழும் புகழ்பெற்ற ஆரன்முலா படகுப்போட்டியிலும் கலந்து கொள்வது உண்டு. அங்குள்ள கோவிலில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பார்த்தசாரதி எனும் இறைவனுக்கு உரிய வழிபாடாகவே ஆண்டுதோறும் உத்திராட்டாதி நாளில் படகுப்போட்டியினை ஏற்பாடு செய்வார்கள். சாதாரண நாட்டுப்படகுகளும், பாம்பு போன்ற படகுகளும் கலந்துகொள்ளும் அப்போட்டியினைக் காண கேரள மாநிலத்தின் அனைத்துப் பகுதியிலிருந்தும் மக்கள் கூடுவர். பாம்புப்படகுகளில், கோவிலுக்குரிய புனிதமான பள்ளியோடம் என்பதுவே முக்கியமானதாகும். அப்படகின் முனைப்பகுதியில் பயிற்சிபெற்ற துருப்புக்காரர்களை அமர்த்தி படகினை விரைந்து செலுத்தவும், அதன் போக்கினை முறைப்படுத்தவும் ஏற்பாடு செய்வர். தலைமையேற்போர் நீர்மட்டத்திலிருந்து ஆறடி உயரத்தில் நின்று கொண்டிருப்பர். ஏறத்தாழ எட்டு அடி நீளமுள்ள மரத்தாலான துடுப்புகளைக் கையில் வைத்திருப்பர். ஒருசமயம் கேரள வர்மாவே படகில் ஏறி முனைப்பகுதியில் நீண்ட துடுப்புடன் நின்று கொண்டு தானே படகினை முறைப்படுத்துவதாகக் கூறினார். அப்போது ஆரன்முலா அரண்மனையைச் சார்ந்த ஒரு முதியவர் அந்தப்படகின் தலைவராக இருந்தார். அனுபவம் இல்லாதவர்கள் படகினை முறைப்படுத்தவோ, நெறிப்படுத்தவோ இயலாது என்பதை அறிந்த அம் முதியவர் கேரள வர்மாவை அம்முயற்சியில் ஈடுபடாமல் இருக்குமாறு அறிவுரை கூறினார். வேகமாக முன்னேறிச் செல்லும்போது படகிலிருந்து தண்ணீருக்குள் விழுந்து விடநேரிடலாம் என்று எச்சரிக்கவும் செய்தார். கேரள வர்மாவோ தனக்கு அந்த வாய்ப்பு கொடுக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தினார். இருப்பினும் தனக்கு அப்பணியில் போதிய அனுபவம் இல்லையென்பதை எண்ணி துடுப்பினைக் கொடுத்து விட்டுக் கீழே இறங்கி விட்டார். தனக்கு அனுபவமும் திறமையும் இல்லையென்பதைக் கேரளவர்மா ஒத்துக்கொண்ட மிகச்சில சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று. ஆயினும் இதுபோன்ற பொழுதுபோக்குகளில் கேரள வர்மாவுக்கிருந்த ஆர்வம் மயூரசந்தேசத்தில் (1.32) ஒரு படகுப் போட்டியினை அவர் வருணிப்பதில் தெரிந்து கொள்ள முடிகிறது.

தங்களுடைய படகினைப் பின் தொடர்ந்து மிக வேகமாக இன்னொரு படகு வருவதைக் கண்ட, துடுப்புக்காரர்கள் மேலும் அதிவேகமாகச் செல்ல எண்ணி விரைவோடும், குழப்பத்தோடும் போட்டிக்குத் தேவையான பரபரப்புடன் துடுப்புகளை வலித்தனர்!

கேரள வர்மா பெருமகிழ்ச்சியுடன் ஈடுபட்ட இன்னொரு விளையாட்டு ஆட்டுக்கடாச் சண்டையாகும். இதற்கென்று வலிமையான செம்மறியாடு ஒன்றினைத் திடம்பட வளர்த்து வைத்திருந்தார். ஆட்டம் தொடங்கியதும், செம்மறியாடு பின்நோக்கியே நகர்ந்து சென்று பிறகு கனவேகமாக முன் னோக்கி ஒடி வந்து ஆட்டக்காரரைக் கடுமையாகத் தலையினால் மோதும். நெருங்கி வந்ததும், சடக்கென்று ஆட்டக்காரர் தான் ஒதுங்கிக் கொண்டு ஒரு தடிமனான மரப்பலகையில் செம்மறியாட்டினை மோதச் செய்து விடுவர். இந்த விளையாட்டிற்கென்று உடல் வன்மையோடு, நீண்ட காலப்பயிற்சியும் இருக்க வேண்டும். பண்டாலம் அரண்மனையைச் சார்ந்த சாக்தன் தம்புரான் எனும் திடமான உடற்கட்டுடைய ஒருவர் கேரள வர்மாவைக் காண வந்தார். செம்மறியோடு விளையாடுவதைப் பற்றி அவருக்குக் கூறும்போது, அவர் பெருத்த உற்சாகத்துடன் தானும் பங்கு கொள்ள விரும்பினார். கேரள வர்மாவும் ஒத்துக் கொண்ட பிறகு மறுநாள் குறிப்பிட்ட நேரத்தில் அந்த விருந்தாளி அங்கு வந்தார். ஆடு பின்நோக்கிப் போகும்போது, அதனுடைய மோதலைத் தாங்கும் பலகையினைப் பிடித்துக் கொள்ளுமாறு அவர் கையில் கொடுத்தனர். சில மணித்துளிகளுக்குள், வழக்கமாக வரும் கடுமையான வேகத்தில் ஆடு முன்னோக்கிப் பாய்ந்தது. வன்மையான தோற்றம் கொண்ட அவர் பயந்துபோய் பலகையைத் தூக்கி எறிந்துவிட்டு, சடக்கென்று ஆட்டை வந்து பிடித்துக் கொண்டார். கேரள வர்மாவும் இதனைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்து மகிழ்ந்தார். ஒடுதல், தாண்டுதல், குட்டிக்கரணம் அடித்தல் ஆகியவற்றிலும், கேரள வர்மாவுக்கு நல்ல திறமையும் பயிற்சியும் உண்டு.

ஒரிரு தடவை பெருத்த சேதத்தை விளைவித்திருக்கக் கூடிய நெருப் பினை அணைத்த வீரதீரச் செயல் குறிப்பிடத்தக்கது. மிகவும் புராதனமான ஓலைச் சுவடிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நூலகத்தில் நெருப்புப்பிடித்து விட்டது. கொழுந்துவிட்டெரியும் தீயினைப்பார்த்த கேரள வர்மா, அணிந்தி ருந்த நல்ல உடையைக் கூட மாற்றிக் கொள்ளாமல் தானே நேரில் விரைந் தோடி அங்கு கூடியிருந்த அரண்மனை அலுவர்கட்குத் தலைமையாக வழி காட்டியதோடு தானும் அவர்களுடன் இணைந்து நின்று நெருப்பினை அணைத்தார். தமக்குச் சொந்தமான ஹரிப்பாடு அரண்மனையில் தங்கி யிருந்தபோது மற்றொரு தீப்பிடித்த சம்பவம் நிகழ்ந்தது. கட்டிடத்தில் இரண்டு முக்கியப் பகுதிகளை இணைத்திருந்த கூரை திடீரென்று நெருப்பு பற்றிக் கொண்டது. கூடியிருந்தோர் ஒன்றுமறியாது விழித்துக் கொண்டி ருந்தபோது, கேரள வர்மா கீழிருந்து தமது தோளினால் பலமாக மோதி

கூரையினைக் கீழே விழச்செய்து பெருஞ்சேதத்தை விளைவித்திருக்கக் கூடிய தீயினைப் பரவ விடாமல் தடுத்துவிட்டார்.

கேரள வர்மா வரன்முறையாகப் பெற்று வந்த இன்னொரு உடற்பயிற்சி பளுதூக்குதல் ஆகும். இதற்கென்று தனது இல்லத்திலேயே கனமான ஒரு இரும்புப் பந்தை வைத்திருந்தார். கேரளாவின் சமூக சீர்திருத்தவாதியும், துறவியுமான ஸ்ரீவித்யாதிராஜ சட்டாம்பி சுவாமிகளுக்கு, கேரள வர்மா பளுதூக்கும் பயிற்சியும் பெற்றவர் எனத் தெரிந்தது. சுவாமிகளும் பல்கலை நிபுணர், ஆன்மீக சத்தியோடு உடல் பலமும் மிக்கவர். பளுதூக்குவதில் அவருக்கும் ஈடுபாடு உண்டு. இக்கலையில் இயல்பாகவே அவர் கேரள வர்மாவின் பளுதூக்கும் தரம் எந்த அளவு இருக்கிறது என்பதைக் கண்டறிய விரும்பினார். எனவே ஒரு நாள் அவரது நெருங்கிய நண்பருடன் சுவாமிகள் கேரள வர்மாவின் இல்லத்துக்குச் சென்று மிகவும் கனமான அந்த இரும்புப் பந்தைத் தூக்கிப் பார்த்து கேரள வர்மாவின் திறமையினைப் புரிந்து கொண்டார்.

கேரள வர்மா இலக்கிய அன்பர்களை ஆதரித்த உண்மை அனைவருக்கும் தெரியும். ஆயினும் அவர் மல்யுத்த வீரர்களையும் ஆதரித்த உண்மை எல்லோருக்கும் தெரியாது. அவரே ஒரு சிறந்த மல்லர். திருவனந்தபுரத்துக்கு வருகிற மல்லர் யாராயினும் அவரைத் தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்று அவருடன் மல்யுத்தம் செய்வது வழக்கம். நிகழ்ச்சி முடிந்ததும் மல்லர்களுக்கு விலையுயர்ந்த பரிசுகளைக் கொடுத்து அவர்களைச் சிறப்புச் செய்வதே அவருடைய பழக்கமாக இருந்தது. எனவே அந்நாளைய மற்போர் வீரர்களிடம் கேரள வர்மாவுக்குச் சிறந்த மதிப்பு இருந்தது.

கேரள வர்மா கிரிக்கெட் விளையாட்டிலும் சிறந்து விளங்கினார். திருவனந்தபுரத்தில் முதன்முதலாக கிரிக்கெட் சங்கத்தினை நிறுவிய பெருமை அவருக்கு உரியது. சதுரங்க விளையாட்டிலும் அப்படித்தான். தானும் நன்றாக ஆடியதோடு சதுரங்க வீரர் குழு ஒன்றையும் திருவனந்தபுரத்தில் முதல்முதலாக அவரே அமைத்தார். பல்வேறு விதமான படைக்கலங்களையும் கையாண்ட உண்மை அவரது திறமையினை உயர்த்திக் காட்டியது. இலக்கியப் படைப்பினை விடக் கடுந்தூட்டி எறிதலில் தான் தனக்கு அதிக ஈடுபாடு உண்டென்று கூறியது ஒரு ஆச்சரியமான உண்மை. பல்வேறு உடற்பயிற்சிகளிலும் கேரள வர்மாவுக்கு நல்ல பயிற்சி உண்டு. அன்றாடம் முறையான பயிற்சியினைச் செய்து வந்தமையால், உடலுறுப்புகளின் செம்மையான வளர்ச்சியினால் அவர் கவர்ச்சிகரமான தோற்றமுடன் விளங்கினார். அந்நாட்களில் கற்றறிந்த பெருமக்கள் கேரள வர்மாவின் உடல் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது திலீப மன்னனைப் பற்றிக் காளிதாசன் வர்ணித்ததை கீழ்க்காணுமாறு எடுத்துக்காட்டுவர் :

"பரந்து விளங்கிய மார்பும் கட்டிளங்காளையின் தோள்களும், சால மரம் போன்ற நெடிய தோற்றமும், நீண்ட கைகளும் கொண்டு அரச குலத்திற்கேயுரிய ஆற்றல், தனது கடமையினைச் செய்ய மனித உருவம் கொண்டதுபோல் தோற்றமளித்தார்."

இருப்பினும் ஒப்புமையாக யாரையேனும் சொல்லவேண்டுமாயின், அவரது உடல்வன்மை, ஆன்மீக சக்தி, ராஜகம்பீரம், இலக்கியத்திறன் ஆகிய வற்றைக் கொண்ட அவரை ஆங்கில இலக்கியத்தில் வரும் ஸர் பிலிப் சிட்னி யோடு ஒப்பிடலாம்.

• •

பல்கலை அறிவும் பெற்ற நிபுணராகக் கேரள வர்மா சிறப்புற்று வரும் போது, அவரது துணைவியார் லஷ்மிபாய் அவர்களும் அதற்கேற்ப மிகுந்த திறமையோடு விளங்கினார். மயூரசந்தேசத்தில் அவளைப்பற்றிக் கேரள வர்மா பெருமைப்படக் கூறுவது அனைத்தும் உண்மையே. ஈடிணையில்லாத அழகு படைத்த அந்த இளவரசியார் இசைக்கலையில் மேம்பட்டு விளங் கினார். அத்தகைய தனது துணைவியார் பற்றி கேரள வர்மா கீழ்க் காணுமாறு கூறுகிறார்.

"அழகில் அவளை ஒப்பிட்டுக் கூறக்கூடியவர் மண்ணுலகில் எவரும் இல்லை; அதுபோன்றே அறிஞரும் புகழும் சிறந்த இயல்புகளைக் கொண்டோர் விண்ணுலகில் இல்லை. மரபு நலம் வாய்ந்த பேரழகு நடமாடும் அவளது தோற்றம் அவளைப்பார்க்கும் அதிர்ஷ்டம் பெற்றவர்களைப் பெரிதும் மகிழ்விக்கும்"(2.35)

தனது துணைவியாரின் இசைத்திறமையினைப் புகழும் அவரது (2.41) பாடலின் சுருக்கம் கீழ்வருமாறு :

"மானினைப்போன்று அழகிய கண்களைக் கொண்ட என் மனைவியார் தனது விரல்களால் திறம்பட வீணைமீட்டுவதைப் பார்க்கின்றோர் இசைக்கடவுளாகிய வாணியே மிக்க மகிழ்ச்சியோடு இவ்வுலகிற்கு வந்துவிட்டாளோ என்று எண்ணி வியப்படைவர். அளவு கடந்த மகிழ்ச்சியோடு நீங்களும் வாய்மூடி நின்று அதனைக் கேட்பீர்கள்."

இளவரசியாரும் இசைப்பாடல்களைத் தனது துணைவருக்கு இல வசமாகக் கற்றுக் கொடுக்கவில்லை. கேரள வர்மா அதற்குப் பதிலாக இலக்கியப் பாடங்களை அவருக்குக் கற்றுக் கொடுத்தார். மலையாளத்திலும் வடமொழியிலும் லஷ்மிபாய் மிகவும் எளிதாகக் கவிபுனையும் ஆற்றலைப் பெற்றிருந்தார். மயிலாகிய தூதுப் பொருளிடம் கதாநாயகன் கீழ்வருமாறு பேசுகிறான்!

"கற்றிறிந்த அப்பெண்மணி மதத்தொடர்புடைய தன்னுணர்ச்சிப் பாடல்களை எழுதுவதோடு ஆழ்ந்த சிந்தனைக்கு ஏற்றவாறு மகிழ்ச்சிதரும் அப்பாடல்களை நயமுறப் பாடுவார். அச்சமயத்தே உங்களது காதுகள் நெடுநேரம் தன்னையறியாது மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிவிடும்" (2.42)

அழகாக வண்ணம் பூசுதலே இளவரசியாரிடம் இருந்த பிறிதோர் கலையாகும்.

அன்பு நிறைந்த இத்தம்பதியினர் அரண்மனையில் செல்வாக்குடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வந்தனர். புதிய செய்திகளை அறிந்து கொள்ளும் ஆர்வத்தோடு, கேரள வர்மா விக்டோரியா ராணியின் கணவரான ஆல்பர்ட் இளவரசரது வாழ்க்கை வரலாற்றினை அந்நாட்களில் படிப்பது உண்டு என்று தெரிகிறது.

3.

மன்னரை எதிர்த்தல்

ஆயில்யம் திருநாள், விசாகம் திருநாள் எனும் இரண்டு இளவரசுகளுடன் கேரள வர்மாவுக்கு இருந்த நெருக்கமான தொடர்பு பற்றி முன்னமேயே குறிப்பிடப்பட்டுள்ளது. வயதில் மூத்தோராகவும், அரச குடும்பத்தோராகவும் இருந்த போதிலும் இரண்டு இளவரசர்களும் கேரள வர்மாவின் ஆழ்ந்த அறிவையும் அசாதாரணமான திறமையினையும் மனதிற்கொண்டு அவரைத் தங்களுக்குச் சமமாகவே நடத்தினர். இளவரசர்கள் இருவரும் அறிவாற்றலும் பண்பாடும் மிகுந்தவர்கள். இவருள் மூத்தவரான ஆயில்யம் திருநாள் நன்கு படித்தவர். பல மொழிகளை அறிந்தவர். கலா ரசிகர் என்பதோடன்றி மிகச்சிறந்த பாடகரும் ஆவார். ஆழ்ந்த இலக்கியப் பயிற்சியின் அடிப்படையில் வடமொழி சாகுந்தலத்தை முதன்முதலாக மலையாள உரை நடையில் பெயர்த்தவர். கலைஞர்களையும் இலக்கியவாதிகளையும் மாசு மறுவற்ற பேரன்பு கொண்டு ஆதரித்தவர். ஆயினும் உள்ளப்பாங்கினைப் பொறுத்தவரையில், பசுத்தோல் போர்த்திய புலியாகவே இருந்தார்.

இரண்டு இளவரசர்களுமே சர்.டி. மாதவராவின் மேற்பார்வையில் மாணவராக இருந்தோர். ஆயினும் அந்த ஆசிரியரிடமிருந்து அதிகமான பயன் அடைந்தவர் விசாகம் திருநாள். மாதவராவ் தன்னுடைய அழுத்தமான ஆங்கில அறிவின் துணைகொண்டு இளவரசர் விசாகம் திருநாளுக்கு இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளையும் அறிமுகப்படுத்தினார். முற்போக்கான எண்ணத்தை வளர்ப்பதற்கென்று இற்றைக்காலத்திய விஞ்ஞான அறிவையும் புகட்டினார். வடமொழி உள்ளிட்ட இந்திய இலக்கியங்களில் விசாகம் திருநாளுக்கு முன்னமேயே நல்ல தேர்ச்சி உண்டு. அவருடைய சகோதரரைப்போலன்றி கலைபயில் நோக்கத்தினையும் ஆங்கிலத்தில் படைப்பு இலக்கியத்திறனையும் இவர் வளர்த்துக் கொண்டார். இலக்கியத்தில் அவருக்கிருந்த இத்தகைய ஈடுபாடுடே லஷ்மியினைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு முன்னிருந்தே கேரள வர்மாவோடு இவர் மிகவும் நேசமோடு பழகக் காரணமாக இருந்தது. மேலும் விசாகம் திருநாள் நற்

குணமும், நெறியாக வாழ்வும், நல்லியல்புகளும் கொண்ட பெருந்தன்மையர். இத்தகு திறமும் ஆளுமையும் குடிகொண்டிருந்த இவர் தமது சகோதரர் ஆயில்யம் திருநாளுக்கு நேர்மாறாக இருந்தார் என்பதில் வியப்பில்லை.

திறமையாலும், சாதனையாலும் கேரள வர்மா லக்ஷ்மிபாய் எனும் இள வரசிக்கு மிகவும் பொருத்தமான மணமகனாக விளங்கினார். ஆனால் ஆயில்யம் திருநாளுக்குக் கேரள வர்மாவைப் பிடிக்கவில்லை. இருந்தாலும் தனக்கு முடிசூட்டப்பெற்ற பிறகும் கூட விரோத உணர்வை அவர் வெளிக் காட்டிக் கொள்வதில்லை. கேரள வர்மாவைத் தனது அரண்மனைக்கு அழைப்பதோடு, அவரது இல்லமாகிய தேவராத்து கோயிக்காள் எனும் இருக் கைக்கும் சென்று அவருடன் கலந்து பல விஷயங்களையும் பேசி வருவது வழக்கம். கேரள வர்மாவுடன் உற்ற நட்புடனும் அவர் பழகினார் என்பதற்குச் சான்றாக ஈண்டு ஒரு நிகழ்ச்சியைக் கூட குறிப்பிடலாம். ஒரு முறை ஆயில்யம் திருநாள் மகாராசா கேரள வர்மாவின் இல்லத்துக்கு வந்து குதிரை சவாரி செய்து கொண்டே தன்னுடன் அவரைப் பஞ்சாராக்குன்று எனும் மணற்குன்று வரை வருமாறு கேட்டுக்கொண்டார். அந்த இடத்தி லிருந்து சங்குமுகம் கடற்கரை ஏறத்தாழ ஒரு மைல் தூரத்தில் உள்ளது. குன்றின்மேல் ஏறியதும், கேரள வர்மா தன்னோடு நெருங்கி வரும்போதே மகாராசா அவரை ஒரு பாடல் இயற்றச் சொன்னார். மகாராசா பயணம் செய் வதோ, நான்கு குதிரைகள் பூட்டிய அலங்கார வண்டி. அங்கிருந்து கொண்டே, அலைமோதும் கடலைப் பற்றியதாக அந்தப்பாடல் இருக்க வேண்டும் என்றார். அடுத்த சில நிமிடங்களில் இருவரும் கடற்கரைக்குச் சென்று விட்டனர். சவாரி செய்து கொண்டே தானியற்றிய பாடலைக் கேரள வர்மா பாடிக்காட்டினார். மிகுந்த மனமகிழ்ச்சியோடு மகாராசா அதே கருத்துக் கொண்ட இன்னொரு பாடலை அங்கேயே இயற்றச் சொன்னார். இந்தப் பல்கலை நிபுணரும் சளைக்காமல் அலைமோதும் கடலைப்பற்றி அடுத்த கணத்திலேயே அடுக்குச் சொல்லும், நடையழகும் வாய்ந்த அழகான மற்றோர் கவிதையினையும் இயற்றிக் காட்டினார். இதனால் பெருமகிழ்ச்சி அடைந்த மகாராசா சற்றும் எதிர்பாரா நிலையில் அரச முத்திரை பொறித்த வீரசிருங்காலம் ஒன்றனை அங்கேயே பரிசாகக் கொடுத்தார்.

தனது சொந்த நூலகத்திற்கென்று எவ்வளவு நூல்கள் வேண்டு மானாலும் அரண்மனையின் செலவிலேயே வாங்கிக் கொள்ளலாம் என்பது கேரள வர்மாவுக்குக் கிடைத்திருந்த ஒரு பெரிய அரச மரியாதையாகும். நூல்களை அடுக்கிவைத்துக் கொள்ளுதற்கென்று மரத்தாலான சுழலும் அடுக்குப் பீரோ ஒன்றனையும் அரசர் ஒரு முறை இவருக்குப் பரிசளித்தாகக் கூறப்படுகிறது. அரண்மனைத் தோட்டத்திலேயே வெட்டப்பட்ட முதிர்ந்த பலாமரத்தின் பலகையினைக் கொண்டு பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட ஒரு வீணையும் அரசர் இவருக்கு அளித்த பிறிதோர் பரிசாகும். தந்தத்தால் செய்யப்பட்ட சிறு கைக்கோலும் இவருக்குக் கொடுக்கப்பட்ட இன்னொரு

பரிசுப் பொருள். கார்த்திகாப்பள்ளி அரண்மனையிலிருந்து கேரள வர்மாவின் குடும்பம் புதிதாகச் சென்று குடியேறிய அனந்தபுரம் அரண்மனை முற்றும் அரசரே செலவு செய்து கட்டிக் கொடுத்தாகும். கேரள வர்மாவுக்கு இத்தகைய சலுகையெல்லாம் செய்து வருவதால், கவிஞர் கேரள வர்மாவும் முக்கியமான நிகழ்ச்சிகளில் அரசரைத் தமது வாழ்த்துக் கவிகைளால் பெரிதும் பாராட்டுவது உண்டு. இப்படி இயற்றப்பட்ட கவிதைகளுள் ஒன்று தான், 1865–ஆம் ஆண்டில் கேரள வர்மா வெளியிட்ட துலாபார சதகம் எனும் சிறு நூல். இந்நூலை வெளியிட்டபோது அரசர் கவிஞருக்கு அளித்த பரிசு விலையுயர்ந்த ஆறு வைரக்கற்கள் பதித்த ஒரு தங்க மோதிரமாகும். தொலைதூரப்பயணம் செல்லும் போதெல்லாம் அரசர் கவிஞரையும் தன்னுடன் அழைத்துப் போவது உண்டு. 1865–ஆம் ஆண்டு சென்னைக்கு வந்திருந்த எடின்பரோ கோமகனைக் காண வந்த மகாராசாவுடன் கேரள வர்மாவும் கூடவே இருந்து அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார். மலையாளம் ஆண்டு 1042–க்குச் சமமான 1867–இல் மலையாளத்தில் பாடநூற்களை ஆயத்தம் செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டபோது கேரள வர்மா அக்குழுவின் உறுப்பினரான நியமனம் செய்யப்பெற்றார். பின்னர் 1868–இல் அக்குழுவின் தலைவராகவும் உயர்த்தப்பெற்றார். நட்பினாலே மட்டுமின்றி, அவருடைய அரசியல் ஞானத்தையும் புரிந்து கொண்டு தான், அரச காரியங்களில் மன்னர் கவிஞரிடம் ஆலோசனை கேட்பது வழக்கம். இன்றியமையாத சந்தர்ப்பங்களில் பிரிட்டிஷ் அரசப்பிரதிநிதியோடு சென்று பேசி வருதற்கென்று அவரை அனுப்புவதும் உண்டு. கேரள வர்மாவின் தனித் தன்மையும், திறமையுமே இத்தகைய அரச மரியாதைக்கெல்லாம் பெரிதும் காரணமாக இருந்தன என்பதில் ஐயமில்லை.

ஆயில்யம் திருநாள் மகாராசா ஒரு வகையில் நற்பேருடையவராக இருந்தார். அவருடைய திவானாக இருந்த மாதவராவ் சிறந்த நிர்வாகி. அவருடைய சகோதரர் விசாகம் திருநாளும் அரச காரியங்களில் மிகுந்த சிறப்புடன் ஒத்துழைத்தார். இதனால் ஆயில்யம் திருநாளின் முற்பகுதி ஆட்சி யினை திருவாங்கூர் அரசின் பொற்காலம் என்றே கூறலாம்.

இந்தியாவிலே மன்னர்களால் ஆளப்பட்ட சிற்றரசுகளுள் திருவாங்கூர் அரசே நிர்வாகத்தில் உயர்ந்த குறிக்கோள்கையும் கொள்கைகளையும் கொண்ட முதல் தரமானதாக இருந்தது. மகாராசாவின் நிர்வாகத் திறமை யினையும், சாதனைகளையும் பாராட்டி, ஆங்கில அரசே மிக உயர்ந்த 'கிரான்ட் கமான்டர்' எனும் கௌரவப்பட்டத்தை அளித்து அவரைப் பெருமைப்படுத்தியது. ஆயினும் அவரது ஆட்சியின் பிற்பகுதியில் ஆயில்யம் திருநாள் ஊழல் மிகுந்தவராகவும், கொடுங்கோலராகவும் மாறி விட்டார்.

நிர்வாகமும் சீர்குலைந்து, அரச குடும்பத்தைக் கூடக் கவனியாமல் எதிலும் ஈடுபாடின்றி இருந்தமையால், அவரது சகோதரர் விசாகம் திரு

நாளும் அரச காரியங்களில் ஈடுபடுவதைக் குறைத்துக் கொண்டார். சகோதரர்களுக்குள் இருந்த பாசமும், ஒத்துழைப்பும் காலப்போக்கில் குறையத் தொட்ங்கியது. இதற்கிடையில் விசாகம் திருநாளில் தனிப்பட்ட சாதனைகளும் பொதுமக்களுக்கிடையில் அவருக்கிருந்த மதிப்பும், செல் வாக்கும் ஆயில்யம் மகாராசாவுக்குக் காழ்ப்புணர்ச்சியை உண்டு பண்ணியது. அரச கட்டளையைச் சிற்சில சமயங்களில் முழுதுமாக நிறை வேற்ற இயலாதபோது திவான் மாதவராவும் அரசரின் கோபத்துக்கு ஆளாக நேரிட்டது. இத்தகைய சந்தர்ப்பங்கள் அரசருக்குப் பின் வாரிசாக இருந்த விசாகம் திருநாளுக்கும் திவானுக்கும் ஒரு நெருக்கத்தை உண்டு பண்ணியது. திவான் எடுத்துரைத்த சில நிர்வாகத் திருத்தங்களை மன்னர் ஏற்றுக் கொள்ளாதபோது விசாகம் திருநாள் திவானுக்கு ஒத்துழைத்து தனது ஆதரவினையும் நல்கினார். இந்நிலையில் விசாகம் திருநாள் சென்னை சென்று வருதற்கு அரசரின் அனுமதியினைக் கேட்டார். அனுமதி கொடுக்க ஆயில்யம் திருநாளுக்கு விருப்பமில்லை. இருப்பினும் திவான் அவர் பக்கமே உறுதியாக நின்றதால், அனுமதியினைக் கொடுக்காமல் இருக்கவும் முடியவில்லை. விசாகம் திருநாளின் சென்னைப் பயணம் வெற்றிகரமாக முடிந்ததை அரசரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. திவானின் மீதும் ஆத்திரம் கொண்டார். தொடர்ந்து அவர் திவானாக இருப்பதை ஒத்துக் கொள்ளாமல், மலையாளம் ஆண்டு 1047–க்குச் சமமான 1872–ஆம் ஆண்டில் திவானைப் பதவி விலகச் செய்தார். பின்னர் ஸர் சேஷைய சாஸ்திரி என்பார் திவானாக வந்தார். இதனைத் தொடர்ந்து விசாகம் திருநாள் தனது பெயரைக் குறிப்பிடாமலேயே மாதவராவின் குணங்களையும் சாதனைகளையும் புகழ்ந்தும், ஆயில்யம் திருநாளைப் பரிகசித்தும் ஒரு நீண்ட கட்டுரையினை எழுதி கல்கத்தா ரெவ்யூ எனும் மாத இதழில் வெளியிட்டார். அப்போது இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த நார்த் புரூக் என்பார் இதனைப்படித்துவிட்டு பரோடா ராஜ்யத்தில் மாதவராவை அரசப்பிரதிநிதியாக நியமித்தார். இதனையெல்லாம் அறிந்த ஆயில்யம் திருநாள் மிகுந்த ஆத்திரம் கொண்டார். விரோதத்தை வெளிப்படையாகவே காட்டத்தொடங்கி விட்டார். ராவணன் விபூஷணனைத் தொல்லைப்படுத்து வதனைக் கேரள வர்மா தனது பின்னாளைய காவியமாகிய விசாக விஜயத் தில் கூறுவது போன்று தன்னுடைய சகோதரனை ஆயில்யம் திருநாள் பெருந்தொல்லைக்கு உட்படுத்தினார்.

ஆயில்யம் திருநாளின் நியாயமற்ற ஆளுகையும், தனது சகோதரன் மீது அவர் கொண்டிருந்த பகைமையும் கேரள வர்மாவையும் அவரது துணை வியாரையும் பாதிக்கத் தொடங்கியது. ஆயினும் கணவனும் மனைவியும் மகாராசாவிடன் பிழை நேரா வண்ணம் மிகுந்த கவனத்துடன் பழகி வந்தனர். எப்படியிருப்பினும் பல்வேறு காரணங்களினால் ஆயில்யம் திருநாளை விட விசாகம் திருநாளையே அவர்கள் மனதார விரும்பியது

மட்டுமன்றி நன்றியுணர்வோடும் நடந்து கொண்டனர். அவர்களது நட்பிலும் ஒத்துழைப்பிலும் ஆயில்யம் திருநாளுக்குச் சந்தேகம் உண்டென்றாலும், தொடர்ந்து கேரள வர்மாவின் குடும்பத்துக்கு வேண்டிய உதவிகளை அன்புடன் செய்த கொண் டிருந்தார். அத்தோடு மகாராசா உயர்ந்த பரிசுகளைக் கொடுத்தும், உதவிகள் செய்தும் கேரள வர்மாவைத் தன்னுடனே வைத்துக் கொள்ள முயன்றார். அரண்மனையின் உதவிநாடி பல்கலை அறிஞரும், நிபுணர்களும் தன்னிடம் வரும்போது கேரள வர்மாவும் தன் னுடன் இருக்க வேண்டும் என்று மகாராசா வற்புறுத்தினார். இத்தகைய சுமுகமான உறவு கண்டு பொறாமைப்பட்ட சிலர் அரண்மனைச் சலுகை களைத் தாம் பெற எண்ணி கேரள வர்மாவைப் பற்றி மன்னரிடம் கோள் மூட்டி விட்டார்கள். இருப்பினும் அம்முயற்சிகள் மன்னரிடம் முதலில் பலிக்க வில்லை என்றே கூறலாம். 1872–ஆம் ஆண்டு காசியாத்திரை செல்ல விரும்பிய மகாராசா கேரள வர்மாவையும் தன்னுடன் வருமாறு பணித்தார். அச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொண்டு கேரள வர்மாவும் பம்பாய் போன்ற பல்வேறு இடங்களைக் கண்டு வந்தார். பம்பாயில் ஜான் ஸ்ட்ராட்சி எனும் ஐரோப்பியரைச் சந்திக்கவும், கடலில் இருக்கும் உலகப்புகழ்பெற்ற எலிபெண்டா குகைகளையும் காணும் வாய்ப்புக் கிட்டியது.

பம்பாயிலிருந்து நாசிக் வழியாகக் காசி நகரை அடைந்து அங்கு ஒரு வாரத்துக்கு மேல் தங்கியிருந்தனர். கேரள வர்மாவின் அறிவுத் திறமை யினைப் பற்றி இலத்தூர் ராமசாமி சாஸ்திரியிடமிருந்து முன்னமேயே கேள்வியுற்ற அறிஞர் பலர் பெருமதிப்புடன் அவரை நேரிற்கண்டு அள வளாவினர். காசியில் தங்கியிருந்தபோது கேரள வர்மா அங்கே பாபு அரிச் சந்திரா என்பாரால் நடத்தப்பட்ட வடமொழிப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு கல்வி நிலையங்களைப் பார்வையிட்டார். திருவனந்தபுரத்துக்குத் திரும்பி வந்த பின்னர் அந்த வடமொழிப் பள்ளிக்கு நன்கொடையும் அரிய நூல்களும் பரிசாக அனுப்பிவைத்தார். புனிதக் கங்கையாற்றில் சம்பிரதாய நெறிப்படி மூழ்கி துர்க்கை அம்மன் ஆலயம் உள்ளிட்ட பல்வேறு கோயில்களில் வழிபாடு செய்தார். வரும் வழியில் பூனாவில் தங்கி அங்கே போதா யனாச்சார்யா எனும் அறிஞருடன் கலந்துரையாடினார். பின்னர் தொடர்ந்து பயணம் செய்து, அரச பரிவாரங்களோடு ஷோரனூர் வந்ததும், மகாரா சாவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு தமது குடும்பத்தினர் இருந்த அரிப்பாடு அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

அரிப்பாடு அரண்மனையில் இரண்டு வாரங்கள் தங்கிய பின்னர், திருவனந்தபுரம் வந்தார். அரசவையில் குறிப்பிடத்தக்க முறையில் சூழ்நிலை கள் மாறி இருந்தன. அவரிடமே அரசர் மாறுபாடாகப் பழகியதோடன்றி, வழக்கமான மரியாதையினையும் காண முடியவில்லை. கேரள வர்மாவும், அவர் மனைவி லஷ்மியும் விசாகம் திருநாளுக்கே மிகவும் வேண்டியவர் களாக உள்ளனர் என்பதற்குரிய சான்றுகள் மகாராசாவுக்குக் கிடைத்து

விட்டன. காசியிலிருந்து கேரள வர்மா தனது மனைவிக்கு எழுதிய கடிதத்தில் இளைய அரசர் விசாகம் திருநாளை அவள் சந்திப்பதற்கு எந்தத் தடையும் இல்லை என்று குறிப்பிட்டிருந்தார். காசிப் பயணத்திலிருந்து திரும்பிய மகாராசா இக்கடிதத்தைக் காண நேர்ந்தது. கேரள வர்மா தனக்கு விரோதமானவர் என்று இவ்வாறு உறுதியாகி விட்டதால், தொடர்ந்து அவருக்குக் காட்டும் எவ்விதச் சலுகையினாலும் பயனில்லை என்றெண்ணி மகாராசா அவரைப் பழிவாங்குவதென்று முடிவு செய்து விட்டார். இருவருக்கிடையில் இதனால் திடீரென்று ஒரு பிரிவு ஏற்பட வில்லையாயினும், கேரள வர்மா அரண்மனைக்கு வருவதை காலப்போக்கில் நிறுத்திக் கொண்டார். அந்தச் சமயத்தில் திவான் சேஷய்ய சாஸ்திரியும் அரசரது கோபத்துக்கு ஆளாகியிருந்தார். சாஸ்திரி நேர்மையானவர். மகாராசா எதிர்பார்த்தபடி அவரது ஒரு தலைப்பட்சமான முடிவுகளுக் கெல்லாம் சாஸ்திரியால் ஒத்துப் போக முடியவில்லை. இச்சூழ்நிலையில் விசாகம் திருநாள், கேரள வர்மா, சேஷய்ய சாஸ்திரி ஆகிய மூவருமே ஆயில்யம் திருநாள் மகாராசாவிற்கு எதிர்த்தரப்பினராகி விட்டனர். எனவே தனக்குப் பின்னால் பட்டத்துக்கு வரமுடியாதபடி விசாகம் திருநாளுக்கும், அரண்மனை வளாகத்துக்கே வர இயலாதவாறு கேரள வர்மாவுக்கும், திவான் பதவியில் நீடிக்க இயலாமல் சாஸ்திரிக்கும் உத்தரவிடுவதென்று மகாராசா முடிவு செய்தார்.

மகாராஜாவின் போக்கும், லஞ்ச ஊழலும் பொது மக்களுக்கும் அரண்மனை அலுவலர்கட்கும் அதிருப்தி உண்டு பண்ணினாலும், அவரு டைய கோபத்துக்கு ஆளாக நேரும் எனும் அச்சத்தால் அவர்களில் யாரும் எதிர்ப்பினைக் காட்டவில்லை, அங்கிருந்த சந்தர்ப்பவாதிகளோ மன்னரைச் சூழ இருந்து கொண்டு அவருடைய தவறுகளுக்கெல்லாம் உடந்தையாக இருந்தனர். அரண்மனையில் வழக்கமாக நடக்கும் வாராந்தர விருந்து களுக்கெல்லாம் இப்படி முகமன் பேசித்திரிவோரே அழைக்கப்பட்டனர். இந்த மாதிரி விருந்து நிகழ்ந்த ஒரு நாள் மன்னர் திவானைப் பற்றி குறைவாகப் பேசி வசைமாரி பொழிந்தார்; நன்றியில்லாத அவரைத் தேவையானால் நஞ்சிட்டுக் கூட தீர்த்துக்கட்டி விடுமாறு மறைமுகமாகத் தன் அடிவருடி களைத் தூண்டினார். மன்னர் இவ்வாறு பேசியதைக் கேரள வர்மாவே காதாரக்கேட்டு, தமது நண்பரான திவானுக்கு நேரவிருக்கும் பேராபத்தைக் குறித்து வருந்தி ஒரு அநாமதேயக்கடிதம் எழுதி திவானுக்குச் செய்திகள் அனைத்தையும் தெரிவித்துவிட்டார். விசாகவிஜயம் என்று காப்பிய நூலில் (3–36–37) கேரள வர்மாவே இந்த உண்மையினை வெளியிட்டுள்ளார். ஆபத்தான நிலையில் மிகவும் குழப்பமடைந்த திவான் அதனுடைய விளைவுகளைப்பற்றி பலவகையிலும் ஆழ்ந்து யோசிக்காமல் அந்தக் கடிதத்தையே மன்னரிடம் கொடுத்துவிட்டார். பார்த்த உடனேயே அது கேரள வர்மாவின் கையெழுத்தே என்பதை அடையாளம் கண்டு கொண்ட

மன்னர் அரண்மனையிலிருந்தே தமது எதிரியை தொலைத்துக்கட்ட வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ந்தார். இருப்பினும் இதனைப் பரம ரகசியமாக வைத்துக்கொண்டு, சென்னை அரசாங்கக் கையெழுத்து நிபுணரின் மூலமே யார் கையெழுத்து என்பதைச் சட்டபூர்வமாக உறுதி செய்து கொண்டார். பின்னர் உடனடியாகக் கேரள வர்மா மீது ராஜத் துரோகக் குற்றம் சாட்டி மேற் கொண்டு சட்டரீதியான வழக்குத் தொடர சென்னை ஆளுநரின் அனுமதியைக் கோரினார்.

தனது சகோதரன் ஆயில்யம் திட்டமிட்டுக் கேரள வர்மாவைத் தண்டித்து விட எண்ணுவதைப் புரிந்து கொண்ட விசாகம் திருநாள் அரச தண்டனையிலிருந்து அவரைத் தப்புவிக்கப் பெருமுயற்சி செய்தார். மன்னரையே சந்தித்து கேரள வர்மாவை அரண்மனையிலேயே காவலில் வைத்து கண்காணித்துக் கொள்ளலாம் என்றும் யோசனை கூறினார். எதிர்காலத்தில் இப்படி நடந்து கொள்ளக் கூடாது என்று கேரள வர்மாவுச்குத் தானே அறிவுரை கூறுவதாகவும் சொல்லிப்பார்த்தார். ஆனால் மகாராஜாவோ காரியம் தனது எல்லையினை மீறிப் போய் விட்டதென்றும், கவர்னரின் ஆணைப்படியே நடந்துகொள்ள வேண்டி யிருக்கும் என்றும் கூறிவிட்டார். தாமதமின்றி சென்னையிலிருந்து எதிர் பார்த்த அனுமதியும் வந்தது. கேரள வர்மாவையும் வேறெந்தக் குற்ற வாளியையும் நடத்துவது போல் நடத்திக்கொள்ளலாம் என்பதே அந்த அனுமதி. மகாராசா அவரைக் கைது செய்து சிறைப்படுத்தத் திட்டமிட்டார். இதற்கென்று வெள்ளியாலான கைவிலங்குகளும் செய்யப்பட்டு மிகவும் ரகசியமாகத் தேதியும் குறிக்கப்பட்டு விட்டது. எந்தவித முன்னறிவிப்பும் இன்றி கேரள வர்மாவைத் திடீரென்று கைது செய்து அவர் அடையும் அதிர்ச்சியில் மகாராஜா ஒரு அற்பமான மகிழ்ச்சியினைப் பெற விரும்பினார்.

கேரள வர்மாவைக் கைது செய்யக் குறிப்பிடப்பட்ட நாள் 1877–ஆம் ஆண்டு ஆகஸ்டு 4–ஆம் நாளாகும். இது மலையாளப் பஞ்சாங்கப்படி 1050–ஆம் ஆண்டு கற்கடகம் 21–ஆம் நாளைக்குறிக்கும். அன்றைய தினம் 10 மணியளவில் எந்த முன்னறிவிப்பும் இன்றி, ஒரு அனுபவம் மிக்க காவல் துறை அதிகாரி கேரள வர்மாவின் இல்லத்துக்குச் சென்று ராஜதுரோகக் குற்றத்துக்காக அவரைக் கைது செய்ய அதிகாரம் அளிக்கும் ஆணை யினைக் காட்டினார். சற்றே கடுமையாக அந்த அதிகாரி நடந்து கொண்டதால் கோபமுற்ற இளவரசி லஷ்மி அவரை உடனடியாக இல்லத்தை விட்டு வெளியேறாவிட்டால் வேலைக்காரிகளே விளக்குமாற்றால் அடித்து விடுவர் என்றும் எச்சரித்தார். கேரள வர்மா தனது துணைவராகிய கேரள வர்மா யாரும் அறியாமல் எந்த மூலைக்குக் கொண்டு செல்லப்பட்டாலும், தானும் வருகிறேன் என்று வற்புறுத்தத் தொடங்கிவிட்டார். அரச ஆணையில் அதற்கு இடம் இல்லை என்றாலும், தன்னுடைய கணவனை வெளியில்

விடமாட்டேன் என்று அவரது கையைப் பிடித்துக்கொண்டு தடை செய்தார். தேவைப்பட்டால் வன்முறையாகவே கேரள வர்மா கைது செய்யப்படுவார் என்று எச்சரித்த பின்னரே கடைசியில் தனது பிடிவாதத்தை விட்டுவிட்டார்.

முதற்கட்டத்தில் ஏறத்தாழ பதினைந்து மாதங்கள் ஆலப்புழை சிறையில் கேரள வர்மா அடைக்கப்பட்டிருந்தார். அந்தக்கால கட்டத்தில் மகாரா சாவின் ஆணைப்படி சிறையதிகாரிகள் கேரள வர்மாவை மிகவும் மோசமாக நடத்தினார்கள். ஒருசமயம் மகாராசாவுக்கு உடல் நலம் குன்றியபோது கேரள வர்மாவின் மூத்த சகோதரன்ன புகழ்பெற்ற மருத்துவரை நாட வேண்டியிருந்தது. அப்போது கேரள வர்மாவின் அன்னையார் மகாராசா விடம் தனது மகனை ஹரிப்பாடு எனுமிடத்துக்கு மாற்றி அனந்தபுரம் அரண் மனையிலேயே வீட்டுக்காவலில் வைத்திருந்தால் தான் சென்று அடிக்கடி கண்டு வர முடியும் என்று கேட்டுக்கொண்டார். உடல்நலம் குன்றிய நிலை யில் வன்னெஞ்சரான மகாராசா சற்று மனமிரங்கி இவ்வேண்டுகோளை ஒத்துக் கொண்டார். தன்னுடைய அரண்மனையிலேயே தங்கிக் கொள்ள கேரள வர்மா அனுமதிக்கப்பட்டார். ஆயினும் கைதிகளுக்குரிய எல்லாக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் முருகன் கோவிலில் வழிபடுதற்கு மட்டும் எந்தத் தடையும் இல்லை.

ஹரிப்பாடு அரண்மனையில் காவலில் இருக்கும்போது கேரள வர்மா பகுதிநேரங்களில் சிற்சில இளைஞர்களுக்குப் பாடம் பயிற்றுவித்தார். இப்படிப் பயின்ற டி.ஆர். ராஜராஜவர்மா, துறவூர் நாராயண சாஸ்திரி ஆகியோர் பிற்காலத்தே மிகுந்த அறிவாளிகளாகத் திகழ்ந்தார்கள். கேரள வர்மா அவர்களுக்கு முதலில் காவியங்களையும் நாடகங்களையும் பின்னர் வியாகர்ணம், அலங்காரம் ஆகியவற்றையும் பயிற்றுவித்தார்.

தன்னுடைய இல்லத்திலேயே கைதியாக இருக்கவேண்டிய துயரம் மிகுந்த வாழ்க்கையில், கடந்த காலத்தை எண்ணி வருந்தினார். மகாராஜாவை அமைதிப்படுத்தும் எண்ணத்தோடு ஆயிரம் வருத்தங்கள் எனும் பொருள்படும் ஷமப்பண சகஸ்ரம் என்னுந்தலைப்பில் ஒரு நீண்ட கவிதையினை எழுதினார். காவிய மிடுக்கோடும் இலக்கிய நயத்தோடும் ஆயிரம் பாடல்களைக் கொண்ட அவ்வடமொழிப் பாமாலையினை மகாரா சவிடம் பணிந்தனுப்பினார். உள்ளத்தை உருக்கும் கேரள வர்மாவின் கவிதைத்திறமை தன் மனதை மாற்றிவிடும் என்றெண்ணியோ என்னவோ, மன்னர் அந்நூலைப் படிக்கவில்லை. அரண்மனை நூலகத்தில் அக்கை யெழுத்துப் பிரதியினை ரகசியமாக வைத்திருக்குமாறு ஆணையிடப்பட்டது. மன்னரின் மனம் மாறாது என்பதைப் புரிந்து கொண்ட கேரள வர்மா, மன்னரின் இறப்புக்குப் பின்னர் தான் தனக்கு விடுதலை என்று முடிவுகட்டி விட்டார். ஆதலால் தனது ஆழ்ந்த மெய்யறிவினை முழுதுமாக ஒன்றுபடுத்தி மரணத்தின் கடவுளான யமனைக் கடுமையாக வழிபடுகின்ற முறையில்

நூறுபாடல் கொண்ட யமப் பிரணாம சதகம் எனும் பயங்கரமாக நூலை எழுதினார். அன்றாடம் ஒரு பாடல் வீதம் எழுதி இறப்புக்கடவுளின் இருப் பிடம் எனப்படும் தென்திசை நோக்கி வீழ்ந்து வணங்குவாராயினர். ஏதோ ஒரு உடல்நலக்குறைவால் என்றாலும் இதனால்தான் என்று நம்பத்தகுந்த வாறு சரியாக நூறாவது பாடல் முடிந்த அன்று (19.10.1055) மன்னரும் இறந்து விட்டார்.

ஆலப்புழைச் சிறையில் கேரள வர்மா இருக்கும்போது அவரது மனைவியின் தனிப்பட்ட உரிமைகளையும், சலுகைகளையும் துண்டித்து விட்டு அவரையும் பழி வாங்கிக் கொண்டிருந்தார் மன்னர். கோட்டைக் குள்ளேயே இருக்கும் பத்மனாப சுவாமியின் ஆலயத்திற்கும், உள்ளூரில் இருக்கும் முருகன் கோவிலுக்கும் கூடப்போகக் கூடாதென்று அந்த அம்மையாருக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இந்தத் தடைகளைப் போட்ட பிறகும் கூட இரண்டாவது திருமணம் செய்து கொள்ளுமாறு மன்னர் வற்புறுத்தி ஒரு மாப்பிள்ளை ஏற்பாடு செய்துவிட்டார். வீராவேசம் மிக்க இளவரசியாரோ, “மறுமணம் செய்து கொள்ள நான் இன்னும் விதவையாகி விடவில்லை” என்பதைக் கண்டிப்பாகச் சொல்லி அனுப்பிவிட்டார். கேரள வர்மா மயூரசந்தேசம் (2.60) எனும் தூது நூலில் இதனைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

முன்னரே குறிப்பிட்டதுபோன்று திருவாங்கூர் அரச குடும்பத்தில் மருமக்கள் தாய வரிசைமுறை பின்பற்றப்படுவதால், இளவரசிக்குரிய மணமகனை அரசரே தேர்ந்தெடுப்பது வழக்கம். இந்த நிலையில் மகாராசா கூறியனுப்பிய மறுமண நிச்சயத்தை இளவரசி உதறித் தள்ளுவதற்கு ஒரு மனோதிடம் வேண்டும். அத்தோடு அவரது கணவராகிய கேரள வர்மா அரச தண்டனைக்குட்பட்டு காவல் கைதியாக இருக்கிறார். இந்நிலையில் அதிகார தோரணையுள்ள ஆயில்யம் திருநாள் மகாராசாவின் ஆணை யினை உதறித்தள்ள எந்த சாதாரணப் பெண்மணியாலும் முடியாது. ஆயினும் தனது துணிச்சலான செய்கையால், லஷ்மிபாய் இந்தியப் பெண்டிரின் சிறப்பினை நிலைநிறுத்தியதோடு இந்திய வீராங்கனைகளின் வரிசையில் தனியிடத்தைப் பெற்றுள்ளார் என்று கூடக் கூறலாம்.

4.

அரசவையின் நட்பும் இணக்கமும்

பத்தொன்பது ஆண்டு கால ஆட்சிக்குப்பின்னர் 1880–ஆம் ஆண்டில் ஆயில்யம் திருநாள் மகாராஜா காலமானார். சகோதரர் விசாகம் திருநாளும், லட்சுமிபாய் அம்மையாரும் மன்னரது மரணப்படுக்கையில் அவரைக் கண்டபோது கேரளவர்மாவைத் தண்டித்தமைக்கு மிகவும் வருந்தி, தனது மறைவிற்குப் பின்னர் அவருக்கு விடுதலை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆயில்யம் திருநாளின் மறைவுடன் கேரள வர்மாவின் தொல்லைகளும் மறைந்தன. சகோதரர் ஆயில்யம் திருநாளின் இறுதிச்சடங்கு முடிந்ததும், 1880–ஆம் ஆண்டிலேயே விசாகம் திருநாள் அரியணை ஏறினார். புதிய மகாராஜா என்கிற முறையில் அவர் வெளியிட்ட முதல் உத்தரவே கேரள வர்மாவை சிறையிலிருந்து விடுதலை செய்ததாகும். விடுதலை உத்தரவின் அறிவிப்பு வருதற்கு முன்னமேயே மருமகன் ஏ.ஆர்.ராஜராஜவர்மா உடன்வர கேரள வர்மா திருவனந்தபுரத்துக்கு அழைத்து வரப்பட்டு உரிய அரச மரியாதையோடு அரண்மனையில் வரவேற்கப்பட்டார்.

சிறையிலிருந்தபோது தனக்கு விடுதலை கிடைக்கும் வரை முக ஷவரம் செய்து கொள்வதில்லை என்று கேரள வர்மா முடிவு செய்திருந்தார். அதுவரை இவர் இந்த முடிவினை மாற்றிக் கொள்ளவேயில்லை. அரண் மனைக்கு வந்து மன அமைதி பெற்றதும் அழகான நான்கு வரிக்கவிதைகள் நான்கினை ஒரு புகழ் மாலையாக எழுதி விசாகம் திருநாளுக்கு அனுப் பினார். அமைதியான சூழ்நிலையில் கேரள வர்மாவின் பல்வேறு இலக்கியப் பணிகள், நண்பரும், வழிகாட்டியுமான விசாகம் திருநாளின் ஆதரவோடு புத்துயிரும் ஊக்கமும் பெற்று வளர்ந்தன.

மலையாள மொழியினைப் பாடமொழியாகக் கொண்டு வருவதோடன்றி, தற்காலத்திற்கேற்ப அதனை வலிவுபடுத்தி தனது எண்ணங்களையும் செயற்

படுத்தும் தகுதி உடைய சிறந்த அறிஞர் கேரள வர்மா என்று விசாகம் திருநாள் முடிவு செய்ததில் வியப்பொன்றுமில்லை. இளம் மாணவர்கட்கு மாண்டர் என்பார் ஆங்கிலத்தில் எழுதிய பல்வேறு வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பு நூல் பயனுடையதாக இருக்கும் என்று கருதி, அதனை மலையாளத்தில் தானே பெயர்த்தெழுத எண்ணிய விசாகம் திருநாள் அந் நூலுள் ஐவருடைய வாழ்க்கைச் சரிதங்களை மட்டும் நிறைவு செய்திருந்தார்.

பல்வேறு பணிகளின் குறுக்கீட்டினாலும் உடல்நலக்குறைவாலும் மீதமுள்ள பெயர்ப்புப்பணியினை* கேரள வர்மாவே செய்யுமாறு வேண்டிக் கொண்டு அவருக்குக் கீழ்க்காணுமாறு ஒரு கடிதமும் எழுதினார்.

"பற்பல காலத்தில் வாழ்ந்தோரின் வாழ்க்கை வரலாற்று நூலினை மாண்டர் எழுதிக் தொகுத்துள்ளார். மிகச்சிறந்த ஆடவர், பெண்டிரின் சுருக்கமான வாழ்க்கைச் சரிதங்கள் அந்நூலுள் அடங்கியுள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்னர் அவற்றை நான் மலையாளத்தில் பெயர்த்தெழுதத் தொடங்கினேன். அப்பெரியோரது நற்குணச் செய்கைகளையும் பெருமை யினையும் எடுத்துக்காட்டும் அத்தகைய நூலைப் பாடநூலாக்கினால், நமது இளைஞரிடம் இயல்பாகவே உள்ள உயர்ந்த நற் சிந்தனைகள் மேலும் பெருகி ஏராள வாய்ப்பு ஏற்படும். அவர்களிடையே நல்லொழுக்கம் உண்டாகும். ஆயினும் இந்த இலக்கிய முயற்சிகளைத் தொடர்ந்து செய்தற்கேற்ற உடல்நலமின்றி இருக்கிறேன். வேறு சில பணிகளும் இம்முயற்சிக்குத் தடைகளாக உள்ளன. முன்னுதாரணமாகக் கருதத்தகும் சிற்சில பெயர்ப்புகள் என்னால் தொடக்கத்தில் செய்யப்பட்டவை. அவற்றை இத்துடன் அனுப்பியுள்ளேன். என்பொருட்டு இந்தப் பணியினைத் தொடர்ந்து தாங்கள் செய்து நிறைவேற்றி விடவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்." இக்கடிதத்தோடு மான்டரது ஆங்கில நூலில் இல்லாத வேறு சிலரது வாழ்க்கை வரலாற்றினை எழுதுவதற்குத் தேவையான குறிப்புகளையும் மகாராஜா அனுப்பியிருந்தார். மிக்க ஆர்வத்துடன் கேரள வர்மா அந்தப் பணியினை ஏற்றுச் செயற்படுத்த முனைந்தார்.

அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, புத்தகக் குழுவினையும் மகாராஜா மீண்டும் தொடங்கி கேரள வர்மாவையே அதன் தலைவராகவும் நியமித்தார். கேரள வர்மா சிறைத்தண்டனை பெற்ற காலம் முதல் அந்தக் குழு செயற்படாமல் இருந்தது. மீண்டும் தொடங்கிய பின்னர் புத்தகக்குழு திறமையுடன் செயற்படுதற்கு வேண்டிய அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. கேரள வர்மா சிறப்புடன் செயலாற்றுதற்கு இந்தப் புதிய சூழ்நிலை பெரிதும் ஊக்கமளித்தது. மலையாள உரைநடை இலக்கியம் வளம்பெறுதற்கு வேண்டிய நல்ல பல யோசனைகளை அவ்வப்போது

மகாராஜாவும் கூறுவது வழக்கம். 1880–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாள் கேரள வர்மாவுக்கு அப்படி அவர் எழுதிய கடிதம் கீழ்கண்டவாறு:

"இத்துடன் அனுப்பப்பட்டுள்ள 'அக்பர்' என்னும் தலைப்பினைக் கொண்ட புதினம் இந்தியாவைப் பற்றியது. இந்நூலுள் பேரரசர் அக்பரின் பண்பு நலன்கள் மிகவும் சுவைபட எழுதப்பட்டுள்ளன. நூலைப் படித்துக் கொண்டு வரும்போதே அப்பேரரசரின் காலத்தில் வாழ்ந்து ஒரு நாளாவது அவருடன் பழகும் வாய்ப்பு நமக்குக் கிட்டவில்லையே என்று ஏக்கம் அடைகின்ற அளவுக்கு நெஞ்சையள்ளும் விதத்தில் சிறப்புடன் எழுதப்பட்டுள்ளது. மாண்டரது நூலில் அக்பரின் வாழ்க்கை வரலாறு இடம்பெறவில்லையாயின், அவரைப்பற்றிய இந்திய வரலாற்று நூல்களைப் பார்த்து தேவையான செய்திகளைத் திரட்டிக் கொண்டு இந்தப்புதினத்தில் காணப்படும் அவரது நல்லியல்புகளையும் இணைத்துக் கொள்ளவும். தாங்கள் மலையாளத்தில் எழுதிக்கொண்டிருக்கும் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பில் இவையும் இடம் பெற வேண்டும். அக்பரைப்பற்றிய இந்தப் புதினத்தையே முழுதுமாக மலையாளத்தில் கூடப் பெயர்க்கலாம்".

கேரள வர்மாவுக்கு மகாராஜா எழுதிய இன்னொரு கடிதத்திலும் கல்கத்தா ரெவ்யூ எனும் ஆங்கில மாத இதழில் அகல்யாபாய் பற்றிய சுருக்கமான வாழ்க்கை வரலாறு கட்டுரை வடிவில் வெளிவந்துள்ளதைச் சுட்டிக்காட்டி அதனையும் கூட வாழ்க்கை வரலாறுத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளலாம் எனும் தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். இதுபோன்ற செய்திகளினால் விசாகம் திருநாள் மகாராஜா மலையாள இலக்கியத்தைக் கேரள வர்மா வளர்ப்பதற்கு ஒரு அமைதியான, இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்ற உண்மை தெளிவாகிறது. புத்தகக் குழுவின் தலைவராக இருந்த காலத்திற்குள்ளேயே கேரள வர்மா மகட்சரித்திர சங்கிரகம், சன்மார்க்க விவரனை, சன்மார்க்க பிரதிபா, லோகத்திண்டே சைவவாஸ்தா எனும் நூல்களை எழுதியுள்ளார். 1897–ஆம் ஆண்டு புத்தகக் குழுவின் செயற்பாடுகளை அரசினர் சற்று கட்டுப் படுத்தினர். அடுத்த ஆண்டிலேயே உருவாக்கிய பிறிதோர் திட்டத்தினாலும் அவ்வளவாகப் பயன் ஏற்பட்டிலது. இருப்பினும் 1898–ஆம் ஆண்டு உள் நாட்டு மொழிகளை வளப்படுத்தும் நெறிமுறைகளை அறிவுறுத்தற்பொருட்டு அரசுக்குரிய ஆலோசகராகக் கேரள வர்மா நியமிக்கப்பட்டார்.

அரியணை ஏறியதும், திருவாங்கூர் மன்னர்கள் துலாபாரம் என்னும் ஒரு சடங்கினை நடத்துவது வழக்கம். விசாகம் திருநாள் நடத்திய துலாபார நிகழ்ச்சியில், அவ்விழாவின் நினைவாகக் கேரள வர்மா ஒரு மங்கல வாழ்த்துப் பாடினார். அத்தோடு விசாக விஜயம் என்னும் தலைப்பில் மகாராஜாவின் வாழ்க்கை மற்றும் அவரெழுதிய நூல்கள் பற்றிய ஒரு நீண்ட

காவியத்தையும் வடமொழியில் இயற்றினார். ரகுவம்சத்தில் திலீபன் பாத்திரத்தைக் காளிதாசர் எப்படி விவரித்துள்ளாரோ, அந்தப் பாணியில் மகாராஜாவின் பாத்திரம் கேரள வர்மாவால் சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்நூலுள் உள்ள இருபது காண்டங்களிலும், பதினான்கு காண்டங்களை மட்டும் படித்து மகிழ்கின்ற வரை தான், மகாராஜா உயிரோடிருந்தார்.

சுவாதித் திருநாள் மகாராஜாவின் காலத்தில் தான் அரண்மனையில் ஒரு ஓலைச்சுவடிக் காப்பகம் ஏற்படுத்தப்பட்டது. அறிவு வளர்ச்சியில் அவருக்கிருந்த ஆர்வத்தினாலே அந்தக் காப்பகத்தைத் தொடர்ந்து வளர்ப்பதிலும் அதற்குரிய நெறிகளை முறைப்படுத்துவதிலும் விசாகம் திருநாள் மிகுந்த ஆர்வம் காட்டினார். அக்காப்பகத்தின் பொறுப்பு கேரள வர்மாவுக்கு அளிக்கப்பட்டு அதனுடைய வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளும் கொடுக்கப்பட்டன. அந்தக் கால கட்டத்தில் பம்பாய், சென்னை வங்காள அரசினர் தத்தமது பகுதிகளில் ஓலைச்சுவடிகளை எப்படித் திரட்டி அச்சுக்குக் கொண்டு வந்து வெளியிடுகிறார்கள் என்பதை மகாராஜா கூர்ந்து கவனித்து வந்தார். கல்கத்தாவிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த பிப்ளியோதிகா இண்டிகா, பம்பாயிலிருந்து வெளியான பம்பாய் வடமொழி சீரிஸ், மைசூரில் அச்சாகிய பிப்ளியோதிகா சேன்ஸ்கிரிட்டா, பம்பாயிலிருந்து வெளியான காவ்யமாலா, கும்பகோணத்திலிருந்து அச்சிடப்பட்ட அத்வைத மஞ்சரி சீரிஸ், பனாரஸ் நகரிலிருந்து வந்த விஜய நகரம் சீரிஸ் ஆகிய நூல் வெளியீட்டுப் பட்டியல்களைக் கவனமுடன் படித்துப் பார்ப்பது அவரது வழக்கமாக இருந்தது. இந்திய நாடெங்கணும் காணப்பட்ட அத்தகைய இலக்கியப்பணிகளினாலே உற்சாகம் அடைந்து கேரள வர்மாவும் வெவ்வேறு இந்திய மொழிகளிலும் காணப்பட்ட கையெழுத்துச் சுவடிகளைத் திரட்டுவதிலும், பெயர்த்து எழுதுவதிலும், அச்சிட்டு வெளியிடுவதிலும் மிகுந்த ஆர்வமும் உழைப்பும் காட்டினார். இந்தப் பணிக்கென்று கேரளாவில் முக்கியமானன பெரிய குடும்பங்களில் சேகரித்து வைத்திருந்த ஓலைச்சுவடிகளையெல்லாம் அரும்பாடுபட்டு ஒருங்கு திரட்டினார். வெளியிடங்களில் உள்ள நூலகங்களிலிருந்தும் சுவடிகளைப் பெற்றார். இத்தகைய தீவிர முயற்சியின் பலனாக, அரண்மனை ஓலைச்சுவடிக்காப்பகம் ஒரு கட்டத்தில் ஏராளமான அரிய நூல்களைப் பெற்றிருந்தது. கேரள வர்மா கடுமையாக உழைப்பவராதலின், தன்னுடைய அழகான கையெழுத்திலேயே பற்பல ஓலைச்சுவடிகளை தாளில் பெயர்த்து எழுதினார். இவ்வாறு தன் கையால் எழுதப்பட்ட பிராக்ரிய ஸர்வஸ்வா எனும் நூலினைத் தனது நன்றியின் அடையாளமாக விசாகம் திருநாளுக்கு வழங்கினார். சுகசந்தேசம், மேல்புத்தூரார் எழுதிய மகாராஜபிரஜஸ்தி எனும் இரண்டு வடமொழி நூல்களையும் காப்பகத்திலிருந்து பெயர்த்தெழுதி, ஒழுங்கு செய்து கேரள வர்மாவே வெளியிட்டார். சுகசந்தேசத்தின் ஒரு பகுதியினைக் கேரள

வர்மாவே பதிப்பித்து ராயல் ஏஷியாட்டிக் சொசைட்டியின் வழியாக வெளியிட்டுள்ளார். ராமப்புரத்து வாரியரின் அஷ்டபதி, நைடதசம்பு, பாரதசம்பு, செல்லூர் மகாத்மியம் சம்பு, ராமாயணசம்பு (முதல்பாகம்) ஆகிய மலையாள நூல்களும் கேரள வர்மா பதிப்பித்த நூல்களுள் அடங்கும். ஆயில்யம் திருநாளின் உரைநடை நூல்களை முதன்முதலில் பதிப்புக்குக் கொண்டு வந்தவரே கேரள வர்மா தான். தனது கடைசி மூச்சுவரை அரண்மனை ஓலைச்சுவடிக் காப்பகத்தின் தலைவராக இருந்தவரும் அவரே.

ஓலைச்சுவடிக் காப்பகத்தின் தலைவராக இருந்தபோது, பிற இடங்களிலிருந்து அறிஞரோடு கடிதத்தொடர்பு வைத்திருந்தமையால், அறிஞர் உலகில் கேரள வர்மாவுக்குச் சிறந்த மதிப்பு இருந்தது. இவரது தலைமையின் கீழ் ஓலைச்சுவடிக் காப்பகத்தின் தரமும் சிறப்பும் இந்தியாவின் பிற இடங்களில் இருந்தவையினை ஒப்ப மிகவும் உயர்ந்து விளங்கியது. இந்த ஓலைச்சுவடி நூலகத்தின் பணியினைப் பொறுத்தவரையில், பாஸரின் நாடகங்களைப் பிற்காலத்தில் வெளிக் கொணர்ந்த டி. கணபதி சாஸ்திரி என்பாரே கேரள வர்மாவுக்குப் பெரிதும் துணை புரிந்தவர். கேரள வர்மாவிடம் அவர் பெற்ற பயிற்சியே திருவனந்தபுரம் வடமொழி சீரிஸ் எனும் இதழின் ஆசிரியராக அவர் உலகம் முழுதும் அறிமுகம் ஆவதற்குத் துறை நின்றது. ஓலைச்சுவடி நூலகத்திற்குச் சாஸ்திரியார் செய்த பணிகளைப் பாராட்டுகின்ற முறையில், கேரள வர்மாவின் வேண்டுகோளுக்கு இணங்க, மகாராஜா சாஸ்திரிக்கு வீரசிருங்காலம் எனும் பரிசளித்தார். தொன்மையான நூல்களைப் பதிப்பிக்கும்போது தக்க ஆலோசனைகளைக் கேரள வர்மா கேட்டு அறிந்து கொண்ட ஒரு அறிஞர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையாகும். இவர் அப்போது தொல்பொருள் துறை இயக்குநராக இருந்தார். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 1879–ஆம் ஆண்டு அகால மரணம் அடைந்தபோது, அவரது இழப்பு தனக்கு மட்டுமன்றி திருவாங்கூருக்கும் பேரிழப்பாகும் என்று கேரள வர்மா தனது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மகாராணி லஷ்மிபாய் அவர்களின் உயர்ந்த பண்புகளைப் பற்றி முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். ஆயினும் அவை நெடுங்காலம் வெளியில் அவ்வளவாகத் தெரியாமல் இருந்தன. விசாகம் திருநாளின் ஆட்சியில் அவரது தொல்லைகளும் நீங்கிவிட்டன. 1881–ஆம் ஆண்டில் லஷ்மிபாய் அவர்களின் தனிப்பட்ட புகழினைப் பெருமைப்படுத்தும் வண்ணம் விக்டோரியா ராணியார் அவருக்கு சி.ஐ. எனும் பட்டத்தை அளித்த செய்தி வந்தது. இதுபற்றிய அறிவிப்பு வரும்போது, லஷ்மிபாய் கணவர் கேரள வர்மாவுடன் அரண்மனைக் கோவிலில் வருடாந்திர வழிபாடு நடத்துவதற்காக அட்டிங்கால் எனுமிடத்தில் தங்கியிருந்தார். இச்செய்தி கேட்டதும்

இருவரும் பெருமகிழ்ச்சியடைந்தனர். திருமதி லஷ்மிபாய்க்கு அப்படியொரு பெருமை கிடைக்கும் என்று கேரள வர்மா கருதியிருந்தார் என்பதற்கு அவரது மயூர சந்தேசத்தில் சான்றுகள் உள்ளன.

1881–ஆம் ஆண்டு திருவனந்தபுரத்தில் மகாராணி லஷ்மியிடம் பட்டத்தை நேரில் அளித்துப் பெருமைப்படுத்தினார். அரே ஆண்டில் விசாகம் திருநாள் மகாராஜா புதிய அரண்மனை ஒன்றனைக் கட்டுவித்து அதன் தொடக்க விழாவினையும் மிக ஆடம்பரமாக நடத்தினார். அந்நிகழ்ச்சியில் கேரள வர்மா ஒன்பது செய்யுள்கள் அடங்கின ஒரு வாழ்த்துப் பாடலை மகாராஜாவிடம் அளித்தார்.

விசாகம் திருநாள் மகாராஜாவின் பெருமையில் ஈடுபட்ட கேரள வர்மா அவரைப் பற்றி விசாக விஜயம் எனும் காப்பியத்தை எழுதியதோடு மன நிறைவு அடைந்துவிடவில்லை. மற்றவர்கட்கு எடுத்துக்காட்டாக இருக்கும் வகையில் மகாராஜாவின் வாழ்க்கை வரலாற்றை மலையாளத்திலும் எழுத எண்ணினார். தேவையான அனுமதியை மகாராஜாவிடமிருந்து பெற்ற தோடன்றி, அப்பணியினையும் தாமதமின்றித் தொடங்கினார். ஆயினும் என்ன காரணத்தினாலோ அந்தப்பணி தொடர்ந்து நடக்கவில்லை. மகா ராஜாவின் 'தன்வரலாறு' அப்போது வெளிவந்து விட்டதனால், இப்பணி தடைப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

1882–ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் கேரள வர்மா சென்னைக்குப் பயணம் செய்து அப்போது கவர்னராக இருந்த திருவாளர், கிராண்ட் டப் என்பாரைக் கண்டு பேசினார். அதற்குப் பின்னர் ஏறத்தாழ ஒரு மாத காலம் வடக்கு மலபாரில் பல்வேறிடங்களில் தனது உறவினர்களையும் அறிஞர்க ளையும் நேரில் பார்த்து அளவளாவினார். முதலில் கொல்லத்துக்குச் சென்று அரிப்பாடு அரண்மனையில் தங்கியிருந்த விசாகம் திருநாள் மகா ராஜாவுடன் சில நாட்கள் தங்கியிருந்தார். அரிப்பாடு முருகன் கோவிலில் வழிபாடு நடத்தினார். பின்னர் மாவலிக்கரை, என்னக்காடு திருவள்ளா, சங்கணச்சேரி அரண்மனைகளுக்கெல்லாம் சென்றார். வைக்கம், பரப்பனங் காடி ஆகிய இடங்களுக்கும் சென்று நண்பர்களையும், உறவினர்களையும் கண்டு வந்தார். அங்கு சில நாட்கள் தங்கி குடும்பத் தெய்வமான நிரம்கைத்தகோட்ட ஆலயத்தில் வழிபாடு செய்த பின்னர் திரும்புகால் பயணத்தைத் தொடங்கினார். வழியில் குருவாயூர் ஆலயத்தில் தொழுகை செய்து தனது சார்பில் வீரசிருங்காலத்தையும், தனது அன்னையாரின் சார் பில் தங்கத்தாலி ஒன்றனைக் கொடுங்களூர் இறைவனுக்கும் சமர்ப்பித்தார். பின்னர் எர்ணாகுளம் வழியாகத் திருவனந்தபுரம் சென்றடைந்தார். இப்படித் தமது பயணத்தினாலே கேரளாவின் மூன்று பகுதிகளான திருவாங்கூர் கொச்சி, மலபார் ஆகிய இடங்களில் உள்ள அனைத்து மக்களும் அவர் மீது

அன்பும் மரியாதையும் கொண்டிருந்த உண்மையினைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

மகாராஜா விசாகம் திருநாளின் நிர்வாகச் சிறப்பினையும் அறிவுத் திறமையினையும் பெருமைப்படுத்த எண்ணிய இந்திய அரசு ஜி.சி.எஸ்.ஐ எனும் பட்டத்தை அளிக்க விரும்பியது. அந்த விருதினை சென்னை யிலிருந்து கவர்னர் அளிப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனை நேரில் பெறுதற்காக 1882–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் சென் னைக்குப் பயணித்த மகாராஜாவுடன், கேரளவர்மாவும் சென்றார். அந்த அரிய விருதினை மகாராஜா பெற இருப்பதை முன்னிட்டு கவர்னர் பெரிய விருந்து ஒன்றையும் கொடுத்தார். உயர் அலுவர்களேயன்றி, பல்வேறு பெருமக்களும் அதில் கலந்து கொண்டனர். அப்போது சென்னையில் தங்கியிருந்த முன்னாள் திருவாங்கூர் திவான் சேஷய்ய சாஸ்திரியையும் பிற நண்பர்களையும் கேரள வர்மா சந்தித்து மகிழ்ந்தார். பின்னர் சென்னை யிலிருந்து மகாராணியார் உடன்வர கேரள வர்மா திருப்பதி சென்று வேங்க டேசப் பெருமானை வழிபட்டார். அச்சமயத்தில் காஞ்சிபுரம், சிதம்பரம், மதுரை ஆகிய தலங்களுக்கும் சென்று தனது மனைவியாருடன் ஆங்காங் குள்ள கோயில்களில் வழிபாடு செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது.

1883–ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகம் கேரள வர்மாவைத் தனது மேதகு உறுப்பினருள் (பெலோ) ஒருவராகவும் பேரவை உறுப்பி னராகவும் ஏற்றுக்கொண்டது. அவரது படிப்பு முழுக்க முழுக்க முறைசாராக் கல்வியாகவே இருந்தமையான், கல்லூரியின் பழைய மாணவனாக இருக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் அவரது அறிவுத்திறமையினையும், அறிஞர்களிடையே அவருக்கிருந்த பெருமை யினையும் எண்ணி இந்தியாவின் தொடக்க காலக் கல்வி நிறுவனமாகிய சென்னைப் பல்கலைக்கழகம் அவரைத் தனது உறுப்பினராக்கி மகிழ்ந்தது.

இச்செய்தி கிடைத்ததும், விசாகம் திருநாளுக்குத் தனது மகிழ்ச்சி யினையும், நன்றியினையும் கேரளவர்மா பாடலாகவே தெரிவித்துக் கொண்டார். அப்பாடலின் சுருக்கம் இதுதான். ஒருசமயம் இந்திரத் துய்மன் எனும் யானை முதலையிடம் சிக்கிக் கொண்டபோது திருமால் அதனைக் காப்பாற்றி சாரூப்பிய பதவியளித்தமாதிரி விசாகம் திருநாள் மகாராஜாவோ கேரளவர்மாவைச் சிறையிலிருந்து விடுவித்ததோடன்றி தனக்குக் கிடைத்தி ருந்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் மேதகு உறுப்பினர் பதவியினைக் கேரள வர்மாவும் கிடைக்கச் செய்தார். ஸர்.டி.மாதவராவ் அனுப்பிய இதுபற்றிய வாழ்த்துத்தந்தி விசாகம் திருநாளுக்கு அனுப்பப்பட்டது. மகாராஜாவும் கேரள வர்மாவுக்குக் கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் எழுதினார்.

"மாதவராவ் அனுப்பிய தந்தியை எனது வாழ்த்துகளுடன் தங்களுக்கு அனுப்புகிறேன். உறுப்பினர் பதவி பற்றிய செய்தி உறுதிப்படுத்தப்பட்டு அரசிதழில் (கெஜட்) வெளியாகி இங்கு வந்ததும், அந்தப் பிரதியினைத் தங்களுக்கு அனுப்புவேன். தாங்கள் இப்பதவியினைப் பெறுமாறு கிராண்ட் அவர்களிடம் நான் பரிந்துரை செய்த இச்சிறு உதவிக்காக என்னைத் தாங்கள் பாராட்டுவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்னால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் மேதகு உறுப்பினராக அந்நாளைய கவர்னர் ஸர் வில்லியம் டெனிசன் என்னை நியமித்து எழுதிய கடிதத்தை எத்துணை மகிழ்ச்சியோடு படித்தேன் என்பது எனக்கு நினைவிருக்கிறது. அப்பதவிக்கு நியமிக்கப்பட்டோருள் யானே முதல் இந்திய உறுப்பினர். பிஷப் கால்டுவெல், கார்மைக்கேல், பவுலர் ஆகிய மூவருமே எனக்கு முன்னிருந்த ஐரோப்பிய உறுப்பினர்கள். அவர்களுள் கடைசி இருவரும் விரைவில் இங்கிலாந்துக்குச் செல்ல விருக்கிறார்கள். இந்நிலையில் பேரவை உறுப்பினராகத் தாங்கள் நியமிக்கப்பட்டது பற்றி மீண்டும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

சென்னைப் பல்கலைக்கழகப் பேரவையில் கேரள வர்மா உரையாற்றும் போதெல்லாம் பாடத்திட்டத்தில் இந்திய மொழிகளுக்கு முக்கிய இடமளிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது வழக்கம். திராவிட மொழிகளின் பாடத்திட்டக் குழுவிலும் அவர் ஒரு உறுப்பினராக இருந்தார். எல்லா வகையாலும், பேரவை உறுப்பினராக அவராற்றிய பணியினால் பொதுவாக இந்திய மொழிகளுக்கும் குறிப்பாகத் திராவிட மொழிகளுக்கும் பல்கலைக்கழக அளவில் ஒரு மரியாதை கிடைத்தது. அந்நாட்களில் இந்திய மொழிகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டிருந்தன என்பதை நினைவிற் கொண்டால் இவரது தொண்டும் சிறப்பும் புலப்படும்.

ஐந்தாண்டு காலச்சிறந்த ஆட்சிக்குப்பின்னர் விசாகம் திருநாள் மகாராசா 1885-ஆம் ஆண்டு ஆகஸ்டு 4-ஆம் நாள் இயற்கை எய்தினார். கேரளவர்மா உள்ளிட்ட அவரது உற்றாரும் பிறரும் பெருந்துக்கத்தில் ஆழ்ந்தனர். அவருக்குப்பின் ஆட்சி பீடம் ஏறிய ஸ்ரீமூலம் திருநாள் கேரளவர்மாவின் மாமன் ராஜராஜவர்மாவின் திருக்குமாரர் ஆவர். இந்தப் புதிய மகாராஜவும் கேரள வர்மாவைப் பெரிதும் ஆதரித்தார். ஆயினும் விசாகம் திருநாளைப் போன்று மிகவும் நெருக்கமான தொடர்பு இல்லை. இவர் சிறந்த படிப்பாளியாகவோ, அறிஞர்களை ஆதரிப்பாராகவோ இல்லை. எனவே கேரள வர்மாவின் அறிவு பூர்வமான தொடர்புக்கு இவரிடம் வழியில்லை. இருப்பினும் கேரள வர்மாவின் கடைசிக்காலம் வரை மகாராஜாவின் நட்புறவும் தொடர்பும் நலமுறவே அமைந்திருந்தது.

கேரள வர்மாவுக்கு ஸ்ரீமூலம் திருநாள் காட்டிய சலுகைகளுள் குறிப்பிடத் தகுவது விசாக விஜயம் எனும் நூலை வெளியிடுவதற்குச் செய்த உதவியே, டாக்டர் கணபதி சாஸ்திரியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்த பம்பாய் மைஸ்கிருத சீரிஸ் எனும் இதழில் 1889–ஆம் ஆண்டு முதல் இந்நூல் தொடர்ந்து வெளியிடப்பட்டது. அந்நூலின் முதல் ஐந்து சருக்கங்களை வெளியிட வேண்டாமென்று கணபதி சாஸ்திரியை மகாராஜா கேட்டுக் கொண்டார். கேரள வர்மா விடுதலைபெற்றுத் தனது மனைவியுடன் மீண்டும் இல் வாழ்க்கையினைத் தொடங்குவது பற்றிய அந்தப்பகுதி அவரது சுய சரிதத்திலிருந்தே எடுக்கப்பட்டது. விசாகம் திருநாள் மகாராஜாவினால் முன்னமேயே படித்துப்பார்த்து ஒத்துக்கொள்ளப்பட்ட பகுதியே அது. இருப்பினும் மூலம் திருநாள் அப்பகுதியினை ஒதுக்கிவிடச் சொன்னார். அதே சமயம் அரச மரியாதைக்குக் கேரள வர்மா பரிந்துரைக்கும் எவரையும் ஏற்றுக் கொள்ள மன்னர் தயங்கவில்லை.

• • 5.

தலை சிறந்த இலக்கியப் படைப்பாளர்

மலையாள இலக்கிய மறுமலர்ச்சிக் காலத்தின் தொடக்கத்தில் பாஷா போஷினி சபையும், அதன் வெளியீடான பாஷாபோஷினி எனும் பத்திரி கையும் சிறந்த பணியாற்றின. தேர்தலுக்கு வராமலேயே அச்சபையின் நிரந்தரத் தலைவராகக் கேரள வர்மா தேர்ந்தெடுக்கப்பட்டார். சபையின் தலைவராக அவர் சிறப்புடன் பணியாற்றுதற்குச் செயல்திறன் மிகுந்த வர்கீஸ் மாப்பிள்ளை சபையின் செயலராக இருந்து உதவிபுரிந்தார். சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலம் முதற்கொண்டு சபையின் மூன்று குறிக்கோள்களான பாடல், உரைநடைக்கேற்ற மொழியினை ஒழுங்கு செய்தல், பாடநூல்களைப் பரப்புதல் மற்றும் தொன்மையான சுவடிகளைச் சேர்த்து பாதுகாத்துத் திறம்பட வெளியிடல் ஆகியவற்றை நிறைவேற்றுதற் பொருட்டுக் கேரள வர்மா அரும்பாடுபட்டார்.

கேரள வர்மாவின் சமகாலத்தவர்கள் அவரது அறிவுத்திறனைப் பாராட்டி யதோடு அவரது பண்பு நலனையும் பெரிதும் மதித்தனர். அத்தகையோருள் மிகச்சிறந்தவராகச் சந்து மேனனைக் குறிப்பிடலாம். ஆங்கில ஆட்சியின் கீழ் நீதிபதியாக இருந்ததோடன்றி மலையாள நாவல் இலக்கியத்திலும் அவர் முன்னோடியாகத் திகழ்ந்தவர். காளிதாசர் எழுதிய சாகுந்தலத்தின் மலை யாளப் பெயர்ப்பினைச் செய்த கேரளவர்மா மீது சந்துமேனன் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். காலப்போக்கில் ஒருவரையொருவர் விரும்பிப் பழகினார்கள். மேனன் கேட்டுக்கொண்டபடி புகழ்வாய்ந்த வடமொழி இலக்கிமான அமருக சதகம் என்பதனைக் கேரள வர்மா மலையாளத்தில் பெயர்த்தார். பாஷாபோஷினி இதழில் கேரள வர்மா தொடர்ந்து எழுதி வெளிவந்த மயூரசந்தேசத்தைப் படித்தபோது கேரள வர்மாவின் மீது மேனனுக்கிருந்த மதிப்பு உச்சக்கட்டத்தை அடைந்தது.

திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் முதல் இந்தியமொழிப் பேராசிரியராக இருந்தவரும், சிறந்த அறிஞருமான ஏ.ஆர்.ராஜராஜவர்மா தனது வாணாள் முழுதும் கேரள வர்மாமீது பெருமதிப்புக் கொண்டிருந்தார். ராஜராஜவர்மாவை ஒரு பேரறிஞராக கேரள வர்மா உருவாக்கியதோடன்றி அவரது அலுவலகப்பணியில் உயர்ந்து விளங்குதற்கும் உதவி புரிந்தார். காளிதாசரின் சாகுந்தலம் கேரள வர்மாவின் மொழிபெயர்ப்பின் காணப்படுவதைவிட எளிய நடையில் மலையாளிகளுக்குக் கிடைக்கவேண்டும் என்று எண்ணிய ராஜராஜவர்மா மலையாள சாகுந்தலம் எனும் நூலினை எழுதி அதனைக் கேரள வர்மாவுக்குச் சமர்ப்பித்தார்.

மகாபாரதத்தை மலையாளத்தில் பெயர்த்தெழுதி அதனால் கேரள வியாசர் என்று புகழ் பெற்ற கொடுங்கள்ளூர் குஞ்சிக்குட்டன் தம்புரானைக் காட்டிலும் கேரள வர்மாவின் புகழ் மேலோங்கியது. மகாகவி உள்ளூர் இது பற்றிக் கூறுவதாவது: வியக் கத்தக்க முறையில் தன்னிச்சையாக வடமொழியிலும், மலையாளத்திலும் கவிபுனையும் வல்லமைபடைத்த பெரும் புலவர் கொடுங்கள்ளூர் குஞ்சிக்குட்டன் தம்புரான் பாஷாபோஷினி மாநாட்டில் கலந்து கொள்ளுதற்காக 1911–ஆம் ஆண்டு வைக்கம் எனும் ஊருக்கு வந்திருந்தார். பணிவும் அடக்கமும் சான்ற அப்பெருமகனார் வலிய கோயில் தம்புரான் மூன்று நான்கு முறை வற்புறுத்திய பின்னரே அருகில் அமர்ந்தார். மிகுந்த ஆவலோடு அவரிடம் யான், "அவர் முன்னிலையில் அமர்வதற்கு ஏன் தயங்குகிறீர்கள். அவரினும் நீங்கள் குறைந்த வயதுடையவராக இருந்தால் என்னால் அதனைப்புரிந்து கொள்ள முடியும்" என்று சொன்னேன். உடனே அவர், "வடமொழி இலக்கணத்திலும், கவி இயற்றுவதிலும் பேரறிஞராக விளங்கும் அவர் முன்னிலையில் நான் எப்படி உட்காருவது"? இந்த இரண்டு இலக்கிய மேதைகளும் ஒருவருக்கொருவர் கவிதையிலேயே கடிதம் எழுதிக் கொள்வர். கேரள வர்மாவைச் சிறப்பித்துப் பேசும் மகாகவி வள்ளத்தோள் நாராயண மேனனும் அவரது மற்றொரு சீரிய நண்பராகும்.

சாகுந்தலத்தைக் கேரள வர்மா முதன்முதலாக மலையாளத்தில் பெயர்த்து வெளியிட்டதும், அதனைக் கேரளத்தின் மிகச்சிறந்த நூலாகப் பாராட்டினர். இலக்கிய உலகம் கேரள வர்மாவைக் கேரளத்துக்காளிதாசர் எனும் பட்டமளித்துச் சிறப்பித்தது. அந்நூலின் கருத்தோட்டத்தையும், பெயர்ப்பாளரின் கவிதை நுணுக்கத்தினையும் நோக்கும்போது அச்சிறப்புப் பட்டம் பொருத்தமானதென்றே கூறலாம். ஆயினும் வள்ளத்தோளின் இலக்கிய ரசிகர்கள் கேரள வர்மாவை விட வள்ளத்தோளுக்கே அந்தச் சிறப்பு பொருந்தும் எனக்கருதி அதனை மாற்றிவிடவும் முயன்றனர். ஆயினும் அறிவாற்றலோடும் பெருந்தன்மையோடும் வள்ளத்தோள் குறுக்கிட்டு அத்தகைய முயற்சி முற்றுமாகப் பொருத்தமற்றது என்று வெளிப்

படையாகக் கூறிவிட்டார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு கேரள வர்மா வள்ளத்தோருக்கு எழுதிய கடிதத்தில் "அனைத்தும் மேலாகத் தங்களது சீரிய நட்பினை நான் பெரிதும் மதிக்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

மற்றவர்கள் கேரள வர்மாவுக்கு மதிப்புக் கொடுத்தபோது, அறிஞரும் கவிஞருமாகிய ஒருவர் அவரை மதித்ததோடன்றி வணங்கி வழி பட்டார். அவர் தான் மகாகவி உள்ளூர் பரமேஸ்வர அய்யர். 1900–ஆம் ஆண்டில் தான் உள்ளூர் கேரள வர்மாவின் செல்வாக்குக்கு ஆட்பட்டார். அப்போதுதான் உள்ளூர் ஆங்கில எம்.ஏ.வகுப்பில் சேர எண்ணியிருந்தார். ஆனால் கேரள வர்மாவோ உள்ளூரின் திறமையும் பற்றும் மலையாளத்தின் வளர்ச்சிக்குப் பயன்படவேண்டும் என்றெண்ணி அவரை மலையாளம், தமிழ் ஆகிய இரண்டிலும் முதுநிலைப்பட்டம் பெறுமாறு ஆலோசனை கூறினார். உள்ளூர் அந்த அறிவுரையினை ஏற்றுக்கொண்டு மலையாள மொழியினையும், இலக்கியத்தினையும் மிகுந்த ஆர்வத்துடன் பயின்று தேறினார்.

கேரள வர்மாவுக்கும், உள்ளூருக்கும் ஏற்பட்ட நட்பு அவர்கள் இருவருக்குமே நன்மையாக இருந்தது. கேரள வர்மாவின் ஊக்கமும் பொருள் உதவியும் உள்ளூருக்கு நன்மையாக இருந்தது போன்று, தேவைப்படும் போது உள்ளூரின் நம்பிக்கையும் உதவியும் கேரள வர்மாவுக்குக் கிடைத்தது. அவர்களது நெருங்கிய தொடர்பு குறித்து உள்ளூர் பரமேசுவர அய்யரே கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

1910–ஆம் ஆண்டிலிருந்து இலக்கியப் பணிகளில் அவருடைய செயலாளராக இருந்து பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தமையை எனது பெரும் பேறாகக் கருதுகிறேன் என்பதே அக்குறிப்பு. கேரள வர்மாவின் மயூர சந்தேசத்தை ஆங்கிலத்தில் பெயர்த்து எழுதியதனை ஆர்.சி.தத் போன்ற இலக்கிய மேதைகளே பெரிதும் புகழ்ந்துள்ளனர் என்பது அனைவருக்கும் தெரிந்த செய்தியாகும். உள்ளூர் எழுதிய மிகச்சிறந்த 'உமாகேரளம்' என்னும் காப்பியத்தில் கேரள வர்மாவின் தாக்கத்தைக் காண முடிகிறது. இந்நூல் எழுதி முடிக்கப்பட்டதும், கேரள வர்மா ஒரு முன்னுரை எழுதினார். அதில் வடமொழி நூலாகிய நைஷாதிய சரிதத்தின் ஆசிரியராகிய ஸ்ரீஹர்ஷரையும் உள்ளூரையும் ஒப்பிட்டுப் பேசுகிறார். மலையாளக் கவிதை உலகிற்கு உள்ளூரின் பங்கு எத்தகையது என்பது குறித்துக் கேரள வர்மா அவரது படைப்புகள் பெரும் அளவிற்கு மலையாளக் கவிதையினை வடமொழிக் கவிதையின் அளவிற்கு உயர்த்தியுள்ளது" என்று சுட்டிக்காட்டுகிறார்.

கேரள வர்மாவை ஒரு தடவை கூட உள்ளூர் அப்பெயரால் அழைக்காமல் கேரள வர்மதேவர் என்றே குறிப்பிடும் அளவுக்கு அவர் மீது மதிப்பு வைத்திருந்தார். அப்பெயரினை ஒரு மந்திரமாகக் கருதும் அளவிற்கு அது அவருக்கு ஒரு புனிதப் பெயராக இருந்தது.

அக்காலத்திய இலக்கியப் பேரறிஞர்களும், கவிஞர்களுமான குமர ன் ஆசான், கே.சி. கேசவ பிள்ளை, நாவலாசிரியர் ராமன் பிள்ளை, வடமொழி அறிஞர் புன்னசேரி நீலகண்ட சர்மா, அகராதி அறிஞர் பத்மனாப பிள்ளை, நாட்டுப்புறக்கதைகளைத் தொகுத்த கொட்டாரத்தில் சங்குன்னி, சுதேசாபிமானி ஆசிரியர் கே. ராமகிருஷ்ண பிள்ளை ஆகியோர் கேரள வர்மாவின் மதிப்புக்கு ஆளாக வேண்டும் என்று விரும்பாத இலக்கியப் படைப்பாளியே அந்நாட்களில் இல்லை. கேரளப் பகுதிக்கு அப்பாலும் கூட இலக்கிய வாதிகளும் அரசியல் அறிஞருமாய நண்பர்களும் ஆர்வலரும் கேரள வர்மாவுக்கு நிறைய இருந்தனர்.

1895–ஆம் ஆண்டு கேரள வர்மா எப்.ஆர்.எச்.எஸ் எனும் அரிய பட்டத்தை ஆங்கில அரசியாரிடமிருந்து பெற்றார். அந்நாளைய ஆங்கில அரசின் பிரதிநிதியான திருவாளர் கிரிக் என்னும் கல்வித்துறை நிபுணர் அளித்த பரிந்துரையின் அடிப்படையில்தான் மேதகு ஆங்கில அரசியாரிடமிருந்து இப்பட்டம் வரப்பெற்றார். பின்னாளில் அரசப்பிரதிநிதியாக இருந்த பி.தாம்ஸன் கேரள வர்மாவுக்கு இவ்விருதினை நேரில் வழங்கினார். இந்தப் பெருமையினைப் பாராட்டுதற்காகத் திருவனந்தபுரத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தபோது, கேரள வர்மா நன்றி தெரிவித்துக் கீழ்க்காணுமாறு உரையாற்றினார்:

"மிகுந்த அறிவாளியும் பண்பாளருமான எனது மதிப்பிற்குரிய மாமன் அவர்களின் பெருந்துணையோடு யான் ஆங்கிலத்தையும், வடமொழியினையும் கற்கும் பேறு பெற்றேன். அதனைத் தொடர்ந்து அவரிட்ட ஆணையின் வண்ணம் எனது தாய்மொழியினைத் திறம்பட வளர்க்கும் நன்முயற்சியில் ஈடுபட்டேன். இம்முயற்சியில் என் விருப்பத்திற்கேற்பச் சிறந்த முறையில் தொண்டு செய்தேன் என்று கூறக்கூடாது. பாட நூற் குழுவின் தலைவர் என்ற முறையில் சில மொழிபெயர்ப்புகளையும், தழுவல் நூல்களையும் எழுத முடிந்தது. மலையாள மொழியின் தனிப்பட்ட வளர்ச்சிக் கென்று பெரிய அளவில் யான் ஒன்றும் செய்த விடவில்லை. இத்துறையில் செய்யப்பட வேண்டியதை எண்ணும்போது, இதுகாறும் செய்யப்பட்டவை அனைத்தும் கடல் நீரின் ஒரு துளிக்குச்சமமானது என்றே தோன்றுகிறது. ஏதோ ஒரு வாய்ப்பினை ஒட்டித்தான் வடமொழிச் சாகுந்தலத்தை மலையாளத்தில் பெயர்த்து நாடக இலக்கியத்துக்கும் மலையாளத்துக்கும் ஒரு தோற்றுவாய் அமைத்தேன்".

1898–ஆம் ஆண்டு பாஷாபோஷினி அவையின் தலைமை உரையில் ஆங்கில அரசின் விருது தனக்குக் கிடைத்தமை பற்றிய மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொண்டார்.

ஆன்மீக நெறி சார்ந்த வாழ்க்கையினை விரும்பினாலும் கேரள வர்மா தொடர்ந்து இலக்கியப்பணியிலும் ஈடுபட்டார். ஒருமுறை அவரே குறிப் பிட்டதுபோன்று இலக்கியப் பணியிலிருந்து தன்னை அவரால் விடுவித்துக் கொள்ள முடியவில்லை. "மலையாள இலக்கியத்தை நான் விட்டுவிட்டாலும், அது என்னை விடமாட்டேன் என்கிறது". ஆயினும் பெரு மதிப்புக்குரிய அவர்தம் அன்னையாரின் மறைவு அவரது இயல்பான இலக்கியப் பணியில் ஒரு தொய்வினை ஏற்படுத்திவிட்டது. கேரள வர்மா உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்திவிட்டு 1896-ஆம் ஆண்டில் அவரது அன்னையார் காலமானார்.

கேரள வர்மாவின் வாழ்வில் இரண்டு பெரிய தீவினைகளைச் சுட்டிக் காட்டலாம். சிறைப்படுத்தப்பட்ட அவமானம், குழந்தைப்பேறின்மையால் அவரடைந்த மனவருத்தம் ஆகிய இரண்டுமே அவை. தானியற்றிய விசாக விஜயம் எனும் நூலை ஆண் மகவாகவும், தான் பெயர்த்தெழுதிய சாகுந்தலத்தைப் பெண்மகவாகவும் கற்பனை செய்துகொண்டே அவர் மன அமைதியுறுவார். ஆயினும் உறவினர் நண்பர்கள் கேட்டுக்கொண்டபடி மகாராணி லஷ்மி அம்மையார் திருவாங்கூர் அரசகுடும்ப இளவரசிகளாகக் கருதத்தருமாறு மாவலிக்கரை அரண்மனையிலிருந்த இரண்டு இளம் பெண்களை மரபு உரிமைக்கென எடுத்துக் கொண்டார். 1900-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட இந்த மரபு உரிமையினை ஒத்துக்கொண்டு, அந்த இரண்டு பெண்களும் கேரள வர்மாவின் பாதுகாப்பில் இருக்குமாறு அரசர் ஆணையிட்டார். கேரள வர்மாவும் அவர்களைச் சொந்த மக்களே போன்று பாசமுடன் நடத்தி அவர்கள் இலக்கியம், இசை, ஓவியம் முதலான பல்வேறு கலைகளிலும் புலமைபெறச் செய்தார். இந்த மரபுரிமைக்குப் பிறகு மகாராணி யார் பத்துத்திங்களே உயிருடன் இருந்தார்கள். கேரள வர்மாவைப் பெருந் துக்கத்தில் ஆழ்த்திவிட்டு மகாராணி லட்சுமிபாய் 1901-ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். இந்தத் துக்க நிகழ்ச்சி கேரள வர்மாவின் இலக்கியப் பணிகளைப் பெரிதும் பாதித்துவிட்டது. மானவிக்ரமன் எட்டன்ராஜா எனும் கவிஞருக்கு பாடல் வடிவில் கேரள வர்மா கீழ்வருமாறு ஒரு கடிதம் எழுதினார்.

மாகவிஞரே! என் அன்பு மனைவியினது தாங்கொணாப்பிரிவுத் துன்பத்தால், எனது உணர்வுகள் நாள்தொறும் தளர்ந்து வருகின்றன. எனவே முன்னைய நாட்களைப் போன்று எழுதவோ கவிதை புனையவோ என்னால் முடியவில்லை.

1905-ஆம் ஆண்டில் கேரள வர்மாவுக்கு அறுபது வயது ஆகியது. அதனை ஒரு விழாவாகக் கொண்டாடினர். பாஷாபோஷினி இதழில் குறிப்பிட்டவாறு கேரள மாநிலத்துக்கே அது அறுபது ஆண்டு நிறைவு விழாவாக இருந்தது. அச் சந்தர்ப்பத்தில் அனைத்துக் கவிஞர்களிலும்

ராஜராஜ வர்மாவும், வள்ளத்தோளும் போட்டி போட்டிக் கொண்டு கேரள வர்மாவைத் தங்கள் பாமாலையால் வாழ்த்தினர். இந்த நிகழ்ச்சியை ஒட்டித்தான் உள்ளூர் தனது மயூரசந்தேசத்தின் மொழிபெயர்ப்பினை வெளியிட்டார். இதனைப் பாராட்டி எழுதிய தனது இலக்கிய அன்பர்களுக்கு உள்ளூர் பதிலெழுதி முடிப்பதற்குப் பல மாதங்கள் ஆயிற்றென்று கூறப்படுகிறது. கேரள வர்மாவுக்கு உரைநடை வாழ்த்தாக வந்தவற்றுள் மிகவும் சிறந்ததாகக் கருதப்படும் கே. ராமகிருஷ்ண பிள்ளையின் பாராட்டு கீழ்வருமாறு அமைந்திருந்தது.

"மலையாள இலக்கியத்தின் வளர்ச்சிக்காக ஒருமித்த உணர்வோடு கடந்த ஐம்பது ஆண்டுகளாக அயராது பணி செய்து வரும் ஒரு பேரறிஞர் பிறந்து இன்றோடு அறுபது ஆண்டுகள் ஆகின்றன. இப்பேரறிஞருக்குக் கிடைத்துள்ள புகழும் மனநிறைவும், உடல் வன்மை, ராணுவ பலம், தெய்வீக அருள் இவற்றால் ஒரு மாபெரும் வல்லரசை நிறுவி ஆட்சிபுரியும் பேரரசருக்குக்கூடக் கிட்டாதனவாகும். மலையாள மொழியில் தன்னுடைய அறிவுத் திறமையாலும், ஈடிணையற்ற கவிதைகளாலும், பாடல் ரசனையாலும் ஒரு இலக்கியப் பேரரசை நிறுவிய இவர் இற்றைநாள் காளிதாசராகக் கேரளாவில் மட்டுமன்றி இந்திய நாடெங்கணும் பாராட்டப்படுகிறார். அவரை ஈன்றெடுத்த திருவாங்கூர் மாநிலம் அளவு கடந்த மகிழ்ச்சி அடையலாம். சிறந்த கற்பனைக்கும், எளிய சொல்வளத்துக்கும் புகழ்பெற்ற இம்மாமனிதரின் அறுபது ஆண்டு நிறைவு கேரளாவுக்கே பெருமை தரும் நிகழ்ச்சியாகும். இதனால் கொண்டாடப்படும் விழா கேரளத்து மக்களின் நல்வினையால் ஏற்பட்ட பெரும்பயன் என்பதோடு அனைவருக்கும் மகிழ்ச்சியினைத் தரும் பெருவிழாவும் ஆகும்."

. 6.

வடமொழிப் படைப்புகள்

கவிதை உணர்வு, கலை வல்லுநரின் பயிற்சி, வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கிய அனுபவ அறிவு, ஆழ்ந்த படிப்பு, விடாமுயற்சி ஆகிய அனைத்தும் ஒரு கவிஞனுக்கு வேண்டிய இயல்புகள் என்பது வடமொழி முருகியலாரின் கருத்தாகும். கேரள வர்மா தன்னுடைய இளமையிலே ஆழ்ந்து கல்வி கற்றதனால், இவையனைத்தையும் ஒருங்கே பெற்றிருந்தார். இயல்பான திறமையும், உயர்ந்த சாதனைகளும் அவரை ஒரு மாபெரும் கவிஞனாக ஆக்குதற்குத் துணைநின்றன. அவரது பாக்களின் உயிரோட்டத்துக்கு மற்றொரு காரணம் அவர் தன்னைப் பற்றியும் அவற்றில் ஆங்காங்கே கூறியிருப்பதாகும். வடமொழியில் அவரது கவிதைப்படைப்புகளை மாகாவியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், நாடகம் என்றின்ன முறையில் பகுக்கலாம். விசாகம் திருநாளின் வாழ்வினை மையக்கருத்தாகக் கொண்ட விசாக விஜயத்தின் தொடக்கப் பகுதி ஏறத்தாழ கேரள வர்மா சிறைப்படுத்தப்படும் காலம் வரையிலான செய்திகளைக் கொண்ட அவரது சுயசரிதம் என்று கூறலாம். அவருடைய நூல்களில் அடுத்துக் குறிப்பிடத்தகுவது **க்ஷமப்பண சகஸ்ரம்** என்பதாகும். காவிய அமைப்பில் எழுதப்பட்டுள்ள இத்தன்னுணர்ச்சிப்பாடல் ஆயில்யம் திருநாள் மகாராஜாவுடன் அவருக்கு ஏற்பட்ட பகைமைக்கு வருத்தம் தெரிவிப்பதாகும். மூன்றாவதாகக் குறிப்பிடத்தகும் **யமப்பிரணாமசதகம்** என்பது தனது எதிரியாகிய ஆயில்யம் திருநாளை ஒழித்துக் கட்டுவதற்காக யமனை நோக்கி வழிபடப் பெற்றது. கேரள வர்மா தான் எழுதிய மதத் தொடர்பான பாடல்களில் ஆழ்ந்த பக்தியினை வெளிப்படுத்துகிறார். மன்னர்களை வாழ்த்திச் சிறப்பிக்கும் அவரது பாமாலைகளில் கேரள வர்மா அவர்களிடம் கொண்டிருந்த மரியாதையும் நல்லுறவும் நன்கு தெரிகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் காணும்போது அவரது இலக்கியப் படைப்புகளில் தனது வாழ்க்கைக் குறிப்புகளையும் அவர் இணைத்துள்ளார் என்று உறுதியாகக் கூற முடிகிறது.

விசாக விஜயம்

விசாகம் திருநாள் மகாராஜாவின் பெருமையினைப்பற்றி கேரள வர்மா அசையாத நம்பிக்கை கொண்டிருந்தமையால், அவரைத் தாம் எழுதிய மாகாவியத்தின் தலைமை நாயகனாக எடுத்துக் கொண்டார். நன்மைகளே புரிகின்ற ஒரு நாடாளும் மன்னராக மட்டுமின்றி விசாகம் திருநாள் ஒரு கலை இலக்கியக் காவலராகவும் இருந்தார். அறிவார்ந்த செயல்களே அவரது பொழுதுபோக்கு. அவரது சாதனைகளைப் பாராட்டி பல்வேறு மேலைநாட்டு அறிவியல் கழகங்கள் அவரைப் பெருமைப்படுத்தின. வட மொழி, மலையாளம், சிறப்பாக ஆங்கிலம் ஆகிய மொழிகளை அவர் ஆழ்ந்து கற்றவர் என்பதோடன்றி ஒரு சிறந்த நூலாசிரியரும் ஆவர். அனைத் துக்கும் மேலாக விசாலமான உள்ளம் படைத்தவர். அரசத்துறவி என்று பொருள்படும் ராஜ்ய ஸ்ராமமுனி என்றே தன்னைப்பற்றி அவர் கூறிக் கொள் வார். இத்தகையவரைத் தான் எழுதிய மாகாவியத்துக்கு கருப் பொருளாகக் கொண்டது முற்றும் பொருத்தமே. முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தனக்கு மிக நெருக்கமாக இருந்தவரும், பாராட்டத்தகும் பரந்த உள்ளம் படைத்தவரும் ஆகிய ஒருவரைப் பற்றிய மாகாவியத்தினை உளமார்ந்த மகிழ்ச்சியோடு கேரள வர்மா எழுதினார். சுருங்கக் கூறின், கருப்பொருளின் பெருமை, கவிஞனின் மனோநிலை, அவனது உயர்ந்த கவிமாண்பு ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்து அக்காப்பியத்தை உருவாக்கின.

விசாகவிஜயம் எனும் இக்காவியம் 20 காண்டங்களில் 1307 பாடல்களை உள்ளடக்கியது. விசாகம் திருநாள் உயிரோடிருக்கும்போதே இவற்றுள் முதல் 14 காண்டங்களைக் கேரள வர்மா எழுதிவிட்டார். காப்பியத்தை எழுதிக்கொண்டிருக்கும்போதே மகாராஜா அதன் பாடல்களைப் படிப்பதும், திறனாய்வு செய்வதும் உண்டு. மகாராஜாவின் மறைவுக்குப்பிறகு மீதம் ஆறு காண்டங்களும் எழுதப்பட்டு காப்பியம் நிறைவுபெற்றது. நூலின் முதல் ஐந்து காண்டங்கள் தொடக்கத்தில் தட்டச்சு செய்யப்பெற்று கணபதி சாஸ்திரியின் உரையுடன் வெளிவந்தன. பின்னர் 6 முதல் 15 காண்டங்கள் வரை முன்னுரையும், குறிப்புரையும் சாஸ்திரியாராலே எழுதப்பட்டு 1889–ஆம் ஆண்டு காவ்யமாலா வரிசையில் வெளிவந்தன. கடைசி ஆறு காண்டங்களும் விஞ்ஞான சிந்தாமணியில் வெளியிடப்பட்டன. பின்னர் 1900–இல் இக்காவியம் முழுதும் ஒரு நூலாக வெளிவந்தது. கேரள வர்மா அந்நூலை மகாராஜாவின் ஒன்றுவிட்ட சகோதரனாகிய மூலம் திரு நாளுக்குச் சமர்ப்பணம் செய்தார். விசாகம் திருநாள் மகாராஜாவின் வாழ்க்கையினையும் பணிகளையும் பலபடப் பேசும் விசாகவிஜயம் எனும் காப்பியத்தை இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம். முதல் ஆறு காண்டங்கள் மகாராஜாவின் முடிசூட்டு விழா வரையில் உள்ள நிகழ்ச்சிகளைப் பேசும். எஞ்சிய பகுதி அவரது பயணங்கள், அவர் ஆற்றிய சடங்குகள், வழிபாடுகள்,

நிர்வாகம், அவரது அன்றாட வாழ்க்கை, அவர் பெற்ற விருதுகள், பெருமைகள், சிறப்புகள் ஆகியவற்றைக் கூறுவதாகும்.

கேரள வர்மாவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் விரிவாக இணைக்கப் பட்டிருப்பதால் நூலின் முதற்பகுதி மிகவும் சுவையானது.

ஐந்தாவது காண்டத்தில் மகாராஜாவும், அவரது சகோதரரும் பிரிகின்ற காட்சியினை விளக்கும் பகுதி உள்ளத்தை உருக்குவது. தனது முடிசூட்டு விழாவின்போது விசாகம் திருநாள் ஆற்றிய சிறந்த சொற்பொழிவு காப்பியத்துள் மிகவும் அழகுற எழுதப்பட்டுள்ளது. மகாராஜாவின் அறிவு முதிர்ச்சியினையும் எளிமையினையும் காட்டுகின்ற அச்சொற்பொழிவு கீழ்க்காணுமாறு முடிகிறது.

> "போருக்குச் செல்லும் ராணுவ தளபதி தன்னைப் புகழ்ந்து கொள்வது முறையல்ல. எனவே என் எதிர்காலத்திட்டம் குறித்து இப்போது நான் ஒன்றும் கூறப்போவதில்லை. நாட்டிலுள்ள பெருமக்கள் விருப்பு வெறுப்பின்றி என்னுடைய அரசின் செயற்பாடுகளைக் கவனித்து முடிவு செய்து கொள்ளலாம். நாட்டு மக்களுக்கும், இங்கிலாந்து அரசிக்கும் யான் ஆற்ற வேண்டிய பொறுப்பினை உணர்ந்துள்ளேன். எப்போதும் விழிப்பாக இருந்து என்னால் இயன்ற தொண்டினைச் செய்வேன்".

விசாகம் திருநாளின் வாழ்க்கையில் சென்னை கவர்னர் ஜி.சி.எஸ்.ஐ எனும் விருதினை அளித்துப் பெருமைப்படுத்தியது முக்கியமான நிகழ்ச்சி யாகும். அச்சமயத்தில் மறக்கமுடியாத சுவையான சம்பவம் அங்கு நிகழ்ந்தது. மகாராஜாவுக்கு விருது வழங்குதற்பொருட்டு விழாவில் அலங் காரமான மாலையினைக் கையிலேந்தி கவர்னர் எழுந்து நின்றார். மகா ராஜாவும் அதனைப்பெறுதற்கு எழுந்தார். ஆயினும் தத்தம் நின்ற இடத்தி லிருந்து ஒருவரும் நகரவில்லை. யார் யாரை நோக்கிச் செல்வது என்பதில் ஓரிரு கணம் ஒரு தயக்க நிலை நிலவியது. நிலைமையைப் புரிந்து கொண்ட கேரள வர்மா உடனே கவர்னரை நோக்கிச் சென்று அவர் கையிலிருந்த மாலையினைப் பெற்று விசாகம் திருநாளுக்கு அணிவித்தார். மகாராணியும் கேரள வர்மாவும் கலந்து கொண்ட இசை நிகழ்ச்சி பற்றிய செய்தி 19–ஆம் காண்டத்தில் அழகுற எடுத்துக் காட்டப்பெறுகிறது.

ஒவ்வொரு காண்டத்தின் இறுதிச் செய்யுளிலும், தான் அரச பரம்ப ரையைச் சார்ந்தவன் என்றும் திருவாங்கூர் அரச குடும்பத்தைச் சார்ந்த இளவரசியின் கணவர் என்கிற முறையில் தனிப்பட்ட பெருமைக்குரியவன் என்றும் கேரள வர்மா குறிப்பிடுகிறார். செய்யுளின் முதலிரண்டு வரிகள் கடைசி வரை மாறாமல் உள்ளன. பின்னிரண்டு வரிகளில் பாடல் பற்றிய தனது கருத்தோடு ஏதேனும் ஒரு பயனுள்ள செய்தியையும் கேரள வர்மா சேர்த்துச் சொல்கிறார். இக்காப்பியம் இக் கவிஞரது தலைசிறந்த படைப்பு

எனலாம். வடமொழியில் பாடல் வடிவில் உள்ள வாழ்க்கை வரலாறுகளில் இந்நூல் முக்கிய இடத்தைப் பெறும் என்பதிலும் ஐயமில்லை.

க்ஷமப்பண சகஸ்ரம்

பாடலின் தலைப்பினை 'ஆயிரம் இரங்கல் உரைகள்' என்று மொழி பெயர்க்கலாம். வடமொழியில் நூறு பாடல்கள் அடங்கிய கவிதை நூல்கள் இருப்பது போன்று ஆயிரம் பாடல்கள் அடங்கிய நூல்களும் உண்டு. வேதாந்த தேசிகரால் இயற்றப்பட்ட பாதுகாசகஸ்ரம் என்னும் நூல் இதற்குச் சான்று. இவற்றுள் முதலில் • குறிப்பிடப்பட்ட நூல் முற்றும் மதத்தொடர்பானது. இரண்டாவதோ ஆயில்யம் திருநாளை அமைதிப் படுத்துவதற்கென்றே எழுதப்பட்ட மதச்சார்பற்ற நூல். ஆயினும் மறை முகமாகத் தனது பக்தியினையும் இப்பாடலில் கேரள வர்மா புகுத்தியுள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. முதல் பாடல் கடவுள் வாழ்த்தெனினும் திருமாலுக்கும் அரசனுக்கும் ஒருங்கே பொருந்தி வருமாறு இறை வணக்க மாக உள்ளது. விரும்பிய பொருளை அடைதற்குத் துணை புரிய வேண்டும் என்பதே இப்பாடலின் வேண்டுகோள். இன்னொரு வேண்டுகோளையும் இக்கடவுள் வாழ்த்து உள்ளடக்கியுள்ளது. அந்தப்பகுதி கேரள வர்மாவுக்கு வடமொழியிலிருந்த வியத்தகு புலமையினையும் சொல்லாற்றலையும் வெளிப் படுத்துகிறது. இதில் வியத்தகு செய்தியாவது அப்பகுதியை தொடக்கத்தி லிருந்து கடைசி வரை படிக்கும்போது மன்னனைக் குறிப்பதாகத் தெரியும். கடைசியிலிருந்து தொடக்கம் வரை திருப்பிப்படித்தால், இறைவியைக் குறிப்பிடுவதாகத் தோன்றும்.

> "உன்னுடைய தொண்டனுக்குத் தொண்டனாக எப்போதும் உனது ஏவலுக்குத் தாள் பணிந்து துறவியைப் போல எங்கோ ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டு உன்புகழைப் பாடிக்கொண்டிருப்பேன்"

என்று கேரள வர்மா சொல்லும்போது இச்சொற்றொடர்கள் அரசனைக் குறிக்கிறதா அல்லது இறைவனையா என்று கூற இயலாது வியப்படைகிறோம். மேலும் இந்நூலுள் வரும் பற்பல பாடல்கள் சவுந்தர்யலகரியில் வரும் தோத்திரப் பாடல்களை எதிரொலிக்கின்றன. இவற்றையெல்லாம் நோக்கினால், இப்பாடல் களை எழுதும்போது கேரள வர்மாவின் மனோநிலை வருத்தமும் வழிபாட்டு உணர்ச்சியும் கலந்த ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. இறைவழிபாடு செய்து திருப்தி அடைவதோடு மன்னனையும் அமைதிப்படுத்திவிட எண்ணியிருந்தார் என்று கூறலாம்.

ஆழ்ந்த மதப்பற்று இருப்பினும், இப்பாடலானது முற்றிலும் மதச்சார்பு அற்றது. கவிஞனது தலையாய நோக்கம் தனது கடந்த காலச் செயல் களுக்கு வருந்துவதோடன்றி மகாராஜாவையும் அமைதிப்படுத்தித் தனக்கு சிறையிலிருந்து விடுதலை பெற்று விடுவதுதான். இத்திட்டத்தில் வெற்றி

கிட்டிவிடும் என்றே கேரள வர்மா நம்பியிருந்தார் என்பது கீழ்வரும் மேற்கோளிலிருந்து தெரியவருகிறது.

"உங்கள் பொறுமை என்னும் கடலைக் கடைவதற்கு எனது பாவங்கள் மந்தரகிரி போன்று உள்ளன. முதலில் ஆத்திரமாகிய, நஞ்சினை தூக்கியெறிந்து விடும். அதனைத் தொடர்ந்தே அனுதாபம் எனும் அமிழ்தம் வரும் (7.9). மன்னரது இரக்கத்தை எதிர்நோக்கி ஒரு கவிஞனிடம் காணக்கூடிய அத்துணைப் பாவன்மையினையும் கேரள வர்மா பயன்படுத்தியுள்ளார். எப்படித் தன்து குற்றத்தை வெளிப்படையாக ஒத்துக்கொண்டு, வேறு எந்த உதவியுமின்றி மகாராஜாவிடம் பணிந்து வேண்டுகிறார் என்பதையும் காண முடிகிறது.

தன்னுடைய தவறுகளை ஒத்துக்கொண்டு வருந்தும்போது தீ நட்பே அதற்குக் காரணமாக இருந்தது என்று அந்நூலில் கூறுகிறார். ஒருசமயம் விரக்தியோடு, இரங்கத்தக்க நிலையில் முதலில் போட்ட சிறையிலே தள்ளு மாறும் அல்லாவிடில் கொன்றுவிடுமாறும் கேட்டுக் கொள்கிறார். இந்த நீண்ட பாடலை முடிக்கும்போது அதன் கடைசிப் பகுதியில் மீண்டும் மன்னனின் இரக்கத்தை வேண்டுகிறார்.

ஆயிரம் செய்யுள்களை உள்ளடக்கிய இந்நீண்ட கவிதையின் ஐம்பது பிரிவுகளிலும் ஐம்பது வகைப்பட்ட யாப்புகள் பயின்று வருவதாலும், வேறு பல காரணங்களாலும் இலக்கியத்திலேயே இந்நூல் தனிச்சிறப்புடையது. மன்னருக்கு எதிரான குற்றம் இழைத்தமைக்குத் தண்டனையாகச் சிறையில் இருந்தபோது இது எழுதப்பட்டது. நூலினை எழுதி முடிக்க மூன்றாண்டு களாவது ஆகியிருக்கலாம். சிறையில் பற்பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் மாகாவியத்தை ஒத்த பெரு நூலைச் சிறையில் தனது வருத்தம் தோய எழுதியது கேரள வர்மா தான். அவருடைய ஆழ்ந்த அறிவையும் சிறந்த யாப்பமைதியினையும் வெளிப்படுத்தும் இந்நூல், இதுகாறும் அச்சேறாமல் இருக்கிறது.

யமப்பிரணாம சதகம்

பெயருக்கு ஏற்ப, இந்நூலின் நூறு செய்யுட்களும் யமனை நோக்கிப் பாடப்பட்டவை. கேரள வர்மா தனது பெரும்பகைவனாகிய ஆயில்யம் திரு நாளுக்கு எதிராக இடியேறுபோலும் கடுஞ்சொற்களால் இந்நூலை யாத்துள்ளார். இதுவே கடுமையான போர்க்கருவியாய்ச் செயல்புரிந்தமை யால் மன்னர் மறைந்து போனார் என்றும் நம்பப்படுகிறது. சோர்வும் வருத்தமும் தோய்ந்த அவரது முந்தைய பாடல் ஈவிரக்கமின்றி மன்னரால் புறக்கணிக்கப்பட்டதும், அந்நூலினால் பரிகாரம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை போய்விட்டது. இதனால் கேரள வர்மாவின் எதிர்ப்பு உணர்ச்சி மிகவும் கடுமையாகியது. தளராத மனவுறுதியும் ஆழ்ந்த கோபமும்

கொண்டவராதலின், வேறெந்த வழியுமின்றி தனது எதிரியைத் தொலைத்து விடுமாறு யமனை நோக்கிக் கடுமையாக வேண்டிக்கொள்ள நேரிட்டது. தனது எதிரியை மரணம் அடையச் செய்யுமாறு நேரடியாக யமனை இவர் வேண்டிக்கொள்ளவில்லை. எதிரியின் பெயரை வெளிப்படையாக குறிப்பிட வுமில்லை. இக்கவிதைநூல் கீழ்வரும் முன்னுரையோடு தொடங்குகிறது.

'உயர்குணமுள்ள பெரியோரைக் கொடுமைப்படுத்தும் கம்சனாலே அல்லற்படுகின்ற மதுராபுரியின் மக்கள் யமனை நோக்கி இந்நூறு பாக்களால் வழிபாடு செய்கின்றனர்.' •

தன்னுடைய நேரடியான வெறுப்பு வெளிப்படையாகத் தெரிவதைத் தவிர்ப்பதற்காகவே கேரள வர்மா இப்படி மறைமுகமாகத் தாக்குகிறார். ஆயினும் யமனை நோக்கிக் கேரள வர்மா ஆயில்யம் திருநாளின் உடனடி மரணத்திற்காகத் தான் இறைவழிபாடு செய்தார் என்பது வரலாற்று உண்மை.

இந்த வழிபாட்டு நூலின் ஒவ்வொரு செய்யுளும் உனக்கு என் வணக்கம் எனும் பொருள்படும் ஈழ பிராணாமா எனும் வார்த்தைகளுடன் முடிகிறது. கீழ்க்காணும் வணக்கத்துடன் இப்பாடல்கள் தொடங்குகின்றன.

ஓ! அறக்கடவுளே! அருள்கூர்ந்து உனது பராமுகத்தை ஒதுக்கித்தள்ளிவிடு! ஏழுவேறு உலகத்தினும் மன்னனின் கொடுஞ்செயல்களை மறந்துவிடாதே! இவ்வுலகத்தில் அறம் நீர்த்துளி படுவதை எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்? அறத்தின் எதிரியினை அழித்துக் கொன்று நீ உடனே உன் ஏவலரை அனுப்புக. உனக்கு என் வணக்கங்கள்.

எதிரியின் வாழ்வினைத் தொலைத்துவிட வேண்டுகிற கடுமையான வழிபாடு கீழே காணுமாறு அமைந்துள்ளது.

'வன்மைபொருந்திய உன் வீரர்கள் எதிரியை அணுகிக் கொடிய ஆயுதங்களால் அடித்துக் கொல்லட்டும். ஓ! ஞாயிற்றின் செல்வனே! கண்களிலிருந்து அனலாக வெளிப்படுகின்ற கடுங்கோபத்தால் சிவப்பேறிய கண்ணிமைகளால் பயங்கரமாகத் தோன்றுகின்ற முகத்தோடு உனக்கு என் வணக்கங்களைத் தெரிவிக்கிறேன்.

வேதகாலந்தொட்டு வேறு எந்த இலக்கியத்திலும் இல்லாத அளவுக்கு வடமொழியானது இறைவணக்கப் பாடல்களால் வளம்பெற்றுள்ளது. இவ்வாறு தோத்திரங்களால் வழிபடப்படுகின்ற தெய்வங்களும் நிறைய உள்ளன. எதிரியை அழித்துவிடு என்பதை உள்ளிட்டுக் கேட்கப்படுகின்ற வரங்களும் அநேகம். ஆயினும் இவற்றிலே கூட உடனடியாக ஒரு எதிரியை ஒழித்துவிடுக என்று வன்மையோடும், உணர்ச்சிபூர்வமாகவும் வேண்டிக் கொள்ளும் வழிபாட்டுப் பாடலைக் காண்பது அரிது. இந்தத் தோத்திரப்

பாடலின் வழி தன்னிடமுள்ள மாயமந்திர சக்தியின் முழு வலிமையினையும் எதிரியின் மீது செலுத்துமாறும் யாரும் பின்பற்ற இயலாதவாறும் அந்தக் கடவுள் வணக்கப்பாடலைப் பாடினார். தணடநாத ஸ்தோத்திரம், சத்ரு சம்ஹாரப் பிராத்தனாசதகம் எனும் இரண்டையும் முறையே தண்டநாத இறைவிக்கும், காத்யாயனிக்கும் ஆயில்யம் திருநாளை எதிர்த்து முன்னமேயே கேரள வர்மா வழிபடு முறையால் பாடியிருந்தாலும், யமப் பிரணாம சதகத்தைப்போன்று அவை அவ்வளவு பயங்கரமாகவும் கொடுமையாகவும் இல்லை. அச்சவுணர்வை எதிரொலிக்கும் உரத்த ஒலிகளும் புதுமையான சொற்களும் இவ்விரண்டு நூல்களிலும் இல்லை. வருந்தி வேண்டிக்கொள்ளும் பாடலையும் அதற்குச் சற்று பிற்காலத்தே யமனை நோக்கிப் பாடியதையும் நோக்கும்போது கேரள வர்மா இயல்பாகவே மென்மை உள்ளம் படைத்தவரேனும் சந்தர்ப்பம் நேரும்போது மிகக் கடுமையாகவும் இருக்கக் கூடியவர் என்று தெரிகிறது.

கேரளம் கோயில்கள் நிறைந்த நாடு. கேரள வர்மாவுக்கு ஆலய வழி பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கையுண்டு. ஏராளமான கோயில்களில் எழுந்த ருளியுள்ள தெய்வங்களின்மீது தோத்திரம் பாடியுள்ளார். அவற்றுள் குரு வாயூரில் உள்ள கிருஷ்ண பகவான், வைக்கம் சிவபெருமான், செங்கண்ணூர் சிவ—பார்வதி ஆகியவை குறிப்பிடத்தக்கன. குருவாயுரே சாஸ்தவா என்னும் சிறிய நூல் வெவ்வேறு விதமான யாப்பமைதியுடன் ஐம்பத்தொரு பாடல்களைக் கொண்டது. கவிஞரை விட்டு விட்டுத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த கீல்வாத நோயிலிருந்து நிவாரணம் பெறுதற்கு ஆண்டவனை வேண்டி எழுதப்பட்ட நூல் இது. வைக்கத்திலுள்ள சிவபிரான் ஆலயத்தில் ஆண்டுதோறும் அட்டமித்திருநாளில் கேரள வர்மா வழிபடுவது உண்டு. வியாக்ரலயேச சதகம் எனும் நூலை 1888—ஆம் ஆண்டு எழுதினார். கடைசிப் பத்துப்பாடல்களில், கவிஞர் கேரள வர்மா சிவபெருமானைக் கேசாதி பாதமாக விவரிக்கின்றார்.

செங்கண்ணூரில் எழுந்தருளியிருக்கிற பார்வதி உடனுறை பரமேஸ் வரன் மீது கேரள வர்மா இயற்றிய வழிபாட்டு நூல் 102—பாடல்களைக் கொண்டது. இந்நூலுக்கு முன்னுரை எழுதியவர் மாபெரும் வடமொழிப் புலவர் புன்னசேரி நம்பி நீலகண்ட சர்மா ஆவர். இந்த நூல் ஆர்யஸ்தோத்ரா, சோணாத்ரிஸ ஸ்தோத்ரம் எனும் இரண்டு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இந்நூலை எழுதுதற்கு ஆரிய சதக ஸ்தோத்ரம் எழுதிய முகா என்பாரின் செல்வாக்கே பெரிதும் துணை நின்றது.

கேரள வர்மா தந்திரிக மார்க்கத்தைப் பின்பற்றியவராதலின் சக்தி மாதாவினிடம் அவருக்கு எல்லையற்ற ஈடுபாடு உண்டு. எனவே அவரது பக்திப்பாடல்கள் பலவும் இறைவியை நோக்கி விளிப்பதில் வியப்பில்லை. *லலிதாம்பிகா தண்டகம், லலிதாம்பிகா ஸ்தோத்திரம், திரிசத்யாந்தரம்*

என்பன அவற்றுள் குறிப்பிடத்தகுவன. இவற்றுள் முதலாம் நூல் புகழ்வாய்ந்த சியாமளா தண்டகம் எனும் நூலை அடியொற்றியது. ஆழ்ந்த பக்தியும், இசை நயமும் பொருந்தியது. *லலிதாம்பிகாஸ்தவம்* எனும் சிறிய நூல் கவிஞரின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்டது. சிறையிலிருக்கும் போது ஆக்கப்பெற்ற இந்நூலில் தன்னுடைய தொல்லைகளை நீக்கித் தன் மனைவியோடு சேர்க்குமாறு இறைவியை வழிபடுகிறார். யமப்பிரணாம சதகம் போலவே கம்சனால் சிறையிடப்பட்ட வசுதேவர் சிறையிலிருந்து தன்னை விடுவிக்குமாறு தெய்வத்தை வழிபடுவதுபோன்று இந்நூலும் அமைக்கப்பட்டுள்ளது.

இறைவியை வழிபடுதற்கு மரபுவழியிலும், தானே புனைந்தனவும் ஆகிய ஏறத்தாழ ஆயிரம் அடைமொழிகளைக் கவிஞர் பயன்படுத்துகிறார். லலிதாம்பிகா ஸ்தோத்திரம் 117 பாடல்களைக் கொண்டது. தனித்த சிறை வாழ்வில் வேதனைப்படும் உள்ளத்தை இந்நூல் வெளிப்படுத்துகிறது.

திரிசத்யாந்தரம் என்னும் வழிபாட்டு நுசிலின் முற்பகுதியில் இலத்தூர் ராமசாமி சாஸ்திரியின் விருப்பத்திற்கு இணங்கவே அந்நூலைப் புனைந்ததாகக் கேரள வர்மா குறிப்பிடுகிறார். இத்தோத்திரம் தந்திரிக மார்க்கத்தைப் பற்றிய திரிசதி எனும் நூலைப் பின்பற்றியது. இருப்பினும் கவிஞருக்கேயுரிய இலக்கிய நுண்மையும் ஆழ்ந்த மதப்பற்றும் ஈண்டு வெளிப்படுத்தப்படுகின்றன.

தந்திரீக இலக்கியத்தைச் சார்ந்த இந்த வழிபாட்டுப்பாடல் அனுஷ்டப யாப்பில் புனையப்பட்ட 101 பாடல்களைக் கொண்டது. இறைவியினைக் குறிக்கின்ற 300 அடைமொழிகள் இந்நூலின் சிறப்பியல்பாகும். தந்தீரிக நியதிகளை மனதிற்கொண்டு ஆழ்ந்த பக்தியோடு இந்த அடைமொழிகளை இந்நூலுள் பயன்படுத்தியுள்ளார். தெய்வீக அடைமொழிகள் நூலின் 11–ஆவது செய்யுள் முதற்கொண்டு 85–ஆம் பாடல் வரை வரிசையாகக் காணப்படுகின்றன. கடைசி 16–செய்யுட்களில் தனது நூலைப்பற்றி ஆசிரியரே கூறும் கருத்தும், இறைவியின் மீது அவர் கொண்ட அப்பழுக்கில்லாத ஈடுபாடும் காணப்படுகின்றன. உள்ளத்தை உருக்கும் இத்தகு சிறந்த நூல்களை இயற்றியதனால் தந்திரிக நியதியில் கேரள வர்மா ஒரு குழுவின் நிலைக்கு உயர்ந்துள்ளார் என்றே கருதலாம். இந்தத் தோத்திர நூலேயன்றி கேரள வர்மா ஏராளமான சின்னஞ்சிறு வழிபாட்டு நூல்களையும் இயற்றியுள்ளார்.

அரசர்களின் ஆதரவில் அவர்கள் கொடுத்த பற்பல சலுகைகளையும் பெற்று மகிழ்ந்தவர் கேரள வர்மா. எனவே பல்வேறு நிகழ்ச்சிகளில் பாமாலை பாடி அவர்களைப் பெருமைப்படுத்த வேண்டிய நியதி ஏற்பட்டது. 1861–ஆம் ஆண்டு ஆயில்யம் திருநாளின் பிறந்தநாள் விழாவினையொட்டி பார்வதி

புரம் ராஜா கேரள வர்மாவை அழைத்து விழாவில் மன்னரைப்பற்றித் தான் புனைந்த பாடல்களை படித்துக்காட்டி, கேரள வர்மாவும் அதுபோன்று புகழ்மாலை இயற்றிவைத்துள்ளாரா என்று கேட்டார். வர்மாவும் பாடல் பிரதியினை மறுநாள் அனுப்பிவைப்பதாகப் பதிலிறுத்தார். உண்மை யாதெனில், கேரள வர்மா அந்நிகழ்ச்சி பற்றி நினைத்துப் பார்க்கவேயில்லை. அன்றிரவே மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் திருநாள் பிரபந்தம் எனும் ஒரு சிறிய நூலினையே எழுதி அதில் வழக்கமான முறையில் மன்னரைப் புகழ்ந்திருந்தார். கேரள வர்மாவுக்கு அப்போது வயது பதினாறு. இருப்பினும், இளம் கவிஞரது பாடல் புனையும் திறமையும், கற்றறிவும் அதில் நன்கு வெளிப்படுகின்றன.

விசாகம் திருநாளுக்கு ஜி.சி.எஸ்.ஐ. பட்டம் வழங்கப்பட்டபோது, அவரை வாழ்த்தும் பொருட்டு *நட்சத்திரமாலா* என்ற தலைப்பில் 27 செய்யுள்கள் அடங்கிய ஒரு சிறு நூலை கேரள வர்மா இயற்றினார். இந்நூலின் கடைசிப்பகுதியில் உள்ள செய்யுள் அந்த நூலை எழுதுவதற்குரிய காரணங்களைக் கூறுகிறது. ஹர்ஷா தான் எழுதிய *நைஷதீய சரித்ரா* எனும் நூலில் பேரரசன் நைஷதன் பெயரால் பாடல் இயற்றவேண்டியதன் காரணங்களைக் கூறுவது ஈண்டு நினைவுப்படுத்தப்படுகிறது.

திருவாங்கூர் அரசராக விசாகம் திருநாள் முடிசூட்டப்பெற்ற நிகழ்ச்சி, அவரோடு நெருங்கிய தொடர்புடையவராதலின் கேரள வர்மாவிற்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. கேரள வர்மா சிறையிலிருந்து விடுபட்டதும், முடிசூட்டு நிகழ்ந்ததும் ஏறத்தாழ ஒரே நாளில் தான். எனவே அச்சந்தர்ப்பத்தில் மிக்க மகிழ்ச்சியோடு மகாராஜாவைப் புகழ்ந்து பாடல் எழுதியது இயல்பே. இந்தப்பாடலில் பத்து செய்யுட்களே இருந்தாலும், ஆசிரியரது கவிபுனையும் திறமையும் அரசர் மீதுள்ள பற்றும் நன்கு தெளிவாகின்றன.

1885–ஆம் ஆண்டு துலாபாரம் நடத்திய விசாகம் திருநாளைப் புகழ்ந்து *துலாபாரசதகம்* எனும் பாமாலையை அம்மன்னரிடம் பணிந்தளித்தார். துலாபாரம் பற்றிய பெருமையும், விருந்தினர்களை வரவேற்ற சிறப்பும், இசை நிகழ்ச்சியும், அறிஞர் குழுவின் அமர்வும் என்றின்ன பல்வேறு தலைப்புகளில் பத்துப்பாடல்களாக இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

மூலம் திருநாள் மகாராஜாவுக்கென்று ஒரு பாடலை ஸ்ரீமூல ராமவர்ம மகாராஜா பாதாரவிந்த சதகம் எனும் தலைப்பில் எழுதி அவரிடம் சமர்ப்பணம் செய்தார். 1887–ஆம் ஆண்டு விக்டோரியா ராணியின் வைரவிழா நிகழ்ந்தது. அந்நிகழ்ச்சியினை நினைவிற்கொண்டே, 108 செய்யுள் அடங்கிய ஒரு வாழ்க்கை வரலாற்று நூலினையும் எழுதினார்.

கேரள வர்மா எழுதிய '*கம்சவதம்*' மட்டுமே அவரது நூல்களில் சம்பு வகையைச் சார்ந்தது. மகாபாகவதம் எனும் பெருநூலின் தசாமஸ்கந்தா

எனும் பகுதியிலிருந்து இதன் கதை எடுக்கப்பட்டுள்ளது. கண்ணபிரான் திருவிளையாடலோடு கோபியரது கெஞ்சலும், கொஞ்சலும் நூலின் தொடக்கத்தில் விளக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து கம்சனைக் காணவரும் நாரதரின் நுழைவு பற்றியும் பேசப்படுகிறது. கம்சன் மரணம் அடைவது முதல் உக்கிரசேனன் பதவியில் அமர்வது வரை உள்ள நிகழ்ச்சிகளே கதையாகப் புனையப்பட்டுள்ளன. 115 செய்யுட்களும் 15 உரைநடைப்பகுதிகளும் அடங்கியதே இந்நூல்.

கம்சவதம் எனும் நூலைக் கேரள வர்மா தனது இளமைக் காலத்தேயே எழுதியிருப்பினும், அவரது கவிதை மாண்பினையும், அறிவுத் திறமையினையும், புராண நூல்களில் அவருக்கிருந்த ஆழத்தையும் காட்டி நிற்கிறது. *சிருங்கார மஞ்சரிபாணம்* என்பதுவும் அவரது இளமைக் காலத்திய நூல். அவரது வடமொழிப்படைப்புகளில் ரூபக வகைமையில் எழுதப்பட்ட நூல் இது ஒன்றே. இருப்பினும் நூலினது தரம் நூலாசிரியருக்கே மனநிறைவு அளிக்கவில்லை. எனவே இதனை வெளியிடுவதில் அவர் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

கேரள வர்மா தமது அரிய நுண்ணாய்வுத் திறமையினால் *சுகந்தேசம்* போன்ற நூல்களுக்கு அரிய ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரது திறனாய்வுப் படைப்புகளுள், பாடலாகவே இவரெழுதிய சாகுந்தல ஆய்வு குறிப்பிடத்தக்கது. ஆய்வு ரீதியான உண்மைகளை வெளிப்படுத்தற்குப் பொருத்தமான அனுஷ்டப யாப்பில் பன்னிரண்டு செய்யுட்களை உள்ளடக்கியது இச்சிறு நூல். வடமொழி யாப்பிலும், கவிதைத் திறமையிலும் கேரள வர்மா புகழ் பெற்றவர். தாம் இயற்றிய *ஷமப்பண சகஸ்ரம்* எனும் நூலுள் 50 விம்சாதிகளை இயற்றுதற்கு 50 வகையான தனித்தனி யாப்புகளை இவர் கையாளுகிறார். ஒவ்வொன்றிலும் 20 செய்யுட்கள் அடங்கிய 50 காண்டங்களையுடைய ஒரே கவிதை நூலில் வேறு எந்த வடமொழிக் கவிஞரும் இத்துணை யாப்பு வகைகளைக் கையாண்டதாகத் தெரியவில்லை. *தண்டணாஸ்தவம்* எனும் நூலுள் வடமொழியில் உள்ள ஏறத்தாழ எல்லா யாப்புகளையும் கேரள வர்மா பயன்படுத்தியுள்ளார். விசாக விஜயத்தில் காணப்படும் யமக வகைகள் இவர் சொற்களைத் திறம்படக் கையாளுவதைக் குறிக்கின்றன. சித்ரகாவியங்களை இயற்றுவதிலும் இவர் சிறந்த நிபுணர். ஷமப்பண சகஸ்ரத்தில் காணப்படும் பார்வதி தோத்திரமான *சித்ரஸ்லோகாவளி* இதற்குச் சான்றாகும். குருவாயுபுரஸ்தவம் எனும் நூலின் 51 நான்கு வரிப் பாடல்களின் ஒவ்வொரு மூன்றாவது வரியிலும் 'க' என்னும் உயிர்மெய்யெழுத்தைத் தொடக்கநிலையில் வைத்துப் பாடல் புனைந்த திறம் கேரள வர்மாவின் யாப்பிலக்கணச் சாதனையாகும். மிகவும் அரியதான ஒரெழுத்துச் சொற்களை இந்த வழிபாட்டு நூலிலேயே மிகுந்த அளவில் பயன்படுத்தித் தனது ஆழ்ந்த புலமையினை வெளிப்படுத்தியுள்ளார்.

திரிசத்யாந்திரம் எனும் நூலில் இறைவிக்குரிய பல்வேறு வகையான அடைமொழிச் சொற்களையும், க, ச, ஹ, ல எனும் சொற்குறியீடு களால் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. *சோணாத்ரிசாஸ்தவம்* எனும் நூலில் உள்ள 101 செய்யுட்களிலும், சோணாத்ரி எனும் பெயரை நேரடியாகவோ வகையுளியாகவோ குறிப்பிடுவதில் கவிஞர் வெற்றி பெற்றுள்ளார். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கேரள வர்மாவின் நூல்களில் மிகச்சிறந்த உருக் காட்சிகளையும், சொல்லணிகளையும் நாம் காண முடிகிறது. சொல்லாட்சியினைப் பொறுத்தவரை, அவர் எடுத்துக் கொண்ட நூல்நுவல் கருத்தினை மனதிற்கொண்டு வைதர்ப்பி, கவ்டி ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் ஒரு சிறந்த நிபுணராக இருந்துள்ளார். ஆயினும் அவர் விரும்பிக் கையாண்டது கவ்டி என்று தோன்றுகிறது. எனவே அந்த வகைச் சொற்களைக் கொண்டு கவி புனைவதில் அவர் பெரிதும் மகிழ்ந்துள்ளார். கேரள வர்மாவின் செய்யுட்கள் புற அழகுக்குக் காரணமான யாப்பமைதியில் சிறந்தவை என்றாலும், அவற்றின் உள்ளீட்டுப் பொருண் மையினையும் குறைத்து மதிப்பிட முடியாது. ஒவ்வொரு பாடலின் உயிரும் அதனுடைய ரசானுபவம் என்பதை நன்கு உணர்ந்தவராதலின், வெவ்வேறு வகையான பாடற்சுவைகளையும் இவர் வெற்றிகரமாகக் கையாண்டுள்ளார். பொருண்மையிலும், விரிவிலும், மிகச்சிறந்த அவரது இலக்கியப் படைப்பு களின் அடிப்படையில், கேரள வர்மாவையும் இந்தியாவின் அண்மைக் காலத்திய மிகச்சிறந்த வடமொழிக் கவிஞருள் ஒருவராகக் கருதலாம்.

7.

மலையாள நாடகம்; கவிதையினை வளம் பெறச் செய்தல்

தமிழ், வடமொழி ஆகியவற்றின் செல்வாக்கினாலே தான், மலையாள மொழிப்பாடல்கள் பெரிதும் வளம் பெற்றன. தமிழின் தாக்கத்துக்கு உட்பட்டவற்றைப் பாட்டு என்றும், வடமொழியின் செல்வாக்குக்கீழ் வந்தனவற்றை மணிப்பிரவாளம் என்றும் கூறுவர். கூத்து, துள்ளல், கதகளி போன்ற காட்சிக் கலைகளுக்குத் துணையாகக் காலப்போக்கில் பாடலும் இடையே புகுந்தது. கூத்துக்கலைக்குப் பயன்படத்தக்கவாறு, பாடல் உரைநடை ஆகியவற்றால் இயன்ற சம்பு எனும் இலக்கிய வகைமையும் பின்னர் உருவாயிற்று. துள்ளல் நாட்டியத்துக்கேற்ப, துள்ளல் பாட்டு எனும் இசைப்பாட்டுகளும் இயற்றப்பெற்றன. அதுபோன்றே கதகளி நாட்டியத்தோடு தொடர்ந்து வருதற்கேற்ற பின்னணி இசையாக அட்டகதா எனும் இலக்கியவகைகளும் தோன்றின. மலையாளக் கவிதை இலக்கியத்துள் கேரள வர்மாவின் படைப்பாக ஆறு அட்டகதைகளைக் குறிப்பிடலாம். அவையாவன, ஹனுமானுத்பவம், துருவசரித்ரம், மத்ச்ய வல்லப விஜயம், ப்ராலம்பவதம், பரசுராமவிஜயம், சோமவாரவிரதம். இவற்றுள் கடைசியில் குறிப்பிடப்பட்ட அட்டகதா வெளிவரவேயில்லை.

உத்தரம் திருநாள் மார்த்தாண்ட வர்மா கதகளியைப் பெரிதும் ஆதரித்த வள்ளல். ஏறத்தாழ ஒவ்வொரு நாளும் அந்தக்காலத்தில் அரண்மனையில் கதகளி நிகழ்ச்சி இருக்கும். இளமையிலிருந்தே நடிப்பில் உற்சாகம் காட்டிய கேரள வர்மாவினைக் கதகளி ஆட்டமும் பெரிதும் கவர்ந்தது. மேலும் அவரது மாமன் ராஜராஜவர்மா இக்கலைக்குரிய பாடல்கள் சிலவற்றைப் பாடிக்காட்டி, அங்க அசைவுகளையும் விளக்கிக் கூறி அக்கலையினைக் கேரள வர்மாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். தனது மாமனிடமிருந்து அதனை அறிந்து கொண்டமையால் கேரள வர்மா கதகளிக் கலைஞர்களை மதிப்பீடு செய்வதும், பாகுபாடின்றி அவர்தம் திறனைக் கண்டறிவதும் உண்டு.

இளமையிலேயே ஏற்பட்ட இந்த உற்சாகத்தோடு தன்னுடைய இசைஞானத்தின் சிறப்பும் வடமொழிப் புலமையும் கதகளியோடு சேர்ந்த அட்டகதாக்களை இயற்றுதற்கு அவருக்கு ஒரு நல்ல வாய்ப்பினை அளித்தன. இவரியற்றிய இந்த ஆறு கதைகளுக்குள்ளும், முதலாவதை எழுதும்போது இவருக்கு வயது பத்தொன்பது. இப்போது .காணக்கிடைக்காது தொலைந்து போன அட்டகதாவை இவரது சிறைவாழ்வின் கடைசிப் பகுதியில் எழுதினார்.

வழக்கமாக அட்டகதா எழுதும் பிற கவிஞரைப்போன்றே, கேரள வர்மாவும் தனது படைப்புகளுக்கெல்லாம் புராண இலக்கியங்களையே ஆதாரமாகக் கொண்டு வீரம், காதல், இறையுணர்வு ஆகியவற்றை சித்தரித்துக் காட்டினார். இறையன்பை துருவசரித்ரம் வெளிப்படுத்துகிறது. பாடல்கள் பொதுவாக சிறந்த இசைக்கும் உயரிய இலக்கியச் சுவைக்கும் புகழ்வாய்ந்தவை என்றாலும், கதகளியின் பல்வேறு காட்சிகளில் வருகின்ற வடமொழிப் பாடல்கள் சொற்சுவையும் பொருளாழமும் பொருந்தியவை. துருவ சரித்ரப்பாடல்களில் ஒவ்வொரு வரியின் கடைசியிலும் அமைந்துள்ள மோனைத் தொடை குறிப்பிடத்தகுந்தது. கதகளிக்கலையில் தனக்கே மிகுந்த பரிச்சயம் உண்டென்றாலும், அதற்குரிய பாடல்களைப் பண் அமைப்பதற்கு முன்னர் தொழில் முறையான கதகளிப்பாடகர்களை அணுகி ஆலோசனை கேட்பது கேரள வர்மாவின் பழக்கம். அவர் எழுதிய அட்டகதாக்கள் மேடைக்கு ஏற்றவையென்றாலும், அந்நாட்களில் அவை பொதுமக்களிடையில் அரங்கேற்றப்பெறவில்லை. வடமொழி கலந்த இலக்கிய நடையோடு சிற்சில புதுமைகள் புகுத்தப்பட்டதுமே அதற்குரிய காரணங்களாகும். கேரள வர்மாவின் அட்டகதாக்கள் அனைத்துமே அவரது இளமைக்காலத்தில் எழுதப்பட்டவையெனினும், அவரது இசைப் புலமையினையும் கவிச்சிறப்பினையும் புராணங்களில் அவருக்கிருந்த ஈடுபாட்டையும் அவை வெளிப்படுத்துகின்றன.

கேரள வர்மா பெருமை மிகுந்த இலக்கிய அறிஞராவதற்கு முன்னர் மலையாளப் பாடல்கள் மதச்சார்புடன் இருந்தன. அம்மொழியின் இலக்கியங்களோ பெரும்பாலும் தழுவல் நூல்களாகவும் காப்பிய, புராணிகக் கருத்தினின்று எடுக்கப்பட்டனவும், மாற்றியமைக்கப்பட்டனவாயும் இருந்தன. இந்நிலையில் தாமாகவே புதிய நூல்களைப் படைத்தும் பிறமொழியினின்று மலையாளத்தில் பெயர்த்து எழுதியும் மலையாளக் கவிதையின் போக்கினையே கேரள வர்மா மாற்றினார். அவர் பெயர்த்த **அமருகசதகம்** மலையாளத்தில் செய்யப்பட்ட முதல் மொழி பெயர்ப்பாகும். முன்னரே குறிப்பிட்டதுபோன்று, சந்துமேனனும் இந்நூலில் மிகுந்த ஈடுபாடு காட்டி அவருடைய மேற்பார்வையில் 1893–ஆம் ஆண்டு இப்பெயர்ப்பு நூல் வெளியிடப்பட்டது. இதனுள் வடமொழிச் சொல்லாட்சியைக் கேரள வர்மா பெரிதும் தவிர்க்க முயன்றாரெனினும், தள்ளமுடியாத நிலையில் சிற்சில

வார்த்தைகளை எடுத்துக் கொள்ள நேரிட்டது. முதல் நூலுள் காணப்படும் சில நயமான உள்ளுணர்வுகளையும் உணர்ச்சிகளையும் பக்குவமாக மொழிபெயர்ப்பதில் கேரள வர்மா வெற்றி பெற்றுள்ளார். சிற்சில கவிதைவரிகளில் மோனைத் தொடையினையும் பயன்படுத்தியுள்ளார்.

இலக்கிய அறிஞர்கள் இந்நூலைப் பெரிதும் பாராட்டி வரவேற்றனர் என்றாலும், குறுகிய பழைமைப் போக்குடைய சிலர் வெறுங்காதலையே கருப்பொருளாகக் கொண்ட இத்னைக் கேரள வர்மா மொழி பெயர்த்திருக்கக் கூடாது; ஏனெனில் சாதாரண மக்களை இந்நூல் நெறிபிறழச் செய்துவிடும்'' என்றனர். வேறு சிலர் இப்பெயர்ப்பின் யாப்பமைதியில் குறை கண்டு அதனைக் கேரளபத்ரிகா எனும் இதழில் கட்டுரையாக வெளியிட்டனர். இதற்குக் கேரள வர்மா அந்தப் பத்திரிகையில் எழுதிய பதிலில் தனக்கு எதிராக இருந்தவற்றைத் தள்ளிவிட்டு மீதத்தை மட்டும் அந்தப்பத்திரிகை வெளியிட்டது. அது குறித்துக் கேரள வர்மா ஒரு பாடலில்

''விருத்தத்தின்பால் காணப்பட்ட குற்றங்கள் எனது பாடலிலா அல்லது கேரளப் பத்ரிகாவிலா' என்று கேட்டார்.

இதனுள் விருத்தம் எனும் சொல் மொழிபெயர்ப்பினைக்குறிக்கும்போது யாப்பு எனவும் பத்ரிகாவைக் குறிக்கும்போது ஒழுக்கம் எனவும் பொருள்படுமாறு இருபொருட்சிலேடையாக அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீநீலகண்ட தீட்சிதரின் புகழ்பெற்ற வடமொழிக் கவிதையான **அன்யோபதேச சதகம்** கேரள வர்மாவால் **1902–ஆம்** ஆண்டு மலையாளத்தில் பெயர்க்கப்பட்டுள்ளது. பாஷா போதினி சபாவில் சொற்பொழிவாற்றும்போது முதல் நூலின் மூன்றாம் செய்யுளை மேற்கோள் காட்டினார். இச்சொற்பொழிவே அச்சேறி பாஷாபோதினியில் வெளிவரும்போது அச்செய்யுளை அப்படியே வடமொழியில் கொடுப்பதை விட மலையாளத்தில் பெயர்த்துக் கொடுப்போமே என்று எண்ணினார். இந்த எண்ணமே சற்று வளர்ந்து பின்னர் வடமொழியில் உள்ள அந்த முதனூலையே முழுதுமாகப் பெயர்த்துவிடும் திட்டத்துக்கு வாய்ப்பேற்பட்டது. அவருடைய மாமன் ராஜராஜவர்மாவே இந்த வடமொழி நூலினைக் கேரள வர்மாவின் இளமைக்காலத்தில் அறிமுகப்படுத்தினார். பெயர்ப்புப் பணி நடந்து கொண்டிருக்கும்போதே, கேரள வர்மாவின் மனைவியும் அதில் ஈடுபாடு காட்டியதோடன்றி, தனது கணவரை உற்சாகப்படுத்தி அப்பணியினை விரைந்து முடிக்கச் செய்தார். ஆயினும் **1910–ஆம் ஆண்டு** அந்நூல் அச்சேறி வெளிவருதற்கு முன்னமேயே **அம்மையார்** காலமாகிவிட்டார். இப்பெயர்ப்பு நூல் முதனூலோடு வேறுபடாமல் மிகத்திறமையாக ஆக்கப்பட்டுள்ளது. சீரமைப்பும் செம்மையும் பொருந்திய

இந்நூலின் ஒவ்வொரு வரியின் இரண்டாவது எழுத்திலும் மோனை அமைந்துள்ள திறம் பாராட்டத்தகுந்தது. இதனை வடநூலார் துவிதியாட்சரப்பிராசம் என்று கூறுவர்.

வடமொழியிலேயிலிருந்து மட்டுமன்றி ஆங்கிலத்திலிருந்தும் பற்பல நூல்களைப் பெயர்த்து இதன்வழி மலையாளக் கவிதைகளை வளமுறச் செய்ய வேண்டும் என்பது கேரள வர்மாவின் கருத்தாக இருந்தது. பெயர்ப்புக்கு ஒரு முன்னோடியாக ஆல்பிரட் டென்னிசன் எழுதிய ஸானெட் எனும் பதினான்கு வரிக் கவிதையினுள் ஒன்றனை ஆங்கிலத்திலிருந்து மலையாளத்தில் பெயர்த்தார். அப்பெயர்ப்பினைக் கண்ணுற்ற விசாகம் திருநாள் மகாராஜா கேரள வர்மாவுக்குக் கீழ்க்காணுமாறு ஒரு கடிதம் எழுதினார்.

"உங்களுடைய கடிதத்தில் கவிதைகளையும் சேர்த்து அனுப்பியதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மலையாளப் பெயர்ப்பில் பாடல்கள் மிகவும் நன்றாக அமைந்துள்ளன. மேலை இலக்கியத்தில் உள்ள மிகச்சிறந்த பாடல்களின் கருத்தினையும் அழகினையும் மலையாளத்தில் அறிமுகப்படுத்துவதனால் இம்மொழி எந்த அளவு வளமையுறும் என்பதற்கு இவை ஒரு சான்றாக விளங்குகின்றன. டென்னிசன் எழுதிய 'இன்மெமோரியம்' எனும் மிக நீண்ட பாடல் தொகுதியினை நீங்கள் படித்தீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. அதனுள் இருக்கும் மிகச்சிறந்த பாடல்களை மணிப்பிரவாள நடையில் பெயர்த்தால், நமது மலையாள இலக்கியம் வலிவும் பொலிவும் பெறும்". ஆயினும் தொடர்ந்து வேறெந்த ஆங்கிலக் கவிதை நூலையும் கேரள வர்மா மொழி பெயர்த்தாரா என்று தெரியவில்லை. இருப்பினும் தொடக்கத்தில் அவர் செய்த பெயர்ப்புப்பணி அந்நெறியினைப் பின்பற்றி பற்பலரும் புதிய கவிதை நடையினை மலையாளத்தில் கொண்டு வருதற்கு ஒரு முன்னோடியாக விளங்கியது. ஆங்கிலக் கவிதைகளைப் பெயர்ப்பதன் வழி மலையாள இலக்கியத்தை வளம் பெறச் செய்வதில் எத்துணை ஆர்வமுடன் இருந்தார் என்னும் உண்மை நவரத்னமாலிகா எனும் நூலின் ஆசிரியருக்கு அவர் எழுதிய கடிதத்திலிருந்து தெரிகிறது. அந்த நூல் ஆங்கிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது பாடல் தொகுதியின் மலையாளப் பெயர்ப்பாகும்.

"தங்களது 14–ஆம் நாளைய கடிதமும் அன்புடன் அனுப்பிய நவரத்னமாலிகாவும் கிடைக்கப்பெற்றேன். ஆங்கில இலக்கியத்தின் சிறந்த அறிவுப் பெட்டகத்தை அதனை அறியாதோருக்கு எடுத்துரைப்பதில் அரிய முயற்சி எடுத்து நீங்கள் வெற்றியடைந்துள்ளீர்கள்."

"என்னுடைய இந்த வயதிலும், சூழ்நிலையிலும் இதுபோன்ற பெயர்ப்புப் பணிகளைச் செய்வது எனக்கு மிகவும் கடினமாக உள்ளது. எனக்குத் தெரிந்த வரையில் இதுபோன்ற பெயர்ப்புகளைத் தொடர்ந்து செய்தற்குரிய விருப்பமும், தகுதியும் உடையவர் வேறு எவரும் இல்லை. நமது இலக்கியத்தைப் பெரிதும் வளமைப்படுத்த வேண்டியுள்ளது. இந்தத் தேவையினைப்பூர்த்தி செய்யும் உயரிய பணியில் தங்களது ஓய்வு நேரத்தைச் செலவிடவேண்டுகிறேன். நிச்சயமில்லாத இந்த உலக வாழ்வில் வெகுசிலருக்கே தெய்வீக அருள் கிடைக்கிறது. இதனைப் பெற்றுள்ள தங்களை இந்த நல்ல சந்தர்ப்பத்தில் உளமார வாழ்த்துகிறேன்."

மலையாளக் கவிதை இலக்கியத்துக்குக் கேரள வர்மா தந்துள்ள சயமான படைப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றை மதத் தொடர்பு உள்ளனவும், அல்லனவும் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். **அஷ்டமிரோகினி மகாத்மியம், பத்மனாப பாதபத்ம சதகம், ஸ்துதி சதகம்** ஆகியனவற்றை மதத் தொடர்புடையவை எனலாம். இவற்றுள் முதலாம் நூல் பிரமாண்ட புராணத்திலிருந்து எடுக்கப்பட்ட கதையினை அடிப்படையாகக் கொண்டது. குழுவாக இணைந்து மகளிர் நடனமாடும்போது பயன்படத்தக்க பத்துவகை ராகங்களுடன் கூடிய பாடல்கள் இதனுள் உள்ளன. 1907–ஆம் ஆண்டில் வெளியாகிய பத்மனாப சதகம் இறைவனை நோக்கி வழிபடும் கவிதையாயினும், கேரள வர்மா பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளும் அதனுள் அடங்கியுள்ளன. அருள்மிகு பத்மனாபரின் முன்னின்று மனமுருக வழிபடும் இந்நூலுள் கவிஞர் உள்ளத்தைத் திறந்து வெளிப்படையாகப் பேசுவது குறிப்பிடத்தகுந்தது. ஆன்மீக உணர்வுக்கு அவர் ஆட்படத் தொடங்கி வாழ்வின் இறுதி நிலையைப்பற்றி ஆழ்ந்து எண்ணியபோது அவரது இலக்கியப் பணிகளும், இசையறிவும், வேட்டையாடும் திறமையும், உடற்பயிற்சி மற்றும் பொழுது போக்கில் இருந்த உற்சாகமும் உலகியலும் மற்றும் பயனற்றவை போல அவருக்குத் தோன்றியது.

அதுபற்றிய அவரது உணர்வுகளைக் கீழ்க்காணுமாறு வெளியிடுகிறார்.

"இலக்கியம், இசை போன்றவற்றில் எனக்கு என்னவோ ஒரு ஈடுபாடும் மகிழ்ச்சியும் இருந்தது. வேட்டையாடுவதிலும் எனக்கு முன்பெல்லாம் உற்சாகம் உண்டு. பெரும்பயன் ஒன்றுமில்லாமலே நான்கைந்து மொழிகளைக் கற்று வெகுகாலம் இலக்கியச் சுவையிலும் ஈடுபட்டிருந்தேன்"

எதையும் வெளிப்படையாகப் பேசும் அவரது இயல்பினைப் பற்றிய ஒரு சுவையான நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடலாம். மேற்கூறிய சதகப் பாடலை கேரள வர்மா இயற்றிக் கொண்டிருக்கும்போது, கேசவபிள்ளை என்னும் கவிஞர், "கையெழுத்துப்பிரதியில் தடையேதுமின்றிக் காதம்பரியை நான் மிகவும் சுவைத்தேன் என்னும் வரியில் காதம்பரி எனும் சொல் காப்பியத்தின் பெயரைக் குறிப்பிடுவதை விட ஒரு மதுவின் பெயரையே குறிப்பிடுவது போல்

இருக்கிறது; எனவே அந்த வரியை மாற்றி அமைத்திடுக" என்று ஆலோசனை கூறினார். ஆனால் கேரள வர்மாவோ அந்த வரியினை மாற்றத்தேவையில்லை. அது அப்படியே இருக்கட்டும் என்னுடைய பாவங்களுக்குப் பிராயச்சித்தமாகத்தான் இந் நூலை எழுதுகிறேன் என்பது உமக்குத் தெரியுமா" என்றார். கேசவப்பிள்ளை மீண்டும் வற்புறுத்தியபோது, கேரள வர்மா கீழ்க்காணும் பொருள்படுமாறு அந்த வரியினை மாற்றி எழுதினார்.

"பெண்வழிச் சேர்ந்து பாலியல் வாழ்க்கையினை

யான் மனதார அனுபவித்தேன் ". இந்த வரிகளே அந்த நூலுள் இப்போதும் காணப்படுகிறது.

ஆயில்யம் திருநாள் மகாராஜாவோடு கொள்கையளவில் கேரள வர்மா பகைத்துக் கொண்டிருந்தாலும், அரண்மனை ஆதரவிலே தான் வாழ வேண்டியிருந்தது. அரசர்களுக்குக்கட்டுப்பட்டிருந்த அந்த நாட்களை நினைவுபடுத்திப்பார்த்தபோது, அதுவே பற்பல பாவங்களை அழித்து கடவுள் தன்னை மன்னித்துவிடவேண்டுமென்றும் வேண்டுகிறார்.

"அமைதியாக இருந்துகொண்டு இறைவனது புகழையே பாடி வழிபடாமல், நேர்மையற்ற மன்னர்களைப் புகழ்ந்ததனால் ஏற்பட்ட பாவங்களை அருள்மிகு பத்மனாபரின் திருவடித்தாமரைகள் போக்கி விடட்டும்."

உணர்ச்சிவயப்பட்டுக் குறைகளை மனந்திறந்து பேசும் இத்தகைய வெளிப்படையான கருத்தினை இந்நூலுள் காண முடிகிறது. மெல்லோசையும், மோனைநயமும் கலந்து, பாடல் திறத்திலும் இந்நூல் சிறந்து விளங்குகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, ஆழ்ந்த மதப்பற்று நூல் முழுதும் பரந்து காணப்படுகிறது.

ஒவ்வொன்றிலும் ஐம்பது செய்யுள்கள் அடங்கிய இரண்டு பாகங்களைக் கொண்டது இந்நூல். நூலாசிரியரின் ஆன்மீக அறிவினையும், இந்து சமயப் புராணங்களில் அவருக்கிருந்த ஆழ்ந்த புலமையினையும் இந்நூல் வெளிப்படுத்துகிறது. மூன்றாவதாக உள்ள ஸ்துதி சதகம் எனும் வழிபாட்டுக் கவிதை வெவ்வேறு கடவுளரை நோக்கி பத்துவரிச் செய்யுளால் வழிபடுவது போல் அமைந்துள்ளது. நூலின் உட்பொருள் ஏறத்தாழ பத்மனாப பாத பத்ம சதகத்தில் இருப்பது போன்றே அமைந்துள்ளது.

மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ள மயூர சந்தேசம் முன்னமேயே குறிப்பிட்டுள்ளபடி நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்புகளை உள்ளடக்கிய ஒரு புகழ் பெற்ற நூலாகும். கவி காளிதாசரால் தொடங்கி வைக்கப்பட்ட தூதுக்கவி வகையினைச் சார்ந்த இந்நூல், யாப்பிலும், நூலமைப்பிலும் மேகதூதத்தையே பின்பற்றியுள்ளது. கேரள வர்மா தான் சிறைப்பட்டிருந்த

ஹரிப்பாடு எனும் இடத்திலிருந்து திருவனந்தபுரத்திலிருக்கும் தனது மனைவி லட்சுமிக்கு ஒரு ஆண்மயிலைத் தூதாக அனுப்புவதே அந்நூலின் உட்பொருளாகும்.

1875–ஆம் ஆண்டு முதல் 1880–ஆம் ஆண்டு வரை கேரள வர்மா சிறைப்பட்டிருந்த காலம். அவர் விடுதலை பெறுவதற்குச் சில காலம் முன்னதாக, அதாவது 1880–ஆம் ஆண்டு தொடக்கத்தில் இத்தூது நூலை எழுதியாக எண்ணிக் கொள்ள வேண்டும். ஆயினும் உண்மையில் சிறையிலிருந்து வெளிவந்த பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரே (1893) எழுதப்பட்ட மயூர சந்தேசம், அமைதியான சூழ்நிலையில் பழைய சிந்தனைகளை மீண்டும் நினைவுப்படுத்திக் கொண்டு எழுதிய ஒரு நூலாகும். இரண்டே மாதங்களில் எழுதி முடிக்கப்பட்ட இந்நூல் சந்துமேனன் எழுதிய முன்னுரையோடு பாஷாபோஷினி இதழில் இரண்டு தடவைகளில் வெளியிடப்பட்டது. பின்னர் மலையாள மனோரமா நிறுவனம் நூல் வடிவில் அதனைப் பதிப்பித்து வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து கேரளாவின் வடக்கு தெற்கு பகுதிகளிலிருந்து பற்பல பதிப்புகள் வெளிவந்திருந்தாலும், ஏ.ஆர். ராஜ ராஜ வர்மா மர்மப்பிரகாசா எனும் தலைப்பில் ஒரு விளக்கத்தோடு வெளியிட்ட பதிப்பே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. உட்பொருளின் புதுமையும், எதுகைமோனை கலந்த சீரான மணிப்பிரவாள நடையும் கொண்ட இந்நூல் பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. பலபேர் அதனைப்படித்து மனனம் செய்து கொண்டனர். மகாகவி உள்ளூர் பரமேசுவரன் கவிதை நடையில் இதனை ஆங்கிலத்தில் பெயர்த்தார்.

தூதுகாவியங்களுள் மயூர சந்தேசம் மட்டும் சொந்த வாழ்வில் பிரிக்கப்பட்டிருந்த தலைவன்–தலைவியரது உண்மையான அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. காளிதாசரின் மேகசந்தேசம் உள்ளிட்ட ஏனைய தூது காவியங்களோ வெறுங் கற்பனையால் புனைந்து எழுதப்பட்டவை. பாடலாசிரியரான கேரள வர்மா, திருவாங்கூர் அரச குடும்பத்தைச் சார்ந்த இளவரசி லட்சுமிபாய் ஆகிய இருவருமே இந்நூலின் தலைவன் தலைவியாவர். முன்னமேயே கூறப்பட்டது போன்றே கேரள வர்மா சிறைப்பட்டமையால் பிரிவுத்துன்பம் நேரிட்டது. ஆயில்யம் திருநாள், விசாகம் திருநாள் எனும் இரண்டு இளவரசர்களின் தொடர்பான கேரள நாட்டு வரலாறும் இத்தூது காவியத்தின் பின்னணியில் உள்ளது. எனவே இந்த நூலின் உள்ளுறையில் வேறெந்த தூது காவியத்திலும் கிடைக்காத தனிப்பட்ட செய்திகளும் வரலாற்று உண்மைகளும் காணக்கிடைக்கின்றன. இலக்கியத்திறனாய்வில் சிறந்து விளங்கும் டாக்டர் கே. கிருஷ்ணமூர்த்தி மயூரதூதம் எனும் இந்நூலுக்கு எழுதிய முன்னுரையில் கீழ்க்காணுமாறு கூறுகிறார்.

"பிரிந்திருக்கும் கணவன் வெகுதூரத்திலிருக்கும் அன்பு மனைவிக்குத் தனது காதற் செய்தியினைக் கூற ஒரு மயிலைத் தூதாக அனுப்பும் வெளிப்படையான அமைப்பு பழகிப்போன காவியச் சிந்தனைதான். ஆயினும் கேரள வர்மாவின் வாழ்க்கைப் பின்னணியை விவரமாக அறிந்து கொண்டுள்ள எந்த வாசகனுக்கும், உள்ளத்தைத் தொடுகின்றதும், முற்றிலும் புதியதுமான ஒரு தன்மை அந்தப்பாடலில் வெளிப்படாமல் போகாது. இதனைத்தான் மிகச் சிறந்த பாடல்களின் தனித் தன்மையான வாஸ்துத்வனி" என்று இந்தியாவிலேயே கவிதை முருகுணர்ச்சியில் தலைசிறந்த ஆனந்தவர்த்தனன் என்பார் குறிப்பிடுவார்.

மயிலைத் தூதுப் பொருளாக எடுத்துக் கொண்டதும் ஈங்கு குறிப்பிடத்தக்கது. ஹரிப்பாடு அரண்மனையில் கேரள வர்மா சிறையிடப்பட்டிருந்தாலும், அப்பகுதியிலிருந்த முருகன் கோவிலுக்குச் சென்றுவர அனுமதிக்கப்பட்டிருந்தார். அருள்மிகு சுப்பிரமணியக் கடவுளின் வாகனமாகக் கருதப்படும் மயில் ஒன்று பக்தி சிரத்தையோடு அக்கோயிலில் வளர்க்கப்பெற்று வந்தது. அதனையே தூதுப்பொருளாக அனுப்புவோம் என்று எண்ணியுள்ளார். அன்றாடம் கோவிலுக்குச் செல்லும்போது அந்த மயிலைப் பார்த்திருப்பது இயல்பே. மேலும் அதன் அடர்த்தியான இறகுகள் அவரது காதல் மனையாளின் அடர்ந்த கூந்தலைக் கூட நினைவுபடுத்தியிருக்கலாம்.

தொலை தூரத்தேயுள்ள திருவனந்தபுரத்தில் வசிக்கும் தலைவிக்குத் தனது செய்தியைச் சொல்லுமாறு மயிலை வேண்டிக் கொள்கிறார். தூதுப்பொருளாக மயிலைத் தேர்ந்தமைக்குரிய காரணங்களை வாசகரும் நம்புகின்ற வகையில் மிகவும் இயல்பாக விளக்கிச் சொல்லுகின்றார். ஒரு பொருளைத் தேர்ந்தெடுப்பது அவ்வளவு எளிதான காரியமில்லை. எனவே மயிலை ஒரு தூதுப் பொருளாகக் கொண்டதில் ஒரு ஆழ்ந்த நோக்கம் இருக்கிறது.

தூதுக் காவியங்களில், தூதுப்பொருளேயன்றி தலைவனும், தலைவியும் மட்டுமே முக்கியமான பாத்திரங்கள் ஆவர். ஆயினும் மயிலை தூதுப் பொருளாக எடுத்துக் கொண்டு, கவிஞர் இன்னொரு பாத்திரத்தையும் இந்த நூலில் வெற்றிகரமாகப் புகுத்தியுள்ளார். மயிலின் தெய்வீகத் தலைவன் சுப்பிரமணியனுக்கு விசாகன் என்பதும் ஒரு பெயர். பாடலின் பல்வேறிடங்களில் மயிலைச் சுட்டிக்காட்டும் பகுதியில் எல்லாம் விசாகனைப் பற்றிப் பேசும் சந்தர்ப்பங்களை உண்டுபண்ணிக் கொண்டு அந்தக் குறிப்பினால் தன்னுடைய நண்பரான விசாகம் திருநாள் மகாராஜாவுக்குத் தனது ஆழ்ந்த மரியாதையினையும் அன்பினையும் வெளிப்படுத்துகிறார். நூல் முழுதும் தொடர்ந்து விசாகக் கடவுள் குறிப்பிடப்படுவதால், விசாகம் திருநாள் மகாராஜாவும் இந்த நூலில் ஒரு பாத்திரமே என்று நாம் எண்ண

முடிகிறது. மயிலைத் தூதுப் பொருளாக்கியதில் ஆயில்யம் திருநாள் மீது தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்க்கவும் கேரள வர்மா இந்நூலின் வழி ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். மயிலின் இயல்பான எதிரியாகிய பாம்பு அஸ்லேஷ நட்சத்திரத்தின் குறியீடாகக் கருதப்படுகிறது. ஆயில்யம் திருநாள் இந்த நட்சத்திரத்தில்தான் பிறந்தார். எதிர்ப்படும் பாம்புகளை ஒழித்துவிடுமாறு பாடலின் வெவ்வேறு இடங்களில் தலைவன் மயிலைக் கேட்டுக் கொள்கிறான். பாம்பாகக் குறிப்பிடப்படும் ஆயில்யம் திருநாள் மீது தனக்குள்ள வெறுப்பினை இத்தகைய பாடற்பகுதிகளின் மூலம் கேரள வர்மா வெளிப்படுத்துகிறார். சுருங்கக் கூறின் மயில்கள் விசாகக் கடவுளோடு கொண்டுள்ள புனிதமான உறவினையும், பாம்புகளோடு கொண்டுள்ள பகைமையினையும் பயன் படுத்திக் கொண்டு விசாகம் திருநாளுக்குரிய மரியாதையினையும், ஆயில்யம் திருநாளின் மீதுள்ள வெறுப்பினையும் ஏறத்தாழப் பாடல் முழுதும் கேரள வர்மா வெளிப்படுத்துகிறார். இந்த உத்தியில் கவிஞர் வியக்கத்தக்க தனது புலமையினை வெளிப்படுத்தி பாடலின் தரத்தினையும் உயர்த்தியுள்ளார். இதுபோன்றதே மயிலுக்குத் துணையாக வரும் நீலகந்தா என்னும் ஒரு பாத்திரமாகும். கேரள வர்மாவுக்கு மிகவும் நம்பிக்கையாக இருந்து அவர் மனைவியிடமிருந்து அவர் பிரிந்திருந்த காலத்து அவர்களுக்கிடையே செய்திகளைக் கொண்டு சென்றவருமாகிய நீலகண்டப் பிள்ளையே இப்பாத்திரம்.

இச்சிறு காப்பிய நூல் மந்தக்கிரந்த யாப்பில் புனையப்பெற்றது. இரண்டு பாகங்கள் அடங்கிய இந்நூலின் முதல் பாகம் 68 செய்யுட்களையும், இரண்டாம் பாகம் 73 செய்யுட்களையும் கொண்டது. பிரிவுக்குரிய காரணத்தைச் சுட்டிக்காட்டிய பிறகு, தலைவனும் மயிலும் பேசிக் கொள்ளும் பகுதி விளக்கமாக உள்ளது. தலைவன் தனது செய்தியினைத் தன் மனைவிக்குக் கூறுமாறு கேட்டுக் கொள்ளுகிறான். ஹரிப்பாடு எனும் இடத்திலிருந்து திருவனந்தபுரம் செல்லும் வழித்தடம் பற்றிய விளக்கம் அழகுபட எழுதப்பட்டுள்ளது. ஓசைநயம் மிகுந்த மணிப்பிரவாள நடையில் யாக்கப்பட்டுள்ள இச்சிறு காப்பியம் பொருத்தமான ரசானுபவத்தைத் தரவல்லது. மலையாளமும் சமஸ்கிருதமும் வேறுவேறான மொழிகளின்றி ஒன்றுதானோ என எண்ணுகின்ற முறையில், அந்த இருமொழிகளின் சொற்களும் சீர்மையாகக் கலக்கப்பெற்று இசை நயத்துடன் திகழ்கின்றன. எனவே இற்றைக் காலத்திய மணிப்பிரவாளக் கவிஞருள் கேரள வர்மாவைத் தலை சிறந்தவராகக் கருதலாம். அவரது மயூர சந்தேசமும் மலையாளத்தில் மணிப்பிரவாள நடையில் தரமாக எழுதப்பட்டுள்ள நூல்களுள் உத்தேசமாகக் கடைசி நூல் எனலாம்.

அனைவராலும் பாராட்டப்படும் மயூர சந்தேசத்தின் அழகிய ஓசையும், நயமும் அந்நூலின் குறிப்பிடத்தக்க கவிதைமாண்பாகும். இதனுள் பல்வேறு விதமான ஒலி நயங்களைக் காணுகிறோம். ஒவ்வொரு வரியின் இரண்டாவது அசையிலும் காணப்படும் ஒரே சீரான ஒலி நயத்தை நூல் முழுதும் படித்துச் சுவைக்க முடிகிறது. சில இடங்களில் செய்யுளின் கடைசிப் பகுதியில் மூன்று அல்லது நான்காவது அசையிலே கூட ஒலிநயம் காணப்படுகிறது. இரண்டாம் அசையில் வரும் ஒலிநயம் பன்னெடுங் காலமாக மலையாளக் கவிதைகளில் இருந்து வருவதாகும். இதனை துவித்யாட்சரம் என்று கூறுவர். இந்த வகையில் இச்சிறுகாப்பியம் மிகவும் சிறந்து விளங்குகிறது. நூலின் கருத்தமைதி கெடாமல் கவிஞர் இந்த ஒலி நயத்தைப் பாடலில் புகுத்தியுள்ளது ஒரு சாதனை. இலக்கிய வாசகர்களிடையில் இவரது கவிதைகள் பெற்றுள்ள பெருமைக்கு இதுவே ஒரு காரணமாகும். படிமக்காட்சியிலும் இப்பாடல் புகழ்பெற்றது எனலாம். கொல்லத்தில் அரசப் பிரதிநிதியின் மாளிகை அருகேயுள்ள அழகான சோலையில் மயில் ஓய்வு கொள்ளுகிறது. சோலையின் அழகிலே மயங்கி அங்கேயே அப்போது தாமதித்து விடக்கூடாதென்று காப்பியத் தலைவன் மிகுந்த கவலையோடு அதனிடம் கீழ்வருமாறு சொல்லுகிறான்.

> "அதோ அந்தப் பந்தரில் மல்லிகையும், ஜாதிப்பூக்களும் நிறைந்து பளிச்சிடுகின்ற பசிய கொடிகள், களிகூர்ந்து தங்கள் மெல்லிய இலையெனும் கரங்களால் உன்னை மென்மையாக வருடி விளையாடும். அந்த மகிழ்ச்சியில் மயங்கி நீ, நீண்ட நேரம் அங்கு தங்கிவிடாதே. அன்புகூர்ந்து என்மீது கனிவுகொண்ட உன் பணியில் தொடர்ந்து முன்னேறிச் செல்க!".

தலைவிக்குக் காதற் செய்தியினைச் சொல்லி அனுப்பும்போதே, மழைகாலத்தில் முல்லைக் கொடியினைக் காணுந்தொறும், கட்டாயமாகத் தலைவியின் நினைவும் வந்துவிடுகிறதென்று குறிப்பிடுகிறார்.

> "மழை காலத்தில் மெல்லிய காற்றினால் அசைகின்ற முல்லைக்கொடியில் புதுவதாகப் பூத்த மலர்கள் தொறும் நீர்த்திவலைகள் காணப்படுகின்றன. என் அன்பே! அவற்றைக் காணுந்தொறும், நீ பரபரப்போடு ஊடல்கொண்டு பிணக்கத்துடன் சிந்தும் கண்ணீர்த் துளிகளும், அதனைத் தொடர்ந்து மலர்ந்து வரும் உனது புன்னகையுமே எனது நினைவுக்கு வருகின்றன"

கோபம் கொள்ளும் போதும் மழைகால முல்லையென மகிழும்போதும், தலைவியின் அழகான முகத்தில் ஏற்படும் மாற்றத்தைத் திறம்பட விளக்கும் இந்த படிமக்காட்சி பெரிதும் இலக்கிய இன்பம் நல்குவதாகும்.

இச்சிறு காப்பியத்தில் வெளிப்படும் தலையாய உணர்வு பிரிவின் கண் ஏற்படும் காதல் எனினும், அதனையொத்த வேறு சில மனப்போக்குகளும்

விவரிக்கப்படுகின்றன. மிக்க அழகோடும், ஆழத்தோடும் விப்ரலம்ப சிருங்காரச் சுவையினை வெளிப்படுத்துவதில் கவிஞர் வெற்றி பெற்றுள்ளார். பிரிவு எந்த அளவு எதிர்பாராமல் வந்து வேதனை தருகிறது என்று தனது காதலியிடம் சொல்லுமாறு தலைவன் தூதுவனைக் கேட்டுக் கொள்ளும் பகுதி மிகவும் உருக்கமாக இருக்கிறது.

"ஈடிணையற்ற என் அன்பே! நம்முடைய மேல்முற்றத்தில் நிலவொளியில், மகிழ்ச்சிக்கடலில் நீந்தியவாறு இன்ப விளையாட்டில் நாம் ஈடுபட்டபோதெல்லாம், இத்தகைய விதி நம்மைச் சூழவரும் என்று எண்ணிப்பார்க்கவேயில்லை. என் அருமைக் காதலியே! விதியின் போக்கினை யாராலும் கணிக்க இயலாது"

பிரிவுத் துன்பத்தை அச்செய்தி விவரிக்கும்போது கீழ்க்காணும் அப்பகுதி துக்கத்தின் உச்சகட்டத்தைக் காட்டுகிறது.

"அழகிய கருநிறவிழியாளே! அரண்மனைத் தோட்டத்தில் ஒரு முறை உற்சாகத்தோடு வேட்டையாடும்போது, இணையாக அமர்ந்திருந்த பறவைகளுள் ஆண் பறவையினைச் சுட்டு வீழ்த்திவிட்டேன். அதனால் மிகுந்த துன்பத்தில் ஆழ்ந்துள்ள அதனுடைய இணைப்பறவையினையும் அப்போதே தீர்த்துவிடுங்கள் என்று உருக்கம் மிகுந்த அனுதாபத்தோடு நீ கேட்டுக்கொள்ளவில்லையா?"

பாடலில் இது ஒரு பாராட்டத்தக்க பகுதி. இருப்பினும் தூதுப்பொருள்களாகிய மயிலையும், மேகத்தையும் ஒப்பிட்டு இவை இரண்டனுள் மேக சந்தேசமே முன்னதைக் காட்டிலும் சற்றே உயர்ந்து நிற்கிறது என்கிறார், டாக்டர் கிருஷ்ணமூர்த்தி.

சிறையில் இருக்கும்போதே இந்தத் தூது காவியத்தைக் கவிஞர் ஏன் எழுதவில்லை? விடுதலை பெற்ற பின்னரும், இதனை எழுதுதற்கு ஏன் பற்பல ஆண்டுகள் ஆயின? சிறைவாழ்வில் அவரது பிரிவுத் துன்பத்தைவிட அங்கே அவருக்கு இழைக்கப்பட்ட தொல்லைகளும், அவமரியாதைகளுமே மனத்தில் நிற்கின்றன. எனவே அவற்றிலிருந்து விடுபடுதற்குரிய வழிவகைகளைக் காண முயன்றார். இதன் விளைவாகத்தான் சிறை யிலிருந்தபோது கேரள வர்மா தன் முழுத்திறமையினையும் பயன்படுத்தி *ஷமப்பண சகஸ்ரம்*, யமப்பிராணாம சதகம் எனும் நூல்களைப் படைத்தார். சிறையிலிருந்து விடுதலை பெற்றதும், தன்னை ஆதரித்த விசாகம் திருநாள் மீது நன்றி உணர்வு மிகுதிப்பட அவரைப் பெரிதும் புகழ்ந்து விசாக விஜயம் எனும் நூலையும் எழுதினார். மேலும் இந்நூலுள் தன் மனைவி லட்சுமிபாய் மீது தனக்குள்ள காதல் உணர்வினையும், கடப்பாட்டினையும் குறிப்பிடுகிறார். பொதுவான இலக்கிய வளர்ச்சிக்காக இவர் எடுத்துக் கொண்ட இத்தகு முயற்சிகளினால், தனிப்பட்ட காதலையும் அன்பினையும்

வெளிப்படுத்துவதாகிய தூது காவியத்தையும் எழுதுவதற்குரிய அவகாசம் கிடைக்கவில்லை.

காலம் இவ்வாறு தன் போக்கில் சுழன்று கொண்டிருந்தது. ஆயினும் தனது அன்பு மனையாளுக்கு ஏற்றவாறு ஒரு கவிதை நூலினைக் கட்டாயமாக எழுதுவதற்குரிய ஒரு சந்தர்ப்பம் கேரள வர்மாவுக்கு ஏற்பட்டது. மகாராணியார் வயதில் முதிர்ச்சி அடைந்து கொண்டு வந்தும், குழந்தைப் பேறு இல்லாமையினால் அத்தம்பதியரின் அன்றாடக் குடும்ப வாழ்வில் ஒரு நிறைவான மகிழ்ச்சி இல்லை. இருப்பினும் தேவையான மருத்துவ சோதனைகளும் தொடர்ந்து செய்யப்பட்டதோடு குழந்தைப் பேற்றுக்காக இறைவழிபாட்டுச் சடங்குகளும் நடத்தப்பட்டன. கணவன் மனைவியரிடை நம்பிக்கை மட்டும் போய்விடவில்லை. கடைசியில் அவர்களுக்குக் குழந்தைபேறு இருக்காது என்பது ஏறத்தாழ உறுதியாகிவிட்டது. இதன் விளைவாக மகாராணியார் சோர்வடைந்து நிலைகுலைந்து விட்டார்கள். மகாராணியை எவ்வாறேனும் மீண்டும் மகிழ்வுடன் இருக்கச் செய்தற்குக் கேரள வர்மா எதனையும் செய்ய ஆயத்தமாக இருந்தார்.

அத்தகைய சூழ்நிலையில்தான், அவளை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்தற்கு ஒரு கவிதை நூலைப் படைக்கின்ற எண்ணமே கேரள வர்மாவுக்கு எழுந்தது. நூலுள் வருகின்ற தலைவனும் தலைவியும் உயிரோடிருக்கும் காலத்திலேயே அந்நூல் வெளிவந்தது ஒரு தனிப்பெரும் நிகழ்ச்சியாகும். பாடற்பகுதியில் லஷ்மிபாய் அவர்களை உயர்ந்த குணங்களும், மனோ திடமும் கொண்ட ஒரு வீராங்கனையாகக் கேரள வர்மா மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறார்.

கேரள வர்மாவின் பெருமைக்குச் சான்றாக உள்ள இருவேறு தனிப்பட்ட நூல்கள் *கைரளிப்பிரசாஸ்தி, தெய்வயோகம்* ஆகியனவாகும். இவையிரண்டும் சமூகச் சார்பு உடையவை. முதல் நூல் கேரள நாட்டில் கல்வி கற்ற பெண்டிருக்குக் கூறப்பட்ட வாழ்த்தும் பாமாலையுமாகும். பெண்கல்வியின் முன்னேற்றத்தில் இந்நூல் ஆழ்ந்த அக்கறை காட்டுகிறது. 1908–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இரண்டாவது நூல் 108 செய்யுட்களைக் கொண்டது. ஆயினும் அதன் கதைப்பகுதி ஒரு நாவலோ, மாகாவியமோ எழுதற்குரிய அளவு செறிவுடையது. தெய்வலோகம் எனும் தலைப்பே அதிர்ஷ்டம் அல்லது நல்வினையைக் குறிப்பதாகும். பாடலோ கோச்சுராமன் எனும் இளைஞன் தனது முன்னாளைய தலைவனின் மகளாகிய கோச்சுசீதா எனும் நங்கையை மணம் புரிவதைக் குறிப்பிடுகிறது.

இலக்கிய வரலாறு எனும் நூலில் மகாகவி உள்ளூர் குறிப்பிடுவது போன்று, இந்தப் பாடல் அதனுடைய கட்டமைப்பில், கேரள வர்மாவின் ஏனைய நுல்களினின்றும் பெரிதும் வேறுபட்டதாகும். இவற்றுள்ளும் தலையாய வேறுபாடு யாதெனில், கேரள வர்மா எப்போதும் வற்புறுத்துகின்ற

ஒவ்வொரு பாடல் வரியின் இரண்டாவது அசையில் வரும் மோனை இந்நூலுள் இல்லாது இருப்பதுவே. இந்த மாறுபாட்டுக்குரிய காரணத்தைப் பாடலிலேயே கேரள வர்மா கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்.

> "தெய்வயோகம் என்னும் தலைப்பில் ஒரு கதையினை இங்கு சொல்கிறேன். என்னுடைய மாணவருள் தலைசிறந்த எனது மருமான் வழக்கமான எதுகைத் தொடையின்றி யான் ஒரு புதிய கவிதை நூல் இயற்றித்தர வேண்டும் என்று என்னிடம் விரும்பியவாறு இந்நூல் இயற்றியுள்ளேன்." (செய்யுள் 2)

விருப்பத்தைக் கூறியவர் கேரள வர்மாவின் மருமான் பேராசிரியர் ஏ.ஆர். ராஜராஜவர்மா. இவருக்கும் கேரள வர்மாவுக்கும் ஏற்பட்ட ஒரு இலக்கியக் கருத்து மாறுபாட்டின் பின்னணியில் இந்த விருப்பத்தைக் கூறியுள்ளார்.

மலையாளக் கவிதைகளில் பாரம்பரியமாகவே 'துவித்யாட்சப் பிராசம்' என்னும் ஒலி இயைபு நயம் கையாளப்படுவது உண்டு. அதாவது பாடல் வரிகளில் இரண்டாவது சீர் ஒரேமாதிரியான ஒலிநயத்தோடு அமையும். உயிரெழுத்தாயினும் மெய்யெழுத்தாயினும் ஒரே மாதிரியாக இரண்டாவது சீரில் வந்து மோனை நயத்தை உண்டு பண்ணும் கலைக்குக் கேரள வர்மா முக்கியத்துவம் கொடுத்து வந்தார். தன்னுடைய பாடல்களில் இத்தகைய ஒலிநயத்தை உண்டு பண்ணுவது அவருக்குக் கைவந்த கலையாக இருந்தது. ஏனைய கவிஞர்களுக்கு இத்தகைய சொல்லோட்டமும் ஒலிநயமும் எளிதாக அமைவதில்லை. அதனால்தானோ என்னவோ இத்தகைய ஒலிநயத்துக்கும், மோனைக்கும் முக்கியத்துவம் கொடுத்தால், பாடலின் பொருளாழம் பாதிக்கப்பட்டு விடும் என்கிற கருத்தும் இலக்கியவாதிகளிடம் நிலவிக்கொண்டிருந்தது. இதனைப்பற்றிய இலக்கிய விவாதம் 1890–ஆம் ஆண்டு தொடங்கி மலையாள மனோரமா இதழில் இடம் பெறலாயிற்று. ஆனால் கேரள வர்மா இவ்விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளவேயில்லை. ஒரு கட்டத்தில் அவரும் வலிந்து இதில் ஈடுபட நேர்ந்தபோது இதுபற்றிய தனது கருத்தினைக் கீழ்க்காணுமாறு கூறினார்.

> "மலையாள இலக்கியத்தில் அன்றுதொட்டு இன்றுவரை சிறந்த கவிஞர்களால் கையாளப்படுகின்ற மோனைநயத்தைக் கையாளும் திறமையிலும் வேறுபாடுகள் உண்டு. எனவேதான் பாடலில் ஒலிநயத்தைத் திறமையுடன் கையாளும் மலையாளக் கவிஞர் வெகு சிலராக இருக்கின்றனர். இதுபற்றிய ஆர்வம் உடையவர்கள் இற்றைக்காலக் கவிஞருள் இரண்டாம் சீரில் உயிரெழுத்தாலும், மெய்யெழுத்தாலும் மோனை அமைத்துப் பாடியோர் எத்தனை பேர் என்று எண்ணிப் பார்த்தால் தெரியும். இத்தகைய செய்யுட்களை என்னுடைய சாகுந்தல மொழிபெயர்ப்பில் ஏராளமாகக் காணலாம். இயல்பாகவே பாடலெழுதும் திறமையற்றோர்

இம்முயற்சியில் ஈடுபடக் கூடாது. இதுபோன்றே எந்தச் சிக்கலுமின்றி இயற்கையாகவே எதுகை மோனையை உண்டு பண்ணத் தெரியாதவர்களும் அந்த முயற்சியில் இறங்கக் கூடாது".

'ஆற்றொழுக்கான மலையாளக் கவிதையில் ஒரு பெருந்தடைக்கல்லாக இருப்பதே மோனைத்தொடை' என்னும் கருத்துடைய பேராசிரியர் ஏ.ஆர். ராஜராஜ வர்மா, சொல்லோசை பற்றிக் கவலைப்படாமல் காளிதாசரின் மேகதூதம், குமார சம்பவம் ஆகிய காவியங்களை மொழி பெயர்த்தார். மேகதூத மொழி பெயர்ப்பின் முன்னுரையில், அவர் 'மணிப்பிரவாள கவிதையின் அழகுக்கு அரணாக விளங்குவது மோனைத் தொடை என்பதில் எனக்குக் கொஞ்சம் கூடச் சந்தேகமில்லை. இருப்பினும் என்னுடைய இயலாமையோ அல்லது முயற்சி செய்யும் விருப்பமின்மையோ யான் எனது மேகதூதம் மொழிபெயர்ப்பில் இதனைக் கைவிட்டு விட்டேன் என்கிறார்.

"துவித்யாட்சப்பிராசம்" என்னும் ஒலி நயம் வேண்டுமென்போர் ஏ.ஆர். ராஜராஜவர்மாவின் இயலாமையினால்தான், அந்தச் சொல்லோசையை அவர் கண்டனம் செய்கிறார் என்றனர். ஒரே சீராக நூல் முழுதும் இச்சொன்னயத்தைக் கேரள வர்மாவால் கூடக் கொண்டு வர முடியவில்லையே எனும் எதிர்மொழியும் கூறப்பட்டது. இந்த எதிர்மொழியில் எந்த ஆதாரமும் இல்லையென்பது மயூரசந்தேசம் வெளிவந்ததும் தெரிந்துவிட்டது. ஆயினும் கேரள வர்மா கூட தூய்மையும் எளிமையும் கலந்த மோனைத்தொடரை மொழிபெயர்ப்பில் கையாளவில்லையே என்று கூறினர் எதிர்த்தரப்பினர். இந்தச் சவாலையும் கேரள வர்மா ஏற்றுக்கொண்டு வழக்கமாகச் செய்வது போன்று வடமொழி நூலாகிய அன்யாபதேச சதகம் என்பதை எடுத்துக் கொண்டு அதனுடைய ஒவ்வொரு பாடல் அடியின் இரண்டாம் சீரில் மோனை நயம் வருமாறு மொழிபெயர்த்துக் காட்டினார். 1902–ஆம் ஆண்டில் வெளியாகிய இப்பெயர்ப்பின் முன்னுரையில் இதுபற்றி கேரள வர்மா தன்னுடைய அசாதாரணமான தன்னம்பிக்கையின் அடிப்படையில் கீழ்வருமாறு கூறுகிறார்.

> மலையாளத்தில் யான் எழுதிய முதல் நூலாகிய கேரளீய பாஷா சகுந்தலா, இரண்டாவதாக எழுதப்பட்ட அமருகசதக மணிப்ரவாளா ஆகிய இரண்டு நூல்களிலும் மெய்யெழுத்து, உயிரெழுத்து மோனைகளைப் பல்வேறு செய்யுட்களில் அமைத்திருந்தாலும், அந்த நிலைமையினைத் தொடர்ந்து நூல் முழுதும் பின்பற்றவில்லை. அது என்னுடைய கவனக்குறைவே தவிர, இயலாமையினால் அல்ல. இப்படிக் கூறி என்னையே நான் புகழ்ந்து கொள்ளுகிறேன் என்று வாசகர்கள் எண்ணினால், அவர்கள் என்னை மன்னிக்க வேண்டுகிறேன். சாதாரணமான துவித்யாட்சப்பிராசம் என்பதையே விரும்பாமல், எனது சீடரும், மருமானும் ஆகிய ஏ.ஆர். ராஜராஜவர்மா பாஷா–மேக சந்தேசம், பாஷா–குமாரசம்பவம் எனும்

இரண்டு நூல்களையும் எழுதியுள்ளார். அக்காலகட்டத்தில் யான் புதுவதாக மயூர சந்தேசம் எனும் நூலை எழுதுகிறேன். வழக்கமாக யான் வற்புறுத்தும் துவித்யாட்சப்பிராசம் எனும் அலங்காரத்தைப் புறக்கணித்து விடாமல் மகிழ்ச்சிகரமான ஒரு கவிதை நூலினைப் படைக்க முடியுமா என்பதைக் காட்டுதற்கு அதனை ஒரு பரிசோதனையாகத்தான் எழுதினேன். ஆயினும் ஒரு முதல் நூலினைப் போன்றே துவித்யாட்சரப்பிராசம் எனும் அணியினை மொழிபெயர்ப்பிலும் துல்லியமாகப் பின்பற்ற முடியுமா என்பதைக். காண்பதற்கே இந்த அன்யோபதேச சதகம் எழுதிப்பார்க்கப்பட்டது. இதிலும் எந்தவிதத்தனி முயற்சியுமின்றி யான் வெற்றி பெற்றுற்ளேன் என்பதை ஷாரிதயாஸ் அனைவரும் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இதனைத் தொடர்ந்து ஏ.ஆர். ராஜராஜவர்மா அதே ஆண்டில் தானே எழுதி வெளியிட்ட பாஷாபூஷணம் எனும் அணியிலக்கண நூலில், துவித்யாட்சரப் பிராசம் எனும் ஒலி நயத்தை எதிர்த்துக் கடுமையாக விமர்சனம் செய்தார். கேரள வர்மாவும் கூட அந்த ஒலி நயத்தினைப் பெரிதும் விரும்பினாலும், சிறந்த கவிஞர்கள் அந்த ஒலிநயம் இல்லாமலேயே மிகவும் அழகான கவிதை நூல்களைப் படைக்கலாம் என்பதை ஒத்துக் கொள்ளத் தொடங்கினார். இந்தச் சூழ்நிலையில்தான், ஏ.ஆர். ராஜராஜவர்மா தனது மாமனாகிய கேரள வர்மாவை அப்படி ஒரு அழகான கவிதை நூலை நீங்களே எழுதுங்கள் என்று கேட்டுக் கொண்டார். இதன் விளைவாக வெளிவந்ததே தெய்வயோகம் எனும் கவிதை நூல். இருந்தும் ஏ.ஆர். ராஜராஜ வர்மா சமரசம் செய்கின்றவரை, இந்த ஒலிநயம் பற்றிய விவாதம் இலக்கிய வாதிகளிடையயே தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தது. இதுபோன்றே சிறு விவாதங்களில் தங்களது அரிய நேரத்தை வீணாக்காமல் சிறந்த கவிதைகளைப்படைக்குமாறு கேரள வர்மாவும் கவிஞர்களைக் கேட்டுக் கொண்டார். இந்த வாதப் பிரதிவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட போது, ஆழ்ந்த அறிவும் கவிபுனையும் ஆற்றலும் கொண்ட கேரள வர்மா போன்ற கவிஞர்களுக்கு ஒரு வகையில் நிம்மதி ஏற்பட்டது. ஆயினும் பொது உண்மையைக் கூறப்புகுந்தால், கவிதையின் அலங்காரத்தில், மோனைக்கும் எதுகைக்கும் முதலிடம் கொடுப்பது பொருத்தமற்றது. அதுபோன்றே ஏ.ஆர். ராஜராஜவர்மா கூறுகின்றபடி துவித்யாட்சரப் பிராசம் எனும் அணியினைக் கவிதையிலிருந்து முற்றுமாக நீக்கி விடுவதும் பொருத்தமற்றது. இந்த இரண்டு எதிரெதிரான கருத்துகள் கடுமையாக விவாதிக்கப்பட்டாலும், காலப்போக்கில் மலையாளக் கவிஞர்கள் விவாதத்தின் கடுமையினைப் புறக்கணித்து விட்டு துவித்யாட்சரப்பிராசம் போன்ற அணிநயத்துக்குத் தேவையான அளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள். எப்படியிருப்பினும்

இந்த விவாதம் முற்றிலும் பயனற்றதென்று ஒதுக்கி விடவும் முடியாது. வெறும் சொல்லழகை விடக் கவிதையின் உண்மையான சிறப்பு எது என்பதை ஆய்ந்து பார்க்கும் வாய்ப்பினை இவ்விவாதம் ஏற்படுத்திக் கொடுத்தது.

ஏராளமான படைப்பிலக்கிய நூல்கள் மொழிபெயர்ப்பு ஆகியவற்றோடு மலையாளக் கவிதை இலக்கியத்துக்குக் கேரள வர்மா மற்றுமோர் உயரிய பணியினைச் செய்தார். முற்கால தற்காலக் கவிஞர்களது சிறந்த பாடல்களை வரன்முறையாகத் தொகுத்து அவற்றை ஒரு தொகுதியாக வெளியிட்டதே அந்தப்பணியாகும். இவற்றுள், முதல் நான்கு தொகுதிகள் மாணவர்களால் வாயாரப்படித்து மனனம் செய்தற்கென்றும், மீதம் மூன்றும் கேரள வர்மாவால் ஐந்தாம் தொகுதியின் முன்னுரையில் குறிப்பிட்டபடி இலக்கிய ஆய்வுக்கென்றும் தொகுக்கப்பட்டவையாகும்.

மலையாளக் கவிதைகளின் வெவ்வேறு விதமான வளர்ச்சியினை வாசகர்களுக்கும் மாணவர்க்கும் அறிமுகப்படுத்துவதிலும் சிறந்த கவிதைகளைச் சுவைப்பதோடு அவற்றை அவர்கள் படைத்தற்குரிய ஆர்வம் திறமை ஆகியவற்றை வளர்ப்பதிலும் இத்தொகுதிகள் குறிப்பிடத்தக்க பணியினைச் செய்தன.

மேலும் இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள பாடல்களை எழுதிய தற்காலக் கவிஞர்களுக்கு இத்தொகுதிகள் ஒரு தூண்டுகோலாகவும் இருந்தன எனலாம்.

காளிதாசரின் அபிஞ்ஞான சாகுந்தலத்தைப் பெயர்த்து மலையாள இலக்கியத்துக்கு முதன்முதலாக ஒரு நாடகத்தினை அளித்த பெருமை கேரள வர்மாவைச் சாரும். இந்த பெயர்ப்புப் பணியினைக் கேரள வர்மா தொடக்க காலத்தில் செய்தார். இந்த நாடகத்தினை மொழிபெயர்ப்புக்கு எடுத்துக் கொண்டதைப் பற்றி அவர் கீழ்வருமாறு கூறுகிறார். "காளிதாசரின் இலக்கியப் படைப்புகளில் உள்ள மிகச்சிறந்த அழகினை நெடுங்காலம் உணர்ந்து கொள்ளாமல், கிராதார்சுனீயம் எனும் நாடகத்தினையும் வடமொழி இலக்கியத்திலேயே மிகச்சிறந்த முன்மாதிரியாக கருதினேன். என்னுடைய அறியாமையினால், ரகுவம்ச காவியத்தைப் பயனற்றதென்று கருதினேன். இப்படியிருந்த நிலையில், இலக்கிய ஆர்வம் நிறைந்த எனது மூத்தசகோதரர் காளிதாசரின் நூல்களைப்பற்றி மிகவும் பெருமையாகப் பேசியதோடு அவற்றினின்று சில செய்யுட்களைப் பாடிக்காட்டி அவற்றின் சிறப்பினையும் அழகுபட விளக்கினார். அந்நாள் தொட்டு அந்த மாகவியின் படைப்புகளில் நான் ஆர்வம் காட்டத் தொடங்கினேன்.

"வேதத்தினைப்பாராயணம் செய்த அறிஞர்கள் குருதட்சிணையாக ரகுவின் கரங்கள் அளிக்கும் பணத்தினைப் பெறுவதில் ஏமாற்றமடைடந்து இன்னொரு வள்ளலை நாடிச்சென்றனர் எனும் இழிவு ஏற்பட்டு விடக்கூடாது.

- ரகுவம்சம்

பின்னர் அவரது நூல்கள் பலவற்றை அடிக்கடி படித்து அவற்றின் தனிச்சிறப்பினையும் அழகினையும் உணர்ந்து கொண்டேன். காளிதாசரது படைப்புகளில் மிகச்சிறந்ததான சாகுந்தலத்தை ஒரு முறை படிக்க நேர்ந்தபோது எனது உடல் உள்ளம் ஆகியவற்றின் வேதனையை மறந்தேன். தனது படைப்புகளினால் இறவாத புகழ்பெற்று வாழும் அத்தகைய மாகவிஞனுக்கு நாம் எப்படி நன்றிக்கடன் செலுத்த முடியும் என்று எண்ணுந்தொறும், அவரது படைப்புகளை மலையாளத்தில் பெயர்ப்பதை விடச்சிறந்த பணி வேறு ஏதுமில்லை என்று எனக்குத் தோன்றியது. இதனால் வடமொழியினை அறியாத மலையாள வாசகரும் காளிதாசரது இலக்கியச் செம்மையினைப் புரிந்து கொள்ள இயலும்".

மொழிபெயர்த்தபோது மூலநூலின் எந்தப் பதிப்பினை கேரள வர்மா எடுத்துக்கொண்டார் என்பது பற்றி அவரே கூறுகிறார்.

"பாஷா–சாகுந்தலம் எனும் இத்தொகுதியில், கேரளக் கையெழுத்துப் படிவத்தில் இருந்த மூலப் பிரதியினையே நான் எடுத்துக் கொண்டேன். மேலும் கேரளத்தின் வடபகுதியினர் திருத்தி அமைத்த அனைத்துச் செய்யுள்கள் மற்றும் உரைநடையினையும், இடைச் செருகலாகத் தோன்றியவற்றையும் முற்றுமாகப் புறக்கணித்துவிட்டேன்".

மொழிபெயர்ப்பு செய்தற்கு முன் இந்த நோக்கத்தோடு தான் முதல் நூல்களைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்று தெரிகிறது. சாகுந்தலம் உள்ளிட்ட ஏராள கையெழுத்துப்பிரதிகள் அடங்கிய கையெழுத்துச்சுவடி நூலகமே இவர் பொறுப்பில் இருந்தது என்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

கேரள வர்மா செய்த மொழிபெயர்ப்பு கேரளீய பாஷா சகுந்தலம் என்னும் தலைப்பில் பதினான்கு பகுதிகளாக வித்யாவிலாசினி என்னும் இதழில் (1881–1882) வெளியாகியது. 'ஒரு கேரளீயன்' என்னும் புனைபெயரில் வந்த இப்பெயர்ப்பு நிறைவுற்றதும், முழு நாடகமும் சிற்சில பாடவேறுபாடுகளுடன் தனிநூலாக கேரளவிலாச அச்சகத்தில் 1882–ஆம் ஆண்டில் அச்சாகியது.

இலக்கிய இதழில் மாதந்தொறும் வெளிவந்து கொண்டிருந்த போதே, இலக்கியவாதிகள் இப்பெயர்ப்பு நாடகத்தைப் பெரிதும் வரவேற்றனர். கேரள வர்மாவுக்கு அது பெருத்த உற்சாகத்தை அளித்தது. வித்யாவிலாசினியின் கடைசி இதழில் வந்த பெயர்ப்போடு கேரள வர்மா சேர்த்துள்ள ஒரு குறிப்பு பின்வருமாறு:

"கேரளத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் ஒரு ஆண்டுக்கு முன் நான் எடுத்த பெயர்ப்புப் பணியினை கடவுள் அருளால் நிறைவேற்றி விட்டேன். மலையாள இலக்கியத்துக்கு யான் அளிக்கும் இப்பெயர்ப்பை இலக்கிய அன்பர்கள் மிகுந்த ஆர்வத்தோடு படித்து வருவதை நான் கவனித்துக் கொண்டு வருகிறேன்."

நூல் வடிவில் இந்நாடகப் பெயர்ப்பு வெளியாகியதும், இலக்கிய வாதிகளேயன்றி அதனை மேடையேற்ற விரும்பிய நடிகர்களும் மிக்க உற்சாகத்தோடு அதனை வரவேற்றனர். பெரும்பாலான நாடகக் குழுவினர் கேரளாவின் வெவ்வெறிடங்களில் அதனை மேடையேற்றி நடித்தபோது கேரள வர்மா பெரிதும் மகிழ்ச்சியுற்றார். இந்த நாடகத்தின் அரங்கேற்றம் கேரளத்தின் பல்வேறு பகுதிகளில் ஒரு கலாச்சார நிகழ்ச்சியாகவே மக்களால் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டது. கூத்தியாட்டம், கதகளி ஆகியவற்றில் பழகிப்போயிருந்த பொது மக்களுக்கு, அவற்றினின்று முற்றிலும் வேறுபட்ட இந்நாடகமானது கவர்ச்சியாக இருந்ததோடன்றி, இதுபோன்ற நாடகங்களைப் புதுவதாகப் படைப்பதற்கும் அந்நாளையக் கவிஞர்களுக்கு ஒரு தூண்டுகோலாக விளங்கியது. கவிஞர்கள் பலர் வடமொழியில் நாடகங்களைப் பெயர்த்ததோடன்றி, மலையாளத்தில் புதுவதாகவும் எழுதினர். இதன் விளைவாக ஏராளமான நாடகங்கள் மலையாளத்தில் எழுதப்பட்டன. கேரள வர்மாவைப் பின்பற்றி நாடகம் எழுதுவது கவிஞர்களிடையே ஒரு புதிய மரபாகவே ஆகிவிட்டது. இந்தப் போக்கினைக் கிண்டல் செய்து கட்டுப்படுத்துவதற்கென்றே சக்கி–சங்காரம் எனும் அங்கத நாடகம் ஒன்று கூட அந்நாட்களில் எழுதப்பட்டது.

சாகுந்தல மொழிபெயர்ப்பு நாடகத்துக்கு இவ்வளவு பெருமையும், இலக்கியவாதிகளிடையே ஒரு அங்கீகாரமும் கிடைத்தும் கூட, அந்நாடகத்துள் ஏராளமான வடமொழிச் சொற்கள் கலந்து இருப்பதனால், சாதாரணப் படிப்பறிவு உடையோருக்கு அது சுலபமாக விளங்குவதில்லை என்ற கருத்தும் நிலவியது. கேரள வர்மாவும் தம்மால் இயன்றவரை சமஸ்கிருத வழக்குச் சொற்களை நீக்கிவிட்டுப் புதியபதிப்பு ஒன்றைக் கொண்டு வர எண்ணினார். ஏ.ஆர். ராஜராஜவர்மாவின் உதவியோடு 1910–ஆம் ஆண்டு வெளிவந்த அந்தப்புதிய பதிப்பும் கூட கேரள வர்மாவுக்கு மனநிறைவு அளிக்கவில்லை. கேரள வர்மாவின் மொழிபெயர்ப்பினை ராஜராஜவர்மா தனது விருப்பம்போல் அங்கும் இங்குமாக மாற்றிக் கெடுத்துவிட்டார் என்று பலர் குறை கூறினார்கள். இதுவும் ஒரு வாதப்பிரதிவாதமாக மாறி முந்தைய துவித்யாட்சரப்பிராசம் பற்றிய கருத்து மாறுபாட்டின் எதிரொலி போன்றே தோன்றியது.

கடைசியில் கேரள வர்மா தானாகவே முயன்று பற்பல திருத்தங்களைச் செய்ததோடன்றி, ராஜராஜ வர்மாவால் செய்யப்பட்ட மாற்றங்களைப்

புறக்கணித்துவிட்டு, நூலின் தலைப்பையும் மணிப்பிரவாள சகுந்தலா என மாற்றி வெளியிட ஏற்பாடு செய்தார். இந்தப்புதிய பெயர்ப்பினைத் தொடர்ந்து இக்காலகட்டத்தில் மலையாளத்தில் ஏறத்தாழ முப்பது மொழி பெயர்ப்புகள் வெளிவந்தன. இம்மொழிபெயர்ப்பாளருள் ஏ.ஆர். ராஜராஜவர்மா, சிறந்த கவிஞரான வள்ளத்தோள் நாராயணமேனன் ஆகியோரும் அடங்குவர். அவர்கள் அனைவரும் தத்தமக்கே உரியவாறு ஒவ்வொரு வகையில் கேரள வர்மாவின் பெயர்ப்பிலே கூறப்பட்ட அளவிறந்த வடசொற் கலப்பு, முதல் நூலினின்றும் பிறிதுபடுதல், போன்ற பொதுவான சில குறைகளைத் தவிர்த்துத் தமது மொழிபெயர்ப்பினை வெளியிடுவதில் ஓரளவு வெற்றி பெற்றனர். எப்படியிருப்பினும், பொதுவாகக் கற்றறிந்த அறிஞர்கள் கேரள வர்மாவின் பெயர்ப்பினை இன்றும் மிக உயர்வாக மதிக்கின்றனர் என்பது தான் உண்மை. வடமொழி முதனூலின்கண் கேரள வர்மாவும், பிற பெயர்ப்பாளர்களும் காட்டிய அணுகு முறையில் உள்ள வேறுபாடு தான் இதற்குக் காரணம் எனத்தோன்றுகிறது. கேரள வர்மா சாகுந்தலத்தை ஒரு நாடகமாகவே கருதினார். பிறபெயர்ப்பாளர்களோ அதனை ஒரு பாடல் நூலாகவே அணுகினர். அத்தோடு கேரள வர்மாவின் இயல்பான நடிப்புத் திறமையும் அம்மொழிபெயர்ப்பில் அவரது அணுகுமுறைக்கு ஒரு உதவியாக இருந்திருக்கக் கூடும்.

8:

மலையாள உரைநடையின் தற்காலத் தலைமகன்

"ஒரு மொழியின் வளர்ச்சியைக் கணிப்பதற்கு, அம்மொழியின் உரைநடை நூல்களை எண்ணிப்பார்ப்பது ஒரு அளவுகோலாகும். மலையாளமொழியின் நிலைமை இன்னும் வருந்தத்தக்கதாக உள்ளது என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். முற்கால அறிஞர்கள் தமது நூல்களைப் பாடலாகவே எழுதியுள்ளனர். பாராட்டுதலுக்குரிய எந்த உரைநடை நூலும் அவர்களால் எழுதப்பெறவில்லை. நாற்பது ஆண்டுகளுக்கு முன் திருவாங்கூர் அரசினர் புத்தகக்குழு ஒன்றை அமைத்து என்னை அதன் தலைவராக நியமித்தனர். அனைவருக்கும் ஏற்புடையதான ஒரு உரைநடை மரபு அந்நாட்களில் இல்லையெனவே எனது பணியினைச் செய்வதில் எனக்கு மிகுந்த சிக்கல்கள் ஏற்பட்டன."

> "இக்காலத்தில் பற்பல உரைநடை எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். இருப்பினும் எளிமை, முதிர்ச்சி, தரம், இனிமை, சீர்மை, மிடுக்கு, ஆற்றல் போன்ற இயல்புகளைக்கொண்ட உரைநடை மரபு மலையாளத்தில் பரவலாக இருக்கிறதென்று சொல்ல முடியவில்லை. கவிதைபோன்று, உரைநடையிலும் கூட வெவ்வேறு விதமான மொழிநடைகள் உண்டு. எழுத்தச்சன், உன்னாயி வாரியர், நம்பியார் உள்ளிட்ட பற்பல கவிஞர்களது செய்யுள் நடையினைக் குறிப்பிட்டுக் காட்டுவது போன்று, மலையாளத்தில் யாருடைய உரைநடையினையும் குறிப்பிட்டுக்காட்ட முடியவில்லை. ஆங்கிலத்தில் உள்ள ஜோசப் அடிஸன், மெக்காலே, கார்லைல், மாத்யூ ஆர்னால்டு போன்ற முன்மாதிரியான உரைநடை எழுத்தாளர்களையும் மலையாளத்தில் சுட்டிக்காட்ட இயலவில்லை."

எனவே மலையாள மொழியில் ஒரு முழுநிறைவான உரைநடையினை உருவாக்குவதில் கேரள வர்மா கண்ணுங்கருத்துமாக இருந்தார்.

இக்குறிக்கோளை நிறைவேற்றுதற்கென்று, பல்வேறுவித ஆங்கில உரைநடைகளைத் தழுவி ஒரு தரமான இலக்கிய நடையினை மலையாளத்தில் உண்டுபண்ணவும் இல்லை என்று கருதிவிடக்கூடாது. மலையாள இலக்கியத்தின் தொடக்க காலத்திலேயே உரைநடை வகைமை புழக்கத்தில் இருந்தது. வடமொழிப்பேரிலக்கியங்களுக்கு உரிய குறிப்புரைகளும் நாடகப் பயிற்சிக்குரிய நீண்ட விளக்கங்களும் உரைநடையில் இருந்தன. மருத்துவம், கட்டிடக்கலை, உடற்பயிற்சி ஆகிய பல்வேறு துறைகளைப் பற்றிய முதல் நூல்களும் உரைநடையில் எழுதப்பட்டிருந்தன. *பிரமாண்ட புராணம், நளோபாக்யானம், அம்பரீஷோபாக்யானம்* முதலான மதத்தொடர்பு நூல்களும் உரைநடையில் இருந்தன. இந்நூல்களில் காணப்படும் முன்னாளைய உரைநடை உத்தேசமாக 14–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகவும், வழக்கிறந்து போனதும், பெறுமளவு தமிழினைச் சார்ந்ததும் ஆகும். போர்த்துகீசியரின் நுழைவுக்குப்பின்னர், கிறித்தவப்பாதிரியார்கள் அப்போது பேச்சு வழக்கிலிருந்த மலையாளத்தைத் தங்கள் மதப்பிரச்சாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்டனர். இதனால் உருவாகிய உரைநடை மரபு "பாதிரி மலையாளம்" என்று அழைக்கப்பட்டது. இந்த உரைநடையில் 18–ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதான *ஷம்ஷேபவேதார்த்தம் வர்த்தமான புஸ்தகம், ஞானமுத்துமாலா* முதலான நூல்களை ஈண்டு குறிப்பிட்டுச் சொல்லலாம். கிறித்தவப்பாதிரியார் பலர் பிற்றை நாட்களில் மதச்சார்பற்ற செய்திகளை உள்ளடக்கிய நூல்களைக் கூட இதே நடையில் தான் எழுதினர். ஆயினும் அந்த மொழிநடையில் நுட்பமும், அழகும் இல்லையென்பதோடு ஒரு குறிப்பிட்ட இனத்தினரின் வசனம் என்கிற பெயரையும் பெற்றுவிட்டதால், கல்வித்துறையிலோ, அன்றி இலக்கிய வட்டாரத்திலோ அந்த வசனத்தை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

எனவே இன்றையநாள் கல்வி முறை கேரளாவில் பரவத் தொடங்கியபோது, ஒரு புதிய உரைநடை வளர்ச்சி இன்றியமையாததாகி விட்டது. இந்தியாவின் பிறபகுதிகளில் காணப்படுவது போன்று, கிறித்தவப் பாதிரியார்களே தற்காலக் கல்வி முறையினைக் கேரளாவிலும் தொடங்கி வைத்தனர். அவர்களது கல்விமுறைக்கேற்ற பாடநூல்களை எழுதுதற்கு அவர்கள் உருவாக்கிய உரைநடை மதச்சார்புடையதாகவும், தனித்த சில இயல்புகளைக் கொண்டதாகவும் இருந்தது. இருப்பினும், மதச்சார்பற்ற ஒரு புதிய உரைநடை தோன்றுதற்கு அது வழிவகுத்துக் கொடுத்தது. திருவாங்கூர், கொச்சிப் பகுதிகளில், பின்னர் மலபாரிலும் கூட பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் மற்றும்–மத்திய காலம் வரை, கல்வித்துறையானது அரசின் கண்காணிப்பில் மதச்சார்பு அற்றதாக இருந்தது.

ஆயில்யம் திருநாள் ராமவர்மாவின் காலத்தில், திவான் ஸர்.டி. மாதவராவ் முயற்சியினால், அரசின் நிர்வாகத்தில் பற்பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது ஆங்கில அரசின் பிரதிநிதியாக இருந்த கல்லன் என்பார் திருவாங்கூர் அரசின் கடைநிலைப் பணியாளர்கள் போதிய கல்வித்தகுதியின்றி இருப்பதை சுட்டிக்காட்டினார். அவரது இணக்கமின்மையைப் புரிந்து கொண்ட மகராஜாவும், திவானும் அந்நாள் தொட்டு அரசுப்பணிக்கு வருவோரில் சிறந்த தகுதி உடையோருக்கு முன்னுரிமை கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து மகாராஜனின் அரசு, காவலர் பதவிக்கு மேற்பட்ட எந்தப் பணிக்கும் வருவோருக்கு ஒரு தேர்வு நடத்தி அதில் வெற்றி பெற்றோருக்கு ஒரு சான்றிதழ் வழங்குமாறு தனது கல்வித்துறைக்கு ஆணையிட்டது. அத்தேர்வினை நடத்துவதற்குரிய பாடத்திட்டத்தையும், புத்தகங்களையும் ஆயத்தம் செய்யும் பொறுப்பு 1867–ஆம் ஆண்டு ஒரு புத்தகக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது. கேரள வர்மா அதன் உறுப்பினராகவும் பின்னர் அதன் தலைவராகவும் நியமிக்கப் பெற்றார். ஏறத்தாழ இருபத்துமூன்று ஆண்டுகள் அக்குழுவில் திறம்படப் பணியாற்றினார்.

அந்நாட்களில் கல்வித்துறையில் வடமொழியே முதன் மொழியாக அரசோச்சியது. ஆயினும் கேரள வர்மா, தான் ஒரு தலைசிறந்த வடமொழி அறிஞராக இருந்தும், தாய்மொழியாகிய மலையாளத்தில்தான் பயிற்றுமொழி அமைய வேண்டும் என்பதில் மிகுந்த கவனத்துடன் இருந்தார். இதுபற்றிய தனது கருத்தைக் கீழ்வருமாறு கூறுகிறார்.

> "கல்வி என்பது வடமொழியினைப் பயில்வதுதான் என்னும் மயக்கத்தில் சிலர் இங்கு தடுமாறிக் கொண்டுள்ளனர். கற்க வாய்ப்பிருந்தால் அம்மொழியினை அனைவரும் கற்றுக் கொள்ளலாம் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அத்தோடு கல்விப்பயிற்சியே முடிந்துவிட்டது என்று எண்ணுவது பேதைமையாகும்."

அந்நாட்களில் அதுவரை புழக்கத்திலிருந்த கல்வித் திட்டத்தின் குறைபாடுகளையும் கேரள வர்மா நன்கு புரிந்து கொண்டிருந்தார். பள்ளிக் கல்வியில் அப்போதிருந்த அக்குறைகளையும் அந்நாட்களில் கிடைத்த அரைகுறை பாடப்புத்தகங்களையும் மனதிற்கொண்டு, கேரள வர்மா புதிய பழைய துறைகளை உள்ளடக்கிய கல்வித்திட்டத்தை ஆயத்தம் செய்து தேவையான பாடநூற்களையும், துணைப்பாட நூற்களையும் எழுதுவதற்கு முயற்சி எடுத்தார். ஆழ்ந்த படிப்பு, பல்வேறுவிதமான கடிதத்தொடர்பு, ஆங்கிலயரோடு இடையறாத ஆலோசனை ஆகியவற்றால் ஆங்கில மொழியின் உரைநடைத்திறம் கேரள வர்மாவிடம் நன்றாகப் படித்திருந்தது. அதன் விளைவாக மலையாளத்துக்கேற்ற உரைநடை ஒன்றை உருவாக்கவும் திட்டமிட்டார். அத்தோடு தற்காலப்புதிய கருத்துகளைக் கூறுதற்கேற்ற

போதிய சொல்வளம் மலையாளமொழியில் இல்லையென்பதையும் உணர்ந்தார். ஆயினும் வளம் பொருந்திய வடமொழியில் அவருக்கிருந்த ஆழ்ந்த புலமை இத்தகைய எந்தச் சிக்கலையும் சமாளிக்கத் துணைநின்றது. எனவே தமது அறிவுத்திறமையாலும், இடையறாத உழைப்பினாலும் கேரளவர்மா மலையாளமொழியில் ஒரு புதிய உரைநடையினையே தோற்றுவித்தார். மேலும் அவரே எழுதிய பல பாடநூல்களும் அவரால் பரிசோதித்து அனுமதிக்கப்பட்டனவும் புதிய மலையாள உரைநடையின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தன.

ஆயில்யம் திருநாள் மகாராஜா உரைநடையில் செய்த சாகுந்தல மொழிபெயர்ப்பு மலையாள உரைநடையில் குறிப்பிடத்தக்க ஒரு இலக்கியமொழி நடை என்று கூறத்தகும், முதல் முயற்சியாக இருந்தது. ஆயினும் கையெழுத்துப் பிரதியாகவே இருந்த இந்நூலைக் கேரள வர்மாவே வெளியிட்டார். ஆயினும் இந்நூலில் போதிய செறிவும் நயமும் இல்லை. இந்த நூலின் உரைநடைப் பெயர்ப்பினை மணிப்பிரவாள சாகுந்தலத்தோடு ஒப்பிட்டால், கேரள வர்மாவின் சீர்மைசான்ற இயல்பான உரைநடை ஆயில்பம் திருநாளின் நடையினைவிடச் சிறந்ததென்பதில் ஐயமில்லை. அக்பர் எனும் நூலைக் கேரள வர்மா மலையாள உரைநடையில் எழுதி முடிக்கின்ற காலகட்டத்தில், இற்றைக்கால உரைநடைக்குச் சமமான ஒரு மொழிநடையினை உருவாக்கி இருந்தார் என்றே கூறலாம். இருப்பினும் சிற்சில வழக்கிறந்த சொற்களும், அதிகமாகப் புழக்கத்தில் இல்லாத சில வடமொழிச்சொற்களும் ஆங்காங்கு காணப்பட்டன. இவரால் தயாரிக்கப்பட்ட இந்தப்பாட நூல்கள் திருவாங்கூர் மாநிலத்தின் அனைத்துப்பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தியபோது, கேரளவர்மாவினால் உருவாக்கப்பட்ட இந்த உரைநடை மாநில முழுதும் பாராட்டப்பெற்றது. காலப்போக்கில் கேரளாவின் ஏனைய பகுதிகளான கொச்சின், மலபார் ஆகிய இடங்களிலும் இந்த உரைநடை நடைமுறைக்கு வந்தது.

ஆரம்பகணிதம், வரலாறு, புவிநூல், உடல்நலம், பொருளியல், நீதிநெறி, நல்லொழுக்கம் ஆகிய பல்வேறு துறைகளைச் சார்ந்த பாடநூல்களேயன்றி, அந்நாளைய தொடக்கப் பள்ளிகளில் நடத்தப்பட்ட முதல் மூன்று வகுப்புகளுக்கான மலையாளப் பாடநூல்களையும் கேரள வர்மா எழுதினார். முதல் வகுப்பு நூலில் உயிரெழுத்துகள், சொற்கள், சொற்றொடர்கள், வரிகள் ஆகியவற்றை அறிமுகப் படுத்தியதோடு, கட்டுரைகளைப் பத்தி பிரித்துப்போடுவது பற்றியும் விளக்கம் கொடுத்தார். முன்மாதிரியான பத்திகளை எழுதிக்காட்டும்போது பேப்பர், உலோகம், சூரியன், அறிவு போன்ற பல்வேறு பொருள்கள், கருத்துகளைப் பற்றியும் அறிமுகம் செய்தார். இரண்டாம் வகுப்புப் பாடநூல் முதற்பாடநூலின் தொடர்ச்சியாகவும், மாணவர்களின் தரத்துக்கேற்ற கதைகளையும், சிறு கட்டுரைகளையும்

கொண்டிருந்தது. இளம் மாணவ, மாணவியரிடையே உற்சாகத்தைத் தூண்டுமாறு எழுதப்பட்ட கதைகள் சீரிய நல்லொழுக்கத்தையும் போதித்தன. மூன்றாம் வகுப்புப்பாட நூலிலும் கதைகளும் கட்டுரைகளுமே இருந்தாலும், அவற்றின் தரமும் அளவும் சற்று அதிகமாக இருந்தன. சிறு கதைகள் அனைத்துமே இரக்கம், உயர்ந்தநோக்கம், நல்லொழுக்க நெறிகள் ஆகியவற்றைச் சிறுவரது உள்ளத்தில் பதிக்கின்றவாறும் அவர்களது வாழ்வியல் கண்ணோட்டத்தை விரிவுபடுத்தும் முறையிலும் சொல்லப்பட்டிருந்தன. மாணவர்களின் தனித்தன்மையை வளர்த்து அவர்களின் சமூகப் பழக்கவழக்கங்கள் சீராக அமைவதற்கு அறிவுரை கூறும் முறையிலும் கட்டுரைகள் அமைந்திருந்தன. இவ்வாறு இந்தப்பாட நூல்கள் அனைத்தும் மாணவரது மனோவலிமையினையும் அறிவுத் திறனையும் வளர்ப்பதில் பெரும்பங்கு வகித்தன. இவற்றில் கவிதைப் பகுதியைச் சேர்ப்பது பற்றிக் கேரள வர்மா கவலைப்படவேயில்லை. ஏனெனில் உரைநடைதான் அந்நாளைய தேவை என்பதை அவர் நன்றாக உணர்ந்திருந்தார்.

ஆங்கில உரைநடை இலக்கியத்தைத் திட்டமிட்டுப் பயின்றும், வகுப்பறைகளில் பயன்படுதற்கென்று பயிற்றுவிக்கும் குறிப்புகளை ஆயத்தம் செய்தும், கேரள வர்மா உரைநடையினை உருவாக்குவதில் தேர்ச்சி பெற்று உரைநடையில் சிறந்த நூல்களைப் படைக்கும் அளவுக்குத் தனித்திறமையும் பெற்றுவிட்டார். ஆயினும் உரைநடை இலக்கியத்தில் தனிப்பிரிவு என்பதாக ஒன்றையும் அவர் தோற்றுவிக்கவில்லை. எனினும் அக்காலகட்டத்தில், மலையாள இலக்கியத்தின் தேவையை உணர்ந்து, தான் ஒரு வழிகாட்டியைப் போன்று பணிபுரிய வேண்டும் என்று தீர்மானித்தார். இன்றைய நாளைய உரைநடையில் கதை, கட்டுரை, அறிவியல் போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் தனது மொழிநடையினை வெளிப்படுத்தி மலையாள உரைநடை இலக்கியம் எதிர்காலத்தில் அத்தகைய முறையில் சிறப்புடன் வளருவதற்கு ஒரு அடிப்படை அமைத்துக் கொடுத்தார்.

புதினம்:

அக்பர் எனும் நாவலைக் கேரளவர்மா எழுதத் தொடங்கிய காலத்தைக் கணக்கிற்கொண்டால், மலையாள இலக்கியத்தில் அதுவே முதல் நாவல் எனலாம். இந்நாவல் அதே தலைப்பில் டச்சுமொழியில் எழுதப்பட்ட ஒரு நாவலின் சரளமான மொழிபெயர்ப்பாகும். மலையாளமொழி நாவல்களுள் முதலாவதாகக் கூறப்படும் குண்டலதா வெளிவருதற்கு ஏழாண்டுகளுக்கு முன்னமேயே கேரளவர்மா இந்நாவலை எழுதத் தொடங்கிவிட்டார். டாக்டர். வான் லிம்பர்க் பிரௌன் என்பார் எழுதி 1872–இல் வெளிவந்த முதல் நூல், ஜெர்மன் மொழியில் 1877–லும் பின்னர் ஆங்கிலத்தில் 1879–ஆம் ஆண்டிலும் பெயர்க்கப்பட்டது.

மொகலாய மாமன்னர் அக்பரின் வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்ட இந்த வரலாற்று நவீனம் அந்நாளைய இந்தியாவின் சமூகக் கலாச்சார நிலைமைகளையும் வெளிப்படுத்துகிறது. இலக்கியச் சுவைக்காகவும், நாவலின் தேவைக்காவும், நூலாசிரியர் வரலாற்றுக்கு உட்படாத சில கதாபாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் இதனுள் புகுத்தியுள்ளார். அந்நூலின் ஆங்கில முதனூலைப் படித்த விசாகம் திருநாள் மகாராஜா அதன் இலக்கியச் சிறப்பிலும், கருத்தோட்டத்திலும் பெரிலும் வயப்பட்டு அந்நூலைக் கேரள வர்மா மலையாளத்தில் பெயர்க்குமாறு ஆலோசனை கூறியதை முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். இயல்பாகவே கேரள வர்மாவும் அந்நூலைப் பெரிதும் விரும்பி ஓரிரு ஆண்டுகளுக்குள் அதனை மொழி பெயர்க்கவும் தொடங்கினார். ஆயினும் 1894–ஆம் ஆண்டில் தான் அப்பணியினை அவரால் நிறைவேற்ற முடிந்தது. மலையாள மொழியின் முதல் நாவல் என்னும் பெயரோடு அதனை வெளியிடவேண்டும் என்ற ஆர்வம் கேரள வர்மாவுக்கு இருந்தபோதிலும், அதற்குச் சற்று முன்னதாகவே மலையாளத்தில் சில நாவல்கள் வெளியாகி இருந்தன. இருப்பினும் அக்பர் எனும் அப்புதிய நாவலுக்கு அறிஞர்களுக்கிடையில் நல்ல மதிப்பு இருந்தது. கேரள வர்மாவின் உரைநடை நூல்களுள் அது மிகவும் தரம் வாய்ந்ததாக மதிக்கப்பெறுகிறது.

இப்புதிய நாவல் ஒரு மொழிபெயர்ப்பாக இருந்தாலும், எழுதப்பட்ட முறையினை நோக்கும்போது அது மலையாளத்தில் எழுதப்பட்ட ஒரு படைப்பு இலக்கியமாகவே தோன்றுகிறது. உரையாடல்களைப் பொறுத்த அளவில் மூல நூலை ஒட்டியே பெயர்ப்பும் அமைந்துள்ளது. நெடிய கதை ஓட்டத்தில் அந்நிலைமை மாறி விடுகிறது. தன்னுடைய ரசனைக்கேற்ப சிற்சில பகுதிகளை ஆங்காங்கே ஒதுக்கி விட்டு, புதியனவாகவும் சிலவற்றைச் சேர்த்திருக்கிறார். மலையாள வாசகர்களுக்கு உகந்ததாக இல்லாத அயன்மொழி மரபுச்சொற்றொடர்களை அவர் மாற்றியுள்ளார். மொழிபெயர்ப்புப் பகுதிகளை விட நூலின் பல்வேறு பகுதிகளில் உள்ள வருணனைகள் இயற்கையாக அமைந்துள்ளன. நூலின் பல்வேறு பகுதிகளில் உள்ள வருணனைகள் இயற்கையாக அமைந்துள்ளன. நூலினை ஒருசேர நோக்கும்போது, ஏதோ ஒரு எளிய மொழிபெயர்ப்புப் பிரச்சினைகளைப் பற்றிய ஆய்வுநூலாகவும் அதனைக் கருத இடம் உள்ளது. அவரது இலக்கியப் புலமையில் ஒரு தனித்தன்மை இருப்பதால், மொழிபெயர்ப்பிலும் அவர் ஒரு படைப்பிலக்கியவாதியாகவே தான் இருக்க முடிகிறது. அவரது சாகுந்தல மொழிபெயர்ப்பும் இந்த உண்மையினைத்தான் வெளிப்படுத்துகிறது.

முன்னமேயே அவர் எழுதிய பாடநூல்களைக் காட்டிலும், அக்பர் என்னும் இப்புதிய உரைநடை நூலைத் தரம் மிகுந்ததாக ஆக்க விரும்பினார்.

இக்குறிக்கோளை நிறைவேற்றுதற்கு, அவர் இயல்பாகவே வடமொழியின் வளமையைத் தான் நாட வேண்டியிருந்தது. வடமொழியிலிருந்து ஏராளமாக சொற்களையும், மரபுச்சொற்களையும் எடுத்துக் கையாண்டதோடன்றி, வடமொழியின் உரைநடைப்போக்கினையும் பின்பற்றினார். நாவலின் தொடக்கப் பகுதியிலேயே வரும் மாலை வருணனை இதற்குச் சான்று. அறிஞர்க்கே விளங்கும் கடினமான இலக்கிய நடையினை அவர் பின்பற்றினார். சாதாரண வாசகருக்கு ஏற்புடைத்தாக அம்மொழி நடை அமைந்திலது என்பதும் அவருக்குத் தெரியும். எனவேதான் நூலைப் பயிலும் வாசகர்கள் பொறுமையோடு அதனைப் பயின்றால், இலக்கிய இன்பம் பெறலாம் என்று அந்நூலின் முன்னுரையில் அவரே குறிப்பிடுகின்றார். இருந்தும், கேரள வர்மாவின் உரைநடை மிகவும் கடுமையானதென்று அதனை மேலும் கண்டனம் செய்யும் வகையில் பற்பலர் குறை கூறிப்பேசினர். பலர் அப்படிப் பேசினாலும் அதனை விழைந்து படிக்கும் இலக்கிய அன்பர்கள் இன்றைநாளிலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தை இலக்கியம்

கேரள வர்மா புதுவதாக ஆயத்தம் செய்த இளையோர் பாடநூல் வரிசை மலையாளமொழிக் குழந்தை இலக்கியத்தின் முதற்கட்டம் என்று கூறலாம். முன்னரே குறிப்பிட்டதுபோன்று, இரண்டு, மூன்றாம் பாடநூல்கள் அந்தந்த வகுப்பு மாணவரின் தரத்தையும், சுவையினையும் மனதிற்கொண்டு எழுதப்பட்ட கதை, கட்டுரைகளை உள்ளடக்கியது. 1867–ஆம் ஆண்டு தொடங்கி 1870–வரை நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளைக் கேரள வர்மா எழுதியுள்ளார். நன்னெறி புகட்டும் அச்சிறு கதைகள் அனைத்தும் சுவை மிகுந்தவை. அவற்றை எழுதியதனால், கேரளவர்மாவே மலையாள இலக்கியச் சிறுகதைகளுக்கு அடித்தளம் அமைத்தவர் எனலாம். அக்கதைகளை முதற்கதைகள், பெயர்ப்புக் கதைகள், தழுவற் கதைகள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

பெயர்க்கப்பட்ட கதைகளுள் ஏசாப்பின் சிறுகதைகளே மிகுதியானவை. இதன்வழி பிறநாட்டுக்கதைகளை முதன்முதலாக மலையாள இலக்கியத்தில் அறிமுகப்படுத்திய சிறப்பு கேரள வர்மாவுக்கே உரியது. இவை வெறும் பெயர்ப்புகள் மட்டுமல்ல. முதற்கதைகளாகத் தோற்றும் வண்ணம் அவற்றைப் பெயர்க்க முயன்ற கேரள வர்மாவின் திறமையினைப் பிரதிபலிக்கும் அவை புதிய படைப்புகளாகவே தோன்றுகின்றன. வரலாறு வாழ்க்கைச் சரிதம் ஆகியவற்றைப் போன்று பெரியோருக்கென்று இவர் எழுதிய பிறகதைகளும் புதிய படைப்புகளைப்போன்றே தோன்றுகின்றன.

கட்டுரை :-

மலையாள பாடநூல்களில் கேரள வர்மாவால் எழுதி வெளியிடப்பட்ட சிறு கட்டுரைகளைப் பற்றி முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். அவையேயன்றி, வாழ்வியல், சமூகவியல், போன்ற பல்வேறு துறைகளைப் பற்றிய நீண்ட கட்டுரைகளையும் அவர் எழுதியிருந்தார். 'வேட்டையாடுதல் பற்றிய எனது நினைவுகள்' எனும் கட்டுரையினைத் தவிர்த்து பிற அனைத்தும் 1876–ஆம் ஆண்டுக்கும் 1869–ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதாகும். கல்வி, அரசியல் சட்டம், பொருளியல், பொது உடல்நலம் ஆகிய பிறதுறைகளிலும் கேரள வர்மா தனது ஆர்வத்தைக் காட்டினார்.

கேரளவர்மாவுக்குப் பெருமை அளிக்கக்கூடிய இரண்டு கட்டுரைகளில் ஒன்று பொதுவான கல்வி பற்றியது. பிறிதொன்று பெண்கல்வி பற்றியது. கல்வி அறிவில்லாதவன் விலங்குக்குச் சமமானவன் எனும் வட மொழிவாணரின் கருத்தை முன்வைத்து முதற்கட்டுரை அமைந்துள்ளது. இதனை விளக்குதற்குக் கேரளவர்மா கல்விகற்ற ஐரோப்பியருக்கும் கல்லாத ஆப்பிரிக்க நீக்ரோக்களுக்கும் உள்ள வேறுபாட்டைச் சான்றாகக் காட்டுவர். அறிவு வளர்ச்சி, மனக்கட்டுப்பாடு, சீரான நடத்தை ஆகியவற்றோடு கடவுள் நம்பிக்கையினையும் வளர்ப்பதுவே கல்வியின் குறிக்கோள் என்று கேரளவர்மா கூறுகிறார். குழந்தைகளின் கல்வியில் அவர்களது பெற்றோரும் ஆர்வம் காட்ட வேண்டும். இதற்கேற்றவாறு அரசினரும் இதுபற்றிய செய்தியினைப் பரப்புதல் நன்று என்றும் கருதுகிறார்.

பெண்கல்வியினைப் பெரிதும் ஆதரித்தவர் கேரளவர்மா. கல்வியினைப் பெறுதல் பெண்களது உரிமை என்று வாதிட்டார். ஏனெனில் கடவுளின் படைப்பில் அறிவைப் பெறுவதிலும் உணர்வதிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடில்லை என்று கூறினார். பெண்கல்வியினை எதிர்ப்போரின் வாதங்களை அவர் வன்மையாக மறுத்தார். கல்வியினால் பெண்கள் கர்வம் அடைவர் என்பாரை நோக்கிக் கேரளவர்மா 'அவளது அசாதாரணமானத் திறமையினால் அவளுக்குப் பெருமை ஏற்படலாம்'. என்றார். இரண்டு கண்களும், காதுகளும் இருப்பதால் யாருக்கும் பெருமையில்லை. ஏனெனில் அவை எல்லோருக்கும் பொதுவானவை. ஏனையோர் கல்வி கற்காமல் இருக்கும்போது, கல்வி கற்ற பெண் பெருமை அடைவாள். காலப்போக்கில் எல்லாப் பெண்களும் கற்றுவிடும்போது எந்தப் பெண்ணும் அதனால் கர்வம் அடையமாட்டாள்.

பெண் கல்வியின் பெருமை பற்றிப் பேசும்போது, கல்விகற்ற பெண்டிர் ஆடவரிடமிருந்து மிகுந்த மரியாதையினைப் பெறுவர் என்னும் கருத்தைக் கீழ் வருமாறு குறிப்பிடுகிறார்." பெண்கள் தமது கல்வி அறிவைப் பெறும்போது இப்போதிருப்பதை விடப் பெரிதும் மதிக்கப்பெறுவர். ஆடவர்

இன்றைய நாட்களில் பெண்டிரைத் தம்மிலும் கீழாக மதித்து தரங்குறைந்த பணிகளைச் செய்யச் சொல்லுகின்றனர். தம்மைப்போலப் பெண்டிரும் அறிவார்ந்த நிலையில் இல்லை என்று அவர்கள் கருதுவதே இதற்குக் காரணம் ஆகும். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் கேரளாவில் வெகு சிலரே பெண் கல்வி பற்றி பேசத் தொடங்கிய காலத்தில் கேரள வர்மா பெண்டிரைப் பற்றிய இத்தகைய முற்போக்குக் கருத்துகளைக் கொண்டிருந்தார்.

சிறந்த முறையில் எழுதப்பட்ட ஐந்து கட்டுரைகளில் அதிகாரிகளின் ஆட்சி, அரசியல் சட்டத்துக்கு உட்பட்ட முடியாட்சி, ஜனநாயகம், முடிமன்னராட்சி எனும் தலைப்புகளில் அரசியல் பற்றிக் கேரளவர்மா எழுதியுள்ளார். கேரளமக்களுக்கும் போதிய அரசியல் அறிவு இருக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் இவை எழுதப்பட்டுள்ளன. "அரசியல் பற்றிய செய்திகளை மக்கள் ஆர்வத்துடன் அறிந்து கொள்ள வேண்டும். திறமான அரசியல் அமைப்பில் மக்கள் மகிழ்வர், அரசியல் சட்ட அறிவும், அவர்களது கடமை பற்றிய பொறுப்பும் அரசியலில் நற்பயனை விளைவிக்கும்" என்று கேரளவர்மா கருதினார். ஆளுகின்ற ஆட்சியும், அதிகாரிகளுமே அரசு என்பதாகக் குறிப்பிட்டு விட்டு, அதனுடைய வளர்ச்சியினை வரன்முறையாக ஆய்வு செய்கிறார். பல்வேறு வகையான அரசுகள் நடைமுறையில் இருந்தாலும், கேரள வர்மாவின் கருத்துப்படி, "அனைவருக்கும் செல்வத்தையும் வளத்தையும் கொடுக்கத்தக்க அரசியல் முறையினை இதுவரை யாரும் சிந்தித்துப் பார்க்கவில்லை." மேலும், "எல்லாக் காலங்களிலும் மக்களின் விருப்பத்துக்கு இணைந்தே அரசு இயங்கவேண்டும். இல்லையெனில், அவர்கள் அரசுக்குப் பணியமாட்டார்கள்" என்று கூறுகிறார்.

ஒருசமயம் கேரள வர்மா தமது நண்பர் ஒருவருக்குக் கீழ்வருமாறு கடிதம் எழுதினார்.

> "ஆங்கிலேயர்கள் அட்டை போன்றவர்கள். இன்னும் கொஞ்சம் இந்திய இரத்தத்தை உறிஞ்சிய பின்னர் தான், இங்கிருந்து வெளியேறுவர்".

பொருளியல் பாடத்தில், விலைவாசிகள், கூலி, பொதுசுகாதாரம் ஆகியவற்றோடு பொது நலம் பேணுதல், குழந்தை வளர்ப்பு என்பன குறித்தும் கேரள வர்மா கட்டுரைகள் எழுதியுள்ளார். அஞ்சல் மற்றும் தந்தி பற்றிய அறிவியல் கட்டுரைகளையும் தீட்டியுள்ளார். மலையாள இலக்கியத்திலேயே இற்றைநாளைய புதுத்துறைகள் பற்றிய கட்டுரைகளுள் அநேகமாக இவையே முதன்முதலாக எழுதப்பட்டவை எனலாம்.

வாழ்க்கை வரலாறு:

வாழ்க்கை வரலாறு எனும் இலக்கிய வகைமையினை முதன்முதலில் புதுவதாக மலையாளத்தில் அறிமுகப்படுத்தியவர் கேரள வர்மாவே. 1895–ஆம் ஆண்டில் மகாசரித்திர சங்கிரகம் எனும் தலைப்பில் சிறந்த அறிஞர்களைப்பற்றிய ஒரு வாழ்க்கை வரலாற்று நூலை அவர் வெளியிட்டார். இந்நூல் சாமுவேல் மாண்டர் எழுதி வெளியிட்ட *உலகப்பெரியார்களின் வாழ்க்கை வரலாற்று அகராதி* எனும் நூலை அடியொற்றி எழுதப்பட்டது. சாமுவேல் மாண்டர் எழுதிய நூலில் கி.மு. 9–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 19–ஆம் நூற்றாண்டு வரையில் ஏறத்தாழ இரண்டாயிரத்து எண்ணூறு ஆண்டு காலத்தில் வாழ்ந்த 107–க்கும் மேற்பட்ட சிறந்த பெரியோரது வாழ்க்கை வரலாறுகள் அடங்கியுள்ளன.

மகாசரித்திர சங்கிரம் என்னும் தலைப்பினைக் கொண்ட கேரள வர்மாவின் நூலில் தொகுக்கப்பட்டுள்ள வரலாற்றுப்புகழ்வாய்ந்த பெரியோரை அரசியல் ஞானியர், அறிவாளிகள், கலைஞர்கள், மதவாதிகள், மற்றையோர் என்னும் பிரிவுகளில் அடக்கலாம். அவர்கள் வாழ்ந்த கால வரிசைப்படி இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. ஆனால் மாண்டர் எழுதிய நூலில் காணப்படும் பெரியோர் அகரவரிசைப்படி தொகுக்கப்பட்டுள்ளனர். இப்பெரியோரின் வாழ்க்கை வரலாறுகள் முதல் நூலைப் பின்பற்றி அமைந்திருந்தாலும், யூக்ளிட், அக்பர் போன்றோரது வாழ்க்கைச் சரிதங்களில் புதிய செய்திகள் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே கேரளவர்மா முதன் நூலை எந்திரகதியில் மொழி பெயர்க்கவில்லை என்பதும், நூலினை நன்கு பயன்படுத்தற்கேற்றவாறு புதிய செய்திகளை நூலில் சேர்த்துள்ளார் என்பதும் தெளிவாகிறது. தான் எழுதியவற்றிலும் பிறர் எழுதித்தான் பதிப்பித்தவற்றிலும், செய்திகளைப் புதியனவாகச் செய்வதில் கேரள வர்மா பெருமுயற்சி எடுத்துக்கொண்டார்.

ஈண்டு, கேரள வர்மாவின் வேட்டை அனுபவங்கள் பற்றி அவரது வாழ்க்கைக் குறிப்புகளில் கூறப்பட்டிருப்பதை நினைவுகூர்தல் பொருத்தமாக இருக்கும். எனது வேட்டை அனுபவங்கள் என்னும் தலைப்பில் அவர் எழுதிய நீண்ட கட்டுரையினைப் பற்றி முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். அது சுய சரிதத் தொடர்பான முதல் கட்டுரை என்பதோடன்றி மலையாளத்தில் வேட்டையாடுதல் பற்றிக் குறிப்பிடும் முதல் கட்டுரையாகவும் கொண்டு பாராட்டத்தகுவது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய கட்டுரைகள் பாடநூற்குழுவிற்காக எழுதப்பட்ட நிலையில், இக்கட்டுரை மட்டுமே அவரது அறுபதாம் வயதில் அவரது மகிழ்ச்சியினைத் தெரிவிக்கும் பொருட்டு எழுதப்பட்டதாகும். கட்டுரையின் தொடக்கத்தில், அதனை எழுதுதற்குரிய காரணம் பற்றிக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்:

"தமக்கு உற்சாகமுள்ள எதனைப்பற்றியும் எழுதுவதிலும் பேசுவதிலும் முதியோர்கள் மகிழ்வர் என்று நான் நம்புகிறேன். ஆயினும் இப்பணியினை மிகவும் தளர்ந்த வயதில் அவர்களால் செய்ய இயலாது. இளமைக்காலத்தில் வேட்டையாடுவதில் எனக்கிருந்த உற்சாகத்தினால் யான் மிகவும் தீவிரமாக அதில் ஈடுபட்டேன். தற்போது பற்பல காரணங்களை முன்னிட்டு, அதில் ஈடுபட இயலவில்லை. இருப்பினும் முன்னாளைய அனுபவத்தை இப்போது நினைவு கூறும்போது பல்வகையாலும் எனக்கு அது மகிழ்ச்சியாக இருக்கிறது".

கேரள வர்மாவின் கற்பனைத்திறன் மட்டுமின்றி கல்வி அறிவின் ஆழமும் அக்கட்டுரைக்குரிய இலக்கியச் சிறப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது. சிறந்த வடமொழி இலக்கியங்களிலிருந்து பொருத்தமான மேற்கோள்களைப் பயன்படுத்தி இக்கட்டுரையினை அழகுபடுத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து வேறெந்தக் கட்டுரையினையும் கேரள வர்மா எழுதவில்லை என்பது ஏமாற்றத்திற்குரியது. அவருடைய அனுபவம், திறமை ஆகியவற்றின் அடிப்படையில், இத்துறையில் தொடர்ந்து பற்பல கட்டுரைகளை எழுதியிருப்பாரே ஆயின், அவையனைத்தும் மிகச்சிறந்த நூலாக இருந்திருக்கும்.

இலக்கியத்திறனாய்வு:

மலையாள இலக்கியத்தில் இலக்கியத்திறனாய்வின் தோற்றம் பற்றி ஆய்ந்து பார்த்தால், இந்தத் துறையிலும் கேரள வர்மா முன்னோடியாக இருந்தார் என்பது புலப்படும். அவரது தலைமையின் கீழ் மலையாள இலக்கியம் புதுவதாக வளரும்போது, அதற்குரிய ஊக்கத்தைக் கொடுத்து, ஏனைய நூலாசிரியர்களை வழிநடத்தும் பொறுப்பும் கேரள வர்மாவுக்கே உரியதாயிற்று. இலக்கியத்தில் ஒரு சிறந்த வல்லுநர் என்று அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட இவரது ஆதரவினையும், ஒத்துழைப்பினையும் விரும்பி இவரது அறிவுரையினையும் பற்பலர் பெற்று மகிழ்ந்தனர். இத்தகைய பலருக்கும் கேரள வர்மா கொடுத்த சான்றிதழ்களையும் பலரது நூல்களுக்குக் கொடுத்த முன்னுரைகளையும், அணிந்துரைகளையும், மலையாள இலக்கியத் திறனாய்வின் முதற்கட்டமாகக் கொள்ளலாம்.

நூலாசிரியர்களின் திறனையும் அவர்தம் நூலையும் மதிப்பிடுவதில் கேரள வர்மா பரந்த மனப்பாங்குடன் நடந்து கொண்டார். அவர்களது இலக்கியத்திறனை வெளிக்கொணர வேண்டும் என்பதோடு, அவர்களையும் ஊக்குவித்தல் வேண்டும் என்னும் நோக்கத்தோடு தான், சான்றிதழ்களையும் முன்னுரைகளையும் வழங்கினார். இலக்கியத்தை மட்டுமன்றி இலக்கிய ஆசிரியர்களையும் உருவாக்குவதே தம் பணி என்னும் உண்மையினை உணர்ந்தே செயல்பட்டார் எனலாம்.

அவரது கருத்துரைக்கும் திருத்தத்துக்கும் வந்த பற்பல நூல்கள் அவரது திறனாய்வுக்கு உட்படுத்த முடியாத மிகச் சாதாரணமானவை. எனவேதான் அவரது பற்பல பாராட்டுரைகள் திறனாய்வு ஏதுமின்றி வெறும் புகழுரைகளாக உள்ளன. நூலின் தரத்தை விருப்பு வெறுப்பின்றி ஆய்ந்து பார்ப்பதுவே இலக்கியத் திறனாய்வு எனும் உண்மையினைத் கேரள வர்மா அறிந்தவராயினும், நூலாசிரியர்களை உற்சாகப் படுத்த வேண்டும் என்னும் கருத்திலேயே அவற்றை எழுதினார்.

தேவைப்பட்டபோது திறனாய்வுப் பணியில் குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டவும் அவர் தயங்கியதில்லை. பாஷாபோஷினி இதழின் தொடக்ககால வெளியீடுகளைப் பார்த்தால் இவ்வுண்மை விளங்கும். கேரள பாணிணீயம் எனும் நூலுக்கு அவர் அளித்த முன்னுரையில் காணப்படும் திறனாய்வுக்குறிப்புகளும் இதற்குச் சான்றாகும். முன்னுரையின் தொடக்கத்தில் நூலாசிரியரைக் கேரள வர்மா பெரிதும் பாராட்டுகிறார். பின்னர் பாணினி தந்த இலக்கண நூலின் குறைநிறைகளை மதிப்பீடு செய்யத் தொடங்கி விடுகிறார். பாணினியின் இலக்கணமே பிற ஆசிரியர்கள் நூலெழுதற்குரிய முன்னுதாரண இலக்கியமாகக் கருதப்படுவதாகும்.

இற்றைக்கால மொழிஇயல் அறிவும் பாணினியின் இலக்கணத்தைத் திறம்படக் கற்ற புலமையும் உள்ள அறிஞரே அத்தகைய திறனாய்வுக் கருத்தினைத் தரமுடியும். அதனுள் கூறப்பட்ட குறைகளுக்குக் கேரளபாணினியமும் கட்டுப்பட்டதுதான். ஏனெனில் பாணினியின் வடநூலைப் பின்பற்றித் தான் இது எழுதப்பட்டது, கேரளபாணினீயத்தின் அணுகுமுறை, மொழி இயல் ரீதியில் பொருந்து மாறில்லை என்னும் கருத்தில் கேரள வர்மா கீழ்காணுமாறு குறிப்பிடுகிறார்:

> "மொழி என்பது இலக்கணப்புலவர்களது நியதிகளுக்கு உட்பட்டு நூல்களிலும், அகராதிகளிலும் அடங்கியுள்ள ஒரு செயற்கையான பொருள் அல்ல. குறிப்பிட்ட மக்களின் உள்ளப்பாங்கினையும் உணர்வினையும் வெளிப்படுத்துகின்ற உயிர்த்தன்மையது. மாறுபடுவதும், புதுப்பிக்கப்படுவதுமாகிய அதன் சரியான தரத்தினை சமுதாயத்தின் பழக்கங்களும் வழக்காற்று மரபுகளுமே உறுதிப்படுத்துகின்றன. ஒரு மொழியினைப் பேசுவோருள் மிகப்பெரும்பான்மையோர் ஒத்துக்கொண்டது தான் இலக்கண ரீதியாகச் சரியானதே தவிர, இலக்கணப்புலவரால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்கள் அல்ல. குறிப்பிட்ட சிலரது நூல்களிலிருந்து சிற்சில கடுமையான நியதிகளை எடுத்துக்கொண்டு, அவற்றுக்கு இணைந்து போகாத ஒவ்வொன்றையும் பிழையெனக் கருதுவது அடிப்படையாகவே இளைஞர்களிடை மொழி பற்றிய ஒரு தவறான கருத்தை உண்டு பண்ணிவிடும். ஒரு மொழியினைக் கையாளும்போது

அடிப்படையிலேயே சரியானதோ தவறானதோ என ஒன்றுமில்லை என்பதை நாம் தொடக்கத்திலேயே புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட சட்டதிட்டங்களும் இல்லை என்பது லத்தீன் உரைநடை பயிற்றுவாருக்கு நன்கு தெரியும். இற்றைக் காலத்தில் சரியானதாகக் கருதப்படும் ஒன்று பின்னர் தவறானதாகக் கருதப்படலாம். முன்னர் புறக்கணித்த ஒன்றனை அம்மொழி இப்போது ஏற்றுக்கொள்ளலாம்"

தொடர்ந்து அவர் கூறும் கருத்து கீழ்வருமாறு :

"எனவே இன்றைய நிலையில் ஒப்பீட்டு மொழி இயலின் வழிமுறைகள், பயன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தான் இலக்கணம் எழுதப்படவேண்டும்".

மொழி பற்றிய இத்திறனாய்வுக் கருத்தினை ஏ.ஆர். ராஜராஜ வர்மா ஒத்துக் கொண்டு தென்னிந்திய மொழிக் குடும்பங்களைப் பற்றி எழுதிய ராபர்ட் கால்டுவெல் போன்ற மொழி இயலாரின் அடிச்சுவட்டிலேயே தனது நூலைத் திருத்தி எழுதினார். கேரள வர்மாவின் இலக்கியத் திறனாய்வு சீர்மையோடும் ஆக்க பூர்வமாகவும் செறிவான தரத்தின் அடிப்படையிலும் அமைந்திருந்தது. வாசகர்களின் மகிழ்ச்சியை மட்டும் நிறைவேற்றுகின்ற பாடல்கள் கேரள வர்மாவுக்கு மனநிறைவினை அளித்ததில்லை என்று தெரிகிறது. அப்படியின்றி கவிதைகளும், பாடல்களும் சமூக வாழ்க்கையினை முன்னேற்றுகின்ற பணியினைச் செய்ய வேண்டும் என்றே அவர் கருதினார்.

இலக்கிய நூல்கள் பற்றிய தமது கருத்தினைக் கேரள வர்மா அங்கதமாகவும் வெளிப்படுத்துவது உண்டு. தமது ஆதரவினை நாடி வந்த பலருள், ஒருவருக்குத் தனது கருத்தினைக் கீழ்க்காணுமாறு எழுதிக் கொடுத்தார்.

"மலையாளக் கவிதைகளில் பொதுவாக காணப்படுவதைத் தவிர குறிப்பிடத்தக்க குறையேதும் இப்பாடலில் இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை"

கேரள வர்மாவின் இலக்கிய அறிவு மிகவும் பரந்துபட்டது. இலக்கியத்தின் எந்தத் துறையினையும் சார்ந்த மிகச்சிறந்த நூலினையும் துல்லியமாக ஆய்வு செய்யக்கூடிய மதி நுண்மை பெற்றிருந்தார். காளிதாசரின் *சாகுந்தலம்,* உள்ளூர் பரமேஸ்வர அய்யரின் காப்பியமான *உமாகேரளம்,* ராமன்பிள்ளையின் புதினமாகிய *தர்மராஜா* ஆகிய தரமாக நூல்களைத் திறனாய்வு ரீதியில் மதிப்பீடு செய்திருந்தார். இந்த மதிப்பீடுகளைப் பயிலும்போது மலையாள இலக்கியத்திறனாய்வுக்கு ஏற்ற எத்தகைய ஆர்வமும் அறிவும் சான்ற முன் மாதிரிகளைக் கேரளவர்மா எடுத்தியம்பியுள்ளார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

சாகுந்தலத்தைப் பற்றிய இரண்டு ஆய்வுக் கருத்துகள் கேரள வர்மாவின் திறமைக்குச் சான்றாக விளங்குகின்றன. அந்நாடகப் பெயர்ப்பின் நீண்ட முன்னுரை ஒன்றும், கேரளவர்மாவின் வடமொழிப்படைப்புகள் பற்றிய கட்டுரையில் குறிப்பிடப்பட்ட *சகுந்தல பாரம்யா* என்பது மற்றொன்றுமாகும். தனது மொழிபெயர்ப்பினை வெளியிடுவது பற்றி வித்யாவிலாசினி இதழில் அறிவித்தபோது திருவாதிரை நாட்டியத்தினைத் தொடர்ந்து பாடப்பெறும் எழுத்தச்சனது மகாபாரதப் பாடல்களினால் சகுந்தலையின் கதை மலையாள இலக்கியத்தில் எத்துணைச் செல்வாக்கு அடைந்துள்ளது என்று குறிப்பிடுகிறார். புத்தக உருவில் வெளியாகிய அம்மொழி பெயர்ப்பு நூலின் முன்னுரையில், காளிதாசரைப் பற்றிய பெருமையினையும் அவரது நாடகச் சிறப்பினையும் மிகச்சிறந்த திறனாய்வாளரையொத்துத் திறம்படப் பேசுகிறார்.

சாகுந்தலத்தைக் கேரள வர்மா மிகச்சிறப்பாகப் பாராட்டுவதில் அந்நாளைய அறிஞர் ஒருவருக்கு உடன்பாடில்லை. எனவே அவர் விஞ்ஞான சிந்தாமணி எனும் இதழில் வடமொழி நாடகங்களுள் முராரியின் அனார்க்கராகவா எனும் நாடகமே மிகச்சிறந்தது என்றோர் கட்டுரை எழுதினார். அதற்குப் பதிலளிப்பது போன்று அனைத்துவிதமான நாடக இலக்கண நியதிப்படியும் சாகுந்தல நாடகமே மிகச்சிறந்தது எனும் கருத்தை நிலைநாட்டுதற்கு *சாகுந்தல பாரம்யா* எனும் தலைப்பில் பன்னிரண்டு அனுஷ்டபப் பாடல்களை இயற்றினார். அதுபற்றிய அவரது விவாதம் கீழ்வருமாறு :

> "சாதாரண மனிதனும் கூட அறம் பொருள் இன்பம் பற்றிய தெளிவு பெறுதற்கென்று அறிவுடைப் பெருமக்கள் நாடகத்தினைப்படைத்துள்ளனர். எனவே அதனுள் ரசானுபவம் ஒரு இன்றியமையாத உட்பொருளாகும். அது இல்லையெனில் ரசிகப் பெருமக்களின் உற்சாகம் குன்றிவிடும்."

நாடகத்தில் ரசனை என்பது நாடகாசிரியனோ கவிஞனோ அதனை ஆக்குவதைப் பொறுத்தது. அதனை ஆக்குதற்குத் தகுதியான சொல்லும் பொருளும் அவனால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். தொனிப்பொருளாக வரும் ரசம் சிற்சில இடங்களில் வெற்றுரைகளாலும், ஆடம்பரச் சொற்களாலும் வலுவிழந்து போகும். எனவே கவிஞன் அவற்றைத்தவிர்த்து அன்றாட வாழ்வில் நடப்பு நிலையினைத் தேர்ந்து அதனை அளவோடு கையாண்டு ரசத்தொனியை சிறப்புறக் கொண்டு வரவேண்டும். அத்தகைய சிறப்பினைக் கொணரும் கவிஞனது படைப்பே உயர்ந்ததாகக் கருதப்படும்.

சிற்சில நாடகங்களில் ரசம் அழகுற அமையும். சிலவற்றில் இனிமையாக இருக்கும். ஆனால் ரசானுபவத்தை உண்டு பண்ணாத நாடகமோ உயர்வுகுன்றிப் பொலிவிழந்து போகும். சீர்மையும் சிறப்பும் பொருந்திய கவிஞரே ரசானுபவத்தை இலக்கியத்தில் கொணரமுடியும். *வேணிசம்ஹாரம்,*

மகாவீரசரித்ரம் போன்ற நாடகங்கள் வீரச்சுவையினையும் *மாலதிமாதவம்* போன்ற நாடகங்கள் சிருங்காரச் சுவையினையும் வெளிப்படுத்துவன. வேறு சுவை பொருந்திய எந்த நாடகமும் சிறப்புற அமையாது. இத்தகைய கருத்துகளைக் கூறிய பிறகு கேரள வர்மா கடைசியாக உள்ள மூன்று பாடல்களில் சாகுந்தலத்தின் உயர்வினையும் சுட்டிக்காட்டுகிறார். ரச உணர்வோடு கூடிய உரையாடல்களின் வழியே சகுந்தலையின் அழகு வெளிப்படுகிறது; அவற்றின் வழி வெளிப்படும் அறிவுரையும் அளவோடு கூடியது; சிந்தனையின் வெளிப்பாடும் இயல்பானது; யாப்பின் இயல்பும் சீரியது; சுவை மிகுந்தது. எனவேதான் வடமொழி நாடகங்களுக்குள்ளே சாகுந்தலத்திற்குப் பெருமையினை அளிக்கிறேன் என்று கூறுகிறார்.

தனது கருத்தைப் பிறர் ஏற்றுக் கொள்ளுமாறு விவாதிக்கின்ற திறமை, கேரள வர்மா வடமொழி இலக்கியத்திறனாய்வோடு மேலை இலக்கியத்திறனாய்வையும் ஆழ்ந்து கற்றிருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. மலையாளத்தில் பரமேஸ்வர அய்யர் எழுதிய மிகச்சிறந்த மாகாவியமாக *உமாகேரளம்* எனும் நூலுக்கு கேரளவர்மா எழுதிய முன்னுரை திறனாய்வு மிகுந்ததாகும். 19 காண்டங்களில் 2022 பாடல்களை உள்ளடக்கிய இக்காவியம் முன்னாளைய திருவாங்கூர் அரச வரலாற்றினைப் பின்னணியாகக் கொண்டது. அந்நூலின் முன்னுரையிலிருந்து ஒரு பகுதி கீழ்வருமாறு:

''பரமேஸ்வர அய்யர் தமது காவியத்தில் உமையம்மை ராணியின் காலத்தினையும் வாழ்க்கையினையும் எழில் சுவையாகிய நாடிநரம்புகளால், சதைப் பருமனால் செப்பம் செய்துள்ளார். பரமேஸ்வரின் கைவண்ணம் வெளிப்படுகின்ற ஓவியம் போன்ற புனைவும், கருத்துமாட்சியும், சிறந்த கட்டமைப்பும் கொண்ட இம்மாகாவியத்தை, வடமொழி இலக்கியத்தின் தலைசிறந்த படைப்பாகக் கருதப்படும் நைஷதீய சரிதம் எனும் நூலோடு ஒப்பிடுவது எல்லாவகையாலும் பொருத்தமே. ஸ்ரீஹர்ஷா எழுதிய இந்-நூலோடு இவ்வாறு இணைத்துப்பேசுவதில் எந்தவிதக் குறைவும் ஏற்படாது. இந்த ஒப்புமையும் இந்நூல்களை மேலோட்டமாகப் பயில்வாருக்கு இன்றி இவற்றை ஆழ்ந்து படிப்போரின் கவனத்துக்கே உரியதாகும். மலையாளத்தில் இதுவரை வெளிவந்துள்ள மாகாவியங்களுள் இதுவே தலைசிறந்தது என்பது 'எனது கருத்தாகும்.' கிருஷ்ணகதாவின் காலந்தொட்டு இனிமையும் படிமக்காட்சிகளும் நிறைந்த காவியம் இதுவரை வெளிவரவில்லை என்றே கூறலாம்''. புகழ்பெற்ற வரலாற்று நாவலாசிரியரான சி.வி இராமன் பிள்ளை எழுதிய தர்மராஜா எனும் — நூலினைக் கேரள வர்மா ஆய்ந்துள்ள திறம் அவரது இலக்கியத் திறனாய்வினை வெளிப்படுத்தும் பிறிதோர் சான்றாகும். அந்நூலின் ஒரு பிரதியினைப் பெற்றுக்கொண்டு, அந்த நூலாசிரியருக்குக் கேரள வர்மா பின்வருமாறு கடிதம் எழுதினார்.

"தங்களது புதிய நூலாகிய தர்மராஜாவின் ஒரு பிரதியினை அன்புடன் அனுப்பி வைத்தமைக்கு எனது உளமார்ந்த நன்றி. எந்த மொழியிலும் உள்ள மிகச்சிறந்த நாவல்களோடு இந்நூல் ஒருங்கு வைக்கத்தகும் சிறப்புடையது என்று கருதுகிறேன். கதையின் கரு தங்களது மிகச்சிறந்த சிந்தனையால் உருவாக்கப்பட்டுள்ளது. உயர்வும் செம்மையும் பொருந்திய மொழிநடையும், துல்லியமாக உருவாக்கப்பட்ட பாத்திரப்படைப்பும், கதை நிகழ்ச்சிகளும் நூலின் சிறப்பியல்புகளாகும். புதிய இலக்கியப்பார்வைக்கு இடம் அளித்த தங்களது எழுத்து வன்மைக்கு மலையாள இலக்கிய உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. முதியோரும், இளைஞரும் ஏற்றுக் கொள்ளத்தகும் உயரிய கொள்கை, நூலெங்கணும் காணப்படுகிறது. மேன்மை தங்கிய மகாராஜவிற்குத் தங்களது இந்த உயரிய நூலைப் படைத்தது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. தனது முன்னோரைப்போன்றே மேதகு பண்பும், சீரிய மாண்பும், பொருந்திய மகாராஜாவின் நற்பெயரை காலங்காலமாகத் தங்களது நூல் பெருமைப்படுத்தும் என்பது உறுதி".

மேலே கூறப்பட்டதை நோக்கும்போது கேரள வர்மாவின் நுழை புலத்திறனாய்வு நன்கு தெளிவாகிறது. போதிய வாய்ப்பும் காலமும் இருந்திருந்தால் இத்துறையில் மேலும் கேரள வர்மா திறனாய்வு நூல்களைக் கூட எழுதியிருக்க முடியும். எனினும் அடிப்படையான திறனாய்வுக் கருத்துகளைக் கொண்டு மலையாள இலக்கியத்தை நன்கு அணி செய்தவர் கேரள வர்மா என்பதில் ஐயமில்லை.

மலையாள உரைநடையினை தரமுள்ளதாக்கிப் பெருமைப் படுத்தியவர் கேரளவர்மா என்பது எம். ராஜராஜவர்மா எனும் அறிஞரது கருத்தாகும். கேரள வர்மாவுக்குச் சற்றே, வயதில் இளையவரும் சமகாலத்தவருமான ராஜராஜவர்மா அது பற்றிக் கூறும் கருத்து கீழ்வருமாறு:

"பழங்கால உரைநடையில் உள்ள வாக்கியங்கள் அனைத்தும் பேச்சு வழக்கில் உள்ளதுபோன்றே இருக்கும்; அல்லது ஏதோ ஒரு வகையில் தொடங்கி வேறுவகையில் முடிகின்ற நீண்ட வாக்கியங்களாக அமைந்திருக்கும். வடமொழி உரைநடையினைப் பின்பற்றிச் செயற்கையான அழகுடன் கூடிய வாக்கியங்களும் இருந்தன. வழக்கற்றுப்போன இந்த உரைநடைப்பாணியினை முற்றுமாக ஒதுக்கிவிட்டுக் கேரள வர்மா தனக்கேயுரிய உரைநடையினைத் தோற்றுவித்தார். தொய்வு இல்லாமல் செய்திகளை விளக்குவதும். சீரான கட்டமைப்புத் திறனைக் கொண்டதுவும் தெளிவு கருதிய குறிகளைக் கொண்டதும் ஆகிய சிறந்த உரைநடையினைத் தோற்றுவித்த பெருமை கேரள வர்மாவைச்சாரும்.

கேரளவர்மாவை மலையாள உரைநடையின் தந்தையெனக் குறிப்பிடும் சுதேசாபிமானி கே. ராமகிருஷ்ண பிள்ளையின் கருத்துரை கீழ்வருமாறு:

> "உங்களுடைய முயற்சியினால் தான் மலையாளத்தில் உரைநடை தோன்றியது. உங்களுடைய காலத்திற்கு முன்னர் மலையாள மொழியில் உரைநடை நூல்கள் இருந்தன, என்று கூற இயலவில்லை. மலையாள உரைநடையின் தலைமகன் என்னும் பட்டம் உங்களுக்குப் பொருத்தமானதே ஆகும். மலையாளம் பேசும் இப்பகுதியினைச் சார்ந்த மக்கள் அளவு கடந்த நன்றியுணர்வோடும், பெருமையோடும் தங்களை மதித்துப் போற்றுதற்கு இதுவே போதுமானதாகும்".

9.

மலையாள இலக்கிய மறுமலர்ச்சிச் சின்னம்

இந்தியா பல்வேறு மொழிகளைப்பேசும் நாடாகும். வட்டாரமொழியோ தேசீய மொழியோ எதுவாயினும், ஒவ்வொன்றுக்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. எனவே மொழி இலக்கியத்துறையில் பணிபுரிய விழைவோருக்குத் தேவையான மொழிஇயல் அடிப்படையோடு தாம் செய்ய விரும்பும் பணியில் உறுதியும் நம்பிக்கையும் இருக்க வேண்டும். கேரள வர்மாவுக்கு இவையிரண்டும் இருந்தன என்பதற்கு பாஷாபோஷினி சபையின் 9–வது ஆண்டு விழாவில் அவர் ஆற்றிய தலைமை உரையே சான்றாகும். பல்வேறு கருத்துகளுக்கிடையில் அவர் கூறியது கீழ்வருமாறு:

"இந்திய நாடு முழுமைக்கும் ஒரு தாய்மொழியே இருக்க வேண்டும் என்னும் கருத்து இற்றை நாட்களில் பரவலாக உள்ளது. காலப்போக்கில் இது நடைமுறைக்கு வரும்போது தேவைப்படாத வட்டார மொழிகள் மறைந்து போகும். எனவே அவற்றின் வளர்ச்சி பற்றிக் கவலைப்படவேண்டிய தேவையில்லை என்கிற ஒரு கருத்தும் அண்மைக்காலமாக இருந்து வருகிறது. இந்தக்கருத்து பொருளற்றது என்பது கூறாமலே புலப்படும். கல்கத்தாவிலிருந்து வெளிவரும் ஒரு மாதப்பத்திரிக்கையின் ஆசிரியராகிய ராமானந்த சாட்டர்ஜி தனது கட்டுரையொன்றில், இந்தி அல்லது வங்காளம் நம் நாட்டில் பிறபகுதிகளில் ஒருக்கால் புழக்கத்துக்கு வந்தாலும், அவை துணைமொழியாக இருக்கலாமேயொழிய தலைமை மொழியாக இருக்க இயலாது என்று தெளிவுபடுத்தியுள்ளார். வரலாற்றையும், நடப்பு நிகழ்ச்சிகளையும் காணும்போது தென்னிந்திய திராவிட மொழிகள் மறைந்து போய் ஆரிய மொழிகளே எங்கணும் புழக்கத்துக்கு வந்து விடும் என்று நம்புதற்கு இடமில்லை. மேலும் நாடு முழுமைக்கும் இந்திய நாட்டின் எந்த வட்டார மொழியினையும் தாய்மொழியாக ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. தற்போதைய கருத்துப்பரிமாற்றங்களுக்கு என இந்திய

மக்களுக்கு வடமொழி. ஆங்கிலம், இந்துஸ்தான் ஆகிய மூன்று மொழிகளும் உள்ளன. நிலைமை இவ்வாறிருப்பதனால், காலப்போக்கில் மலையாள மொழியினை வேறு மொழி அமுத்தி விடும் என்று கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில் மலையாள மொழியின் கால அளவு கேரளநாட்டின் கால அளவினைப்போன்றதுதானே! இதுகாறும் கூறப்பட்டதிலிருந்து மலையாள மொழியினை வளமுறைச் செய்வதே நமது தலையாய பொறுப்பாகும் என்பது தெளிவு".

இந்திய மொழிகளுள் மலையாளத்தின் முக்கியத்துவம் மற்றும் வளர்ச்சியினைப் பற்றிய முழு நம்பிக்கை கொண்ட ஒருவரின் உறுதியான கொள்கையாகவே இதனைக் கருதலாம். மலையாள இலக்கியத்தின் வளர்ச்சி பற்றி மட்டுமே அவர் அக்கறை கொள்ளவில்லை. அதற்குத் தலைமையேற்று நடத்துவதிலும் அவருக்கு ஒரு முழு நம்பிக்கை இருந்தது. திறமையான அறிஞரிடம் கற்றதோடு, தானும் இடையறாத உழைப்பின் மூலம் பெற்ற அறிவும் ஆற்றலுமே கேரளவர்மாவின் இத்தகைய நம்பிக்கைக்கு ஆதாரமாக இருந்தது. ஆயினும் தனது சொந்த ஊக்கத்தாலும், முயற்சியாலும் பெற்ற ஆழமான அவரது ஆங்கில அறிவே இலக்கிய உலகில் அவர் பெருந்தொண்டு செய்தற்கு வாய்ப்பாக அமைந்தது.

மலையாள இலக்கியத்தை வளமுறச் செய்வதில் கேரளவர்மா மிகுந்த ஊக்கம் கொண்டிருந்தார். அதற்கேற்ற ஆழ்ந்த அளப்பரிய திறமையினையும் அவர் பெற்றிருந்தார். ஆயினும் அதனைச் செயற்படுத்தற்கு ஏற்ற தகுதியான வாய்ப்புக் கிட்டாமல் இருந்தது. திருவாங்கூர் அரசினர் அமைத்த பாடப் புத்தகக் குழுவில் முதலில் ஒரு மதிப்பு உறுப்பினராகவும் பின்னர் அதன் தலைவராகவும் நியமிக்கப்பட்டபோது அந்த வாய்ப்பும் விரைவில் கிட்டியது.

1897–ஆம் ஆண்டு பாடப்புத்தகக் குழுவினைத் திருத்தி அமைத்தற்கேற்ப திட்டத்தினைக் கேரள வர்மா கொடுத்தபோது அப்போதைய திவான் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அதுமட்டுமன்றி, குழுவின் பணிகளுக்கு இடையூறாகவும் செயற்பட்டார். எனவே அவர்களுக்கிடையில் வேறுபாடும் வாக்குவாதமும் எழுந்தன. கோட்டயத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் அன்றைய கல்வி நிலையினைக் கேரள வர்மா விமர்சித்துப் பேசினார். தனது பதவிக்காலம் நிறைவுபெறும் தறுவாயில் இருந்த திவான், அந்த விமர்சனத்துக்கு விளக்கம் கேட்டார். புத்தகக் குழுவின் தலைமைப்பதவி பெருமையும் அதிகாரமும் கொண்டது என்று சிலர் எண்ணக்கூடும். ஆயினும் காழ்ப்புணர்ச்சியாலும், பொறாமையினாலும் வெளிப்பட்ட பல்வேறு விதமான எதிர்ப்புகளைக் கேரள வர்மா சமாளிக்க வேண்டியிருந்தது.

மலையாள மொழி, இலக்கியம் ஆகியவற்றின் உயர்வுக்காகப் பணியாற்றும் வாய்ப்பு கேரள வர்மா சென்னைப் பல்கலைக்கழகப் பேரவைக்குழுவின் உறுப்பினராக இருந்தபோது ஏற்பட்டது. அவருடைய தனிப்பட்ட, தீவிரமான முயற்சியினால்தான் பல்கலைக்கழக அளவில் மலையாளப்படிப்பும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. மலையாளத்தில் உயர் கல்வி ஆய்வின் வளர்ச்சிக்கென பாஷாபோஷினி சபையும், சென்னைப் பல்கலைக்கழகமும் இணைந்து செயற்படுமாறும் சிந்தித்துப்பார்த்தார். இந்த இணைப்புப் பணி பற்றிய தமது திட்டத்தை 1894–ஆம் ஆண்டு திருவனந்தபுரத்தில் சபையின் 4–ஆவது ஆண்டு விழாவின்போது வெளியிட்டார்.

கேரள இலக்கிய மறுமலர்ச்சியின் உச்சகட்டத்தில் சபையின் தலைவராக இருந்த கேரள வர்மா பொதுவான மக்கள் தலைவராகவும் விளங்கினார். அவரைத் தலைவராகக் கொண்டிருந்த பாஷா சபையானது மலையாள இலக்கிய மறுமலர்ச்சிக்கு ஒரு உந்து சக்தியாக விளங்கியது. இலக்கிய வளர்ச்சிக்கேற்ற ஒரு தகுதியான ஜனநாயக அமைப்பாகவே அச்சபையினைத் திட்டமிட்டு அதன்படியே அதனை வழிநடத்தியும் சென்றார். கேரள வர்மாவின் மொழி ஆர்வமானது மலையாள இலக்கியத்தோடு நின்று விடவில்லை. ஏனைய இந்திய மொழிகளின் வளர்ச்சியினையும் அவர் கூர்ந்து கவனித்து வந்தார். அவை பற்றிய செய்திகளையும் அப்போதைக்கப்போது அறிந்து கொண்டிருந்தார்.

நமது இலக்கிய மறுமலர்ச்சியில், கவிதை, வசனம், போன்றவற்றின் நடையினைச் சீரமைக்க வேண்டியதன் முக்கியத்தினைக் கேரள வர்மா நன்கு உணர்ந்திருந்தார். மலையாளத்தில் போதிய நூல்கள் இல்லையே என்றும் அவர் வருத்தமுற்றார். எனவே 1910 ஆம் ஆண்டு வைக்கம் எனுமிடத்தில் நிகழ்ந்த பாஷா சபைக் கூட்டத்தில் விரிவான ஒரு திட்டத்தை முன்வைத்தார். தமது முன்னுரையில், இலக்கியப் படைப்புகளில் மேற்கோள்ள வேண்டிய நடையின் இயல்பு குறித்து விளக்கமாகப் பேசினார். குஞ்சன் நம்பியார் இதுபற்றிக் கூறிய சிறந்த பகுதியினை இச்சந்தர்ப்பத்தில் கீழ்க்காணுமாறு மேற்கோள் காட்டிப்பேசினார்.

> "படைப்பிரிவினரே நிரம்பிய அவையின் முன்னர் கலைச்சிறப்பினை வெளிப்படுத்த அழகிய மலையாள நடையே தகுதியானது. இலக்கியச் சிறப்புமிக்க உயர்ந்த வடமொழி சார்ந்த நடையினைப் பயன்படுத்தினால் படைப்பிரிவினர் அதனைச் செவி மடுக்க மாட்டார் என்பதோடு எழுந்து வெளியிலும் சென்று விடுவர்" என்பதே அப்பகுதி.

இயல்பான சுவை மிகுந்த மலையாள நடையினையே கேரள வர்மா ஆதரித்தார். மிதமிஞ்சிய வடமொழிக்கலப்பினைப் பொது மக்கள் விரும்ப

மாட்டாராதலின் அக்கலப்பு அவருக்கு உடன்பாடன்று. சீர்மையும், சிறப்பும் தரக்கூடிய அளவில் மட்டுமே வடமொழியினைக் கலந்து எழுத அவர் விரும்பினார். சுருங்கக்கூறின், ஓரளவு வடமொழி கலந்து மொழிக்கு உரம் சேர்க்க விரும்பினாலும், இயல்பான மலையாள மொழிநடையினையே அவர் பெரிதும் விழைந்தார்.

மலையாளத்தில் நிறைய நூல்கள் எழுதுவதற்குக் கேரள வர்மா இரண்டு ஆலோசனைகளை வழங்கினார்; தொன்மையாக நூல்களைக் கண்டுபிடித்து, பதிப்பித்து வெளியிடுவது ஒன்று; புதிய நூல்களைப் படைத்து வெளியிடுவது மற்றொன்று.

"நமது தொன்மையான இலக்கியம் மிகக்குறைந்த அளவே இருப்பதால், அதனைக் கறையானுக்கும், பூச்சிகளுக்கும் இரையாக்கிவிடாமல் தொகுத்துப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். நூல்களும் ஆயுர்வேத டானிக்கும் பழைமை ஆக ஆகத்தான் மதிப்பினைப்பெறும். நூற்றாண்டு ரீதியாக நமது இலக்கிய வரலாற்றைக் காணும்போது ஒவ்வொரு நூற்றாண்டு இலக்கியமும் சிறந்தவைதான். எனவே, எதிர்காலத்தில் நாம் எவ்வளவு நூல்கள் எழுதினாலும், அறிஞரின் கருத்துப்படி அவையெல்லாம் தொன்மையான நூல்களுக்கு இணையாகா. இந்நிலையில் தென்திருவாங்கூரைச் சேர்ந்த பழைய பாடல்களான ராமகதைப்பாட்டு, பரதம் பாட்டு போன்றவை இதுகாறும் வெளியிடப் பெறவில்லை என்பதோடு, அவை சேதமடைந்துவிடும் நிலையில் உள்ளன என்பது வருத்தப்படவேண்டிய செய்தியாகும்".

மலபார், தென்திருவாங்கூர் பகுதிகளைச் சார்ந்த தலைசிறந்த இலக்கிய நூல்களையும், நாட்டுப்பாடல்களையும் அச்சிட்டு வெளியிடவேண்டும் என்னும் கருத்தைக் கேரள வர்மா பிற உறுப்பினர்களிடம் வலியுறுத்திப் பேசினார். அறிவியல் நூல்களும் நிறைய எழுதப்பட வேண்டும் என்றார். மலையாளத்தில் வெளியிடப் பட்ட நாவல்கள், சிறுகதைகளை அவர் விரும்பவில்லை. தரமான ஆங்கில-மலையாள அகராதியும், மலையாள இலக்கிய வரலாறும் வெளிவர வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

அன்றாட வாழ்வில் தாய்மொழியே புழங்கவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, 1910-ஆம் ஆண்டிலேயே மலையாளம் ஆட்சி மொழியாக வேண்டும் என்று அரசினரைக் கேட்டுக்கொண்டார். தலைமை உரையில் இதுபற்றி அவர் கூறிய பகுதி கீழ்வருமாறு:

"சீக்கிய மாநிலமான பாட்டியாலாவில் அனைத்து அலுவலக நடவடிக்கைகளும் வட்டார மொழியிலேயே நடைபெற்று வருவதாக செய்தித்தாளின் வழி அறிகிறோம். அதுபோல கொச்சி திருவாங்கூர் மாநிலங்களில் கீழ்மட்ட அலுவலகங்களிலாவது அலுவலகத் தொடர்புக்கு

மலையாளத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துவதில் தவறில்லை என்று கருதுகிறோம்."

ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்குப்பிறகு கேரள அரசினர் இக்கருத்தினை ஒத்துக்கொண்டனர். ஆயினும் இதனை முழுதுமாக நடைமுறைப்படுத்தவில்லை. இலக்கிய வளர்ச்சியில் மிகச்சிறிய செய்திகளாகப்படுகின்ற புத்தக அச்சு, தரம், சுவைபட நூலெழுதும் முறை ஆகியவற்றிலும் கூடக் கேரள வர்மா கவனம் செலுத்தினார். இதுபற்றிய அவரது கருத்து இற்றை நாளிலும் பொருத்தமாக இருப்பதைக் கீழ்வரும் பகுதியில் காணலாம்.

"கேரளத்து மக்கள் சிறந்த நூல்களைப் பயிலும் விருப்பம் இல்லாதவராக இருப்பின், அவர்கள் மீது நான் வருத்தப்பட மாட்டேன். ஆயினும் மிகுந்த குறையுடையதும், தரம் இல்லாதவையுமான கீழ்த்தரமான நூல்களைப்படிப்பதில் அவர்கள் காட்டுகின்ற ஆர்வமே எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. ஒழுக்கக் குறைப்பாட்டினை வளர்க்கக்கூடிய அத்தகைய நூல்களையும், துப்பறியும் நவீனங்கள் எனும் பெயரால் வன்முறை பற்றிய மூன்றாந்தரமான நூல்களையும் நாடகக் கவிதைகளையும் காமச்சுவை மலிந்த பாடல்களையும் இளைஞர்கள் வாங்குதற்கும் படிப்பதற்கும் ஒரு முடிவே இல்லை. இத்தகைய நூல்களை வெளியிடப்புத்தக விற்பனையாளரும் தயங்குவதாக இல்லை. தரமில்லாத இந்த நூல்கள் தாம், ஒரு ஆண்டு முடிவதற்குள்ளேயே ஐந்தாறு பதிப்புகள் விற்றுவிடுகின்றன. நூலாசிரியரின் பணப்பைகளும் நிரம்பி விடுகின்றன. ஆனால் சந்த்ரோத்ஸவம், ராஜரத்னாவளி, சுஸாதோத்வகா போன்ற நூல்கள் வெளிவந்தால், அவற்றை வாங்குதற்கோ, சுவைத்துப்படிப்பதற்கோ யாரும் முன் வருவதில்லை. இந்நிலையில் சமூகம் எப்படி முன்னேறும்? எனவே தரமில்லாத நூல்களைப் புறக்கணித்து, மிகச்சிறந்தவற்றைத் தேடிப் பிடித்து வரவேற்றுப் படிக்குமாறு மக்களைப் பயிற்றுவிப்பதே இலக்கிய அன்பர்களுடைய தலையாய கடமையாகும்."

இக்கருத்தினை மனதிற் கொண்டே நல்ல நூல்களைப் பரப்புதற்கும் தரமில்லாதவற்றைத் தடுப்பதற்கும் ஏற்ற வகையில் இலக்கிய மன்றங்களையும் நூலகங்களையும் தொடங்குமாறு கேரள வர்மா கேட்டுக் கொண்டார். சுற்றுச் சூழலைக்கெடுத்து விரைந்து பரவுகின்ற தொற்று நோயைத் தடுப்பதோடு தூய காற்றினுக்கு வழிவகுக்கும் நகராட்சியின் தொண்டினைப்போல இலக்கிய மன்றப்பணி இருக்கவேண்டும் என்றார். அறிஞர்களின் ஒப்புதலைப்பெற்ற மிகச்சிறந்த நூல்கள் மட்டுமே இலக்கிய வரிசையில் இடம் பெற வேண்டும் என்பது அவர் கருத்து. கேரள வர்மாவின் முயற்சியினால் துவக்கப்பட்ட இந்த இலக்கிய மறுமலர்ச்சியிலும், மலையாள இலக்கியத்தைப் புதுவதாகப் படைப்பதிலும் போதிய வெற்றி கிட்டுமா என்று

பலர் ஐயுற்றார்கள். எப்படி ஆயினும், மலையாள இலக்கியத்தின் ஒளி மிகுந்த எதிர்காலத்தை எண்ணிப் பார்த்துச் செயலாற்றிய கேரள வர்மாவினை வருவது உணரும் வன்மையாளர் என்று போற்றலாம். பாஷாபோஷினி சபையின் கடைசிக் கூட்டத்தில் அவர் ஆற்றிய தலைமை உரை அதற்குச் சான்றாக இருப்பதைக் கீழ்வரும் பகுதியில் காணலாம்:

> "இத்துறையில் நாம் ஒருவரை ஒருவர் உணர்ந்தும், இணைந்தும் ஒன்றுபட்டுச் செயலாற்றினால், காலப்போக்கில் இந்தியாவின் முக்கியமான மொழிகளில் மலையாளமும் ஒன்று எனும் சிறப்பிடத்தைப்பெறும் என்பதில் ஐயமில்லை. அத்தோடு இந்தி, வங்காளம் ஆகிய மொழிகளை மக்கள் பாராட்டுவது போல, மலையாளத்தையும் பாராட்டுவர்".

இலக்கிய விழிப்புணர்ச்சியில் மாத, வார இதழ்களின் முக்கியத்துவத்தைக் கேரள வர்மா நன்கு உணர்ந்திருந்தார். எனவே அவற்றையும் தம்மால் முடிந்தவரை ஊக்கமூட்டி வளர்ப்பதற்கு ஆவன செய்தார். மலையாள மனோரமா, பாஷாபோஷினி ஆகிய பத்திரிகைகளோடு அவருக்கு இருந்த தொடர்பு முன்னமேயே கூறப்பட்டது. அவரே வெளியிட்ட மயூரசந்தேசம் எனும் கவிதைநூல் பாஷாபோஷினியின் பெருமைக்கும், புகழுக்கும் காரணமாக அமைந்தது. அந்நூலை எழுதும்போதே அதனைப் பாஷாபோஷினி இதழில் தொடர்ந்து வெளியிடும் எண்ணம் இருந்ததாகத் தன்னுடைய தலைமை உரைகளுள் ஒன்றில் கேரளவர்மா குறிப்பிடுகிறார். தரமான பல கட்டுரைகளையும் அவர் அவ்விதழில் வெளியிட்டார். கேரளீய சாகுந்தலம் எனும் நூலைத் தொடர்ந்து வெளியிட்டமையினாலேதான், திருவனந்தையிலிருந்து வெளியாகிய வித்யாவிலாசினி எனும் இதழுக்கே ஒரு பெருமை ஏற்பட்டது. திருச்சூரிலிருந்து வெளியாகிய வித்யாவினோதினி இதழ், மற்றும் அதன் ஆசிரியர் அச்சுதமேனன் ஆகியோரது இலக்கியப்பணியினை கேரள வர்மா பல்வகையானும் பாராட்டியுள்ளார். கேரள வர்மாவின் மனைவி லட்சுமிபாய் என்பாரைப் பெருமைப்படுத்தும் பொருட்டு அவர் பெயராலேயே வெளிவந்த இதழினைக் கேரள வர்மா பெரிதும் ஆதரித்தார்.

மலையாள மொழியின் மறுமலர்ச்சி என்பது 19–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வங்கத்தில் தொடங்கி நாடெங்கணும் நிகழ்ந்த இந்தியமொழிகளின் பரவலான வளர்ச்சியின் ஒரு கூறாகவே கொள்ளலாம். ஐரோப்பியப்பாதிரியார்களால் தொகுக்கப்பட்ட அகராதிகளையும், இலக்கண நூல்களையும் மனதிற்கொண்டு பார்த்தால், மலையாள மறுமலர்ச்சி 1850–முதல் 1950 வரை, ஒரு நூற்றாண்டு காலம் நீடித்ததாகவே கொள்ளலாம். இதனுள்ளும் படைப்பிலக்கியம் செழித்து வளர்ந்த ஒரு காலகட்டத்தை 'மலையாள இலக்கியத்தில் கேரள வர்மாவின் காலம்' என்று பகுத்துப்பேசுகின்றனர்.

மதச்சார்பின்மை: மத்தியகால மலையாள இலக்கியத்தில் சிற்சில மணிப் பிரவாள காதற்கவிதைகளைத் தவிர்த்து மதச்சார்பற்ற இலக்கியம் என்று சொல்லத் தகுவது ஏதுமில்லை. எனவே, இற்றைக்கால இலக்கிய உணர்வோடு மதச்சார்வினை மலையாள இலக்கியத்தினின்றும் நீக்கி அம்மொழியினைச் சுதந்திரமாக வளரவிட வேண்டும் என்பது கேரள வர்மாவின் விருப்பம். ஆங்கிலக் கருத்துகளின் தாக்கத்தினால்தான் மதச்சார்பின்மையைக் கேரள வர்மா சிந்தித்தார் என்பதோடு, மலையாள இலக்கியத்துக்குத் தாம் செய்ய வேண்டிய தொண்டு முற்றுப்பெறுதற்கு மதச்சார்பின்மை இன்றியமையாதது என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டோரின் உளங்கொள்ளுமாறு அமைந்தால் தான், மலையாள இலக்கியம் பல்கிப் பெருகும் என்பதைக் கேரள வர்மா புரிந்து கொண்டிருந்தார். அம்மொழி பேசுவோர் கேரளாவில் சிறுபான்மை எபிரேயரைத் தவிர்த்து இந்து, கிறித்தவ, இசுலாமிய சமயங்களைச் சேர்ந்தோராக இருந்தனர். எனவே மதச் சார்பின்மையில்தான் மலையாள இலக்கியம் வளரும் என்னும் தனது உறுதியான கருத்தை 1910–ஆம் ஆண்டு பாஷாபோஷினி சபை ஆண்டு விழாவின் தலைமையுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

> "வெவ்வேறு மதங்களைப் பின்பற்றும் கேரளமக்களின் உள்ளத்தை சமயச் சார்பற்ற பொதுவான கருத்துகளைக் கொண்ட நூல்களே ஈர்க்க முடியும்".

இந்து புராணிகக் கருத்துகளையே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்த எழுத்தாளர்களை அந்தத் தலைமையுரையிலேயே அவர் எச்சரித்தார். மேலும் மதத்தின் பிடியிலிருந்து, இலக்கியத்தை விடுவிப்பதோடன்றி மானுட வாழ்வினை அவை பிரதிபலிக்கின்ற முறையிலும் அவை படைக்கப்படவேண்டும் என்று எழுத்தாளர்களைக் கேட்டுக்கொண்டார். பயனுள்ள வாழ்க்கை வரலாறுகளை எழுதவேண்டியதன் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினார். இலக்கியத்தின்பால் அவர் பின்பற்றிய அத்தகைய அணுகுமுறை அந்தக்காலத்திற்குத் தேவையானதாக இருந்தது. எனவே தொலைதூர நோக்குடன் அதனை அவர் பெரிதும் ஊக்கமுடன் வற்புறுத்தினார்.

இலக்கியத்தோற்றம் பற்றிய ஆய்வு :

பழஞ்சுவடிகளைத் திரட்டியும், பாதுகாத்தும் வெளியிட்டும் செய்யவேண்டிய அரும்பணிகளில் கேரள வர்மா பெரிதும் ஆர்வம் காட்டினார். ஓலைச்சுவடி நூலகத்தின் தலைவர் என்ற முறையில் பற்பல முதல் நூல்களைத் திறனாய்வுப் பதிப்பாக வெளியிட்டதோடன்றி, அத்துறையில் பற்பல இளைஞர்கட்குப் பயிற்சியும் அளித்தார். இத்துறையில் அவர் செய்த பணி அவரைப் பின்பற்றியவர்களால் தொடர்ந்து செய்யப்பட்டு மலையாள இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றது.

மொழிபெயர்ப்புகள்:

மலையாளத்தில் போதிய நூல்களின்மையைக் கண்டு பெரிதும் வருந்திய கேரள வர்மா பிறமொழி இலக்கியங்களைப் பெயர்ப்பது உள்ளிட்ட பல்வேறு வழிகளைப் பற்றி சிந்திக்கலானார். இயல்பாகவே வடமொழியும் ஆங்கிலமும் முதல் நூல்களாக நின்று அவருக்குக் கைகொடுத்தன. முன்னமேயே குறிப்பிட்டதுபோன்று, காளிதாசரின் சாகுந்தலம், அமருகா எழுதிய அமருக சதகம் மற்றும் நீலகாந்த தீட்சதரின் அன்யாபதேச சதகம் போன்றவற்றைக் கேரள வர்மா மொழிபெயர்த்தார். இவற்றோடு இலக்கிய ஆர்வம் கொண்ட பற்பல கவிஞர்களும், அறிஞர்களும் பிறமொழி நூல்களை ஏராளமாக மொழிபெயர்த்தனர். ஐம்பதுக்கு மேற்பட்ட நாடகங்களும் தொடர்ச்சியாக மலையாளத்தில் பெயர்க்கப்பட்டன. அமெரிக்கக் கவிஞர் லாங்பெலோ எழுதிய ஒரு நீண்ட பாடலும், புகழ்பெற்ற அக்பர் எனும் நாவலும் கேரள வர்மாவால் ஆங்கிலத்திலிருந்து பெயர்க்கப்பட்டவையாகும். கேரள வர்மாவால் தொடங்கி வைக்கப்பட்ட மொழிபெயர்ப்பு எனும் இந்த இலக்கியப்பணி வெகு வேகமாக இவ்வாறு வளர்ச்சியுற்று மலையாள மறுமலர்ச்சியினை விரைவுபடுத்தியது.

போலச் செய்தல்:

இந்திய இலக்கிய வளர்ச்சியில் போலச் செய்யும் கலை ஒரு முக்கிய பங்கினைப் பெறுகிறது. மலையாள மொழியில் எழுதப்பட்ட உரைநடை, கவிதை ஆகியவற்றில் இக்கலையின் நுழைவுக்குக் கேரளவர்மா முன்னோடியாக் இருக்கிறார். இலக்கணத் தொடர்பற்ற ஒரு குழுக்குறி போல இருந்த மலையாள உரைநடையினை அவர் எவ்வாறு சீர்நிலைப்படுத்தினார் என்பதை முன்னமேயே கூறியுள்ளோம். உரைநடையின் பல்வேறு பிரிவுகளாகிய நாவல், சிறுகதை, கட்டுரை, வாழ்க்கைவரலாறு, இலக்கியத்திறனாய்வு ஆகியவற்றை எப்படி வளர்த்து 'மலையாள உரைநடையின் தந்தை' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார் என்பதும் முன்னமேயே கூறப்பட்டுள்ளது. முதன் முறையாக மலையாளமொழியில் ஒரு உரைநடை நாடகத்தை எழுதிய பெருமையும் கேரள வர்மாவைச்சாரும்.

கேரள வர்மாவின் காலத்திய கவிஞர்கள் மதச்சார்புடைய கதகளிப் பாடல்களையோ அல்லது தரமில்லாத சாதாரணப்பாடல்களையோ எழுதுவதில் மிகுந்த உற்சாகம் காட்டினர். வெண்மணி காலத்திய கவிதை யுகத்தில் மிகச் சிறந்த கவிஞர்கள் இருந்தார்கள். ஆயினும் அவர்கள் கவிதைகளை முழு முயற்சியோடு எடுத்து எழுதவில்லை. பொழுதுபோக்காகவும், தாம் விரும்பியவாறும் சாதாரணக் கருத்துகளை மையமாகக் கொண்டு தரமில்லாத பாடல்களை எழுதினர். நன்னெறி காட்டும் தன்மை அவற்றினிடம் இல்லையெனவே அவற்றால் சமூகத்திற்கு எந்தப்பயனும் இல்லை. கடிதம் எழுதுவதற்கும் பத்திரிகை நடத்துவதற்கும்

அவர்கள் பாடல்களையே பயன்படுத்தினர். உண்மையில், கவிதைக் கன்னியோடு அவர்கள் கொண்டிருந்த தொடர்பு மிகச் சாதாரண நிலையில் இருந்தது. இதனைப் பொறுக்காத கேரள வர்மா இலக்கியத்தின்பால் ஆழ்ந்த அக்கறை கொண்டு சமூகத்திற்குக் கவிஞர்கள் ஆற்ற வேண்டிய கடமையினை வற்புறுத்தி அவர்கள் பயனுள்ள, தரமான கவிதைகளை எழுதுமாறு வேண்டிக்கொண்டார்.

சமூகத்தினை மையக் கருத்தாகக் கொண்ட *தெய்வயோகம்* எனும் நூலில் ஒரு வெளிநாட்டுக்காரரின் குடும்பத்தில் தங்கியதனால் சிலருக்கு ஏற்பட்ட சமூகத்தடையினைக் கேரள வர்மா சாடுகிறார். கருத்தில் புதுமையும், கதைப்போக்கில் சீர்மையும் கொண்ட பிறிதோர் நூலாகிய மயூர சந்தேசம் இலக்கிய உலகின் பாராட்டுதலைப் பெற்றது. கே.எம். பணிக்கர் தாம் எழுதிய புதிய இந்தியாவின் ஆதாரங்கள் எனும் நூலில், இந்நூலைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு விமரிசனம் செய்கிறார். " மலையாள மொழியில் இக்கால கட்டத்தைச் சேர்ந்த மயூர சந்தேசம் என்னும் தலைசிறந்த இலக்கியப் படைப்பு காளிதாசரின் மேகதூதத்தினைப் போன்றே ஆக்கப்பட்டதாகும்".

மலையாள இலக்கிய வளர்ச்சிக்குக் கேரள வர்மா ஈந்துள்ள இலக்கியப் படைப்புகளை ஆய்ந்து பார்த்தால், இந்திய இலக்கியத்தில் தாகூரின் செல்வாக்கு வெளிப்படுகின்ற வரை, கேரள வர்மாவே இலக்கிய மறுமலர்ச்சியின் சின்னமாக விளங்கியவர் என்பதைக் காண முடியும். மலையாள வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க காலகட்டத்தில் தனது தாய்மொழிக்கு அவர் ஆற்றிய தொண்டினுக்கு அவரது அறிவுச்சிறப்பும் கல்வித் தகுதியுமே காரணம் ஆகும். கேரள வர்மாவின் வடமொழிப்புலமை பற்றியும், ஆங்கிலத்தை அவர் ஆழ்ந்து கற்ற கல்வியோடு இந்திய மற்றம் மேலை நாட்டு இலக்கிய மரபுகளையும் அவரால் இணைத்துக்கொள்ள முடிந்தது. இந்த இரண்டு கலாச்சாரங்களின் இணைப்பினாலே உருவாகிய மறுமலர்ச்சிக்கு வழிகாட்டுகின்ற தனித்திறமையும் அவருக்கு இருந்தது. மேலும் இலக்கியம், மொழி இயல் ஆகிய துறைகளில் அவர் கொண்டிருந்த முற்போக்குக் கருத்துகள் மலையாள இலக்கியம் புத்துயிர் பெறுதற்குப் பெரிதும் உதவின. கவிதையில் ஓசை நயத்தினையும், மணிப்பிரவாள நடையினையும் அவர் பெரிதும் விரும்பினார் என்றாலும், பொதுவாக இலக்கியத்தைப் பொறுத்த வரையில் அவர் ஒரு பழைமைவாதியாக இல்லை.

இலக்கிய அன்பர்களுக்கெல்லாம் தன்னால் இயன்றவரை கைகொடுத்து உதவிய திறம் கேரள வர்மாவின் பெருந்தலைமைக்கு ஏற்ற குணஇயல்பாக இருந்தது. வாய்மொழியினால் அவர்களைப் பாராட்டியதோடன்றி, கையெழுத்துப்பிரதியாக அவர்கள் எழுதிக் கொடுத்த நூல்கள்

அனைத்தையும் திருத்தமுறப்பார்த்துக் கொடுத்ததே அவர்களுக்கெல்லாம் அவர் செய்த உதவிகளுள் தலையாயது ஆகும்.

நூல் எழுதும் தனது பணியினைக் கூட ஒதுக்கி வைத்துவிட்டு பிறரது கையெழுத்துப்பிரதிகளைப் பார்த்துச் சரி செய்து கொடுத்தது ஒரு வகையில் அவரது தியாக உணர்வு எனலாம். இலக்கியவாதிகளை உற்சாகப்படுத்துவதிலும் திறமையை உணர்ந்து பாராட்டுவதிலும் கேரள வர்மா பெரிதும் அக்கறை காட்டினார். பாத்யபாதாவளி வரிசையில் இற்றைக்காலக் கவிஞர்களது பற்பல பாடல்களோடு, குமாரன் ஆசான் எழுதிய வீணபூவு எனும் பாடல் தொகுதியினையும் சேர்த்துக்கொண்டார். சந்துமேனன், வர்கீஸ் மாப்பிள்ளை போன்ற கவிஞர்களது படைப்புகளையும் இவர் பெரிதும் பாராட்டியுள்ளார்.

கேரள வர்மாவின் ஆழ்ந்த பணிவும் அடக்கமும் அவரது செயல்களில் மட்டுமன்றி மேடைப்பேச்சுகளிலும் நம்மால் காண முடிகிறது. பாஷாபோஷினி சபையின் ஒரு கூட்டத்தில் **(1894)** அவர் கூறியது கீழ்வருமாறு:

> "யான் எழுதிய சாகுந்தல நூலில் பற்பல வழக்காற்றுச் சொற்களைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளேன். மலையாள மரபுச் சொற்களின் மீது எனக்கு இப்போது உள்ள தெளிவு அப்போது இல்லை என்பதுவே இதற்குக் காரணம். மரபுச் சொற்களின் மீது இப்போதைய எனது தெளிவுக்குக் கூட வித்யாவினோதினி எனும் மாத இதழே பெரிதும் உதவியாக இருந்தது."

இலக்கிய அன்பர்களுடன் கேரள வர்மா கொண்டிருந்த நட்புணர்வே அவரது புகழுக்குக் காரணமாக இருந்தது. போலியான பெருமையினை உதறிவிட்டுக் கேரள வர்மா திருவனந்தபுரத்திலிருந்து திருச்சூருக்குப் பயணம் செய்து கைக்குளங்கரா ராம வாரியர் எனும் அறிஞரை நேரில் காண வந்ததே இதற்குச் சான்றாகும். கேரள வர்மா ஒரு முறை தன்னுடைய ஆடம்பரமான படகுப் பயணத்திற்குத் தன்னை அழைத்து அனைத்து வகையாலும் சமமாக நடத்திப் பெருமைப் படுத்தியதாக மகாகவி உள்ளூர் மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார்.

மலையாள இலக்கியத்துக்குக் கேரள வர்மா புரிந்த தொண்டுகளில் ஒன்று ஏ.ஆர். ராஜராஜவர்மாவைச் சிறந்த அறிஞராக உருவாக்கியதாகும். இருபது ஆண்டுகள் அவருக்குப் பாடம் பயிற்றுவித்து அவரை மலையாள இலக்கியத்துக்கும் ஆட்படுத்தினார். அவரது அலுவலகப் பணிகளுக்கும் தனது ஆதரவையும் உதவியினையும் நல்கினார். இதனால்தான், ராஜராஜவர்மாவும் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் கீழ்த்திசை மொழிப்பேராசிரியராகவும் பின்னர் அங்கேயே முதல்வராகவும் பதவி உயர்வு பெற்றார். தனது மாமனாகவும், குருவாகவும் இருந்த கேரளவர்மாவினை அடியொற்றியே இவரும் மலையாள இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்குக்

காரணமாக இருந்ததோடு, மொழி, இலக்கியத்துறைகளில் உயரிய நூல்களையும் படைத்தார்.

தலைசிறந்த கவிஞராக இல்லாவிடினும், மலையாளத்திலும், வடமொழியிலும் குறிப்பிடத்தக்க கவிஞராக விளங்கினார் கேரள வர்மா. அவரது காலத்தில் கேரளாவில் அவரை விடச் சிறந்த அறிஞர் யாரும் இல்லை என்றே கூறலாம். மலையாள இலக்கிய வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டுத் தன்னலமற்ற சேவை புரிந்ததில் அவருக்கு இணையானவர் யாரும் இல்லை. மக்களின் பொது நன்மைக்கெனப் பாடுபட்டோருள் கேரள வர்மா முதலிடம் வகிக்கிறார் என்றே கூறலாம். ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைத்துக் கேரள மக்களின் ஈடிணையற்ற தலைவர் என்றும் இவர் மதிக்கப்பெற்றார். இலக்கியப்பெருந்தலைவர் என்றும் பொருள்படுகின்ற சாகித்யசக்ரவர்த்தி' எனும் பட்டத்தை பொது மக்கள் அவருக்கு அளித்துப் பெருமைப்படுத்தியதே இதற்குச் சான்றாகும்.

10.

ஓர் அணைந்த எரிமலை

ஓர் அணைந்த எரிமலை – இப்படித்தான் தனது முதுமைக்காலத்தில் கேரள வர்மா தன்னைப் பற்றிக் கூறிக் கொள்வது வழக்கம். அவரது அறுபதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்கள் அந்த அறிஞரின் இலக்கியப் புகழேணி உச்சநிலையில் இருப்பதைக் காட்டின. ஆயினும் வயது முதிர முதிர, ஓரளவு அவரது புகழ் மங்கத் தொடங்கியது. அவரது இலக்கியத் தலைமையும் ஆளுமையும் விமர்சிக்கப்பட்டன. இந்த எதிர்ப்புக்கெல்லாம், த்வித்யாட்சரப் பிராசம் பற்றிய வாதப்பிரதிவாதமும், அவரது சாகுந்தலப் பெயர்ப்பில் இருந்த வடமொழிக் கலப்புமே காரணம் எனலாம். இவற்றால் கேரள வர்மாவின் புகழினைப் பற்பலர் குறைத்து மதிப்பிடத் தொடங்கினர். இவை இரண்டின் ஆதாரத்தில் கேரள வர்மாவினை எதிர்த்தோர் ஏ.ஆர். ராஜராஜவர்மாவுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இலக்கிய உலகில் அவருக்கென்று ஒரு தனிச்சிறப்பும் பெருமையும் அப்போது ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

இதனால் கேரள வர்மாவின் இலக்கியப்பெருமை உண்மையிலேயே சிதைவுற்றுப் போகவில்லை. இருப்பினும் அவரைப்பற்றிய நிறைகுறைக் கருத்துகள் அவருக்கு மனவேதனையை உண்டு பண்ணின. அவருடைய அறுபது வயதுக்கு மேற்பட்டு சிறுக சிறுக அவரது கவித்திறன்குறைந்து வருவதாகவும் அவரே உணர்ந்தார். சேஷய்ய சாஸ்திரிக்கு இதுபற்றி 1896–ஆம் ஆண்டு ஜூன் மாதம் அவர் எழுதியது கீழ்வருமாறு:

"நான் விரும்பிய நேரத்தில் வாக்கு சக்தி என்னிடம் வந்த காலம் ஒன்று உண்டு. அப்போதெல்லாம் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்த அச்சக்தியினால் எந்த முயற்சியுமின்றி நினைத்த நேரத்தில் கவிஎழுத முடிந்தது. ஆனால் இப்போதோ காற்று வேறு திசையில் அடிக்கிறது. தொடர்ந்த பழக்கம் இன்மையினாலே, வடமொழிக் கவிதைகளை இயற்றும் ஆற்றல் மங்கி விட்டது".

கடைசியில் 1909–ஆம் ஆண்டு மலையாள மனோரமா இதழில் ஒரு அறிக்கை விடுத்தார். எந்த ஆசிரியரோ, பதிப்பாளரோ கருத்துரை, முன்னுரை, கட்டுரை கேட்டுத் தம்மை அணுக வேண்டாம் என்பதே அந்த அறிக்கை. இலக்கிய உலகத்திலிருந்து இவ்வாறு அவர் தாமாகவே விடைபெற்றுக்கொண்டார் என்று கூடச் சொல்லாம். ஆயினும் 1912–ஆம் ஆண்டு ஒரு கவிஞரது நூற்றாண்டு விழா இலக்கிய மேடையில் கலந்து கொண்டார். அப்போது அவரது உடல் நலம் குன்றியிருந்தது. எனவே அவர் எழுதிய தலைமை உரையினைத் தனியாகப் பிறிதொருவர் மேடையில் படிக்க வேண்டியிருந்தது. 1913–ஆம் ஆண்டு கேரள வர்மாவின் மூத்த சகோதரராகிய வித்வான் வாலிய கோயில் தம்புரான் காலமானார். ஆகவே பரப்பநாட்டுப் பகுதியின் வாலிய்ராஜா ஆகும் வாயிப்பினைக் கேரள வர்மா ஏற்றுக் கொள்ள நேரிட்டது. எனினும் உலகியல் பற்றிய உற்சாகம் குன்றி, உடல் நலமும் குறைந்து வந்தமையால் அரண்மனைப் பொறுப்புகள் அனைத்தையும் தனது இளைய சகோதரனுக்குக் கொடுத்து விட்டுக் கேரள வர்மா ஒய்வாகவே இருந்தார்.

கேரள வர்மாவின் ஆளுமையில் ஆன்மீகப் பற்று இன்றியமையாததாக இருந்தது. வாழ்நாள் முழுதும் பல்வேறு விதமான அலுவர்களுக்கு இடையிலும் அவரது ஆன்மீகப்பற்று என்றும் குறைந்ததில்லை. வாழ்வின் தொடக்க நிலையிலிருந்தே கேரள வர்மா மதப்பற்று உடையவராக இருந்தார். பிரமவித்யா குரு எனத்தகும் ஆன்மீக வழிகாட்டியாகவும், அறிஞராகவும் விளங்கிய இலத்தூர் ராமசாமி சாஸ்திரியின் தொடர்பு கேரள வர்மாவின் ஆன்மீக உணர்வுக்கு ஒரு சிறந்த ஊன்றுகோலாக இருந்தது. எனவே கேரள வர்மா மிகச்சிறந்த பக்திப்பாடல்களை எழுதியதோடு தந்திர சாத்திரத்தில் தலைசிறந்ததாகக் கருதப்படும் திரிசத்யாந்தரம் எனும் நூலையும் எழுதியிருந்தார். வயது முதிர முதிர, உலக வாழ்க்கையில் சலிப்புற்று, பழைய பெருமைகளிலும் சாதனைகளிலும் விருப்பமின்றி நிலையான வீடுபேற்றையே அவர் மனம் நாடி நின்றது. உணர்ச்சி மயமான பாடல்கள் நிறைந்த பத்மனாப பாதபத்ம சதகம் எனும் அவரது நூல் வயது முதிர்ந்த நிலையில் அவருக்கிருந்த உள்ளப்பாங்கினையும், ஆன்மீகத்தை நாடியதையும், வேறு சில மாற்றங்களையும் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

1914–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தனது மருமான் ஏ.ஆர். ராஜராஜ வர்மாவுடன் கேரள வர்மா வைக்கம் சிவன்கோயில் திருவிழாவினைக் காணக் காரில் சென்றார். கோவிலில் உரிய வழிபாடும் சடங்குகளும் முடிந்த பின்னர் அங்கு வந்திருந்த நண்பர்களையும், பிறரையும் சந்தித்து மகிழ்ந்தார். அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு ஊருக்குத் திரும்பும் வழியில் செப்டம்பர் திங்கள் 18–ஆம் நாள் ஹரிப்பாடு எனுமிடத்தில் உள்ள தனது அரண்மனையை அடைந்தார். இரண்டு நாட்கள்

அங்கு தங்கி தனது உறவினர்களைச் சந்தித்தும், அங்குள்ள முருகன் கோவிலில் வழிபாடு செய்தும் மகிழ்ந்திருந்தார். செப்டம்பர் 20–ஆம் நாள் குடும்பத்தினரோடு உணவு அருந்திய பின்னர் தனது மருமானுடன் திருவனந்தபுரத்துக்குப் புறப்பட்டார். வரும் வழியில் தீவினை சூழ்ந்தது போல் காயங்குளம் எனுமிடத்தில் ஒரு விபத்துக்கு உள்ளானார். மருமான் அருகிலிருந்து கேரள வர்மாவைக் கவனித்துக்கொண்டார். அவரது நிலைமை ஓரிரு நாட்கள் சீராக இருந்தது. ஆனால் திடீரென்று உடல்நிலை மோசமாகி, அந்த மகாமேதையின் உயிரை மருத்துவர்களாலும் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. செப்டம்பர் 22–ஆம் நாள் அவரது மருமானும், அன்பார்ந்த சீடனுமாகிய ராஜராஜவர்மாவின் கரங்களில் கிடந்தபடியே அவரது ஆவி பிரிந்தது. உரிய அரச மரியாதையுடன் மாவலிக்கரையில் அவரது பருவுடல் எரியூட்டப் பெற்றது.

கேரள வர்மாவின் மறைவுச் செய்தி காட்டுத்தீயினைப்போல் பரவியது. அறிஞரும், கவிஞருமாக இருந்து ஐம்பதாண்டுகளுக்கு மேலாக இலக்கியவானில் சுடர்விட்டுக் கொண்டிருந்த அம்மாமேதையின் மறைவினால் மக்கள் அனைவரும் ஆழ்ந்த வருத்தமுற்றனர். மறைந்தவரைப் புகழ்ந்து பெருமைப்படுத்தும் கட்டுரைகள் செய்தித்தாள்களில் வெளியாயின. மரியாதை செலுத்தும் வகையில் அவரது அன்பர்கள் இரங்கற் கூட்டம் நடத்தினர். பல்வேறு இலக்கிய இதழ்கள் இவரது மறைவு குறித்து கையறுநிலைப்பாடல்கள் எழுதினர். விவேகோதயா எனும் இதழில் கேரள வர்மாவின் பெருமை பற்றி மகாகவி குமாரன் ஆசான் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்.

"மலையாளிகள் அனைவரும் ஜாதி, மத வேறுபாடின்றி உண்மையான மதிப்பும் மரியாதையும் அளித்து, நன்றியோடு நினைவு கூருதற்குக் கேரளாவில் கேரள வர்மாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்றே நாம் கருதுகிறோம். படிப்பு, அறிவு, கவிமாண்பு, நல்ல உள்ளம், பெருந்தன்மை, குடும்பப்பெருமை, உயர்ந்த குணம் ஆகிய அனைத்தும் ஒருங்கே இணையப்பெற்ற பிறிதொருவரை எப்போது காண இயலும்? கேரளப்பெருநிலமே! உன் ஒளி மறைந்து விட்டது ! உன்னை இருள் சூழ்ந்து கொண்டது"

முக்கிய நிகழ்ச்சிகள்

1845	பிப்ரவரி	15	கேரள வர்மாவின் பிறப்பு
1855			மாமன் ராஜராஜவர்மாவுடன் திருவனந்தபுரத்துக்கு புறப்படுதல்
1859	ஏப்ரல்	24	ராணி லஷ்மிபாய் திருமணம்– வாலியகோவில் தம்புரான் ஆதல்
1801			*திருநாள் பிரபந்தம்* எனும் பாடல் இயற்றல்
1865			*துலாபர சதகம்* எனும் நூல் இயற்றல்
1865			எடின்பரோ கோமகனைக் காணுதல்
1866			*குருவாயுபரேஸஸ்தவம்* – நூல் எழுதல்
1867			பாடநூற்குழுவின் உறுப்பினர் ஆதல்
1868			பாடநூற்குழுவின் தலைவர் பொறுப்பேற்றல்
1872			பரோடா மற்றும் பல இடங்களுக்குப் பயணம்
1877	ஆகஸ்டு	4	கைது செய்யப்படுதலும் சிறைத் தண்டனையும்
1880			*ஷமப்பணசகஸ்ரம்* வெளியீடு
			ஆயில்யம் திருநாள் மறைவு
			விசாகம் திருநாள் முடி சூட்டப்பெற்றல்
			சிறையிலிருந்து விடுதலை
1881			லஷ்மிபாய் சி.அய். எனும் பட்டம் பெறுதல்
1882			கவர்னர் கிராண்ட் டப் சந்திப்பு
1882			சென்னைக்குப் பயணம்
1882			*சாகுந்தலம்* முதற்பதிப்பு, நட்சத்திரமாலா ஆகிய நூல்களை வெளியிடுதல்
1883			சென்னைப் பல்கலைக்கழக விருதும், பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பதவியும்
1885			விசாகம் திருநாள் மறைவு
1888			*வியாக்ரலயேச சதகம்* எனும் நூலை எழுதல்
1889			*விசாக விஜயம்* எனும் நூலை வெளியிடுதல்
1890			எம்.ஆர்.ஏ.எஸ். எனும் பட்டம் பெறுதல்
1891			பாஷாபோஷினி சபையின் ஆயுட்காலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறல்

1893			*அமருக சதகம்* எனும் நூலை மணிப் பிரவாள நடையில் எழுதல்
1894			'*அக்பர்*' எனும் நூலை வெளியிடுதல்
1895			எப்.ஆர்.எச்.எஸ்., சி.எஸ்.ஐ ஆகிய பட்டங்களைப் பெறுதல்
1895			*மயூரசந்தேசம், மகாசசித சங்கிரகம்* ஆகிய நூல்களை வெளியிடுதல்
1898			வட்டார மொழி பற்றிய அரசு ஆலோசகர்
1900			*விசாகவிஜயம்* – நூலை முழுதுமாக வெளியிடல்
1901			மகாராணியின் மறைவு
1902			*அன்யாபதேச சதகம்* – வெளியீடு
1905			அறுபதாம் ஆண்டு பிறந்தநாள் விழா
1909			இலக்கிய உலகிற்கு விடை கொடுத்தல்
1912			இலக்கிய மேடையில் இறுதி வாய்ப்பு
1913			பரப்பநாடு வாலியராஜா ஆகுதல்
1914	செப்டம்பர்	22	மறைவு.

துணை நூற்பட்டியல்

மலையாளம்

1. எம்.ஆர். பாலகிருஷ்ண வாரியர் – கேரள வர்ம தேவன்
2. வடக்குங்கூர் ராஜராஜ வர்மா – கேரள சமஸ்கிருத சாகித்ய சரித்ரம்
3. உள்ளூர் எஸ். பரமேஸ்வர அய்யர் – கேரள சாகித்ய சரித்ரம்
4. கே. அய்யப்ப பணிக்கர் – மலையாள இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்
5. இ.வி. ராமன் நம்பூர்த்தி – பிரசங்க சம்ஹாரம்
6. பூவாத்தூர் இராமகிருஷ்ணபிள்ளை – கேரள வர்மாவின் இலக்கியப் படைப்புகள்
7. திக்குரிச்சி கங்காதரன் – கேரள வர்மாவும் மலையாள கத்யாவும்
8. பி.கே. நாராயண பிள்ளை – மயூரசந்தேசம் கேரள ஹ்ருதயம்

சமஸ்கிருதம்

9. பி.கே. நாராயண பிள்ளை – மயூர தூதம் (மயில்விடுதூது)

ஆங்கிலம்

10. பி.கே. நாராயண பிள்ளை – கேரள வர்மா – தற்கால மலையாள இலக்கியத்திருப்பு முனைச் சின்னம்

கேரள வர்மா (1845–1914) கேரள நாடு முழுவதும் வலிய கோயில் தம்புரான் என்றே அறிமுகமானவர். கேரள மறுமலர்ச்சியின் அடையாளமாக விளங்கும் இவர் சாகித்திய சக்ரவர்த்தி என்றும், கேரளகாளிதாசர் என்றும் பாராட்டப்பெற்றவர். மலையாளத்திலும், வடமொழியிலும் மிகச்சிறந்த கவிஞர் என்பதோடு மலையாள உரைநடை, புதினம், வாழ்க்கை வரலாறு, இலக்கியத் திறனாய்வு ஆகியவற்றில் சிறந்த முன்னோடியாகவும் இருந்தார்.

மகாகவி குமரன் ஆசான் கூறியது: "அனைத்து மலையாளிகளாலும் விரும்பி மதிக்கப்பெற்று நன்றியோடு நினைக்கப்பெறும் மிகச் சிறந்த மனிதர் கேரளாவில் இவரைத்தவிர வேறுயாரும் இல்லை என்றே யான் எண்ணுகிறேன். கல்வியறிவு, கவிவன்மை, நற்குணம், பெருந்தன்மை சீரிய ஒழுக்கம் போன்ற இயல்புகளை ஒருசேரக்காணும் வாய்ப்பு நமக்கு மீண்டும் எப்போது வாய்க்கும் என்று தெரியவில்லை" – சிறந்த அறிஞர் பிறிதோர் அறிஞரைப் பாராட்டிய அரிய புகழுரையே இதுவாகும்.

பி.கே. நாராயண பிள்ளை (1910) மலையாளம், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல்வேறு நூல்கள் எழுதியுள்ளார். கேரள வர்மா தங்கப்பதக்கம், காளிதாசர் பரிசு, சாகித்திய அக்காதெமி பரிசு உள்ளிட்ட பல்வேறு பரிசுகளையும், பாராட்டுகளையும் பெற்றவர்.

Kerala Varma (Tamil)
ISBN 81-7201-740-5.

Rs. 15.00